
KUDUMBA NOVEL - TAMIL FORTNIGHTLY APR.1, 2006. Registered with the Registrar of News Paper India No. 53775/92
RGDD No. TN/PMG(CCR)/403/2006 - 08 LICENCED TO POST WITHOUT PRE-PAYMENT - W.P.P. 238/2006 - 08

விற்பனையில்...




# குடும்ப நாவல்

ஸ்டெல்லா புரூஸ்
நினைவுச் சிறப்பிதழ்

ரூ15



# ஸ்டெல்லா புரூஸ்

## ஒரு முறைதான் பூக்கும்




**1983. செப்டம்பர் 10. சனிக்கிழமை.**




ஆபாச ஈக்களின் கூட்டம் போலத் திரண்டு வந்த பயணிகளின் கும்பல் எல்லாம் கலைந்து, மீண்டும் குற்றாலமும் அதன் சுற்றுப்புறங்களும் அமைதி கொண்டு விட்டன. சீஸன் என்ற பிரமை வடிந்து போனதால், பயணிகளின் வருகை நின்று போயிருந்தாலும் கேரள மலைச்சரிவுகளில் கொட்டிய தென்மேற்குப் பருவ மழையின் தீவிரம் இன்னும் குறையவில்லை. பருவ மழையின் அந்தத் தீவிரம் குற்றாலத்தையும் அதைச் சார்ந்த குடியிருப்பு, சிந்தாமணி, காசிமேஜர்புரம், இலஞ்சி போன்ற கிராமங்களையும் அதீதமாகவே ஈரமாக்கியிருந்தது.

குற்றாலத்திலிருந்து செங்கோட்டை போகிற நெடுஞ்சாலையில் உள்ள இலஞ்சி கிராமத்திலிருந்து ஓர் இரட்டை மாட்டு வண்டி ஐந்தருவி நோக்கிப் புறப்பட்டது. வண்டிக்குள் அமர்ந்திருந்த செல்வரத்னம் அமைதியாக வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்.

அவர் குற்றாலத்திற்கு மிக அருகில் இருக்கும் இலஞ்சி என்ற சின்னஞ்சிறு கிராமத்தில், அதிகமான நிலபுலன்களோடு நல்ல செல்வாக்கோடு வாழ்ந்து வருபவர்.

அவரது மூத்த மகன் வைத்யநாதன், ரஸ்தாவின் இரண்டு பக்கமும் உயரமாக எழும்பியிருந்த கறுத்த கட்டடங்களைப் பார்த்தபடி மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

சுபாவத்தில் அவன் மிகவும் தனிமையானவன். இலஞ்சியில் அவனுக்கு நெருங்கிய நண்பன் என அநேகமாக யாருமில்லை. மனிதர்களைவிட தாவரங்களே அவனுக்கு ஒரு சுய அடையாளமாகத் தெரிந்தன.

செல்வரத்னம் வாஞ்சையுடன் மகனைப் பார்த்தார். தங்க ஃப்ரேம் போட்ட மூக்குக்கண்ணாடியில் வைத்யநாதன் ஓர் இளம் ஜமீன்தார் போல் தெரிவதைக் கண்டு உவகையடைந்தார். முழுமையான வாலிபனாக அவன் வளர்ச்சியடைந்திருந்தாலும் பால்ய அறியாமை முகத்தில் உறைந்திருந்தது.

பன்னிரண்டாவது வயதில் அம்மாவை இழக்க நேரிட்ட பின், அவனில் செல்வரத்னம் காணத் துவங்கிய தன்மை, மாற்றங்கள் அனைத்தும் அவருடைய ஞாபகத்தில் வந்து போயின. மீள முடியாத சோகமும் இழப்பும் வைத்யநாதனை ஒரு பக்குவமில்லாத தனிமையில் ஆழ்த்திவிட, இரண்டு வருடம் அவனுடைய

கல்விகூடத் தடைப்பட்டது. மனநல நிபுணர்களிடமெல்லாம் அழைத்துப் போய் சில தீவிர சிகிச்சைகள் மேற்கொண்ட பிறகே அவனுடைய தினசரி வாழ்க்கையின் சராசரித் தன்மை இயல்பிற்கு வந்தது.

ஒரு மனிதனுக்கு அம்மாதான் அவனுக்கு மிக அருகில் பரிச்சயமாகிற, உறவாகிற, பாதுகாப்பாகிற முதல் பெண். அம்மா என்ற முதல் பெண்ணிலிருந்துதான் வேறுவேறு உறவின்முறை சார்ந்த பெண்களை நோக்கி விபத்து இல்லாமல் அவன் பெயர்ந்து செல்கிறான். ஓர் இரண்டுங்கெட்டான் பருவத்தில், வேறு உறவின் முறைகளைச் சார்ந்த பெண்களிடம் வைத்யநாதனின் மனம் பரிவர்த்தனை அடையும்முன் அவனுடைய அம்மா என்ற முதல் பெண்ணை இழக்க நேரிட்டுவிட்டதில் அவனின் வாழ்க்கையில் பெண்ணே இல்லையென்ற பாவனை கனமாக மனத்தில் படிந்து விட்டது. அந்தக் கடின படிமமே திருமணம் என்ற அமைப்பில்தான் ஒரு பெண்ணால் காப்பாற்றப்பட வேண்டுமென்ற வினோதத் தன்மையை அவனில் அரும்பச் செய்திருப்பதை உணர்ந்து, செல்வரத்னம் வாஞ்சையுடன் மகனின் முதுகை வருடிக் கொடுத்தார்.

அவர் தன்னை அண்டி வாழ்ந்த பணியாட்களையும் சரி, அவருடைய மூன்று புதல்வர்களையும் சரி; எந்தக் கடுமையான சொல்லாலும் ஒருபோதும் மனவருத்தப்படுத்தியதில்லை. எல்லோருக்கும் எல்லாவிதச் சுதந்திரங்களையும் மனமுவந்து அளித்திருந்தார். அதிலும் அவரின் மூத்த மகன் வைத்யநாதன் விஷயத்தில் செல்வரத்னம் ஓர் ஆப்த நண்பன் போலவேதான் நடந்து கொண்டார்.

''வைத்தி! எல்லா விஷயத்திலேயும் ஒனக்கு நான் தந்திருக்கிற சுதந்திரம் ஒன்னோட கல்யாண விஷயத்திலேயும் தந்திருக்கேன். ஒனக்கு இஷ்டப்பட்ட எந்தப் பொண்ணையும் எப்ப வேணுமானாலும் கல்யாணம் பண்ணிக்கலாம். ஆனா, ஒன்னோட ஒரே ஒரு காம்ப்ளெக்ஸ் மட்டும் என்னைக் கொஞ்ச உறுத்துது. எப்படிப்பட்டவ மனைவியாக அமையணும்னு ஒரு இமேஜ் ஒனக்கு வந்திடுச்சு. அந்த இமேஜை வச்சிட்டுப் பெண் பாக்காதே. எந்தவொரு இமேஜு"ம் என்னிக்காவது ஒரு நாள் உடைஞ்சேதான் போகும்... அப்படி உடையறப்ப நீதான் ரொம்ப கஷ்டப்படுவே... அதான் என் பாயிண்ட். புரியுது இல்லீயா - நான் என்ன சொல்றேன்னு...?''

''புரியுதுப்பா...''

''நாளைக்கு ட்ரெயின் எங்கே ஏறப் போறே...?



செங்கோட்டையிலயா தென்காசியிலயா?''

''தென்காசியிலதான்ப்பா...''

''நாளைக்குக் காலையில நான் ஒரு கல்யாணத்துக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வரைக்கும் போய் வரவேண்டியிருக்குது. முடிஞ்சா நாளைக்கு சாயந்திரம் ஒன்னை ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷன்ல பார்க்கறேன்.''

''வேணாம்பா நீங்க வீணா கஷ்டப்பட்ட வேண்டாம். நான் நல்லபடியா போய்டு வேன்...''

''நல்லபடியா இருக்கவும் செய்யணும் வைத்யநாதா. அம்மா இறந்து போனதும் இரண்டு வருஷம் நீ மனநிலை சரியில்லாம இருந்தே பார் - அந்த மாதிரி எந்த விபத்தும் ஒன்னோட மனசுக்கு ஏற்பட்டு விடக்கூடாது. அது ரொம்ப முக்கியமான விஷயம். ஜாக்ரதையா இருந்துக்கோ...''

''சரிப்பா...!''

### 1983. செப்டம்பர் 11. ஞாயிற்றுக்கிழமை.

**வை**த்யநாதனுக்கு கல்வியும் உத்தியோகமும் பெரிய லட்சியங்கள் இல்லை. இலஞ்சியும் குற்றாலமும் அருவிகளும் மலைச்சரிவுகளுமே அவனுடைய உணர்வுகளுக்குப் போதும். தன்னுடைய சுபாவத்தில் நசுங்கிப் போய்விட்ட சில பரிமாணங்கள் மொத்த வீரியத்துடன் இயக்கமுற, தன்னுள் தேங்கிப் போன ஏதோ ஒன்று முழுமையாகத் திறந்து கொள்ள - தான் முழுமையான மனிதனாக எழுச்சி அடைதல் அவசியமானதாக வைத்யநாதனின் அந்தரங்கம் சில வருஷங்களாகவே அவனுக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது. அத்தகைய எழுச்சி ஒரு நிகரற்ற பெண்ணின் மூலம்தான் நிகழ முடியும் என அவனுக்குள் ஒரு சோகம் கலந்த காதல் நிராதரவாகத் தளும்பிக் கொண்டிருந்தது. அந்த முகம் தெரியாத நிகரற்ற பெண்ணை, இந்தக் கிராமத்து வயல்களிலோ, தோட்டங்களிலோ பார்க்கவே முடியாதென்று வைத்யநாதன் நிச்சயமாக நம்பினான். திருமணம் புரிந்து கொள்வதற்காக ஒரு பெண்ணைப் போய்ப் பார்ப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. அவன் ஒரு வலிமையும் வாஞ்சையும் மிகுந்த பெண்ணைச் சந்திக்கவே விருப்பப்பட்டான். அறிமுகமாக அல்லாமல் சந்திப்பாக நிகழ வேண்டும். சந்திப்பே பரிவர்த்தனை.

அதனால் வைத்யநாதன் வேலையின் பொருட்டுச் சில வருடங்களுக்கு சென்னை போய் இருக்க விருப்பப்பட்டதன் மனப்

பின்னணியைக் கச்சிதமாகக் கண்டு கொண்ட செல்வரத்னம், தன் மூத்த மகனைச் சந்தோஷமாகவே சென்னை செல்ல சம்மதித்தார்.

இவற்றின் எந்தப் பின்னணியையும் காணத் தெரியாத அவருடைய எழுபது வயதான தாயார் ஞானாம்பாள்தான் புலம்பித் தீர்த்தார்:

''இதுவரை மதுரையிலே போயி படிச்சிக்கிழிச்சாச்சி. இன்னமே மெட்ராஸ்ல போய். கிழிக்கப் போறானாக்கும்? அவன்தான் மடத்தனமா போகணும் சொல்றான்னா இப்ப மெட்றாஸ்க்குப் போன்னு இவனும் கெடந்து ஒத்து ஊதுறானே...? மெட்றாஸ்ல ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிட்டா என்ன பண்ணும் இந்தப் புள்ளை... சும்மாவே அந்த ஊர்ல வாய்கழுவத் தண்ணி கெடையாதுன்னு சொல்லுறாக...''

செல்வரத்னம்தான் அதட்டல் போட்டு, தன் அம்மாவை அடக்கினார்:

''நீங்க சும்மா இருங்கம்மா, எல்லாம் வைத்திக்குத் தெரியும்.''

''எல்லாம் தெரிஞ்சுக்கறதுக்குத்தான் பாட்டி போறேன். ரெண்டே ரெண்டு வருஷம்... இல்லேனாக்க மூணு வருஷம். அதுக்கு மேல நீங்க இருக்கச் சொன்னாக்கூட நான் மெட்றாஸ்ல இருக்க மாட்டேன்...'' என்றான் வைத்தி.

''ரெண்டு வருஷத்துக்குள்ளே நான் செத்துப் போயிட்டா?'' - ஞானாம்பாள் பேரனைத் திருப்பிக் கேட்டார்.

''இல்லே பாட்டி... நீங்க நூறு வருஷம் உயிரோட இருப்பீங்க...''

ஞானாம்பாள் அடங்கி விட்டார். தான் நூறு வயசு உயிருடன் இருக்கச் சொல்லும் பேரனை மெட்றாஸ் போக அவர் ஆசிர்வதித்து விட்டார்!

ஆனால் தான் மெட்ராஸ் போகிற காரியம் வெற்றி பெறாமல் போய் விடுமோ என்ற பயம் வைத்தியநாதனின் மனதின் ஒரு மூலையில் எழத்தான் செய்தது.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு தன் மனத்திற்கு ஏற்பட்ட சேதம் மீண்டும் நிகழ்ந்து, தானே நொறுங்கி விழுந்து விட்டால்... என்றெல்லாம் கவலையும் பயமும் வைத்யநாதனுக்கு வந்தன. ஒரு நிமிஷம் கண்களை மூடி, முருகனை மனத்திற்குள் தியானித்தான். கவலையும் பயமும் கலைந்தன. காதலும் மேன்மையும் மிக்க ஒரு பெண் அவனுக்காக சென்னையில் நிச்சயமாகக் காத்திருக்கிறாள் என்ற நம்பிக்கை மீண்டும் மனத்தில் சுடர் விட்டது! அம்மா தெய்வமாக இருந்து ஓர் ஒப்பற்ற பெண்ணைத் தனக்கு மனைவியாக அமைத்துத் தருவாள் என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.



அதிகாலையிலேயே வைத்யநாதனிடம் செலவுக்காக ஆயிரம் ரூபாயை எண்ணித்தந்துவிட்டு, செல்வரத்னம் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளம்பிச் சென்று விட்டார்.

''போய்ச் சேர்ந்ததும் லெட்டர் எழுதிப் போட்டுடு...''

''சரிப்பா...''

''வேலைல ஜாய்ன் பண்ணி ரெண்டு நாள் கழிச்சு ஒரு லெட்டர் விவரமா எழுது. அடிக்கடி பாட்டிக்கும் லெட்டர் எழுது... அதான் ரொம்ப முக்கியம்...''

''கண்டிப்பா எழுதறேன்ப்பா...''

**1983. செப்டம்பர் 12. திங்கட்கிழமை.**

**வை**த்யநாதனையும் சுமந்து வந்த 'கொல்லம் மெயில்' காலை சரியாக ஏழே முக்கால் மணிக்கு சென்னை எக்மோர் டேஷனில் நுழைந்தது. பதினாறு மணி நேரப் பயணக் களைப்புடன் இறங்கிய வைத்தியை அழைத்துப் போக வந்திருந்தான் அவனுடைய நண்பன் பெஞ்சமின்.

''வாடா வைத்தி... எப்படி இருக்கே இப்போ?'' - பெஞ்சமின் கேட்டான்.

''பாரேன் நீதான் - எப்படி இருக்கேன்னு...''

''மதுரையில படிச்சிட்டிருந்தப்ப இருந்த மாதிரிதான் இருக்கே - அசல் பசு மாடு மாதிரி...''

''சீ...! கண் வச்சிடாதடா...''

''கண் வச்சு மெலியற உடம்பாடா ஒனக்கு...! சரி சரி, வா... ஒரு ஆட்டோ பிடிச்சு ஜல்தியா போயிடலாம்...''

இருவரும் சாமான்களுடன் வேகமாக வெளியேறினார்கள். பெஞ்சமின் கைதட்டி ஒரு ஆட்டோவைக் கூப்பிட்டு, சாமான்களை ஏற்றினான். பின் இருவரும் ஏறிக்கொண்டார்கள்.

''ஆட்டோ! ட்ரிப்ளிகேன் போப்பா'' என்றான் பெஞ்சமின்.

ஆட்டோ ரிக்ஷா டிரைவர் வண்டியை அசுர வேகத்தில் கிளப்பினார்.

''வேலைல என்னிக்கி சேரப் போறேடா வைத்தி?''

''நாளைக்கு... ஒனக்கு எத்தனை மணிக்கு ஆபீஸ் போகணும் பெஞ்சமின்?''

''இதோ, மணி எட்டாயிடுச்சே... ஒன்னை ரூம்ல கொண்டு போய்

விட்டதும் டிபன் சாப்பிட்டுட்டுக் கிளம்படுவேன். எனக்கு ஒன்பது மணிக்கு ஆபீஸ்...''

''ஒனக்கு ஆபீஸ் மௌண்ட் ரோடுதானா?''

''ஆமா... தன் பில்டிங். அஞ்சே நிமிஷத்ல போயிடலாம்... ஹலோ ஆட்டோ! பைகிராஃப்ட்ஸ் ரோட் லெப்ட்ல கட் பண்ணி ரைட்ல திரும்பு. நாலாவது பில்டிங்...''

ஒரு கறுத்த கட்டடத்தின் முன்னால் ஆட்டோ நின்றது. பெஞ்சமின் குனிந்து மீட்டரைப் பார்த்தான்.

வைத்தி பர்ஸிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்தான். அந்தக் கட்டடத்தின் ஜன்னலின் கம்பிகளில் மாடுகள் கட்டப் பட்டிருந்தன... பெஞ்சமின் உள்நோக்கிக் குரல் கொடுத்தான்: ''நாயக்கர் நாயக்கர்...!''

''என்னடா பெஞ்சமின், பில்டிங் பார்த்தா ஹைதர் அலி காலத்துல கட்டின மாதிரி இருக்கே...?''

''வெளியில பாக்காத... உள்ள வந்து நம்ம ரூமைப் பார்... சும்மா ஃபைவ் ஸ்டார் ரூம் தோத்துடும். கமான்...''

உள்ளே இருந்து வந்த நாயக்கர், பெட்டியைத் தூக்கிக் கொண்டார். வைத்தி ஒரு பெட்டியைத் தூக்கிக் கொள்ள, பெஞ்சமின் ஹோல்டாலுடன் நடந்தான். இருண்ட குறுகலான படிக்கட்டுகளில் பெஞ்சமின் வைத்யநாதனை எச்சரித்தான்: ''பாத்துவாடா ராஜா... சுவர்ல உரசி இடிச்சி விட்டுடாத...''

முதல் மாடியில் நீண்ட வராந்தாவின் கடைசி அறையைக் காட்டினான் பெஞ்சமின். ''இதாண்டா வைத்தி, நம்ம ரூம்... ரூம் நம்பர் எய்ட்டீன். வலது காலை எடுத்து வச்சு வா...''

அறைக்குள் நான்கு சுவர்களிலும் பெரிய பெரிய 'ப்ளோ - அப்'களில் பாப், ஜாஸ் இசை விற்பன்னர்களின் கோலாகலமான தோற்றங்கள்... ஒரு சுவர் முழுக்க கபில்தேவ், கவாஸ்கர், வெங்கட்ராகவன்... மூலையில் ராட்சச ஒலி பெருக்கிகளுடன் ஸ்டீரியோ...

அப்போதுதான் தூக்கம் கலைந்து கண்களை விழித்துப் பார்த்த அறை நண்பன் மனோஹரை வைத்யநாதனுக்கு அறிமுகம் செய்தான்.

''இவன்தாண்டா வைத்தி, மனோஹர் - நம்ம ரூம் மேட். கிரிக்கெட்னா உயிர் பயலுக்கு. லாலா அமர்நாத் மாதிரி அப்படியே பேசிக் காட்டுவான்...''

வைத்யநாதனும் மனோஹரும் கை குலுக்கிக் கொண்டார்கள்.



''வைத்தி! அப்ப நான் கிளம்பறேன். டிபன் சாப்பிட்டுட்டு அப்படியே பஸ் ஏறிடுவேன். மனோஹருக்குப் பத்து மணி ஆபீஸ்... குளிச்சு சாப்பிட்டுட்டுக் கிளம்புவான். நீ நல்லா ரெஸ்ட் எடு. என்ன வேணுமானாலும் நம்ம நாயக்கரைக் கேளு... அவர்தான் நமக்கு பி.ஏ., மெஸஞ்சர், செக்யூரிட்டி ஆபீஸர் எல்லாம்! அவரை நல்லா கவனிச்சுக்க... நாயக்கரே! ஐயாவை நல்லா கவனிச்சுக்க... பெரிய ஜமீன்தார் வீட்டுப்பிள்ளை... ஈவினிங் பாப்போம். எங்கேயும் போயிடாத... கரெக்டா நாலே முக்காலுக்கெல்லாம் வந்துடுவேன்... பை...!''

பெஞ்சமின் ஆபீஸ் கிளம்பி விட்டான்.

பத்து மணிக்குள் லாட்ஜ் அநேகமாகக் காலியாகி விட்டது. எல்லோருமே வேலைக்குப் போய் விட்டார்கள். வைத்யநாதன் குற்றால அருவியை நினைத்துப் பார்த்தான். குற்றாலத்து விருட்சங்கள் கண்ணில் தெரிந்தன. ஞாபகம் வந்ததும் தான் வந்து சேர்ந்த விஷயத்தை அப்பாவுக்கு எழுதி நாயக்கரிடம் கொடுத்து, உடனே போஸ்ட் பண்ணக் கொடுத்தான். ரயில் பிரயாணத்தில் சரியாகத் தூங்காததால் தூக்கம் கண்களில் கனத்தது. அறைக் கதவைத் தாளிட்டு விட்டு, லுங்கி அணிந்து படுக்கையில் விழுந்தான்... சில நிமிடங்களில் அவனிடமிருந்து குறட்டை சப்தம் கேட்டது.

### 1983. செப்டம்பர் 13. செவ்வாய்க்கிழமை.

ஒரு தனியாரின் பிரத்யேக சாலையின் கோடியில் இருந்த மிகப்பெரிய கட்டடத்தின் முதல் மாடியில் இயங்கிக் கொண்டிருந்தது - அந்த மருத்துவப் பொருட்கள் தயாரிக்கும் பம்பாய் தனியார் நிறுவனத்தின் சமீபத்தில் துவக்கப்பட்ட சென்னைக் கிளை.

அந்த கம்பெனியின் பர்சனல் மானேஜர் கோகுல்தாஸின் எதிரில், காலை சரியாகப் பத்து மணிக்கு வைத்யநாதன் தன்னுடைய நியமன காகிதங்களுடன் தயாராகி நின்றான்.

கோகுல்தாஸ், இன்டர்காமில் டைரக்டரிடம் வைத்யநாதன் நியமன விஷயங்களைச் சில நிமிடங்களில் விளக்கிச் சொல்லிவிட்டு, பஸ்ஸரை அழுத்தினார்.

உள்ளே வந்த பணியாளிடம் கோகுல் தாஸ், ''சக்ரபாணியை வரச் சொல்'' என்றார்.

சக்ரபாணி அவசர அவசரமாக ஓடி வந்தார்.

''மிஸ்டர் சக்ரபாணி, இவர்தான் மிஸ்டர் வைத்யநாதன். இப்போதைக்கு இவர் சூர்யாவுக்கு அசிஸ்டெண்ட்டா இருக்கட்டும். அந்த செக்ஷன் கம்ப்ளீட்டா பாம்பேயில இருந்து ஷிப்ட்டாகிற வரைக்கும் அதுலேயே இருக்கட்டும். இவரை அழைச்சிட்டுப் போங்க... போங்க மிஸ்டர் வைத்யநாதன்.''

''வாங்க வைத்யநாதன்!'' - சக்ரபாணி அவனை அழைத்துச் சென்றார். சூர்யா என்ற நவீனமான - சற்றுப் பெருமிதமான பெயரை மனத்திற்குள் உச்சரித்துக் கொண்டே கல்லூரி பிரின்ஸிபாலைப் பார்க்கப் போகிற நூதனமான தன்மையுடன், சக்ரபாணியுடன் நடந்தான் வைத்யநாதன்.

மூடியிருந்த கதவைத் தள்ளித் திறந்து புகுந்த சக்ரபாணியுடன் அந்த அறைக்குள் நுழைந்ததுமே வைத்யநாதன் மொத்தமாக வியந்து விட்டான்! மிக நவீனமான சுவர்க் கடிகாரத்தின் கீழ் ஓர் அன்னப் பறவைக்கு உரிய எழிலுடன் ஆசனத்தில் அமர்ந்து யாருடனோ டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த சூர்யாவைக்கண்ட கணத்தில், ஓர் அபூர்வமான ஜன்னல் அவனுக்குள் மிக விசாலமாகத் திறந்தது! ஷாம்பூவில் உலர்ந்த கூந்தல் இலகுவாகக் கொண்டையிடப்பட்டு, மிக மெலிதான நீல வர்ண வலைக்குள் பொருத்தப்பட்டிருந்தது. மிக மெலிதாக ரோஜா வர்ணச் சாயம் உதடுகளில். அழகிய நேர்த்தியான செவிகளில் எளிமையான இலைத் தோடுகள்... புஜங்கள் தெரியும் படியான ஜாக்கெட்கூட சௌந்தர்யம் பிசகி விடாமல் தைக்கப்பட்டிருந்தது. மொரமொரப்பான வார்ணாஸி புடவையில் இளம் பெண் போலவும் அல்லாமல் பேரிளம் பெண்ணாகவும் அல்லாமல், சூர்யா ஒரு வினோதக் கலவையாகத் தெரிந்தாள். அவளிடம் ஒரு ஆபீஸருக்கு உரிய கம்பீரம் இருந்தது. ஒரு வாத்ஸல்யம் நிறைந்த பெண்ணுக்குரிய மென்மை இருந்தது.

வைத்யநாதனில் அற்புதமானதொரு பரிமாணம் விநாடியில் தொடப்பட்டு விட்டது. தன்னுடைய அம்மா காந்திமதிதான் சூர்யாவாகப் பிறந்து வந்திருப்பதாக உணர்வுவயப்பட்டு மயங்கினான். ஒரு பள்ளிச் சிறுவனுக்கு உரிய அறியாமை மிக்க பயபக்தியோடு தன்னை வைத்யநாதன் வணங்கியதில் சூர்யாகூட மெலிதாக ஆச்சரியப்பட்டாள்.

சூர்யாவுக்கு வலது புறத்தில், அவளைப் பார்க்கும் படியாகப் போடப்பட்டிருந்த மேஜையின் எதிரில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு அமர்ந்து வெகு நேரமாகியும் வைத்யநாதனின் உணர்வுகள் சமனம் அடையவில்லை. ஓர் அந்நியோந்நியம், அதே சமயம் ஒரு விகற்பமில்லாத தனித்திருப்பு - ஆகிய இரண்டும் கலந்து நூதனத்



தொகுப்பாகத் தோன்றிய சூர்யாவை ஏறிட்டுப் பார்க்கக்கூட வைத்யநாதனின் உணர்வுகள் ஏனோ சங்கோஜப்பட்டன.

''இலஞ்சிங்கற உங்க ஊர் எங்கே இருக்கு மிஸ்டர் வைத்யநாதன்?''

- சூர்யா கேட்டாள்.

''குற்றாலம் கேள்விப்பட்டிருக்கீங்களா?''

''த ஃபால்ஸ்...?''

''யா...! அதுக்குப் பக்கத்திலே. நீங்க குற்றாலம் வந்திருக்கீங்களா மேடம்?'' - வைத்யநாதன் ஒரு ரம்மியமான ஆவலுடன் கேட்டான்.

''நோ மிஸ்டர் வைத்யநாதன். ட்ரிச்சி தாண்டி சௌத்ல நான் போனதேயில்லை...''

- சூர்யா இதைச் சொன்ன மறு நிமிஷம் வைத்யநாதன் சூர்யாவை அழைத்துக் கொண்டு குற்றாலம் போனான்! ஐந்தருவி போனான்! தேனருவி போனான்!

வைத்யநாதனில் மிக இறுக்கமாக மூடப்பட்டிருந்த, மறுக்கப்பட்டிருந்த ஒரு சதுக்கம் உண்மையாகவே திறந்து கொண்டது. கூண்டு திறக்கப்பட்டுவிட்ட ஒரு பட்சி அவனுக்குள் சிறகுகளை சிலிர்த்து விரித்தது! பெண்ணின் அருகாமை என்ற உணர்வு பாலைவெளியாக அவனுள் பரந்து கிடந்ததே - அந்தப் பரப்பின் பிரும்மாண்ட சூரியகாந்தி மலராக சூர்யாவின் முகம் மலர்ந்து தெரிந்தது!




மெரீனா கடற்கரையில் புஹாரியின் பின்னால், மணலில் வைத்யநாதனுக்கு எதிரில் கொஞ்சம் ஆச்சரியத்துடன் பெஞ்சமின் உட்கார்ந்திருந்தான்.

''என்னடாது... ஆபீஸ் போன மொத நாள்லேயே பொத்துனு விழுந்துட்டே...! அப்பேர்ப்பட்ட ரம்பையா அவ...?''

''ஸோ டைனமிக்...!''

''ஸோ டைனமிக்கா? நெஜமாவே எனக்குப் புரியலைடா வைத்தி. ஏன்னா, எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் காலேஜ்ல படிச்சிட்டிருந்தப்ப நீ ஒருநாள்கூட ஸைட் அடிச்சதோ, என்னோட சேந்து பொண்ணுங்களைத் துரத்தினதோ கிடையவே கிடையாது. பொண்ணுங்களைப்பத்தி பேசக்கூட மாட்டே நீ. இன்னிக்கு

என்னடான்னா ஒரே நாள்ல ஒருத்திகிட்ட சுருண்டு விழுந்திருக்கே! சமாசாரம் என்னதுன்னே பிடிபடமாட்டேங்குதே... கேட்டா, சூர்யா ஸூப்பர் ஸ்டார்னு சொல்றே...!''

சிகரெட் புகையை ரசனையுடன் ஊதியபடி வைத்யநாதன் சொன்னான்: ''சொன்னாலும் சொல்லாட்டாலும் சூர்யா ஸூப்பர் ஸ்டார் தாண்டா பெஞ்சமின்!''

''ஸூப்பர் ஸ்டாரா, இல்லையாங்கறதை அப்புறமா பாத்துக்கலாம். ஆனா, அவ ஒனக்கு சுப்பீரியர். அதை மறந்துட்டு வாயைப் பொளந்தபடி பாக்காதே அவளை. ப்ரைவேட் லிமிடெட் கன்ஸர்ன்... ஒரு நிமிஷத்ல ஒன்னை இலஞ்சிக்குத் தூக்கி எறிஞ்சிடுவான்... அதுவும் மேலிடத்து இன்ஃப்புளுயன்ஸ்லே பாம்பேயிலருந்து ப்ரொமோட்டாகி வந்திருக்கானு வேற சொல்ற... கேர்ஃபுல்லா இரு. அடக்கமா இரு...''

''நான் அடக்கமாத்தாண்டா இருக்கேன். பட், அவ ரொம்ப ஃப்ரீயா, சோஷியலா இருக்கா. யார்கிட்டேயுமே அவ ஆபீஸர் மாதிரி பேசறதில்ல... அதிகாரம் பண்றதில்ல. வெரி வெரி நைஸ்டா பெஞ்சமின்...!''

''வசமாத்தான் மச்சான் விழுந்திருக்கே... சரி, ஒனக்கு அவ ஆபீஸர்னு சொல்றீயே - என்னடா வயசிருக்கும் அவளுக்கு?''

சில விநாடிகள் யோசித்துவிட்டு வைத்யநாதன் சொன்னான்: ''என்ன... இருபத்தாறு அல்லது இருபத்தேழு இருக்கும்.''

''ஒனக்கு...?''

''இருபத்துநாலு கம்ப்ளீட்டாகப் போகுது... ஆனா என்னவிட பார்க்க யங்கா இருக்கா...''

''ச்சீ...! அதுக்காகக் கேக்கலடா வைத்தி... சூர்யா கொஞ்சம் வயசானவளான்னு தெரிஞ்சுக்கறதுக்காகக் கேட்டேன். வேற ஒண்ணும் இல்லை...''

''இஸ் நாட் எ கேர்ள்...''

''அதனாலதான் ஒனக்குப் பிடிச்சிருக்கு...''

''சூர்யா ஒரு வுமன். ஃபுல் வுமன்...!''

சிகரெட்டை மணலில் நெரித்து அணைத்துவிட்டு, உள்ளங்கைகளைச் சூடு பறக்கத் தேய்த்துவிட்டு பெஞ்சமின் சொன்னான்: ''நீ சொல்றதை நான் ஒத்துக்கறேண்டா வைத்தி. அதே சமயத்ல நான் சொல்றதை நீ ஒத்துக்க... சூர்யா ஃபுல் வுமன்னே வச்சிப்போம். பட், நீ ஃபுல் மேன் ஆகலை இன்னும்...''

''நீ சொல்றது புரியலையே!''



''இதோ தானே இருக்கேன். என்னோட இந்த வயசில நான் எப்படி இருக்கணுமோ அப்படியே இருக்கேன் - சைட் அடிக்கறேன். பொண்ணுங்களைத் தூக்கறேன். என்னோட ஆபீஸ் டைப்பிஸ்ட்டை இழுத்துக்கிட்டு சினிமாவுக்குப் போறேன்... ஸோ நார்மல்! ஆனா, நீ நார்மலா இல்லையே ராஜா! மனசுக்குள்ளாற ஒரு ஸ்கூலுக்குப் போற பையனாட்டம்ல இருக்கே...!''

''பரவால்ல... நீ ஒன்னோட அபிப்பராயத்தைச் சொல்ற...''

''நீ வேணா அபிப்பிராயமா எடுத்துக்க! ஆனா, நான் சொல்றது அப்பழுக்கு இல்லாத உண்மை. வைத்தி, ஒன்னோட அம்மா இறந்தப்ப ஒனக்கு என்ன வயசுன்னு சொன்னே?''

''பன்னிரண்டு...''

''நான் சொல்றது அதுதான். ஒன்னோட லைஃபில ஒரு முக்கியமான போர்ஷன் அந்தப் பன்னிரண்டு வயசிலேயே தேங்கிப் போயிடுச்சு... ஒனக்குள்ள இருக்கற அந்தப் பன்னிரண்டு வயசுப் பையனுக்கு இந்த சூர்யாகிட்டயிருந்து ஒரு ஃபீட் கெடைச்சிருக்கு. அதனாலதான் எடுத்த ஒடனே நீ சொன்ன - செத்துப் போன உன்னோட அம்மாவே சூர்யாவா அவதாரம் எடுத்து வந்திருக்கிறதா...''

''உண்மையா நான் உணர்ந்ததைச் சொன்னேன்... அப்படியெல்லாம் அவளைத் தூக்கி வச்சிப் புகழணும்னு மனசுக்குள்ள எதையும் திட்டம் போட்டுப் பேசலை நான்...''

''அது எனக்கும் தெரியுதுடா வைத்தி. அப்படியெல்லாம் நீ திட்டம் போட்டுப் பேசியிருந்தா மெனக்கெட்டு நான் இந்த டாபிக்கைப் போய் இவ்வளவு நேரம் பேசிட்டிருக்க மாட்டேன். அதனால - பேஸிக்கா நான் இதுல என்ன சொல்றேன்னாக்க, இருபத்துநாலு வயசு ஆம்பளைக்குள்ள இருபத்துநாலு வயசு ஆம்பளைதான் இருக்கணும். பன்னிரண்டு வயசுப் பையன் இருக்கக்கூடாது... ஒனக்குள்ள பன்னிரண்டு வயசுப் பையன் ரொம்ப ஹெல்ப்லெஸ்ஸா இருக்கான்... அது நல்லது கெடையாது. அவ்வளவுதான் சொல்வேன்...''

பல நிமிஷங்களுக்கு நண்பர்கள் இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். லேசாக இருட்டத் துவங்கியிருந்தது. கடற்கரையில் மனிதர்கள் அதிகமாக இல்லை... மணலில் நிறைய காக்கைகளும் நாய்களும் திரிந்தன.

''வைத்தி! இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு இந்த மெரீனா ரெஸ்டாரெண்ட்லேயே சாப்பிட்டுட்டுப் போயிடலாம்... தந்தூரி சிக்கன் ஏ ஒன்னா இருக்கும் இவன்கிட்டே...''

''பெஞ்சமின்! இன்னியோட லாஸ்ட் நான் மட்டன் சாப்பிடறது.
நாளையில் இருந்து தொடப் போறதே இல்லை... ஆயுளுக்கும்...''
''என்னடாது... திடீர் திடீர்னு குண்டாத் தூக்கிப் போடறே? ஏன்...
என்ன ஆச்சு ஒனக்கு?''
''என்னமோ ஆயிடுச்சுன்னுதான் வச்சுக்கோயேன்...''
''அதான் தெரியுதே, என்னமோ ஆயிடுச்சுன்னுதான்! சரி, அதை
விடு. ஒங்க ஆபீஸ்ல, அதுவும் ஒன்னோட செக்ஷன்ல வேற
பொண்ணுங்க யார் யார் இருக்றது? அதைச் சொல்லு. நமக்கு
ஏதாவது தேறுமான்னு பாக்கலாம்...''
''ஏண்டா, உன்னோட ஆபீஸ்ல ஒண்ணும் இல்லையா
பொண்ணுங்க...?''
''டைப்பிஸ்ட் ஒருத்தியைத் தவிர அத்தனையும் கெழவிங்கடா...
அந்த டைப்பிஸ்ட்டையும் கூட்டிட்டுத் திரிஞ்சி அலுத்துப் போச்சு!
உன் ஆபீஸ்ல டக்கரா எவளாவது இருந்தா ஒன்னைப் பாக்ற சாக்கில
வந்து பாக்கலாமே...''
''அப்படி விசேஷமா சொல்றாப்பல யாரும் இல்லடா பெஞ்சமின்.
எல்லாம் ரொம்ப சின்னச் சின்ன பொண்ணுங்க... அதுல
ஆனந்தின்னு வெரி யங் அண்ட ப்யூட்டிஃபுல் கேர்ள் ஒண்ணு இருக்கு
- டைப்பிஸ்ட்டா. பட் அது ஊமைப் பொண்ணு...''
''தொலைஞ்சது போ.''
''நான் அதை ஊமைப் பொண்ணுன்னு நெனைச்சே பார்க்கலடா
பெஞ்சமின். துடிப்பா இருப்பா. என்ன அழகான கண் தெரியுமா
அந்தப் பொண்ணுக்கு...? அநியாயமா ஊமையா போயிடுச்சு...''
''சரி, போனா போகட்டும்... போன ஜென்மத்ல அது என்ன பாவம்
பண்ணுச்சோ... ஒன்னோட செக்ஷன்ல ஒன்னைப்போல
இளங்காளை வேற எவனாவது இருக்கானா?''
''நோ. என்னைத் தவிர வேற எல்லாருமே மிடில் ஏஜைத்
தாண்டியவங்கதான்...''
''அப்ப ஜமாய்! மத்யானம் ஆபீஸ்ல சாப்பாட்டுக்கு என்ன
செஞ்சே?''
''அங்கேயே ஒரு அருமையான கேன்ட்டீன் இருக்கு... லிமிட்டட்
மீல்ஸ் மூணு ரூபா. தயிர் எழுபது பைசா. ஆனா, ஐயா இன்னிக்கு
கேன்ட்டீனுக்குப் போகலை...!''
''பின்னே?''
''சூர்யாவுக்கு அந்த கேன்ட்டீன்ல இருந்து எங்க ஆபீஸ் டைனிங்
ரூமுக்கு தினம் கேரியர்ல வந்திடுமாம். இன்னிக்கு ஐயாவுக்கும்



சேத்து சூர்யாவே பே பண்ணியாச்சி. எனக்கும் சேத்து இன்னொரு
கேரியர்ல சாப்பாடு வந்தது. நானும் சூர்யாவும் சேந்துதான்
சாப்பட்டோம்...''
''பரவாயில்லடா மச்சான். இன்னி வரைக்கும் நாந்தான்
பொண்ணுங்களுக்கு ஹோட்டல்ல வாங்கி வாங்கித் தந்திருக்கேன்...
ஒனக்கு ஆபீஸ்க்குப் போன மொத நாளே ஒரு ஸூப்பர் ஸ்டார்
மத்யான சாப்பாடே வாங்கித்தரா - தயிரோட! ஜமாய்! ஆனா, ஒரே
ஒரு வார்னிங் - மொத நாளே சாப்பாடு வாங்கித் தந்துட்டான்னு
நெனைச்சு ஒனக்கு சமைச்சுப் போடறதுக்கு வர்றியான்னு அவளைக்
கேட்டுடாதே...!''
வைத்யநாதனின் முகம் சட்டென சுண்டி விட்டது. ''பெஞ்சமின்!
நீ அளவுக்கு மீறிப் பேசறே... எனக்கு அவளை ரொம்பப்
பிடிச்சிருக்கு. இல்லேன்னு சொல்லலை. ஆனா, அதுக்காக நான்
கண்டபடி கற்பனை எதுவும் பண்ணிக்கலை. ஷி இஸ்
இன்டெலிஜெண்ட்...''
''ஐ அக்ரி...''
''ஷி இஸ் டைனமிக்...''
''அக்ரிட் மேன்...''
''ஸோ, ஐ அட்மைர்! தட்ஸ் ஆல்...''
''அக்ரிட். வைத்யநாதன் ஸார், ஆனா... அதோட
முடியறதில்லை... எங்கேயோ எப்பவோ படிச்ச ஒரு வரியை மட்டும்
சொல்றேன் ஸார்... அதுக்குப் பதில் எதுவும் நீ சொல்ல வேணாம்...
கேட்டுக்க போதும்... அதாவது - அட்மிரேஷன் இஸ் ஏ நெஸஸரி
ஃபீலிங் ஆஃப் இன்ஸிபயண்ட் லவ்... தட்ஸ் ஆல். வா, போய்
தந்தூரியை ஒரு புடி புடிக்கலாம். புடிச்சுட்டு நைட் ஷோ எதுக்காவது
மனோஹரையும் கூட்டிட்டுக் கிளம்பலாம்...''
''நோ நோ. சாப்பிட்டுட்டு நான் எங்க அப்பாவுக்கும் பாட்டிக்கும்
ஆபீஸ்ல ஜாய்ன் பண்ணிட்டதை விவரமா லெட்டர் எழுதிப்
போடணும்...''
''சரி சரி. இப்படியே நீ அப்பாவுக்கும் பாட்டிக்கும் ஸ்கூல் பையன்
மாதிரி லெட்டர் எழுதிட்டே இரு. நானும் மனோஹரும் இன்னிக்கி
ஒரு காபரே டான்ஸ் பாக்கப் போறோம்...''
''தாராளமா போ. வேணும்னா உன்னோட ஆபீஸ்
டைப்பிஸ்ட்டையும் இழுத்துட்டுப் போடா காபரே டான்ஸுக்கு...''
''ரெண்டு தடவை பாத்துட்டாடா அவ. போரடிக்குதுன்னு
சொல்லிட்டா!''

''அப்ப வேற எவளையாவது கூப்பிடு...''

''உன்னோட ஸூப்பர் ஸ்டாரைத்தான் கூப்பிடப் போறேன்!''

வைத்யநாதன் மணலை வாரி பெஞ்சமின் மேல் எறிந்தான்.

''ஸாரிடா, ஸாரிடா மச்சான்! சும்மா டமாஸ். அவ வரேன்னு சொன்னாக்கூட நான் டச் பண்ணமாட்டேன்! நமக்கு ஒத்துக்காது கொண்டை போட்டவ!''

''அப்ப கம்னு இரு...''

''சரி, எந்திரி... போய்ச் சாப்பிடலாம்...''

நண்பர்கள் இருவரும் மணலைத் தட்டியபடி எழுந்தார்கள்.

பெஞ்சமின் கேட்டான்: ''நெஜமாவே னான் - வெஜிடேரியன் சாப்பிடறதை நிறுத்தப் போறீயாடா வைத்தி...?''

''நெஜமாவேதான்...''

''அப்ப இன்னிக்கு தந்தூரி ஒன்னோட செலவு!''

''ஒயெஸ்...!''

வைத்யநாதனும் பெஞ்சமின்னும் கைகோத்தபடி இருளில் மெரீனா ரெஸ்டாரண்ட்டை நோக்கி நடந்தார்கள்.

வைத்யநாதனுக்கு தான் சென்னைக்குக் கிளம்புமுன் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது.

''வைத்தி, இப்ப நீ வெயிட் எவ்வளவு இருக்க?''

''அதே வெயிட்தான் அப்பா. ரெண்டு வருஷமா கொஞ்சங்கூட கூடாமே குறையாமே எண்பது கிலோ... ஏம்பா கேக்கறீங்க?''

''பாக்கறதுக்குக் கொஞ்சம் கூடின மாதிரி தெரிஞ்சது. அதான் கேட்டேன்.''

''வெயிட் இதுக்கு மேல கூடிடக் கூடாதுன்னு ரொம்ப ஜாக்ரதையா இருக்கேன்பா...''

''அதுக்காகச் சாப்பிடாமே பட்டினிகெடக்காத... இந்த உடம்புவாகு நம்ம பரம்பரை விஷயம். நீ என்னை மாதிரி இருக்கே. நான் உன்னோட தாத்தா மாதிரி இருக்கேன். ஆனா, உன்னோட வெயிட் என்னன்னு எதுக்காகக் கேட்டேன்னா - சாப்பாட்டு விஷயத்ல குறிப்பா மட்டன் சாப்பிடற விஷயத்தைக் கொஞ்சம் குறைச்சுக்கறது நல்லதுன்னு தோணுது எனக்கு. அதுக்காக நீ மட்டனே சாப்பிட வேண்டாம்னு நான் சொல்லலை. நெனைச்சப்பல்லாம் மட்டன் சாப்பிட்டுச் சாப்பிட்டு ஹெவி வெய்ட்டாகி என்னோட தாத்தா, உன்னோட தாத்தால்லாம் மிடில் ஏஜ்லேயே எப்படியெல்லாம் கஷ்டப்பட்டாங்கன்னு ஒனக்கு நான் பல தடவை சொல்லிருக்கேன். நான் அமெரிக்கன் காலெஜ்ல படிச்ச



காலத்ல முழுசா ரெண்டு கோழி சாப்பிடுவேன். முப்பதாவது வயசிலேயே என் ஒடம்பு என்ன பாடுபட்டதுன்னும் ஒனக்குச் சொல்லியிருக்கேன்... அந்தக் கஷ்டம் ஒன்னோட ஒடம்புக்கு வந்திடக் கூடாது. அதான் என் பாயிண்ட்...!''

''நானே ஒங்ககிட்ட சொல்லணும்னுதான் நெனைச்சிட்டு இருந்தேன். நீங்களே சொல்லிட்டீங்க... மெட்ராஸ் போனதும் வெஜிட்டேரியனா ஆயிடலாம்னு முடிவு பண்ணிருக்கேன்பா.''

''மட்டன் சாப்பிடாமே ஒன்னால இருக்க முடியுமா வைத்தி?'' - செல்வரத்னம் மகனைப் பரிவுடன் கேட்டார்.

''சத்யமா முடியும்பா...''

''முடியணும் என்கிறதுக்காக பாடியை ரொம்பக் கஷ்டப்படுத்தாத... எதையும் சட்ட திட்டமா நெனைச்சிக் கஷ்டப்பட்டு ஃபாலோ பண்ணக் கூடாது... அதான் என் பாயிண்ட்... புரியுதா நான் சொல்றது?''

''புரியுதுப்பா. நெஜமாவே கொஞ்ச நாளா என் ஒடம்புக்கு மட்டன் அவ்வளவா ஒத்துக்கமாட்டேங்குது. மனசிலேயும் மட்டன்னா ஒரு மாதிரியான அவெர்ஷன் ஏற்பட ஆரம்பச்சிருக்கு...''

''அதுக்காக அவசரப்பட்டுடாத வைத்தி. மட்டன் ஒடம்புக்கு ஒத்துக்கலையா, மனசுக்கு ஒத்துக்கலையாங்கறதை நிதானமா கண்டுபிடி. கண்டுபிடிச்ச பிறகு அதுக்குத் தக்கபடி நடந்துக்க... ஒடம்பும் கஷ்டப்படக்கூடாது. மனசும் கஷ்டப்படக்கூடாது. அதான் என் பாயிண்ட்...''

வைத்யநாதன் இப்பொழுது அதை நினைத்துப் பார்த்துப் புன்சிரிப்புடன் நடந்தவாறே மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்: 'ஒங்க பாயிண்ட் எனக்கு நல்லா புரியதுப்பா...'

இமேஜ் எதுவும் இல்லாமல் வாழ்க்கையை அணுக வேண்டும் என்றுதான் யாருக்குமே செல்வரத்னம் சொல்கிற சித்தாந்தம்.

அவர் படித்துப் பட்டம் பெற்ற அதே மதுரை அமெரிக்கன் கல்லூரியில்தான் தானும் படிக்க விரும்புவதாக வைத்யநாதன் சொன்னபோதும், அந்த இமேஜ் இருக்கக் கூடாது என்று பக்குவமாக அவனுக்கு விளக்கிச் சொல்லிய பின்புதான் அந்தக் கல்லூரியில் அவன் சேர்ந்து கொள்ளச் சம்மதித்தார். அவருடைய இந்தச் சித்தாந்தத்துக்குக் காரணம் இருந்தது.

இலஞ்சி, செல்வரத்னத்தின் சொந்த ஊர் இல்லை. அவருடைய

சொந்த ஊர், பீடித் தொழிலின் கோட்டையென்று சொல்லப்படுகின்ற முக்கூடல். ஒரு பீடித்தொழிற்சாலையின் கண்காணிப்பாளரின் மகனாக எளிய குடும்பத்தில் பிறந்த செல்வரத்னத்திற்கு, தான் பெரிய செல்வந்தனாகப் பிறக்கவில்லையே என்ற ஆதங்கம் சிறு வயதிலேயே அவரைக் கலங்க வைத்தது. பெரும் பணக்காரனாக ஆகவேண்டும் என்ற லட்சியம் அவருக்குள் கூர்மையான ஆணிவேராகப் பாய்ந்து விட்டது. உழைப்பதைவிட கல்வி யோக்யதாம்சமே எதிர்காலத்தில் தான் அளவற்ற செல்வம் திரட்டுவதற்கான நுண்ணிய திறன்களைத் தனக்குச் சேகரித்துத் தரும் என அவர் நம்பினார். அதனால் திருநெல்வேலியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்ததும், பிடிவாதத்துடன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மேற்படிப்புக்காகச் சேர்ந்தார். எதிர்காலத்தில் மாவட்ட கலெக்டராக உருவாகிற அளவிற்குக் கல்விப் பெருமையைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை செல்வரத்னத்தின் மனத்தில் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. ஆனால், அந்த எரிதலை திருமணம் என்ற வெள்ளம் வந்து அணைத்து விட்டது.

சிறுவயதிலிருந்தே இவரின் நடத்தையையும் கல்வித் தேர்ச்சியையும் கண்டு வந்த இலஞ்சியைச் சேர்ந்த குருசாமி என்ற பெரிய நில்ச்சுவான்தார், தன்னுடைய ஒரே மகள் காந்திமதியைச் செல்வரத்னத்திற்கே மணமுடித்து வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீவிரமாக முயன்று, வெற்றி பெற்று விட்டார். செல்வந்தனாக வேண்டும் என்ற தன் லட்சியம் திருமணத்தின் வழியாக இலகுவாக நிறைவேறும் வாய்ப்பு கிடைத்தபோது, செல்வரத்னம் மிகவும் மனம் நெகிழ்ந்து போனார். தெய்வ கடாட்சம் காந்திமதியென்ற உறவில் நன்செய் வயல்களாகவும், மாந்தோப்புக்களாகவும், தென்னந் தோப்புக்களாகவும், குற்றாலம் லட்சுமிபுரத்தில் நான்கு வீடுகளாகவும் அவரைச் சூழ்ந்து கொண்டதில் மனம் கனிந்து சிறிதும் அகங்காரம் அற்ற சாந்த சொரூபியாகி விட்டார்.

வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வேண்டுமேயென்ற உணர்ச்சிகள் உண்மையில் தேவையே அற்றதென்று அவருக்குப் புலப்பட்டது. வாழ்க்கையே நம்மைச் செம்மையாக இட்டுச் செல்லும் பரிவும் சக்தியும் கொண்டது என்ற உண்மையை எளிதாகவே செல்வரத்னத்தால் காண முடிந்தது. வாழ்க்கையோடு முரண்படுவதே ஆசையும் கவலையும் என்ற பெரும் உண்மையும் அவருக்குத் தெரிந்து போனது.



**1983. செப்டம்பர் – 19. திங்கட்கிழமை.**




முற்றிலுமாகச் சூரியனை மேகங்கள் மறைத்திருந்தன. இன்றும் மழை பெய்யலாம் போலிருந்தது. சூர்யாவின் வலதுபுறம் விற்பனை பற்றிய இ.டி.பி. ரிப்போர்ட்டை வைத்யநாதன் ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தான். பென்ஸிலை ஷார்ப்பனரால் கூராக்கிக் கொண்டிருந்த சூர்யா, மெலிதாக உதடுகளைக் கடித்தபடி வைத்யநாதனை ரகசியமாக, ஆழமாக, அவசரமற்று நிதானமாகப் பார்த்தாள். ரோமச் சுருள்கள் மண்டிய அவனின் கைகளை ஒருகணம் கவனித்தாள். தங்க ஃப்ரேமிட்ட அவனின் மூக்குக்கண்ணாடியை வியப்புடன் அவதானித்தாள். ஒரு திடகாத்திரமான, அதே சமயம் குழந்தைத் தனம் மிக்க ஆடவன் என, சூர்யாவின் அறிவு, வைத்யநாதனைத் துல்லியமாகக் கணித்தது. அப்போது அந்தப் பிரிவுக்கு உரிய தபால்களை சூர்யாவின் மேஜையில் கொண்டு வந்து வைத்தான் காதர்.

ஒவ்வொன்றாகப் புரட்டிய சூர்யாவின் பார்வை, வைத்யநாதனுக்கு முகவரியிட்டிருந்த ஒரு கடிதத்தில் சில விநாடிகள் பரிவுடன் இமைத்தன. ''ஹலோ வைத்யநாதன்...! ஏ.லெட்டர்'' என்று சொல்லி நீட்டினாள்.

வைத்யநாதன் சட்டென்று பணிவுடன் எழுந்து சூர்யா தன்னிடம் நீட்டிய லெட்டரை அன்புடன் பெற்றுக் கொண்டான்.

சூர்யா வைத்யநாதனுக்கு மட்டும் கேட்கிற குரலில் கேட்டாள்: ''ஒரு பொண்ணோட கையெழுத்து மாதிரி தெரியுதே! ஏதாவது கேர்ள் ஃப்ரெண்டா?''

உட்கார்ந்த வைத்யநாதன் சட்டென எழுந்து விட்டான். ''நோ மேடம்... நோ. ஊர்ல இருந்து எங்க பாட்டி எழுதியிருக்காங்க...''

வைத்யநாதன் எழுந்து நின்று பதில் சொல்லியது மனத்திற்குள் சூர்யாவிற்குத் தர்மசங்கடமாக இருந்தது! பென்ஸிலை உதட்டில் வைத்தபடி கேட்டாள்: ''ஏன், பாட்டி ஒரு நல்ல கேர்ள் ஃப்ரெண்டா இருக்கக்கூடாதா?''

''அதானே மேடம்... எனக்குக்கூட எங்க பாட்டிதான் பெஸ்ட் கேர்ள் ஃப்ரெண்ட்.''

மேஜையின் மீதுள்ள கடிதங்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் படிக்கத் துவங்கினாள்.

''கேர்ள் ஃப்ரெண்ட் என்ன எழுதியிருக்காங்க வைத்யநாதன்?''

''நெஜமாவே என்னோட பாட்டிதான் ஊர்ல இருந்து எழுதியிருக்காங்க. நீங்களே படிச்சுப் பாருங்க மேடம்...''

''நோ நோ... நான் ராங் மீனிங்ல கேக்கலை மிஸ்டர் வைத்யநாதன். அதான் உடனே சொல்லிட்டீங்களே பாட்டி எழுதியிருக்காங்கன்னு. பாட்டியைத்தான் கேர்ள் ஃப்ரெண்ட்னு மீன் பண்ணி ஜஸ்ட் ஃபார் ஃபன் கேட்டேன்... உங்களுக்கு வந்த பர்சனல் லெட்டர் அது... ப்ளீஸ்...! நான் படிக்கக் கூடாது அதை...''

''நோ மேடம். நத்திங் பர்சனல்... பரவால்ல படிச்சுப் பாருங்க. கொய்ட் இன்ட்ரஸ்ட்டிங்... ஊர்ல எருமை மாடு கன்னு போட்டிருக்கிறதை எழுதியிருக்காங்க. ரெண்டு நாள் அவங்களுக்குக் காய்ச்சல் அடிச்சதாம். கோவிலுக்குப் போகும்போது ஒரு நல்ல பாம்பு பாத்தாங்களாம்... அருவியிலெல்லாம் தண்ணி ஏராளமா கொட்டுதாம்... இதைத்தான் திரும்பத் திரும்பத் திரும்ப எழுதியிருக்காங்க...''

''உங்க பாட்டிக்கு ஏஜ் என்ன ஆகுது வைத்யநாதன்?''

''எய்பெளவ் செவன்ட்டி இருக்கலாம்...''

''எழுதப் படிக்கத் தெரியுமா அவங்களுக்கு?''

''அதெல்லாம் தெரியாது. அடுத்த வீட்ல ஒரு டீச்சரம்மா இருக்காங்க. பாட்டி சொல்லச் சொல்ல அந்த டீச்சரம்மாதான் எழுதுவாங்க...''

''ஏன், உங்க அம்மா உங்களுக்கு லெட்டர் எழுதமாட்டாங்களா?'' - சூர்யா மிக இயல்பாகத்தான் கேட்டாள்.

விருட்டென்று வைத்யநாதன் ஓர் ஆற்றாமையுடன் சூர்யாவை ஏறிட்டுப் பார்த்தானே ஒழிய, பதில் சொல்ல வேண்டுமென்று எண்ண வில்லை.

அவனுடைய எதிர்பாராத மௌனத்தைப் பார்த்ததும் சூர்யா துணுக்குற்று விட்டாள். தன்னுடைய கேள்வியைக் கேட்டிருக்கக்கூடாதென்று உடனே அவளுக்குப் புலப்பட்டு விட்டது.

''ஸாரி மிஸ்டர் வைத்யநாதன். நான் கேட்டது தப்பா இருந்தா தயவுசெஞ்சு என்னை மன்னிச்சிடுங்க...'' - சூர்யா மிகவும் தணிந்த குரலில் வைத்யநாதனிடம் மன்னிப்புக் கேட்டாள்.

அவன் சூர்யாவை நிமிர்ந்து பார்க்காமல் ஒரு பிடிவாதமான மௌனத்துடன் வேலையில் ஆழ்ந்தான். தன்னுடைய பதில் சொல்லாத மௌனம் சூர்யாவை மிகவும் சங்கடப்படுத்துகிறது என்பதை விநாடியில் கண்டுகொண்ட வைத்யநாதன், சூர்யாவின்



சங்கடம் தனக்குச் சாதகமானது என்று பற்றிக் கொண்டு, தனது மௌனமான இறுக்கத்தை மேலும் நீடித்தான்.

தாயை இழந்த கனமான இழப்புணர்வும் சுய இரக்கமும் வைத்யநாதனில் பல வருஷங்களாக மையம் கொண்டிருந்தாலும் அந்த ஆழ்மனப் படிமத்தைப் பரிவர்த்தனைப்படுத்திக் கொள்ளத்தக்க சமபலம் கொண்ட ஓர் அதர்சப் பெண் எந்தக் கட்டத்திலும் எதிர்படாததால் அவனுள் அப்படிமம் ஓர் அசுர பலம் அடைந்திருந்தது. அவனுள் மூடிக்கிடந்த கொதி நிலையைப் புரிந்து கொள்ளாமல், ஏதேனும் ஒரு பெரிய பணக்காரர் வீட்டுச் சின்னஞ்சிறுமியை அவனுக்கு மணம் முடித்து வைக்க ஓயாமல் நச்சரித்த போதெல்லாம் பாட்டியுடன் மூர்க்கமாகச் சண்டை போட்டான். இதை ஓர் அபாய எச்சரிக்கையாகவே புரிந்து கொண்டு, அந்தச் சமயங்களில் தன்னுடைய அம்மாவைத்தான் மிகுந்த கோபத்துடன் கண்டித்தார் செல்வரத்னம். மகனின் மனநிலை பூர்ணமாகப் புரிந்திருந்தது அவருக்கு...

அந்த மனநிலையைக் கொஞ்சமும் எதிர்பாராமல் ஒரு விநோதச் சூட்சுமமான எதிர்மறையில் தன்னை நோக்கிப் பிரயோகிக்கிற நுட்பமான ஆரம்பத்திற்கு வைத்யநாதன் பிள்ளையார் சுழிவிட்டு விட்டதை உணர்ந்து கொள்ளாமல் சூர்யா, அவன் மனத்தை ஏதேனும் புண்படுத்தி விட்டோமோ என்று மிக சூனியமாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். சூர்யாவின் அந்த நிகரற்ற பார்வை வைத்யநாதனைச் சர்வ சுதந்திரமாகத் தலை குனிய வைத்தது. அவள் அவளுக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்பதுபோல அவள் பார்வை அவனை நெம்பிப் புரட்டிவிட்டது!

உருக்கமான பாவனையில் சொன்னான்: ''என்னோட சின்ன வயசிலேயே என்னோட அம்மா இறந்து போயிட்டாங்க என்கிற விஷயம் இன்னிவரைக்கும் எனக்கு ஈடு செய்யவே முடியாத விஷயம் மேடம்...! அம்மா இறந்து போனதும் ரெண்டு வருஷம் ஸ்கூலுக்கே போகாம பிரமை பிடிச்ச மாதிரி என் நினைப்பே இல்லாம இருந்தேன்னா - நான் எவ்வளவு மோசமா பாதிக்கப்பட்டிருப்பேங்கறதைப் பாத்துக்குங்க மேடம்...!''

- சொல்லிவிட்டு நிறுத்தினான் வைத்யநாதன். கொஞ்சம் கொஞ்சமாக சூர்யா இலகுவாகி விட்டாள். மனத்திற்குள் என்னென்னவோ நினைத்துப் பதறிப் போயிருந்தவளுக்கு, பல வருஷங்களுக்கு முன் வைத்யநாதனின் அம்மா இறந்து போய்விட்டாள் என்ற செய்தி அதிர்ச்சியாக இல்லை! அவன் மிகைப்பட நடந்து விட்டானென்றே தோன்றியது.

''உங்களுக்கு சிஸ்டர்ஸ் இருக்காங்களா வைத்யநாதன்?'' - சூர்யா அவனை மிகச் சரியான கேள்வியை எதிர்நோக்க வைத்து விட்டாள்.

''எனக்கு ரெண்டு பிரதர்ஸ்தான் மேடம். சிஸ்டர்ஸ் கெடையாது.''

சூர்யா கருணையுடன் கண்களை மூடிக் கொண்டாள். பெண் என்ற பொருள் அவனுக்கு எத்தனை அப்பாற்பட்டதாக விலகிப் போயிருக்கிறது என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. சூழலை இலகுவாக்குகிற தன்மையில் கேட்டாள்:

''மெட்றாஸ்ல எங்கே தங்கியிருக்கீங்க? ஏதாவது ரிலேட்டிவ்ஸ் வீட்லயா...? இல்லை. எங்கேயாவது லாட்ஜிங் ஹவுஸ்லயா?''

''ட்ரிப்ளிகேன்ல ஒரு லாட்ஜ்ல தங்கியிருக்கேன் மேடம்.''

சூர்யா உவகையுடன் நிமிர்ந்து உட்கார்ந்தாள். ''ட்ரிப்ளிகேன்லயா...! எந்த இடத்ல?''

''நல்லதம்பி முதலித் தெருவில... அந்தத் தெரு தெரியுமா உங்களுக்கு?''

''தெரியுமாவா? ஐ'ம் ஆல்ஸோ ஃப்ரம் டிரிப்ளிகேன்!''

ஜிலீரென்று ஐந்தருவியில் தலையைக் காட்டியது போலிருந்தது வைத்யநாதனுக்கு! என்னமோ சூர்யா அவனைக் காதலித்து விட்டதாகவே சொல்லி விட்டாற் போலிருந்தது! நேராகக் கருடன் மாதிரிப் பறந்து மவுண்ட் ரோட் போய் பெஞ்சமினிடம் இதைச் சொல்ல வேண்டுமென்று மனம் கிடந்து பறந்தது! சூர்யாவும் அவன் வாழும் அதே திருவல்லிக்கேணி! என்ன ஆனந்தம்...! என்ன சந்தோஷம்...!

ஆபீஸ் முடிந்து வைத்யநாதன் மூச்சுவாங்க அறைக்கு ஓடி வந்தபோது, பெஞ்சமினும் மனோஹரும் ஜன்னல் வழியாக இரண்டாவது கட்டடத்தின் மாடியில் இருந்த இளம் பெண்களை 'முந்தானை முடிச்சு' படத்திற்குக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்!

''பெஞ்சமின், மனோஹர்! ஒரு கிரேட் ந்யூஸ்டா ரெண்டு பேருக்கும்...'' - உற்சாகமாகக் கூவினான் வைத்யநாதன்.

''என்ன ஆச்சு...? ஸூப்பர் ஸ்டார் கால்ஷீட் கெடைச்சிடுச்சா?'' - பெஞ்சமின்.

''விக்கெட்டே விழுந்துருச்சா?'' - மனோஹர்.

''டேய், பெஞ்சமின்! சூர்யாவும் நம்ம ட்ரிப்ளிகேன்லதாண்டா இருக்கா...''

''அடி சக்கை! நம்ம பேட்டைதானா...! எந்தத் தெருவுல இருக்காளாம்?''

''ஏதோ அக்பர் சாஹிப் ஸ்ட்ரீட்டாமே?''



''ஆமா, இதோ பக்கத்லதான், பெல்ஸ் ரோடுக்கு பேரலெல்லா போகுது.''

''அந்தத் தெருவில வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ல தங்கியிருக்காளாம்...''

''ஸூப்பர் ஸ்டார் ரொம்ப க்ளோஸா வந்துட்டா!''

மனோஹர் சொன்னான்: ''ஏண்டா பெஞ்சமின், அக்பர் சாஹிப் தெருன்னா நமக்குத் தெரியாத பொண்ணாயிருக்காதே?''

''டேய், மனோஹர்! இதான் மண்டையில மூளை இல்லாமப் போசறது! சின்னப் பொண்ணா இருந்தா எனக்கும் ஒனக்கும் தெரியாம ஒரு பொண்ணு இருக்க முடியாது ட்ரிப்ளிகேன்ல! இவன் ஸூப்பர் ஸ்டார் கொண்டை போட்டிருப்பான்னு சொல்றானே... நாமதான் கொண்டைங்க பக்கத்லேயே போறதில்லையே... நமக்கெப்படித் தெரியும்?''

வைத்யநாதன் பெஞ்சமினை ஓங்கி ஒரு உதை விட்டான்...

''யப்பா...! உன்னோட உதையையெல்லாம் தாங்காது என்னோட ஒடம்பு. நீயும் ஆச்சு, உன்னோட ஸூப்பர் ஸ்டாரும் ஆச்சு... இன்னிக்கி நைட் நானும் இவனும் 'முந்தானை முடிச்சு' போகப் போறோம். நீ வர்றியா இல்லியா? ஒனக்கு சேத்து டிக்கெட் எடுக்கட்டுமா?''

''ஓச்சி...! என்னை ஏண்டா கூப்பிடுறீங்க... நீங்களும் ஒங்க முந்தானை முடிச்சும்...''

''ஏண்டா வைத்யநாதா! முந்தானை முடிச்சுக்கு என்னடா குறைச்சல்?'' - மனோஹர் வியப்புடன் கேட்டான்.

''டேய் டேய், மனோஹர்! அவனுக்குப் பிடிச்சதெல்லாம் டி.ஆர். தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா, அப்புறம் மஹாலிங்கம் - இந்த மாதிரி குட் ஓல்ட் ஸ்டார்ஸ் நடிச்ச படங்கள்தான். டேய் இவனே! கபாலியில 'திருநீலகண்டர்' படம் ஓடுதாம்... போய் சூர்யாவையும் அழைச்சுட்டுப் போய்ப்பார்!''

''அதானே...''

''இவன் போயி ஒரு ஸூப்பர் ஸ்டாரை சைட் அடிக்கிறான்!''

''அதானே!''

''அதுவும் அவ வந்து இவனுக்கு ஆபீஸர்!''

''அதானே!''

வைத்யநாதனுக்கு முகம் சிவந்து போனது! ''பெஞ்சமின்! விஷயத்தை நீ ரொம்ப ஆபாசமாக்கறே. சூர்யாவை சைட் அடிக்கிறதா நான் என்னிக்காவது உன்கிட்டே சொன்னேனாடா?''

பெஞ்சமின் அலட்சியமாகப் பதில் சொன்னான்: ''நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் அதாண்டாப்பா விஷயம். நாகரிகமா அவனை அட்மைர் பண்றதா நீ சொல்ற. அதையே நான் கொஞ்சம் அநாகரிகமா, நீ ஸைட் அடிக்கிறதா சொல்றேன்! அவ்வளவுதான் விஷயம்... உண்மையா நீ உன்னோட பொம்பளை ஆபீஸரை ஸைட்தான் அடிக்கிறே...!''

''ஆமா. ஸைட்தான் அடிக்கிறேன். போ...'' - அவர்களிடம் பேசுவது வீண் என்ற நினைப்பில் வைத்யநாதன் தணிந்து போய்விட்டான். சூர்யாவை அப்படியெல்லாம் பேசுவது மிகுந்த வியாகூலத்தைத் தந்தது அவனுக்கு. 'சும்மா ஸைட் அடிக்கப்படக்கூடிய பெண்ணா சூர்யா?!' - மனத்திற்குள் கனிந்து போன வைத்யநாதன், நாயக்கரைக் கூப்பிட்டு காபி வாங்கி வரச் சொல்லிவிட்டு அலுப்புடன் கட்டிலில் சாய்ந்தான்.

பெஞ்சமினும் மனோஹரும் உடையணிந்து கொண்டு வெளியில் கிளம்பினார்கள்.

இயற்கை வளப்புச் செறிந்த பிரதேசங்களுக்கு அடுத்ததாக வைத்யநாதனின் உணர்வுகளை வலிமையாக ஈர்த்திருப்பவை அழகிய பழமையான கோயில்கள்தான். தென் தமிழ்நாட்டில் அவன் காணாத கோயில்களே இல்லை. மதுரைக்கு அருகே உள்ள கள்ளழகர் கோயிலிருந்து, செங்கோட்டைக்குச் சற்றுத் தள்ளிய வனாந்தரத்தில் இருக்கும் அச்சன் கோயில் வரை அவன் பார்த்திருந்தான்.

கோவில்பட்டியின் அருகில் இருக்கும் கழுகுமலைக் கோயிலும், ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சற்றுத் தள்ளி பல்லாயிரக் கணக்கான பனைமரங்களின் மத்தியில் சிறிய குன்றின் மேல் எழுப்பப்பட்டிருக்கும் திருவண்ணாமலைக் கோயிலும் ஒரு பிரபஞ்ச வ்யூகங்களாகவே அவனுக்குத் தெரிந்தன. வத்ராயிருப்பிலிருந்து பல மலைத்தொடர்களைத் தாண்டிய மஹாலிங்க மலைக்கோயிலும், இலஞ்சிக்கு அருகில் உள்ள திருமலைக்கோயிலும் இப்பூமிக்கான காவல் பீடங்களாகவே வைத்யநாதனுக்குப் புலப்பட்டன.

கோயில்கள் எதையோ சமனம் செய்கின்றன. கோயில்கள் எதையோ கொணர்கின்றன. எதையோ களைகின்றன. கோயில்கள் திண்மையான மலைகளுக்கு ஈடானவை.

கடவுள் என்ற பயபக்தி இல்லாமல் கோயில்களை இந்திய கலாசாரத்தின் உன்னத வடிவங்களாக அவன் கண்டான்.



அன்று மாலை பெருமாளைச் சேவித்து விட்டு வைத்யநாதன் பார்த்தசாரதி கோயிலில் ஓர் ஓரமாக அமர்ந்திருந்த போது, சில தோழிகளுடன் அவனுடைய ஆபீஸ் டைப்பிஸ்ட் ஆனந்தி பிராகாரத்தில் வந்து கொண்டிருந்தாள். இளமை மிக்க அவள், பேச முடியாத ஊமையென்ற உண்மை மிகவும் குரூரமாக இருந்தது வைத்யநாதனுக்கு. சட்டென்று ஆனந்தியும் அவனைப் பார்த்து விட்டாள். உட்கார்ந்து கொண்டே அவளைப் பார்த்துச் சிரிப்பது அநாகரிகமாகத் தெரிந்தது அவனுக்கு. ஒரு பெண்ணை எதிர் நோக்கத் தெரியாத அறியாமையுடன் வைத்யநாதன் எழுந்து நின்று ஆனந்தியைப் பார்த்து லேசாகப் புன்னகை புரிந்தான்.

சிறிது தயங்கி நின்று இணக்கமான புன்சிரிப்பைக் காட்டிவிட்டு - லேசாகத் தலையை அசைத்துவிட்டு, ஆனந்தி தோழிகளுடன் சென்று விட்டாள். ஆனந்தி போவதையே பார்த்தபடி நின்றான் வைத்யநாதன். இனம் புரியாத வருத்தம் இருள் போலக் கவிந்தது அவனுடைய மனத்தில். உடலில் ஒரு புலன் அணைந்து போவதில், அதுவும் ஒரு பெண்ணில் அந்த ஊனம் நேர்ந்து விடுவதில் வாழ்க்கையே ஊனமாகிப் போய்விடுகிற துரதிர்ஷ்டத்தைக் கற்பனை செய்து பார்த்தான். செல்வந்தர் வீட்டுப் பெண்ணாகவும் இல்லாததில் திருமணபாக்கியம் அவளுக்கு எப்படிச் சாத்தியமாகும் என்ற விசனம் ஏற்பட்டது. ஆனந்தியை டைப்பிஸ்ட் வேலைக்குத் தன்னுடைய சொந்த அபிலாஷையில் சூர்யாதான் நியமித்திருந்தாள் என்ற தகவல் சட்டென அவனுக்கு ஞாபகத்தில் வர, வைத்யநாதனின் நினைவுத் தடம் ஆனந்தியிடமிருந்து சூர்யாவிற்குப் பெயர்ந்தது! மீண்டும் தரையில் அமர்ந்தபடி அன்று ஆபீஸில் நடந்த சம்பவங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தான். அவளுடைய செவி ஓரங்களில் பசுமையாகச் செழித்திருந்த கேசத்தை நினைத்துப் பார்த்தான். கூர்மையாகச் சிவப்பட்ட பென்ஸிலின் முனைகள் போன்ற மெலிதான அவளுடைய உதடுகளை நினைத்துப் பார்த்தான். மூங்கில் இலை போன்ற அவளுடைய அற்புதமான நாசியை நினைத்துப் பார்த்தான். ஐந்தருவியில் ஒற்றையாக சூர்யா மட்டும் நனைவது போல நினைத்துப் பார்த்தான். இதையெல்லாம் நினைக்க நினைக்க வைத்யநாதனுக்குள் ஒரு வித்தியாசமான சுரப்பி இயங்கிச் சுரப்பது போலிருந்தது! கோயில் சுவரில் சாய்ந்து கொண்டான். ஒருவிதமான வேதனையுடன் கண்களை மூடிக்கொண்டான். 'தான் சூர்யாவை - பெஞ்சமின் சொன்னதுபோல ஸைட்தான் அடிக்கிறோமோ?' என்ற தாழ்வு மனப்பான்மை படிந்த கிலேசம் ஏற்பட்டது அவனுள்! ஆனால், அந்தக் கிலேசத்தை

சூர்யாவின் மேலிருந்த இமேஜ் அங்கீகரிக்கத் தயங்கியது. அங்கீகரிக்கவும் தவித்தது! தயக்கமும் தவிப்பும் மாறி மாறி வந்தன! விற்பனை பற்றிய ரிப்போர்ட்டைத் தான் படித்து முடித்தபின் தனக்கு வந்திருந்த லெட்டரைத் தந்த சூர்யா, ஒரு கண்ணியமான ஆபீஸராகத் தெரிந்தாள். கடிதம் எழுதியிருப்பது கேர்ள் ஃப்ரெண்டா என்று குறும்புடன் வினா தொடுத்த சூர்யா, ஓர் இதமான ஸ்திரீயாகத் தெரிந்தாள். சூர்யா என்ற ஆபீஸரிடம் வைத்யநாதனுக்குத் தயக்கமாக இருந்தது. சூர்யா என்ற பெண்மணியிடம் தவிப்பாக இருந்தது!




ஆனந்தியின் வீடு ஐஸ்ஹவுஸ் பகுதியில் இருந்தது. முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பாகவே அவளுடைய அப்பா பரமேச்வரனும் அம்மா ராஜலட்சுமியும் காதலித்துக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். திருமணம் செய்து கொண்டபோது பரமேச்வரன் ஒரு சிறிய போட்டோ ஸ்டுடியோ வைத்திருந்தாலும் ஓரளவு வளமுடன்தான் இருந்தார். அவரும் ராஜலட்சுமியும் திருமணம் செய்து பதினைந்து வருடங்கள் கழித்துப் பிறந்தாள் ஆனந்தி. தவம் இருந்து தங்களுக்கு ஸ்வர்ண விக்ரகம் போல் ஒரு பெண் பிறந்தபோது மகிழ்ச்சிக் கடலில் திளைத்த தம்பதியர், ஆனந்தி பிறவியிலிருந்தே பேசும் சக்தியற்றுப் போயிருந்தது தெரிந்தபோது கலங்கிக் கதறி விட்டார்கள். கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஒரே காரணத்திற்காக அவர்களின் இரண்டு பக்கப் பெற்றோர்களாலும் உதாசீனப்படுத்தப்பட்டு அவர்கள் சார்ந்த சமூகங்களிலிருந்து துண்டிக்கப்பட்டுத் தனிமை கொண்டிருந்தவர்களால் பதினைந்து வருஷம் கழித்துப் பிறந்த அழகிய பெண் ஊமையாகிப் போய்விட்ட கொடுமையைத் தாங்கவே முடியவில்லை. அந்தத் துக்கத்திலேயே முடங்கிப் போன பரமேச்வரனின் மேல் இரக்கமற்ற விதி மேலும் ஒரு குரூரமான பாணத்தைத் தொடுத்து விட்டது. நாற்பத்துநான்காவது வயதில், அவருடைய சொற்ப லாபத்தில் போட்டோ ஸ்டுடியோ இயங்கிக் கொண்டிருந்த சமயத்தில், அந்த ஸ்டுடியோவையும் நடத்த முடியாதபடி பரமேச்வரன் பயங்கரமான பக்கவாத நோயால் தாக்கப்பட்டுப் பல மாதங்கள் படுக்கையில் கிடந்து பிழைத்தார். வலது பக்க அவயவங்கள் முற்றிலும் செயலற்றுப் போன அரை மனிதனாகத் தனக்குத்தானே பெரும் சுமையாகிப் போய்விட்ட பரமேச்வரன், அந்த அவல நிலையிலிருந்து மீளவே இல்லை.



படுக்கையிலிருந்து அவர் எழுந்து உட்கார்வதற்குள்ளேயே அவரது சொற்ப சேமிப்பும், ஸ்டுடியோ உபகரணங்கள் அத்தனையையும் விற்றதால் கிடைத்த பணமும் கரைந்து போயின. அப்போது ஆனந்திக்கு நான்கு வயதுதான் ஆகியிருந்தது. அந்த முப்பத்தெட்டாவது வயதில், செயலற்று முடங்கிப் போன கணவனுடனும், பேசும் சக்தியற்றுப் போயிருந்த பெண் குழந்தையுடனும் ராஜலட்சுமி தன்னந்தனியாக வாழ்க்கையைத் திட சித்தத்துடன் எதிர்நோக்கி நின்றாள். நம்பிக்கையை இழந்து விடவில்லை அவள். சமையலில் தனக்கிருந்த தேர்ச்சியையே தன்னுடைய மூலதனமாக்கிக் கொண்டு, விதவிதமான ஊறுகாய்கள் தயார் செய்து, தெரிந்தவர்களின் குடும்பங்களில் போய் விற்றாள். வடாம்கள் தயார் செய்து, விநியோகித்தாள். முறுக்குகள் செய்து திருவல்லிக்கேணி பகுதியிலிருந்த பல கடைகளுக்கும் கொண்டு போய் மொத்தமாக விற்பனை செய்தாள். இரண்டு வருடங்களில் அவளுடைய ஊறுகாய்கள் நிறைய குடும்பங்களில் பிரசித்தமாகி விட்டன. தானாகவே பல பகுதியிலிருந்தும் பலர் வீடு தேடி வந்து ஊறுகாய்களும் வடாம்களும் வாங்கிப் போனதால், கடைகளுக்கு அலைந்து முறுக்குகள் விற்றதை ராஜலட்சுமி நிறுத்திக் கொண்டாள். இந்தப் பதினாறு வருடங்களாக எளிய ஊறுகாய் வியாபாரம்தான் அவர்களைக் காப்பாற்றி இருக்கிறது.

சென்ற வருடம் வரை பம்பாயில் தன் குடும்பத்தாருடன் வாழ்ந்து கொண்டிருந்த சூர்யாவின் உறவினர்கள் ஒரு சமயம் பம்பாய் சென்றபோது ராஜலட்சுமியின் ஸ்பெஷல் ஆவக்காய் ஊறுகாயை இரண்டு பாட்டில்களில் வாங்கிச் சென்றிருந்தனர். அதைத் தொடர்ந்து ராஜலட்சுமி ஊறுகாய் யார் மூலமாவது பம்பாயில் இருந்த சூர்யாவின் குடும்பத்தினருக்குச் சென்று கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் உத்தியோகத்தின் பொருட்டு சூர்யா சென்னைக்குத் தனியாக வந்துவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதனால் பெண்களுக்கான ஒரு ஹாஸ்டலில் சூர்யா தங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. அப்போதுதான் ஆறு மாதங்களுக்கு முன் பம்பாயில் உள்ள தன் குடும்பத்தினருக்கு அனுப்பி வைப்பதற்காக ராஜலட்சுமி ஊறுகாய் வாங்க வேண்டிய, முகவரியை விசாரித்துத் தேடிப் போனாள்.

கிணற்றடி வாழை போன்ற இருபது வயதுப் பருவச் செழிப்பில் வளர்ந்து நின்ற ஆனந்தியிலும், முடங்கிப் போய் வீழ்ந்து கிடந்த அறுபது வயது பரமேச்வரனிலும் கனத்த சோகம் கவிந்திருந்த

அவலத்தைக் கண்டு சூர்யாவின் மென்மையான மனம் பதைபதைத்து விட்டது. ஊறுகாய் வியாபாரத்தின் மிக சொற்ப லாபத்தில் ஓர் ஊமைப் பெண்ணின் எதிர் காலத்தை உருவாக்கக் கனவு கண்டுகொண்டிருந்த அந்த வயதான கலப்பு மணத் தம்பதியின் குடும்பப் பின்னணி சூர்யாவின் காருண்யம் மிகுந்த சுபாவத்தைப் பலமாகத் தாக்கிவிட்டது. அவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தே தீர வேண்டும் என்று மனத்தில் சங்கற்பமே செய்து கொண்டாள். சில மாதங்களுக்கு முன்னால் டைப்பிஸ்ட் வேலைக்கான ஒரு ஸ்தானம் காலியானபோது உடனே டைப்ரைட்டிங்கில் ஹையர் பாஸ் செய்திருந்த ஆனந்தியை மிகச் சுலபமாகத் தன்னுடைய ஆபீஸிலே நியமித்துக் கொண்டாள். அதுமட்டுமல்லாமல் அந்தக் குடும்பத்திலேயே தன்னையும் ஒருத்தியாகப் பிணைத்துக் கொண்டாள். அந்த உண்மையான பிணைப்பால் ராஜலட்சுமி தங்கள் வீட்டின் எந்த விஷயத்திலும் சூர்யாவைக் கலந்து ஆலோசித்தே முடிவு செய்தாள்.

கஷ்டமோ நஷ்டமோ - ஒரு ஊமைப் பெண்ணை எத்தனை காலம்தான் காப்பாற்றி வருவது? தங்கள் காலத்திற்குப் பின் அவளுக்குப் பாதுகாப்பு யார்? இதையெல்லாம் நன்றாக யோசித்தே - ஏதோ சேமித்திருக்கிற பணத்தில் ஆனந்திக்கு ஒரு நல்ல பையனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைத்துவிட ராஜலட்சுமியும் பரமேச்வரனும் முடிவு செய்திருந்தனர். பணம் கூட ஓரளவு திரட்டி விட்டார்கள். ஆனால் எந்தச் சமூகத்தில் போய் வரன் தேடுவது? இருபுறங்களிலும் தாங்கள் சார்ந்த குடும்பத்தினரிடமிருந்து தனிமைப்பட்டு விட்ட ராஜலட்சுமியும் பரமேச்வரனும் யாரிடம் சொல்லி எந்தச் சமூக அடையாளத்தில் தங்கள் பெண்ணுக்கான திருமண சம்பந்தம் பேச முடியும்? சூர்யாதான் தனியொருத்தியாக அவர்களுக்கு நம்பிக்கையும் ஆனந்திக்கு ஆறுதலும் சொல்லியிருந்தாள்.

ஆனந்தியின் உயர்ந்த எழிலுக்கும் உன்னத குணத்திற்கும் ஏற்ற கணவன் நிச்சயமாக அவளுக்கு வாய்ப்பான் என்று சூர்யா உண்மையாகவே நம்பினாள். தனக்குப் பரிச்சயமான குடும்பங்களிலெல்லாம் ஆனந்தி பற்றி வானளாவச் சொல்லிப் புகழ்ந்து வைத்திருந்தாள். யார் யார் வழியாகவோ சிலர் வந்து ஆனந்தியைப் பெண் பார்த்து விட்டுப் போய் மேலும் அக் குடும்பத்தினரின் நம்பிக்கையைச் சிதைத்து விட்டுத் திரும்பியிருந்தார்கள். சூர்யாதான் 'அபயம் அபயம்' என்று பொறுமையுடன் அவர்களைக் காத்திருக்கச் சொல்லியிருந்தாள்.



தன்னுடைய தலைமையில் ஆனந்தியின் திருமண வைபவம் மிக எளிமையாக, அதே சமயம் நிச்சயமாக நடைபெறுமென்று அவர்களை அமைதிப்படுத்தியிருந்தாள்.

பெஞ்சமினும் மனோஹரும் 'முந்தானை முடிச்சு' இரவுக் காட்சிக்குப் போய்விட, வைத்யநாதன் அறையில் தனியாக இருந்தான். பெஞ்சமின் வாங்கியிருந்த ரெக்கார்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். எல்லாம் விசித்திரமாக இருந்தன. ஒன்றிரண்டு பாடல்களைக் கொஞ்சம் கேட்டுப் பார்த்தான். இசைக் கருவிகளின் பிளிறல்களும் வெடிப்புக்களும் பிரமாதமாகத்தான் ஒலித்தன. பாடல்கள்தான் பெரும் சுத்தலாகத் தோன்றின... ஏதோ, 'நீல்டயமண்ட்' கொஞ்சம் பரவாயில்லையென்று தோன்றியது. ராக் பாடல்கள் என்னவென்றே புரியவில்லை. ஒரு நமஸ்காரம் செய்து விட்டு ப்ளேயரை மூடி, படுக்கையில் சாய்ந்தான். நீர் மட்டத்திற்கு உயர்ந்து வரும் குமிழிபோலப் படீரென்று சூர்யாவின் தோற்றம் வைத்யநாதனின் மனமட்டத்தில் தோன்றியது.

பாட்டியின் கடிதத்தைத் தன்னிடம் கொடுத்துவிட்டு 'லெட்டர் ஏதாவது கேர்ள் ஃப்ரெண்ட்கிட்டே இருந்தா?' என்று சூர்யா கேட்டது எந்த நோக்கமும் இல்லாமல் வெறும் யதார்த்தமாக வேடிக்கையாகக் கேட்கப் பட்ட கேள்விதானா? இல்லை. வைத்யநாதனுக்கு உண்மையாகவே லெட்டர் எழுதக் கூடிய அளவிற்கு நட்புள்ள பெண் சிநேகிதி இருக்கிறாள் என்ற நினைப்பின் தந்திரமான சந்தேகத்துடன் கேட்கப் பட்ட கேள்வியா?' என்று வைத்யநாதன் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தான். முதலில் சூர்யா தன்னைவிட ஒன்றிரண்டு வயது பெரியவளாக இருப்பாளென்றுதானே நினைத்தான்? இப்போது அந்த எண்ணம் சிறிது மாறி விட்டிருந்தது! அவளுக்கும் தன்னுடைய வயதுதான் இருக்குமென்று நினைத்தான்! எப்படித் தன்னுடைய எண்பது கிலோ எடையும் மூக்குக்கண்ணாடியும் முப்பது வயது மனிதன் மாதிரி தன்னைக் காட்டுகிறதோ அதே மாதிரி அவளது உயரமும், சிறிய கொண்டையும் அந்த ஸாஃபிஸ்டிகேஷனும் சூர்யாவின் வயதையும் ஒன்றிரண்டு மிகைப்படுத்திக் காட்டுவதாக வைத்யநாதன் எண்ணித் தன்னைச் சமாதானம் செய்து கொண்டான்! தனக்கு ஏன் இந்தச் சமாதானம் தேவையாக இருக்கிறதென்ற திடீர் கேள்விப்புலன் அவனுக்குள் ஓர் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த ஆச்சரியவயப்பட்டபடியே படுக்கையில் இதமாகக் கிடந்தான் வைத்யநாதன்.

அதெப்படி ஒரு மின்னல் மின்னுவது போல தன்னுள் சூர்யாவைக் கண்ட மாத்திரத்தில் எதிர் விளைவு நிகழ்ந்து விட்டது? ஆச்சரியம், ஆச்சரியமாகவே இருந்தது! அதைப்போலத் தன்னைப் பற்றியதான எதிர்விளைவு சூர்யாவின் மனத்திலும் உடனடியாக இல்லா விட்டாலும் படிப்படியாக அரும்பக்கூடிய சாத்தியம் இருக்கிறதா என்ற கேள்வியை வைத்யநாதன் எழுப்பிப் பார்த்தான். முயற்சி செய்தாவது தான் அவளைக் கவர்ந்துவிட முடியுமா என்று சந்தேகமும் ஆசையும் கொண்டான். கவர்வது சாத்தியமில்லை என்றே தோன்றியது! ஏன் சாத்தியமில்லையென்று அவனால் பகுத்துப் பார்க்க முடியவில்லை. சூர்யாவை மணப்பவன் மிகுந்த பாக்கியசாலி என்று இரக்கத்துடன் நினைத்தான். சூர்யாவை அம்மாவாக அடையும் குழந்தைகள் புண்ணியம் செய்தவர்கள் என்று துயரத்துடன் நினைத்தான்! உடனே அவனுக்கு விசனமும் அழுகையும் ஏற்பட்டன. தான் உலகத்தில் பிறந்ததே வீண் என்ற மனக் கலவரம் வந்தது! 'தன்னை ஏன் அம்மா பெற்றாள்? ஏன் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பே செத்துத் தொலைந்தாள்?' என்ற வெறுப்பும் பொருமலும் ஏற்பட, எழுந்து போய் வெறுமே கதவைச் சாத்திவிட்டு விளக்கை அணைத்தான். கண்களில் இருந்த நீரைத் துடைத்துக் கொண்டு பொத்தென்று படுக்கையில் விழுந்தான். வெகு நேரம் கழித்தே தூங்கினான்...

பொதுவாக வைத்யநாதன் தூக்கத்தில் கும்பகர்ணன்தான். அவன் தூங்கி விட்டால் எந்த ஓசையும் சந்தடியும் அவனை விழிப்படையச் செய்வதில்லை. ஆனால் அன்று ஓர் உணர்வு நெரிசலோடும் விரக்தியோடும் தூங்கி விட்டிருந்ததால் ஏதோ சின்னச் சின்ன காலடி சப்தம் கேட்டதும், சட்டென அவனுக்குத் தூக்கம் கலைந்துவிட்டது! சில நிமிஷங்களுக்கு இருளில் ஒன்றும் புரியாமல் படுத்திருந்தான். ரொம்பவும் மெல்லிய குரலில் பேச்சு சப்தம் கேட்டது. அவற்றில் ஒரு குரல் பெண்ணின் குரல் போலிருந்தது. 'சினிமாவிற்குப் போனவர்கள் வந்து விட்டார்களா? மணி என்ன இருக்கும்?' என்றெல்லாம் நினைத்தபடி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்! மறுபடியும் சிரிப்பு சப்தம். இந்த சப்தம் நிச்சயமாக ஒரு பெண்ணுடையதுதான்! அதுவும் அந்த அறைக்குள்! சரியான இருட்டில்! குபீரென்று வியர்த்து விட்டது வைத்யநாதனுக்கு.

இருட்டில் தட்டுத் தடவி நடந்து போய் ஸ்விட்சைப் போட்டான். பெஞ்சமினும் மனோஹரும் இட்டமிட்டிருந்த விபரீதச் செயல் பளிச்சென்று புரிந்தது. மையமாக ஒரு பெண்; அவளுக்கு இருபுறமும் பெஞ்சமினும் மனோஹரும் அவளை இடித்தாற்போல்



உட்கார்ந்திருந்தனர். அவசியமில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தனர். மூவரும் குடித்திருப்பது தெரிந்தது. வைத்யநாதனால் இந்தக் கயவாளித்தனத்தைத் தாங்கவே முடியவில்லை. வைத்யநாதன் மிக மிகத் தணிந்த குரலிலும் உறுதியான தொனியிலும் பேசினான்: ''டேய் பெஞ்சமின்! எண்ணிப் பத்தே பத்து நிமிஷம் தரேன். அதுக்குமேல அந்தப் பொண்ணு நம்ம ரூமுக்குள்ள இருக்கக்கூடாது! தவறி இருந்தா - நானே ஐஸ்ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணிடுவேன்...! இம்மீடியட்டா அவளை வெளியில அனுப்பு...''

பதில் இல்லை.

''பதில் சொல்லுடா பெஞ்சமின். இப்ப நீ அவளை வெளியில அனுப்பப் போறீயா, இல்லையா...?'' - வைத்யநாதன் கோபத்தில் கர்ஜித்தான்.

பெஞ்சமின் ஈனஸ்வரத்தில் கெஞ்சினான்: ''ப்ளீஸ்! சத்தமா பேசாதடா வைத்தி.''

''சரி, சத்தமா பேசலை. அவளை மொதல்ல வெளியிலே அனுப்பு.''

பதில் இல்லை.

''வெளியில அனுப்புறீயா, இல்லையா?''

''இந்த அர்த்த ராத்திரியில எங்கேடா கொண்டுபோய் விடறது?'' - பெஞ்சமின் எரிச்சலுடன் கேட்டான்.

''எங்கேயிருந்து கூட்டிட்டு வந்தீயோ, அங்கே கொண்டு போய் விட்டுட்டு வா...''

''சும்மா உளறாதேடா!... சினிமா தியேட்டர்ல இருந்து பாத்து கூட்டிட்டு வந்திருக்கேன்! அதுக்காக இப்பவும் தியேட்டர்ல கொண்டு போய் விடச் சொல்றியா என்னை?'

''அதெல்லாம் எனக்குத் தெரியாது.''

''அவ்வளவு ஆத்திரம் இருந்தா நீயே கொண்டு போய் விட்டுட்டு வா...''

வைத்யநாதனுக்கு மனத்தில் வெறி மூண்டது. ''ராஸ்கல்! கண்ட சனியனை ரூமுக்கு இழுத்து வந்துட்டு நிமிராவாடா பேசற...?'' அங்கேயே இருந்தால் வைத்யநாதன் அடித்து விடுவான் போல இருந்தது.

பெஞ்சமினும் மனோஹரும் தணிந்த குரலில் ஏதோ பேசிக் கொண்டார்கள். ஹைரோடு போனால் ஆட்டோ கிடைக்கும்; அவளை ஏற்றி மயிலாப்பூரில் உள்ள அவளுடைய வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்து விடலாமென்று தீர்மானித்தார்கள். அவன்

சந்தோஷத்துடன் அவர்கள் இருவரது கைகளையும் பிடித்துக் கொண்டு புறப்படத் தயாரானாள். பெஞ்சமின் செருக்குடன் வைத்யநாதனைப் பார்த்துச் சொன்னான்:

''உன்னோட இஷ்டப்படிக் கொண்டு போய் விட்டுடுறோம்! போதுமா...? சந்தோஷமா...? வா, லதா!''

அவர்கள் மூவரும் போனதும் தன் தூக்கம் கலைந்து விட்ட எரிச்சலில் நாற்காலியில் சாய்ந்தான் வைத்யநாதன். வேறு அறை பார்த்துப் போய் விடலாமா என்று யோசித்தான். பெஞ்சமினுடன் வந்த பெண்ணை நினைத்தாலேகுமட்டிக் கொண்டு வந்தது. சே! வாழ்க்கை எப்படியெல்லாம் மலினமாகிப் போயிருக்கிறது என்று எண்ணியபடி பெஞ்சமினும் மனோஹரும் திரும்பி வருவதற்காகக் கவலையுடன் காத்திருந்தான் வைத்யநாதன்.




**பொ**ழுது விடிய சிறிது நேரம்தான் இருந்தது. ஆனால், வைத்யநாதனுக்கும் பெஞ்சமினுக்கும் இடையே நடந்து கொண்டிருந்த வாக்குவாதத்தின் உக்ரம் இன்னும் தணிந்தபாடாக இல்லை.

ஆற்றாமையுடன் கோபம் கொண்டு கத்தினான் வைத்யநாதன்: ''கல்யாணமாகாத சின்னப் பசங்ககிட்டே பணம் பறிக்கிறதுக்குன்னே... கழுதைங்க கேடு கெட்டுப் போய் அலையுதுங்க பார்...''

''அவளைப் போய் ஏண்டா திட்றே? என்னைச் சொல்லு - கேட்டுக்கறேன்! நிறைய சம்பாரிக்கிற திமிர்; ரத்தத் திமிர்; ஆம்பளைங்கற திமிர்... பாவம், அவ என்ன பண்ணுவா? சோத்துக்கும் துணிக்கும் இல்லாமே, வேற எந்த க்வாலிபிகேஷனும் இல்லாமே, வேற எந்த வழியுமே இல்லாமத் தாண்டா வர்றா... ஒனக்குத் தெரிஞ்சா நீதான் ஒரு வழி சொல்லேண்டா அவளுடைய பொழைப்புக்கு...!'' - பெஞ்சமின் கேட்டான்.

வைத்யநாதன் சட்டென மௌனமாகி விட்டான். பெஞ்சமின் விடவில்லை.

''நீதான் உன் ஸூப்பர் ஸ்டார்கிட்ட சொல்லி அந்த ஆபீஸ்ல ஒரு வேலை வாங்கித் தாயேன் அவளுக்கு - பாக்கலாம்...''

''நான் ஏண்டா வேலை வாங்கித் தரணும், இந்த மாதிரி கழுதைங்களுக்கு?'' - கொஞ்சம் தடுமாற்றத்துடன் வைத்யநாதன் திருப்பிக் கேட்டான்.



''அப்ப வாயை மூடிட்டு கம்னு இரு. இல்லாத கொடுமையில கெட்டு அலையறவளுக்கு உன்னால ஹெல்ப் பண்ண முடியலைன்னா உன் வேலையைப் பாத்திட்டு சும்மா இரு. நான் ஹெல்ப் பண்றேன் அவளுக்கு!'' - பெஞ்சமின் புதிய ஆக்ரோஷத்துடன் சொன்னான்.

''பண்ணு பண்ணு. நல்லா ஹெல்ப் பண்ணு. ஆனா, உன்னோட ஹெல்ப்பை இந்த ரூமுக்குள்ள கூட்டிட்டு வந்து பண்ணாத...'' - வைத்யநாதன் இடக்காகச் சொன்னான்.

''நெனச்சா என்னால அவளைக் கல்யாணமே செஞ்சுக்க முடியும். அந்த அளவுக்கு எனக்கு கட்ஸ் உண்டு! முடியுமா உன்னால?'' - பெஞ்சமின் சவால் விட்டான்.

''எனக்கென்ன தலைவிதியா ஒரு இவளைப் போய் கல்யாணம் பண்ணிக்கணும்னு?''

''தலைவிதின்னு சொல்லி தப்பிச்சுக்காதே! உன்னால முடியாது. ஆனா, என்னால முடியும் - தெரிஞ்சுக்க!''

''ரொம்ப சந்தோஷம்...!''

இருவருக்குள்ளும் ஒரு வேதனை மூண்டிருந்தது. தெரிந்தோ தெரியாமலோ நகர வாழ்க்கையின் சில ஆபாசமான பக்கங்களைப் பார்த்துவிட்ட அவஸ்தை இருவருக்குள்ளும் அரும்பியிருந்தது. அந்த அவஸ்தையின் நெருடலைத் தாங்க முடியாமல் வைத்யநாதன் படுக்கையில் கவிழ்ந்து விட்டான். பெஞ்சமின் ஸ்டீரியோவை ஆன் செய்து டோனா சம்மரைக் கொஞ்சம் சன்னமாக ஒலிக்க விட்டுவிட்டுத் தரையில் மல்லாந்து படுத்தபடி கூரையையே பார்த்துக் கொண்டிருந்தான். ஜன்னலுக்கு அப்பால் காகங்கள் பறக்கத் துவங்கியிருந்தன...

வெகு நேரம் வரைக்கும் ஓசையற்றுப் போயிருந்தது அந்த அறை! மனோஹர் மட்டும் எழுந்து குளித்து முடித்து, ஆபீஸிற்குக் கிளம்பிச் சென்றான். பெஞ்சமின் வெறுமனே கண்களை மூடிக் கிடந்தான். ஆபீஸிற்குப் போகாமல் படுத்துத் தூங்கலாம் போலிருந்தது. ஸி.எல். கூட இருந்தது. சில கணங்கள் யோசித்தான். லீவ் போடுவது அனாவசியமாகத் தெரிந்தது. ஒரு சின்ன விஷயத்திற்குப் போய் ஏன் மனசில்இந்தப் பதட்டமும் வியாகூலமும் என்ற சஞ்சலம் எழுந்த விநாடியே படுக்கையிலிருந்து பெஞ்சமின் துள்ளிக் குதித்து வைத்யநாதனை அடித்து எழுப்பினான்.

''அப்பா வைத்யநாதா! எந்திரிப்பா. எட்டேகால் ஆகுது மணி... எந்திரிச்சி சட்டுப்புட்டுனு ஓடு ஆபீஸுக்கு...''

வைத்யநாதன் எழுந்து உட்கார்ந்தான்.

''நேத்திக்கி நைட் நடந்ததுக்கு ரொம்ப ஸாரி வைத்தி..! ஏதோ ஒரு மூட்ல பண்ணிட்டேன்... மன்னிச்சுக்க...''

வைத்யநாதனும் அவனுக்கு ஆறுதல் போலச் சொன்னான்: ''பரவால்லடா பெஞ்சமின்... வழக்கமா எந்த விஷயத்துக்குமே ரொம்ப ஷார்ப்பா ரீயாக்ட் பண்ற மாதிரியே நேத்திக்கும் பண்ணிட்டேன்..! ஸாரி! ஒன்னை நான் ஹர்ட் பண்ணியிருந்தா மன்னிச்சிடு என்னை...''

''நமக்குள்ளே என்னடா? வரட்டுமா... ஈவினிங் பாப்போம்...''

''ஒயெஸ்!''

''ஆபீஸர்னு பாக்காமே சும்மா ஸூப்பர் ஸ்டாரை ஸைட் அடி! பயப்படாத. நான் பாத்துக்கறேன்... என்னிக்கும் அழற புள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்! சும்மா ஓங்கி அழு!''

வைத்யநாதன் சிரித்தபடியே 'ஸி யூ' என்றான். மனம் சிறிது இலேசாகியிருந்தது.

ஆபீஸ் புறப்படலாம் என்ற நினைப்பில் நேற்றுக் கழற்றி ஹேங்கர்களில் தொங்க விட்டிருந்த பேண்ட்டையும் ஷர்ட்டையும் எடுத்தவன், திடீரென யோசித்தான். பேண்ட் ஷர்ட் வேறு மாற்றிக் கொண்டால் என்னவென்று தோன்றியது. சூர்யா தினசரி என்னென்ன புடவைகளில் வருகிறாள் என்று தான் பார்ப்பது போல, தான் என்னென்ன ஷர்ட்களில் வருகிறேன் என்பதை அவள் கவனிக்க மாட்டாளா என்ற சந்தேகம் வந்தது. ஓர் அழகான புடவையில் வருகிற எந்தப் பெண்ணையும் கவனித்துப் பார்க்கிற ஆர்வம் ஓர் ஆடவனுக்கு வருவதுபோல அழகான உடையணிந்து வருகிற ஆடவனைக் கவனித்துப் பார்க்கிற ஆர்வம் பெண்ணுக்கும் வருவது இயல்பு தானேயென்று வைத்யநாதன் அர்த்தம் பார்த்தான். இனி தினம் ஒரு ஷர்ட்! தினம் ஒரு பேண்ட்! சென்னைக்குக் கிளம்பும் சில தினங்களுக்கு முன் திருநெல்வேலியில் வாங்கிய ரெடிமேட் ஷர்ட்களில் ஒன்றை எடுத்து அணிந்தான். கச்சிதமாக இருந்தது. தன் தோற்றம் தந்த திருப்தியோடு வைத்யநாதன் ஒன்பதே கால் மணிக்கு சாந்தோம் போகிற பஸ்ஸிற்காக மெரீனாவை நோக்கி மெதுவாக நடந்தான்.

தெருவில் போவோர் வருவோர் எல்லாம் - குறிப்பாக பெண்கள் - தன்னுடைய ஷர்ட்டையே பார்ப்பது போலிருந்ததில் வைத்யநாதனில் என்றைக்குமே தோன்றியிராத வினோத உணர்வுகள் தோன்றித் தளும்பின.



அந்த உணர்வுத் தளும்பலில் பொலபொலவென்று இனிய மழைத்துளிகளும் விழுந்தது போலிருந்தது - சற்றுத் தூரத்தில் அவனுக்கு முன்னால் தாழம்பூ வர்ணப் புடவையில் சூர்யா போய்க் கொண்டிருந்ததைக் கண்டதும்...! மறுகணத்தில் அழுக்கும் ஆபாச பஸ்களும் நிரம்பிய பைகிராப்ட்ஸ் சாலையே ஒரு நந்தவனமாக மாறிவிட்டாற் போலிருந்தது வைத்யநாதனுக்கு. எங்கும் வெயில் காய்வதாகத் தெரியவில்லை. எல்லாமே வானவில்லின் வெளிச்சம் போலிருந்தது! வைத்யநாதன் சூர்யாவிற்குச் சற்றுப் பின்வாங்கியே கடுமையான ஆற்றாமையுடன் நடந்து கொண்டிருந்தான். அவளைத் தாண்டிப் போய் குட்மார்னிங் சொல்ல வேண்டும் போல இருந்தது. தெருவில் பார்த்துப் பெண் ஆபீஸருடன் பேசுவது நாகரீகக் குறைவாக இருக்குமோவென்று பயமாகவும் இருந்தது. ஆசிரியரைத் தாண்டிச் செல்லப் பயப்படுகிற மாணவன்போல சூர்யாவின் பின்னால் மிக மெதுவாக நடந்து கொண்டிருந்தான்! யதேச்சையாக சூர்யா திரும்பிப் பார்க்கமாட்டாளா என்று ஆசைப்பட்டான்.

பைகிராப்ட்ஸ் சாலையிலிருந்து காமராஜர் சாலையிலிருந்த பஸ் ஸ்டாப்பை அடைய, சாலையின் குறுக்காகச் செல்லாமல் நிதானமாக சுரங்கப்பாதையின் படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தாள் சூர்யா. பளிச்சென வைத்யநாதனின் தலையில் ஒரு மின்னல் மின்னியது! மிக மிக வேகமாக நடந்து, சூர்யாவிற்கு முன்னால் பஸ் ஸ்டாப்பைச் சேர்ந்து விடும் துடிப்பில், வாகனங்கள் விரைந்து கொண்டிருந்த சாலையில் குறுக்காகப் பாய்ந்து ஓடிப்போய் நின்றான் வைத்யநாதன். சாந்தோம் போகிற பஸ் ஒன்று ஸ்டாப்பில் நின்று கிளம்பியதை அவன் பொருட்படுத்தவே இல்லை. மூச்சு வாங்க, வியர்வையோடு வட திசையில் சுரங்கப்பாதையின் கிழக்குப்புறப்படிகளில் இருந்து சூர்யா வெளிப்படப் போவதைக் காண்பதிலேயே குறியாக நின்றான்.

சில விநாடிகளில் சூர்யா கண்ணகி சிலையின் பின்னால் தெரிவதைக் கண்டான். அவனுடைய மார்புக்குள் மிகப் புதியதாக ஒரு காற்று வீசியது, சூர்யா, பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்து வருவது போலில்லை; அவனுடைய வாழ்க்கையை நோக்கியே நகர்ந்து வருவது போலிருந்தது. அவனுக்காகத்தான் சாலையைக் கடந்து ஓடி வந்து நிற்கிற சாயல் கொஞ்சம்கூட இல்லாத வெறும் இயல்பில், ஆபீஸ் போக பஸ் ஸ்டாப்பில் நிற்கிற பாவனையில் எங்கேயோ சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். சூர்யா வருவதெல்லாம் அவனுக்குத் தெரியாதாம்! பஸ் வருகிறதா என்றுதான் கர்ம சிரத்தையாய் அடிக்கடி வாட்ச்சையே பார்த்துக்

கொண்டிருக்கிறானாம்! வைத்யநாதனைத் தவிர, தாற்காலிகமாக வேறு யாருமே இல்லாத அந்த பஸ் ஸ்டாப்பில் வானவில் வெளிச்சம் அவனுக்கு அருகிலேயே வந்து விட்டது! ஹலோவென்று ஆச்சரியப்பட்டது! நட்புடன் புன்முறுவல் பூத்தது! வைத்யநாதனுக்கு அந்தக் காலை ஒன்பதரை மணியுடன் ஜென்மமே சாபல்யமடைந்து விட்டது...!

''மிஸ்டர் வைத்யநாதன்! யாருக்காவது காத்துகிட்டிருக்கீங்களா?'' என்றாள் சூர்யா.

ஷர்ட்டின் பட்டனைச் சரி செய்து கொண்டே வைத்யநாதன் சொன்னான்:

''நோ மேடம். பஸ்ஸுக்காகத்தான் வெயிட் பண்றேன்...!'' - இதைச் சொல்வதற்குக்கூட நாக்கு - குழறியது. கை விரல்களும் லேசாக நடுங்கின.

''நோ நோ... இப்பத்தான் சாந்தோம் பஸ் ஒண்ணு க்ராஸ் பண்ணிப் போச்சே, நான் ஸப் - வேயில் வந்திண்டிருந்த போது?''

வைத்யநாதன் ஒரு கணம் திகைத்து விட்டான். சமாளிப்பது போல் சொன்னான்: ''அதுல கூட்டம் ரொம்ப அதிகமாக இருந்துச்சு மேடம்... அதான் ஏறல...''

''சும்மா சொல்லாதீங்க! யாரையோ பாக்கறதுக்கு பஸ்ஸை மிஸ் பண்ணிட்டு நிக்கறீங்க...''

வைத்யநாதன் வெட்கத்துடன் விரல் நகங்களைப் பார்த்துக் கொண்டே சொன்னான்: ''நோ நோ! அப்படியெல்லாம் கிடையாது... நோ நோ!''

''ஏன் இதுக்குப் போய் வெக்கப் படறீங்க... ஸோ வாட்? உங்களோட கேர்ள்ஃப்ரண்ட் வந்தா நானும்தான் பாத்துக்கறேனே...!'' - சொல்லியபடி சூர்யா சிரித்தாள்.

அப்போது பஸ் வந்தது. முதலில் சூர்யா பஸ்ஸில் ஏற, சற்றுத் தாமதித்தான் வைத்யநாதன்.

''பரவாயில்லை. வெயிட் பண்ணி பாத்துப் பேசிட்டு அடுத்த பஸ்ல வாங்க...! பர்மிஷன் தரேன்...!''

- சிரித்துக் கொண்டே சூர்யா தான் மட்டும் நடந்து போய் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். அதற்குமேல் அந்த பஸ்ஸில் ஏறிக்கொள்ள வைத்யநாதனுக்குத் திராணியில்லை. தர்மசங்கடத்துடன் நடுவீதியில் நிற்பது போன்ற உணர்வில் சூர்யா போய்விட்ட பஸ்ஸைப் பார்த்தபடி பஸ் ஸ்டாப்பில் நின்றான். வானவில் மறைந்து வெயில் சுள்ளென்று முதுகைத் தாக்கியது...



அடுத்த பஸ் அவனைச் சோதனைக்கு உள்ளாக்குவது போல பத்து நிமிடங்கள் கழித்தே வந்து வைத்யநாதனை எரிச்சலடைய வைத்து விட்டது. ஐந்து நிமிடம் தாமதமாகத்தான் ஆபீஸ் போய்ச் சேர முடிந்தது. தன்னுடைய ஸீட்டில் படபடப்புடன் உட்கார்ந்து கொண்டான். சூர்யாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட அவனுக்குத் தைரியமில்லை. துல்லியமாக வகிடு தெரியும்படி குனிந்து சில ஆபீஸ் பேப்பர்களில் சூர்யா தீவிரமாக ஆழ்ந்திருந்தாள். வைத்யநாதனும் அவனுடைய வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் மனம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது.

சூர்யா தன்னிடம் கல்மிஷமே இல்லாமல் விளையாட்டாகத்தான் அப்படிப் பேசினாளா? இல்லை, நெஞ்சுக்குள் ஒரு ஆபீஸருக்கு உரிய விஷமத்தனத்தை ஜாக்கிரதையாக மறைத்து வைத்திருக்கிறாளா என்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், அவளுடைய முகத்தைப் பார்த்தால் நிச்சயம் எந்தவொரு விஷமும் அவளுடைய நெஞ்சில் இருக்க முடியாது என்றுதான் தோன்றியது. இருந்தாலும் அதை எப்படி நிச்சயித்துக் கொள்வது; யாரைக் கேட்டு சூர்யாவின் சுபாவத்தைச் சரியாக அறிந்து கொள்வது என்று ஒரேயடியாகக் குழம்பினான். ஆபீஸில் பணி புரியும் யாரிடமும் அவனுக்கு ஆழமான நட்பு கிடையாது. நட்பு இருந்தாலாவது மெதுவாக விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

சாப்பாட்டுக்கு எழுந்து கொள்கிற நேரத்தில் சூர்யா, ''என்ன... பாத்துப் பேசியாச்சா?'' என்று அவனை மிகவும் சாதாரணமாகக் கேட்டதுகூட அதனால்தான் அவனை ஓர் இடி போலத் தாக்கியது! வாழ்க்கையில் தனக்குப் பெண் சிநேகிதியே இல்லையென்ற விசித்திரமான சுய இரக்கத்துடன் வைத்யநாதன் கேன்ட்டீனை நோக்கி நடந்தான். எப்போதும் சாப்பாடு கொண்டு வந்து விடும் கிருஷ்ணாராவ் அவனுடன் சேர்ந்து கொண்டார்.

''என்ன மிஸ்டர் கிருஷ்ணாராவ்! வீட்ல இருந்து இன்னிக்குச் சாப்பாடு எடுத்திட்டு வரலயா?'' - வைத்யநாதன் சும்மா ஒரு பேச்சுக்காகக் கேட்டான்.

''ஒரே சண்டை ரெண்டு நாளா... சாப்பாடு கெடையாதுன்னு இன்னிக்கு ஸ்ட்ரைக் பண்ணிட்டா. வெளியில சொன்னா வெக்கக்கேடு... உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?''

''இன்னும் இல்லை.''

''நான் சொல்றேன்னு வித்தியாசமாக நெனைச்சுக்காதீர்! ஒலகத்ல ஆம்பளையா பொறக்கவே கூடாது. தப்பித் தவறிப் பொறந்துட்டாலும் கல்யாணம் மட்டும் செஞ்சுக்கவேபடாது...

அதுக்குமேல கேக்காதீர்!''

வைத்யநாதன் அதற்குமேல் கேட்கவில்லை. பேச்சுவாக்கில் அவரிடம் சூர்யா பற்றி ஏதாவது கேட்டுப் பார்க்கலாமா என்று நினைத்துக் கொண்டிருந்த நினைப்பையும் கைவிட்டு விட்டான்.

மதிய நேர உணவிற்குப்பின் வெகுநேரம் சூர்யா தன்னுடைய ஸீட்டிற்குத் திரும்பவில்லை. மானேஜிங் டைரக்டரின் அறையில் முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டிருந்த மீட்டிங்கில் இருந்தாள். நான்கு மணிக்குமேல் திரும்பிய அவள் தன்னுடைய பொருட்களைச் சேகரித்துக் கொள்ளத்தான் வந்தாள். பெரும்பாலும் மாலை அவள் கம்பெனி காரிலேயே திரும்புகிறாள். காரில் கிளம்பி ஹாஸ்டலுக்குத் திரும்புவதற்காக வேகமாக அவள் தன் ஸீட்டிற்கு வந்து கொண்டிருக்கையில் - சில நிமிஷங்களுக்கு முன் அவளுடைய டேபிளில் இருந்த டெலிபோன் ஒலித்தது, சிறிது தள்ளி இருந்த மேரி என்ற ஆங்கிலோ - இந்தியப் பெண் எழுந்து போய் ரிஸீவரை எடுத்து, 'ஹலோ' என்றவள் - ''மிஸ்டர் வைத்யநாதன்! போன்'' என்றாள்.

வைத்யநாதன் தனக்கு யார் போன் செய்கிறார்கள் என்ற ஆச்சரியத்துடன் ரிஸீவரை வாங்கினான்.

''ஹலோ...!''

''என்னடா வைத்யநாதா!''

- பெஞ்சமின்!

''என்ன திடீர்னு போன்...?''

''சும்மா தோணுச்சு...சரி, முதல்ல போனை எடுத்தது யாரு... ஸூப்பர் ஸ்டாரா?''

''இல்லை.''

''ஏய், பொய் சொல்லாத...''

''நோ நோ. நிஜமா...''

''அப்ப யாரு அது... பொண்ணுதானே அது?''

''ஆமா...''

''ஏண்டா பதில் சொல்றதுக்குக் கூடப் பயந்து சாகறே...! ஏதாவது விசேஷம் உண்டா - ஆபீஸ்ல?''

''ஈவினிங் சொல்றேன்!''

- இந்தக் கட்டத்தில்தான் சூர்யா வேகமாக உள்ளே நுழைந்தாள்.

''ஈவினிங் நேரா ரூமுக்கு வராத... மெரீனாவிலே காந்திசிலை பக்கத்ல மீட் பண்ணுவோம்...'' என்றான் பெஞ்சமின்.



''அதாவது க்வீன் மேரீஸ் எதிரே. ஓயெஸ்! வெயிட் பண்றேன். வச்சிரட்டுமா?''

சூர்யா வந்து விட்டதால் ரிஸீவரை மரியாதையுடன் வைத்யநாதன் வைத்தான். தன் பொருட்களைச் சேகரித்துக் கொண்ட சூர்யா, கிளம்பும் முன் வைத்யநாதனை மெல்லிய குரலில் கேட்டாள்: ''வெரிகுட்! க்வீன் மேரீஸ் எதிர்லேயா? ஒரு நாளைக்குப் பார்க்காமலா போகப் போறேன். அது யார்னு...!''

சூர்யா வெளியேறியபோது ஆனந்தியையும் அழைத்துக் கொண்டு சென்றாள். வைத்யநாதன் தர்மசங்கடமான பிரமிப்புடன் நாற்காலியில் சாய்ந்து விட்டான்.

தனக்கு ஒரு சிநேகிதி இருப்பதாக சூர்யா தீர்மானமே செய்து விட்டாளா? மனத்திற்குள் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'எனக்கென்ன வேறு வேலை இல்லையா? மெட்ராஸ் வந்ததும் கேர்ள் ஃப்ரண்ட் வைத்துக் கொள்வதுதான் என்னுடைய வேலையா?' என்றெல்லாம் மனத்திற்குள் அசட்டுத்தனமாக வினவிச் சிரித்தான். ஆனால், அவனுக்குத் தான் சென்னைக்கு வந்ததே ஒரு நிகரற்ற பெண்ணைச் சந்திக்க வேண்டுமென்றுதானே என்ற ஞாபகம் சட்டென மனத்தில் குறுக்கிட்டது. உடனே வைத்யநாதன் உணர்ச்சிவசப்பட்டான். அந்த நிகரற்ற பெண் சூர்யாவாகவே இருக்கட்டும் என்று மனத்திற்குள் பிரார்த்தித்தான். ஒரு வேளை அது சூர்யாவாக இல்லாவிட்டால்? சில நிமிஷங்கள் வெறுமையாக இருந்தவன், அதற்காக இப்போதே தான் கவலைப்பட ஆரம்பிக்க வேண்டாமென்று அந்தக் கவலையை ஒத்தி வைத்தான். இப்போதைய உடனடிக் கவலை. சூர்யா அவனுக்கு ஒரு சிநேகிதி இருப்பதாக நினைப்பதுதான்! இதை எப்படி எதிர்நோக்குவது என்பது பெரிய பிரச்னையாகி விட்டாற் போலிருந்தது அவனுக்கு. பிரச்னையாய் நினைப்பதே பெரிய பிரச்னைகளை ஏற்படுத்தப் போகிறதென்று வைத்யநாதனுக்குத் தெரியவில்லை.

பிரபஞ்சசதுரங்கத்தில் - காய்களுக்குச் சுதந்திரம் இல்லை. உரிமை இல்லை. பாதுகாப்பு இல்லை. தனியானதோர் வாழ்க்கை இல்லை. எல்லா காய்களுமே ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுவிட்ட, விதிக்கப்பட்டுவிட்ட கதியில்தான் செலுத்தப்படுகின்றன; வீழ்த்தப்படுகின்றன; நிலை நிறுத்தப்படுகின்றன - வேறு வேறான கால கட்டங்களில்.

இந்தக் கட்டத்தில் மிக மிக நுட்பமாக சூர்யா - வைத்யநாதன் என்ற காய்களை சூட்சுமமான விதியென்னும் மகாசக்தி ஆச்சரியமான கணிதத்துடன் நகர்த்தி விட்டது - முடிவில் வெற்றி தோல்வி என்ற

ஒருதலை உணர்வு தோன்றவே செய்யும். ஆனால், இடையில் நிகழும் ஆட்டம் சுவாரஸ்யமானதும் நிகரற்றதுமானதும் அல்லவா?




**ரா**ணி மேரி கல்லூரியின் எதிரே அகன்ற நடைபாதையில் இன்னும் பெஞ்சமின் வராததால் வைத்யநாதன் அங்கும் இங்கும் நடை பயின்று கொண்டிருந்தான். பிறகு மகாத்மா காந்தி சிலையின் கீழ் நின்று நிமிர்ந்து பார்த்தான். சிலையின் பீடத்தை ஒரு முறை சுற்றி வந்தான்.

''என்னடா, காந்தி சிலையைச் சுத்தி வந்து பாத்துக்கிட்டு இருக்கே?''

- பெஞ்சமின், மனோஹர் சகிதம் வந்து விட்டான்.

''இன்னும் பத்து பன்னிரண்டு நாள்ல காந்தி ஜெயந்தி வரப்போகுது இல்லே? அன்னிக்கி மகாத்மா காந்தியோட இந்தச் சிலைக்கு ஒரு மாலை வாங்கிப் போட்லாம்னு பாக்கறேன்'' என்றான் வைத்யநாதன்.

''ஏன், பாலிடிக்ஸ்ல குதிக்கலாம்னு பாக்கறியா?'' - ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தபடியே பெஞ்சமின் கேட்டான்.

''பாலிடிக்ஸ்ல குதிச்சாத்தான் மாலை போடணுமா?''

''இந்த தேசத்ல அதான் வழக்கம்! ரெண்டாம் தேதி வந்து பார் - எத்தனை அரசியல்வாதி வந்து மாலை போடறான்னு... அசெம்பளிக்குக் கூடப்போவாம இருப்பாங்க. ஆனா, ரெண்டாம் தேதி காந்தி சிலைக்கு மாலை போடறதுக்கு மட்டும் மறக்கவே மாட்டாங்க. மாலை போட்டாச்சா - அத்தோட மறந்துடுவாங்க; அப்புறம் அடுத்த அக்டோபர் ரெண்டாம் தேதிதான்... எல்லாம் ஜஸ்ட் ஷோகேஸ் பிசினெஸ்... ஒனக்கேன் அந்தக் கண்றாவியெல்லாம்...?''

''அப்ப மாலை போட வேண்டாம்னு சொல்ற...?''

''மாலை போட்டே ஆகணும்னா பேசாமே எனக்குப் போடு! அய்யா பொறந்த தேதியும் அக்டோபர் ரெண்டுதான்...!'' என்றான் பெஞ்சமின்.

''ஆமாமா... உன்னோட டேட் ஆப் பர்த்கூட அக்டோபர் ரெண்டுதான், இல்லே? மறந்தே போயிட்டேன்... ரைட் பெஞ்சமின். உன்னோட பர்த்டேக்கு இந்த வருஷம் நான் பெரிசா ஒரு மாலை போட்டுர்றேன்...!''



''அப்ப நானும் ஒரு மாலை போடறேண்டா பெஞ்சமின்!'' - மனோஹர்.

''ஓயெஸ். தாராளமா போடு... சரி, இப்ப எங்கே உக்காரலாம் - மண்ணுக்குப் போயிடலாமா? இல்லே, கொஞ்சம் தள்ளி புல்வெளியிலேயே உக்காரலாமா?''

''லான்லேயே உக்காரலாம்.''

மூன்று பேரும் சற்றுத் தள்ளிப் போய் புல்வெளியில் உட்கார்ந்தார்கள்.

''மழை வருமோ?'' - மனோஹர் கேட்டான்.

''வந்தா என்ன? நனைவோமே!'' என்றான் வைத்யநாதன்.

''நீ நனைவே... குற்றாலத்ல பசுமாடு நனையற மாதிரி! அதுக்காக எங்களாலேயும் நனைய முடியுமா?'' - பெஞ்சமின் வைத்யநாதனை ஏதாவது சீண்ட வேண்டும் என்கிற தொனியில் கேட்டான்.

''டேய், பெஞ்சமின்! ஒரு விஷயம்... வந்த உடனே உன்கிட்ட சொல்லணும்னு நெனைச்சேன்... இன்னிக்கி மார்னிங் நான் ஆபீஸ் போறதுக்காகக் கிளம்பிப் போயிட்டு இருந்தப்ப பைகிராப்ட்ஸ் ரோட்ல சூர்யாவைப் பாத்தேண்டா...''

- என்று ஆரம்பித்து, பெஞ்சமின் டெலிபோனில் பேசிய போது, 'வெரிகுட்; க்வீன் மேரீஸ் எதிர்லேயா? ஒரு நாளைக்குப் பாக்காமலா இருக்கப் போறேன் - அது யார்னு?' என சூர்யா கேலியாகப் பேசியது வரை வைத்யநாதன் விவரமாகச் சொல்லி முடித்தான்.

பெஞ்சமின்கூடச் சிறிது ஆச்சரியப் பட்டான். ''என்னடா இது... ஹ்ம்! நெஜமாவே சீரியஸா கேக்கறாளா? இல்லை, சும்மா தமாஷ் பண்றாளா?''

''அதானே தெரியமாட்டேங்குது! என்னோட ஆபீஸரா இருக்கறவளுக்கு என்கிட்டே என்ன தமாஷ்?''

''அதானே...''

''என்னைப் பாத்தா பொண்ணுங்களோட சிநேகம் வச்சிக்கிட்டுச் சுத்தறவன் மாதிரி தெரியுதா?'' - அடிமனத்தில் இருந்த வேதனையை மறைத்துக் கொண்டு வைத்யநாதன் கேட்டான்.

''சீச்சி...! ஒன்னைப் பாத்து எவனாவது அப்படிச் சொல்லிடுவானா என்ன? என்னைச் சொல்லு... பாத்ததுமே சொல்லிடலாம் - பொம்பளைங்க பின்னாடியே சுத்தறவன்னு...! வைத்தி, இதுலேயே ரெண்டு விதம் இருக்குன்னு நெனைக்கிறேன்... ஒண்ணு - பொண்ணுங்களையே சுத்தற பையன்! இன்னொண்ணு - பொண்ணுங்கல்லாம் சுத்தற பையன்...!'' என்று சொல்லிச்

கொண்டிருந்த பெஞ்சமின், தங்களைத் தாண்டிச் சென்ற இரண்டு பெண்களையே பார்த்திருந்து விட்டுத் தொடர்ந்து சொன்னான்:

''-இப்பப் பாத்தியா... நம்மைத் தாண்டிப் போன பொண்ணுங்களையே நான் பாத்தேன். ஆனா, அந்தப் பொண்ணுங்க ஒன்னையேதான் பாத்திட்டே போனாளுங்களே தவிர, என்னைக் கொஞ்சம்கூடப் பாக்கலை...!''

''சரி, அதுக்கு நான் என்னடா பண்ண முடியும் பெஞ்சமின்?''

''அதாண்டா விஷயம், நீ பொண்ணுங்களைச் சுத்தறவன்கற நெனைப்பில சூர்யா பேசலை. கண்டிப்பா ஒன்னை வந்து நெறய பொண்ணுங்க சுத்தும் - அதுவும் இந்த மெட்ராஸ்ல என்கிறது அவளுக்குத் தெரியுது!''

''ரியல்லி?'' - வைத்யநாதன் ஆர்வமாகக் கேட்டான்.

''சர்ட்டன்லி! நீயேதான் பாரேன், நான் எப்படித் தாடி வச்ச எருமை மாதிரி இருக்கேன்; நீயெப்படி எட்டு லிட்டர் கறக்கற ஜெர்சி பசு மாதிரி ஜம்னு இருக்கே...! அதனால நீயே பாரேன் கொஞ்ச நாள்ல - இதே மெட்ராஸ்ல இதே ட்ரிப்ளிகேன்ல ஏழெட்டுப் பொண்ணாவது ஒனக்கு ஃப்ரெண்ட் ஆயிடுதா இல்லையான்னு பாரு. ஒரே ஒரு பொண்ணு ஒனக்கு ஃப்ரெண்டாயிட்டா போதும், ரெண்டாவது பொண்ணு தானா வரும் - 'ஹலோ! ஆர் யு நாட் சின்னிஸ் பாய் ஃப்ரெண்ட்? ஐ'ம் ஷோபா'ன்னு சொல்லி ஒரே நிமிஷத்ல ஒன்னை ஒட்டிக்கும்...''

''டேய், டேய்! சும்மா எதையாவது அள்ளி விடாத...''

''ப்ராமிஸா சொல்றேன் வைத்யநாதா, ஜோக் இல்லை நான் சொல்றது! இது க்ளீயரா சூர்யாவோட மைண்ட்ல கம்யூனிகேட் ஆகியிருக்கு...! ஆபீஸரா இருந்தா என்ன, அவளும் பொம்பளைதாண்டா வைத்தி...''

''அப்படியெல்லாம் தெரியலை எனக்கு!'' என்றான் வைத்யநாதன்.

''லூஸ்டா நீ! சரியான ட்யூப் லைட்! சே...! என்கிட்டல்லாம் இந்த மாதிரி ஒருத்தி வந்து பஸ் ஸ்டாப்ல 'ஆர் யூ வெயிட்டிங் ஃபார் ஸம்படி'ன்னு கேக்க மாட்டேங்கறா! கேட்டா, அந்த எடத்லேயே கொன்னுட்டேன் அவளை. க்ளோஸ்! அம்பேல்தான். 'யெஸ் ஐ'ம் வெயிட்டிங் ஃபார் யு டார்லிங்'னு ஒரே ஷொட்...''

''சிக்ஸர்தான்!'' - மனோஹர் குதூகலத்துடன் கூவினான்.

''நீ என்னடான்னா டக் அடிச்சிட்டு வந்து நிக்கறே! எரியுது எனக்கு நெனைச்சாலே...'' - பெஞ்சமின் வெறுப்புடன் சொன்னான்.



வைத்யநாதனுக்கு அலுப்பாக இருந்தது. ''நீ ஒரு விஷயத்தை மறந்துட்டுப் பேசிட்டு இருக்கே பெஞ்சமின். சூர்யா என் ஆபீஸர்டா!''

''அதனாலென்ன...!''

வைத்யநாதன் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுக் கேட்டான்: ''சரி, சுருக்கமா ஏன் இந்த மாதிரி சூர்யா வந்து என்கிட்டே இதுவரைக்கும் மூணு தரம் - எனக்கு கேர்ள் ஃப்ரெண்டு ஏதோ இருக்ற மாதிரி நெனைச்சு சும்மா கேக்கணும்? நீ பதில் சொல்லு!''

''அப்படியிருக்குமோன்னு நினைக்கறா!''

''அதான் கேக்கறேன், ஏன்னு?''

''அதான் சொன்னேனே - உன்னைக் கண்டா பெண்களுக்குப் பிடிக்கும்னு...! சூர்யாவுக்கும் தெரியுது அது.''

''தெரிஞ்சா?''

''பல பெண்களுக்கு உன்கிட்ட இம்மீடியட்டா ஒரு ஃப்ரெண்ட்லினெஸ் வந்திடுமே...!''

''என்னடாது... எவளோ ஒருத்திக்கு இம்மீடியட்டா என்கிட்டே ஃப்ரெண்ட்லினெஸ் வந்திடும்னு இவளுக்கு எப்படித் தெரியும்?''

''ஏன்னா... இவளுக்கே அந்த ஃப்ரெண்ட்லினெஸ் உன்கிட்டே வந்திருச்சே... அந்த ஃப்ரெண்ட்லினெஸ் இன்னொருத்திக்கும் ஏன் வரப்படாது?''

- பெஞ்சமின் இதைச் சொன்ன உடனே மனோஹருக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. ''குட் ஷாட்! குட் ஷாட்!'' என்று கூவி விசிலடித்தான்.

''ஆளுக்கொரு கரும்புச்சாறு அடிக்கலாமா?'' - வைத்யநாதன் பர்ஸை எடுத்துக் கொண்டே கேட்டான்.

''ஓயெஸ்...''

''கரும்புச்சார்... கரும்புச்சார்!'' - பெஞ்சமின் நடைபாதையை நோக்கிப் பலமாகக் கத்தியதும், கரும்புச்சாறு விற்கிறவன் திரும்பிப் பார்த்தான்...

''மூணு!'' - கையை உயர்த்தி மூன்று விரல்களைக் காட்டினான்.

மூன்று உயரமான கண்ணாடித் தம்ளர்களில் ஐஸ் மிதக்க கரும்புச்சாறு வந்தது. ஒரே மூச்சில் மூவரும் குடித்து விட்டுக் காலி தம்ளர்களைக் கொடுத்தார்கள்.

''எவ்வளவுப்பா?''

''ரெண்டேகால் ரூபா.''

வைத்யநாதன் சில்லறையாக எடுத்து எண்ணிக் கொடுத்தான். அப்போது ஏழெட்டுப் பெண்கள் ஜீன்ஸ், டி - ஷர்ட்டில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்... பெஞ்சமின் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னான்:

''எல்லாம் கல்ச்சுரல் அகடமியில படிக்கிற பொண்ணுங்க.''

''அதெப்படி அவ்வளவு கரெக்ட்டா சொல்றே... முன்னமே தெரியுமா அந்தப் பொண்ணுங்களை?''

''அதெல்லாம் தெரியாது. ஆனா, பாத்தாலே தெரியுதே...!''

''அதான் - எப்படித் தெரியுதுன்னு கேக்கறேன்?''

''எப்படியோ தெரிஞ்சிடுது எனக்கு! அதே மாதிரி சர்ச் பார்க் கான்வென்ட்ல படிக்கிற பொண்ணுங்களையும் டக்னு கண்டுபிடிச்சிடுவேன்!''

''பரவால்ல. பெரிய ஜீனியஸ்தான் நீ...''

''எல்லாம் இங்லிஷ்தாண்டா மச்சான்! சர்ச் பார்க் கான்வென்ட்ல படிச்சிட்டு காலேஜ்க்கு வர்ற ஒரு பொண்ணுகிட்டே போய் எந்த ஸ்கூல்ல படிச்சேன்னு கேளு பாக்கலாம்... அவ என்ன சொல்றாள்னு!''

''ஏன், என்ன சொல்லும் அந்தப் பொண்ணு?''

''நான் போய் ஒரு தடவை கேட்டுட்டேன் பிக் ஸ்ட்ரீட்ல இருக்ற ஒரு பொண்ணுகிட்டே... 'சேச்பக்'னு டமால்னு சொல்லிட்டு அப்பால போயிடுச்சு! எனக்கு ஒண்ணுமே புரியலை. என்னடாது, எந்த ஸ்கூல்ல பாப்பா படிச்சேன்னு கேட்டா, சேச்பக்னு சொல்லிட்டுப் போகுதே... அப்ப ஒண்ணும் புரியாம பேசாம இருந்துட்டேன். அப்புறமா நம்ம ஆபீஸ் டைப்பிஸ்ட் கிட்ட ஒரு நாள் இதைப் பத்திச் சொல்லிட்டிருந்தேன். அவதான் சொன்னா - சேச்பக்னு அந்தப் பாப்பா சொன்னது - சர்ச் பார்க் - அதைத்தான் அந்தமாதிரி ஸ்லாங்ல அடிச்சிருக்காம் பாப்பா!''

''என்னடாது... நம்பற மாதிரி இல்லையே - சர்ச் பார்க்கை எப்படி சேச்பக்னு சொல்ல முடியும்... என்னதான் ஸ்லாங்கா சொன்னாலும்?''

- மனோஹர் கேட்டான்.

''நீ பஞ்சாயத்து ஸ்கூல் வாத்யாரோட பையன்! ஒனக்கு வராது அதெல்லாம்! போய் சர்ச் பார்க்ல படி; தானா வரும்... சர்ச் பார்க்; சேர்ச் பார்க். சேச்பாக். கடைசில சேச்பக்னு தானா வரும் உன் வாயில இருந்து!''



வைத்யநாதன் உள்ளங்கைகளைச் சூடு பறக்கத் தேய்த்துக் கொண்டு சப்பணமிட்டு உட்கார்ந்தான். ''சரி, அதையெல்லாம் விடுங்கடா... இப்ப நான் என்னடா பண்ணணும் பெஞ்சமின் - இந்த சூர்யா விஷயத்ல? மறுபடியும் மறுபடியும் அவ இந்த மாதிரி எனக்கு கேர்ள் ஃப்ரெண்ட் இருக்கறதாவே நெனைச்சு ஏதாவது கமெண்ட் அடிச்சா என்ன பண்ண நான்?

''ஆமா, இருக்காள்னு சொல்லிடு!''

''ஐயையோ!''

''ஒண்ணு இல்லை, ஒம்பது கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்கன்னு சும்மா கப்ஸா அடி!''

''போச்சுடா. அந்த மாதிரி சொன்னா அவளுக்கு என்மேல ஒரு மோசமானஇமேஜ் வந்திருமேடா பெஞ்சமின்?''

''வராதுடா மச்சான். அவ ஒன்னை சும்மா கேர்ள் ஃப்ரெண்ட் பத்திக் கேக்கறதே உன் மேல அவளுக்கு ஏதோ ஒரு குட் இமேஜ் இருக்கறதாலே தான்...''

''அப்படியா சொல்றே நீ?''

''அதான் உண்மை!''

''இதை நான் நம்பலாமா?''

''தாராளமா நம்பலாம்! கண்டிப்பா சூர்யாவுக்கு உன்மேல் ஒரு நல்ல இமேஜ் இருக்கு. அதனால இந்த விஷயத்ல நாம செய்ய வேண்டிய காரியம் என்னன்னா - சூர்யாவோட குட் இமேஜை இன்னும் ஸ்ட்ராங்கா பில்டப் பண்ணணும்...! அதை எந்த வழியில எப்போ பண்ணணுங்கறதை இப்ப டிஸைட் பண்ண வேண்டாம். அதுக்கு இன்னும் கொஞ்சம் நாளாகட்டும். அதுக்கு முன்னாடி நான் அந்த சூர்யாவை ஒரு தடவை நல்லா டாப் டு பாட்டம் பாக்கணும்! அப்பத்தான் க்ளீயரா அஸெஸ் பண்ண முடியும் அவ யார்னு...''

சட்டென்று வைத்யநாதன் பேச்சு மூச்சற்று விட்டான்.

''என்ன வைத்யநாதா... கப்சிப்னு ஆயிட்டே? என்னிக்கி நான் பாக்கறது உன்னோட ஸூப்பர் ஸ்டாரை?''

''பாக்கலாம். கொஞ்ச நாள் போகட்டும்...'' - தயங்கியபடி சொன்னான்.

''பயப்படாதே, நான் ஒண்ணும் தூக்கிட்டுப் போயிடமாட்டேன் அவளை...''

''ச்சி... அதுக்கு இல்லை!''

''வேற எதுக்கு?''

''என்னதான் இருந்தாலும் என் ஆபீஸர்...''

''தெரிஞ்சதுதானே அது.''

''அதனால அவ போற பாதையில போய் நாம கும்பலா நின்னா - என் மேல அவளுக்கு இருக்குற நல்ல இமேஜ் உடைஞ்சாலும் உடைஞ்சிடும்...''

பெஞ்சமின் பேசாமல் இருந்தான். அவர்களின் மத்தியில் சிறிது நேரத்திற்கு அமைதி நிலவியது. எதையோ மனத்திற்குள் யோசனை செய்வது போலிருந்தான் பெஞ்சமின். தாடியைச் சொறிந்து கொண்டே கேட்டான்:

''வைத்தி! சூர்யா யார்னு க்ளீயரா பாக்கறதுக்கு முன்னாடி நீ யார்னு முதல்ல பாக்கணும்.''

''நான் யார்னா?''

''சூர்யாகிட்டே ஒனக்கு ஏற்படற ரீயாக்ஷன் க்ளீயரா என்னன்னு தெரியணுமே... நான் ஒரு கேள்வி கேக்கறேன் - முதல்ல அதுக்குப் பதில் சொல்றீயா?''

''கேளு...''

''நான் வந்து எத்தினியோ பொண்ணுங்களை ஸைட் அடிக்கிறேன்... அதே மாதிரி நீயும் சூர்யாவை வெறும் ஸைட்தான் அடிக்கிறியா?''

''இல்லை''

''நிச்சயமா அந்த மாதிரி இல்லேன்னு தெரியுமா?''

''நிச்சயமா தெரியும்.''

''அப்ப அதுக்கு மேல என்னவோ இருக்கு, இல்லீயா?''

''ஆமா!''

''என்ன அது?''

''தெரியலையே!''

''சும்மா டக்டக்னு பதில் சொல்லாத. கொஞ்சம் யோசிச்சுச் சொல்லு வைத்யநாதா...!''

வைத்யநாதன் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.




ஆபீசிலிருந்து சீக்கிரமே கம்பெனி காரில் ஆனந்தியையும் அழைத்துக் கொண்டு கிளம்பிய சூர்யா, நேராக எப்படியும் வாரம் ஒரு முறை போகிற பழக்கத்தில் ஆனந்தியின் வீட்டில் போய் இறங்கினாள்.



வாசலில் கார் சப்தத்தைக் கேட்டு ராஜலட்சுமி வேகமாக வந்து எட்டிப் பார்த்தாள்.

''வாங்கோ சூர்யா, வாங்கோ... நெனைச்சேன் நீங்க இன்னிக்கு வருவேள்னு...''

சூர்யாவும் ஆனந்தியும் உள்ளே நுழைந்ததைப் பார்த்து ஈஸிசேரில் சாய்ந்திருந்த பரமேச்வரன், சூர்யாவை வரவேற்பதற்காக எழுந்து கொள்ள முயன்றார்.

''பரவாயில்ல, நீங்க கஷ்டப்பட வேண்டாம்.''

சூர்யா உட்கார ஒரு ஸ்டூலை நன்றாகத் துடைத்துவிட்டுக் கொண்டு வந்து போட்டாள் ஆனந்தி. தான் போய் முகம் கழுவிவிட்டு வருவதாக சூர்யாவிடம் சைகை காட்டிவிட்டு, அவசரமாகக் கிணற்றடிக்குப் போனாள்.

''கிணற்றில் கொஞ்சம் தண்ணீர் ஊறியிருக்குன்னு ஆனந்தி சொன்னா...''

''ஏதோ முன்னைக்கு இப்போ தேவலை. ஓரளவுக்கு மழை நன்னா பெஞ்சிருக்கே!''

''இன்னிக்குக்கூட மழை வரும்னு நினைக்கிறேன்.''

''வந்தா நல்லதுதான்...''

ஆனந்தி, கழுவிய முகத்தைத் துடைத்துக் கொண்டே வந்தாள். உள்ளே போன ராஜலட்சுமி, ஆனந்திக்கும் சூர்யாவுக்கும் காபி கலந்து எடுத்து வந்தாள்.

காபியைக் குடித்துக் கொண்டிருந்த சூர்யாவிடம் பரமேச்வரன் சொன்னார்:

''இந்த வெள்ளிக்கிழமை ஆனந்தியைப் பெண் பார்க்க வர்றாங்க!''

''அப்படியா! ரொம்ப சந்தோஷம். எத்தனை மணிக்கு?''

''ஈவினிங் ஐந்தரை மணிக்கு வரதா சொல்லியிருக்காங்க...''

''அஞ்சரைன்னா ஆறாயிடும் அவங்க வந்து சேர...''

''சீக்கிரமா வந்து போயிட்டா நல்லா இருக்கும். டெய்லி மழை வந்துடுதே...''

'' அவர்களுக்கு வீடு எங்கே?'' - சூர்யா கேட்டாள்.

''புரசைவாக்கம்!''

''ஆனந்தி பற்றியெல்லாம் சொல்லியாச்சு, இல்லையா?''

''சொல்லியாச்சு. ஆனா, வரதட்சணை விஷயத்துல கொஞ்சம் அதிகமா எதிர்பார்ப்பா போல...''

''அதனாலென்ன... வந்து பெண் பார்த்து மற்ற விஷயங்கள்

பேசறபோது பாத்துக்கலாம். அப்படிக் கேட்டாலும் உடனே முடியாதுன்னு எதுவும் சொல்லி டிஸ்போஸ் பண்ணிட வேண்டாம். என்கிட்டே சொல்லாம...''

''உங்ககிட்டேதான் எல்லாமே சொல்றோம். நிஜமா நீங்கதான் கல்யாணத்தையும் நிச்சயம் பண்ணணும். நல்லபடியா நடத்தியும் தரணும்...''

''ஏதோ தெய்வமா பாத்துத்தான் உங்களை அனுப்பியிருக்கார். நீங்க இல்லேன்னா எங்க குழந்தைக்கு இந்த வேலையாவது கிடைச்சிருக்குமா?'' - பரமேச்வரன் கண்களில் நீர் மல்கச் சொன்னார்.

''ஆனந்திக்கு இருபத்தி நாலு மணி நேரமும் உங்க நெனைப்புத்தான். 'ராமஜெயம்' எழுதற மாதிரி ஏதாவது பேப்பர் கெடைச்சா உங்க பேரைத்தான் எழுதறது அது. இன்னொரு விஷயம் தெரியுமோ? அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா உங்களுக்குத் தான் பொண்ணாப் பிறக்கணுமாம்...!''

- ராஜலட்சுமி இதைச் சொன்னதும் ஆனந்தியின் கண்கள் சூர்யாவையே நோக்கின. சூர்யாவின் உணர்வுகளில் இனம் புரியாத சோகம் கவிந்தது. உலகம் எத்தனை ஓசை மிகுந்ததாக இருந்தாலும் உள்உலகத்தில் ஒரு வலிமிகுந்த ஊமைஉலகம் இருப்பதாகத் தெரிந்தது அவளுக்கு. அவளுக்குள்ளேயே கூட ஓர் ஊமை மனம் இருப்பதாகப் புலப்பட்டது. அதனால் ஊமைத்தனம் ஓர் ஊனம்தானா என்ற கிலேசம் வந்தது.

''வெள்ளிக்கிழமை மூணு மணிக்கெல்லாம் ஆனந்தியை வீட்டுக்கு அனுப்பிடறேன். எதுவும் விசேஷம் இருந்தா உடனே எனக்குச் சொல்லி அனுப்புங்கள். அப்போ நான் வரட்டுமா ஆனந்தி?''

''ஆனந்தி!அவங்க கூட பஸ் ஸ்டாப் வரைக்கும் போய் அனுப்பிச்சிட்டு வந்துடும்மா...'' என்றார் பரமேச்வரன்.

''இல்லை, பரவாயில்லை, மழை பெஞ்சு வெதர் அருமையா இருக்கு. இன்னிக்கி நான் நடந்தே போயிடறேன். பஸ்ஸுக்கு வெயிட் பண்ற நேரத்துக்கு நடந்துடுவேன்...''

''ஜாக்ரதையா போங்கோ... இங்கேருந்து வழி தெரியும் இல்லியா?''

''ஈஸியா போயிடுவேன். நேரா இருக்ற லேன் வழியா போனா பார்த்தசாரதி கோயில் குளம். அப்புறம் கார் ஸ்ட்ரீட். அதைத் தாண்டி நேரா போனா பைகிராப்ட்ஸ் ரோட், அவ்வளவுதானே...! நான்



வரேன் ஆனந்தி...''

ஆனந்தி தலையை அசைத்தாள்.

''குட் நைட்...!''

சூர்யா, குளத்தைத் தாண்டி தேரடித் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது பெஞ்சமின், மனோஹர், வைத்யநாதன் கஸ்தூரிபாய் ஹாஸ்பிடலைத்தாண்டி வந்து கொண்டிருந்தார்கள். அவள் தேரடித் தெருவைத் தாண்டினாள். அவர்கள் நல்லதம்பி முதலித் தெருவின் வடகோடியில் பிரவேசித்தார்கள். சூர்யா, நல்லதம்பி முதலித் தெருவின் தென் கோடியில் பிரவேசித்தாள்.

சதுரங்கத்தில் இரண்டு அழகான காய்கள் ஒன்றையொன்று எதிர்கொண்டு நின்றன...!

சூர்யா தூரத்தில் வந்த போதே பார்த்துவிட்ட வைத்யநாதனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. காலையில் காமராஜர் சாலையில் ஒளிர்ந்த வானவில்லின் ஒளி இந்த நல்ல தம்பி முதலித் தெருவில்...

''யார்டாது... ஹிந்தி ஃபிலிம் ஸ்டார் பூனம் தில்லான் மாதிரி டாப்பா வர்றா?'' என்று பலமாக பெஞ்சமின் 'கமெண்ட்' அடித்து விடும் முன், வைத்யநாதன் பெஞ்சமினின் கையைப் பிடித்து ரகசியமாக ஓர் அழுத்து அழுத்தி விட்டான். மிக மெல்லிய குரலில் சொன்னான்: ''அதாண்டா சூர்யா... கப்சிப்னு வா...!''

அதற்குள் சூர்யாவும் நெருங்கி வந்து விட, நேருக்கு நேராக அவளும் வைத்யநாதனும் வந்து விட்டார்கள்! முற்றிலும் நனைந்த தோற்றத்தில் இருந்த வைத்யநாதன், மிகவும் நாணமடைந்து குறுகியபடி குட் ஈவினிங் சொன்னான்.

சூர்யா சர்வ சுதந்திரமாக, இலகுவாக வைத்யநாதனைக் கண்டு ஆச்சரியம் கொண்டாள். ''வாட் இஸ் திஸ்...? இப்படி நனைஞ்சு போய் வர்றீங்க மிஸ்டர் வைத்யநாதன்...''

பெஞ்சமினும் மனோஹரும் தாங்கள் அத்தனை ஈரமான உடைகளுடன் வைத்யநாதனுக்கு நெருக்கமாக நிற்பது அநாகரிகமாகக் கருதி, சற்றுத் தள்ளிப்போய் நின்று கொண்டார்கள். வைத்யநாதன் ஈரம் சொட்டச் சொட்ட - நிஜமாகவே கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

பயபக்தியுடன் கேட்டான்: ''மேடம், இந்தப் பக்கம்... நீங்க?''

''ஆனந்தியோட வீட்டுக்குப் போயிருந்தேன். நீங்க தங்கியிருக்கற லாட்ஜிங் ஹவுஸ் - இந்தத் தெரு தானே?''

''யெஸ் மேடம்... அதோ, அந்த பில்டிங்...!''

''ஏன், இப்படி நனைஞ்சு போய் வர்றீங்க..?''

''பீச்சுக்குப் போயிருந்தேன் மேடம். மழை வந்திடுச்சு...''

''நாட் பேட்! கேர்ள் ஃப்ரெண்டோடதானே நனைஞ்சிருப்பீங்க? நல்ல எக்ஸ்பீரியன்ஸ்தான். ஓகே! நான் வரட்டுமா?''

''சரிங்க மேடம்...''

''குட் நைட்...!''

''குட் நைட் மேடம்...!''

சூர்யா நகர்ந்து மெதுவாக நடந்தாள். வைத்யநாதன், தெரு என்பதையே சுத்தமாக மறந்து அவள் போகிற அழகை அப்படியே வியந்தபடி நின்றான்.

''உஸ்... பாத்தது போதும். மிச்சத்தை நாளைக்குப் பாக்கலாம்... வா, போகலாம்...'' - பெஞ்சமின் வந்து கையைப் பிடித்து இழுத்தான்.

அறையைத் திறந்து உள்ளே நுழைந்ததுதான் தாமதம் - மூவரும் சிலிர்த்துக் கெக்கலித்தார்கள். பெஞ்சமின், வைத்யநாதனைத் தூக்கிக் குதூகலத்துடன் தட்டாமாலை சுற்றினான்...

மனோஹர் பதறினான்: ''டேய் டேய்... போட்டுடாத கீழ... பூசணிக்காய் உடையற மாதிரி உடைஞ்சிடப் போறான்!''

பெஞ்சமின், வைத்யநாதனைக் கட்டிப்பிடித்து முத்தமே தந்து விட்டான்!

''நான் கனவுலகூட நெனைக்கலைடா வைத்தி. மெய்யாவே அவ ஸூப்பர் ஸ்டார்தான்! எவளும் நிக்கக்கூட முடியாது அவ பக்கத்ல... நெஜமாவே அவளோட ஒடம்புல ஒரு லைட் அடிக்குது பாத்தியா... சே! ப்யூட்டிஃபுல் கேர்ள்... வெரி ப்ரெட்டி! மடையா, என்னமோ அவளுக்கு உன்னைவிட அதிகமா வயசு இருக்கும்னு சொன்னியே...?''

''அதிகமா இருக்காதுன்னு சொல்றியா?''

''பெட் கட்றேன்! இருக்கவே இருக்காது... அந்த சொபிஸ்டிகேஷன், அந்த ஹைட், அந்த டச்-அப்-அப்படிக் கொஞ்சம் ஒண்ணு ரெண்டு வயசை லேசா கூட்டிக் காட்டுது, அவ்வளவுதான். கண்டிப்பா ஏஜ் இருபத்திநாலுக்கு மேல இருக்கவே இருக்காது...''

''ஆனா வைத்தி, ஒண்ணு மட்டும் இப்ப உறுதியாயிடுச்சு. கேர்ள் ஃப்ரெண்டுனு துருவறா பாத்தியா... அதை இனிமே கேர்லெஸ்ஸா விட்டுட முடியாது. என்னவோ மனசில வச்சிட்டு சாகஸம்



பண்றா...!''

''க்ளியரா கேட்ச் பண்ணிட்டேடா மனோஹரா!'' என்றான் பெஞ்சமின்.

வைத்யநாதனுக்கு ஏனோ உடம்பெல்லாம் சிலிர்த்துக் கொண்டது. சூர்யா தனக்குக் கிடைத்துவிடப் போவது போலவே பிரமை வந்தது மனத்தில். தனக்காகவே அவள் பிறந்து வளர்ந்திருப்பதாக பிரமிப்பு ஏற்பட்டது.

''என்னடா திடீர்னு சைலன்ட் ஆயிட்டே...?''

''ஒண்ணுமில்ல... நெஜமாவே சூர்யா எனக்குக் கிடைக்கப் போறாளான்னு நெனைச்சிப் பார்த்தேன்.''

''அதெல்லாம் ஷ்யூரா சொல்ல முடியாதுடா வைத்தி. அவளுக்கும் ஒனக்கும் பேஸிக்கா ரெண்டு மூணு பெரிய டிஃபெரன்ஸ் தெரியுது!''

''அதுல ஒண்ணேஒண்ணு சொல்லேன்!''

''சொல்றேன். நீ ஹர்ட் ஆயிடக் கூடாது.''

''இல்லை இல்லை...''

''அவ ரொம்ப ரிஃபைன்ட் கேர்ள். ஆனா, நீ கொஞ்சம் ரா! ஆனா, உன்னோட இந்த ரா க்வாலிடியே அவளுக்கு அப்பீல் ஆயிருக்கோ என்னவோ? அதை இன்னும் கொஞ்ச நாள் அவளை ஸ்டடி பண்ணிட்டுத்தான் சொல்ல முடியும். இப்ப முடியாது!''

''சே...! போயும் போயும் ஏன்தான் இந்த ஆபீஸ்ல வேலை கிடைச்சதோ?'' - வைத்யநாதன் அலுத்துக் கொண்டான்.

''பொம்பளை விஷயமே அவதிதான் வைத்யநாதா! அதான் நான் சீரியஸா எதிலேயும் மாட்டிக்கிறதில்லை... அதனால ஒரு வாரம் அல்லது பத்து நாள் நல்லா யோசனை பண்ணிக்க. அதுக்குள்ள அவளுக்குள்ளேயும் வளர்ச்சி எப்படி இருக்குன்னு பாத்துப்போம். அப்படி ஏதாவது நல்ல வளர்ச்சி இருந்தாக்க, நான் சொன்னேனே ஒரு நாடகம் ஸெட் - அப் பண்றதா... அந்த நாடகத்தை மேடையேத்திடலாம். அந்த நாடகத்தாலே ஒண்ணு, நீ தூள் தூளாயிடுவே, இல்லே, ஸூப்பர் ஸ்டார் தூள் தூளாயிடுவா... அவ்வளவுதான்!''

வைத்யநாதன் ஈர உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு லுங்கியை மட்டும் கட்டிக் கொண்டு, கட்டிலில் அமர்ந்து ஜன்னல் வழியாகத் தெருவையே பார்த்துக் கொண்டிருந்தான். 'சற்றைக்கு முன் என் தேவதை நடந்து போன தெரு' என்று எண்ணி உணர்ச்சிவசப்பட்டான். எந்தக் குறிப்பிட்ட பெண் மீதும் இதுவரை அவனுக்குத் தோன்றியிராத இளம் பாலுணர்வு வைத்யநாதனின்

புதிய உணர்ச்சிகளில் கண் இமைத்தது. அலை ஓரம் போய் சூர்யாவின் மடியில் தலை வைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. அவளின் செவியோரங்களின் அருகில் கண்களை மூடிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. ஒரு தளிரை அள்ளிக் கொள்வது போல சூர்யாவை இறுகத் தழுவிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஒரு பனி தேங்கிய ரோஜாவை முத்தமிடுவது போல அவளை ஒரே ஒரு முறை முத்தமிட வேண்டும் போலிருந்தது.

''ஏய்... கூப்பிடறது காதில விழலையா...? சாப்பிடப் போறோம்டா... வர்றியா, இல்லையா?''

''சாப்பாடு எங்கே?'' - வைத்யநாதன் ஷர்ட்டை அணிந்தவாறு கேட்டான்.

''வேற எங்கே? முனியாண்டிதான்...!''

''அய்யோடா! நான் வரலேப்பா. நான்தான் அன்னிக்கே சொல்லிட்டேனே இனிமே மட்டன் கிடையாதுன்னு...''

''சூர்யா மட்டன் சாப்பிடற பொண்ணா இருந்தா?''

''... அப்ப மட்டன் சாப்பிடுவேன்!''

''... டேய் டேய்... மனோஹர்...! பார்றா அவன் மூஞ்சியை! எப்படி வழியறான் பார்! சூர்யா மட்டன் சாப்பிட்டா இவனும் சாப்பிடுவானாம். சரி... எப்படியும் ஒழி. நீ போய் சைடோஜியில வத்தக்குழம்பும் கீரையும் சாப்பிடு. நாங்க போய் பரோட்டாவும் பாயாவும் ஒரு வெட்டு வெட்றோம். வெட்டிட்டு இன்னிக்கி நைட் விடிய விடிய ஸ்டீரியோவில ரெக்கார்ட்தான். லாட்ஜே தூள் இன்னிக்கி.''

இலஞ்சியில் வீட்டின் நீண்ட முன் தாழ்வாரத்தில் சாப்பிட்டு முடித்திருந்த செல்வரத்னம் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். தென்காசியில் வேளாண்மைத்துறை அதிகாரியை முக்கூடலிலிருந்து பார்க்க வந்திருந்த பாஸ்கரன், இரவு தங்குவதற்காக இலஞ்சியில் செல்வரத்னத்தின் வீட்டிற்கு வந்திருந்தார். இலஞ்சிக்கு அவர் வந்த உண்மையான நோக்கம், தன் பெண்ணை வைத்யநாதனுக்குத் திருமணம் செய்து கொடுப்பது பற்றி இறுதியாகப் பேசிப் பார்த்து விடுவதுதான்.

''ஒன்னோட மனசு எனக்குப் புரியுதுவே பாஸ்கரா... ஆனா, நான் என்ன சொல்லுதேங்கறது ஒனக்குப் புரியலை. அதான் பாயிண்ட்...''

''அட, என்ன அத்தான் நீங்க சொல்றது... இந்த மாதிரி யாரும் பேசி இதுவரை நான் பாத்ததேயில்லை. வைத்தி சின்ன புள்ளை - அவன்



எதையாவது சொல்வான். நாமல்ல பாத்து எதையும் சரிபண்ணி வைக்கணும்.''

''நீ சொல்லுறது இருக்கே... அது நம்ம அடுத்த ரெண்டு பயல்களுக்குத்தான் பொருந்தும்... ஆனா, வைத்யநாதன் விஷயம் வேற... சொன்னா ஒனக்குப் புரியாது. பேசாம இரு... வேணும்னா ஒரு வருஷம் பொறுத்துக்க... நம்ம சந்திரசேகரன் பி.ஏ., முடிச்சதும் அவனுக்கு வேணா உன் பொண்ணைக் கட்டி வச்சிடலாம்...''

பாஸ்கரன் பதில் சொல்லவில்லை. அவருக்கு வைத்யநாதன் மேல்தான் குறி...

''அப்ப உங்களோட முடிவை நீங்க மாத்திக்கறதா இல்லை?''

''அப்படியெல்லாம் மனசு உடைஞ்சு போய் கேக்காத. என் மூத்த பிள்ளையோட வாழ்க்கை கொஞ்சம்கூட அவனோட இஷ்டத்துக்கு எதிரா அமைஞ்சிடக்கூடாது. அதான் என்னோட பாயிண்ட். நான் பொண்ணு பாத்து அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறதா இல்லை. ஒரு வேலையை அவனா தேடி வாங்கின மாதிரி, அவனாவே அவனுக்குப் பிரியமான பொண்ணை - அது யாராயிருந்தாலும் - விரும்பிப் பண்ணிக்கறதுக்கு மனப்பூர்வமா நான் சம்மதிச்சாச்சு. ஒனக்கு ஞாபகம் இருக்கா, அவனுக்கு சின்ன வயசில வந்த மனக்கோளாறு?''

''அதுக்கும் நீங்க சொல்றதுக்கும் என்ன சம்பந்தம் அத்தான்?''

''அதான்வே சம்பந்தம்! அதெல்லாம் புரியாது ஒனக்கு. பேசாம படு...''

''என்னமோ நீங்க பண்றது சரியில்லைன்னு தோணுது எனக்கு.''

''எல்லாம் சரியா நடக்கும். பார். வைத்தி மெட்ராஸ் போன காரணமே, ரொம்பப் புதுசா அவனுக்கேத்த பொண்ணைத் தேடறதுக்குத்தான்! தேடிக் கண்டுபிடிச்சு விழுந்து கிழுந்து எந்திருச்சி வரட்டுமே!''

''எந்திரிக்க முடியாமே படுகுழியில விழுந்துடாமே...''

வெற்றிலைச் சாற்றின் இனிமையை மிகவும் சுகமாக விழுங்கிக் கொண்டே செல்வரத்னம் சொன்னார்: ''நீ சொல்லுற மாதிரி எந்திருக்கவே முடியாத பெரிய குழியில வைத்தி விழுந்துடறான்னே வச்சிப்போம். நிசமாவே அப்பத்தான் குழியில இருந்து எந்திரிச்சி வருவான்...! பாத்திட்டே இரு...''

ரொம்பவும் அபூர்வமாகவே சொல்லி விட்டார் செல்வரத்னம். அவரின் இந்தச் சொல் ஓர் உண்மையான தொலை நோக்கு. மகன் என்ற குறுகிய பரிமாணங்களை அகற்றிவிட்டு, வைத்ய நாதனை ஒரு தனி மனிதனாக முழுமையாகப் பார்க்கிற - இரக்கத்தின் சாயலே இல்லாத பரிவுதான் இந்த நிச்சயமான தொலைநோக்கு.




## 1983. செப்டம்பர் 23. வெள்ளிக்கிழமை.

**கா**லையில் வைத்யநாதனுக்கு வந்திருந்த லெட்டரை சூர்யா அவனிடம் நீட்டியபோது, ''யாரோட லெட்டர்? பாட்டியோடதா, இல்லை வேற...?'' என தமாஷாகக் கேட்டாள். கடிதத்தைப் படித்து முடித்த வைத்யநாதன், ''இதுக்குமேல ஒரு லெட்டர் இன்ட்ரெஸ்டிங்கா இருக்காது; உங்களைக்கூட பாட்டி விசாரிச்சிருக்காங்க மேடம்... ப்ளீஸ், படிச்சுப் பாருங்களேன்'' என்றான்.

உண்மையில் அவன் எதிர்பார்க்கவில்லை - சூர்யா அந்த லெட்டரைப் படிப்பதற்காக வாங்கிக் கொள்வாளென்று! சிறு சங்கோஜத்துடன் அந்த லெட்டரை வாங்கி, சூர்யா கூரான பென்சிலை உதடுகளில் தேய்த்தவாறு படித்தாள்.

தனக்குப் பரிச்சயமே இல்லாத கிராம வாழ்க்கையின் பொய்க் கலப்பற்ற ஹிருதயத்தின் தொனி ஸ்பஷ்டமாக அந்தக் கடிதத்தில் ஒரு மூதாட்டியின் குரலாக ஒலித்திருப்பதை மிகுந்த அபிமானத்துடன் கண்டாள். கடிதத்தைத் திருப்பிக் கொடுத்தபோதுதான் சூர்யா ஒரு சரித்திர முக்கியமான கேள்வியைச் சிறிதும் யோசித்துப் பார்க்காமல் கேட்டு விட்டாள்.

''பாட்டியோட லெட்டர் மட்டும் ஆபீஸ் அட்ரஸ்'க்கு வருது. வேற லெட்டர்?'' சூர்யா மேற்கொண்டு சொல்லாமல் எதைச் சொல்கிறாள் என்பதை நொடியில் புரிந்து கொண்ட வைத்யநாதனின் உடனடிப் பார்வையை எதிர்கொள்ளாமல் சூர்யாவின் பார்வை உடனே தன் முன்னால் இருந்த லெட்ஜர்களில் ஆழ்ந்து விட்டது. அப்படி ஆழ்ந்து போனதை நாணமாகத் தப்பித்துக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமல், ஆபீஸருக்கு உரிய மிடுக்காகத் தோற்றப்படுத்திக் கொண்டாள்.

வைத்யநாதனின் மனம், சர்க்கஸில் எட்டாத உயரத்தில் பார் விளையாட்டு விளையாடுவது போல உச்சாணியில் ஆடிக் கொண்டிருந்தது. சூர்யாவிடம் ஆபீஸ் பணிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம் பற்றிச் சிறிது பேசக்கூடிய ஓர் இதமான வரமாகத் தெரிந்தது பாட்டியின் கடிதம்!

'ஆஹா! பாட்டி தினம் ஒரு கடிதம் எழுதமாட்டார்களா?' என்று மனத்திற்குள் வைத்யநாதன் ஏங்கவே ஆரம்பித்து விட்டான். அந்த



ஓர் இழையில் கிடைக்கும் மெல்லிய உறவில் சுகம் காணுகிற ஆற்றாமை வைத்யநாதனின் கிராமிய குணத்தில் ஒரு கலாசாரமாகவே படிந்திருந்தது.

**க**ல்கூரல் அகாடமி அருகில் உள்ள பஸ் ஸ்டாப்பில் ஆனந்தி சில நிமிஷங்கள் காத்திருந்தாள். தன்னைப் பெண் பார்க்க ஒருவனை அனுமதிப்பது இதுதான் கடைசி முறை என்ற சினம் அவளுக்குள் இரண்டு தினங்களாகவே புகைந்து கொண்டிருந்தது. தனக்கு இத்தனை அழகு இருந்தும் சுதந்திரமாக ஓர் ஆடவனைத் தனக்குத் தேர்வு செய்கிற பாக்யம் இல்லாமல், ஒருவனால் இரக்கத்துடன் ஏற்றுக் கொள்ளத்தக்க பரிதாபமான நிலையில் தான் இருப்பதை எண்ணி ஒரு நிமிஷம் கலங்கினாள். திரும்பத் திரும்பத் திருமண வரதட்சணைக்கான பேரம், தான் ஊமை என்பதற்காக உயர்த்தப்படுவதால் முறிந்து போவதாக இருந்தால் தனக்கு இனி அம்மாதிரி பேரங்களே வேண்டாமென்று ஒதுங்கி விட வேண்டுமென்று அவளுடைய இளம் சுயமரியாதை லேசாகக் கோபமடைந்திருந்தது.

இந்திராநகர் - பாரிமுனை பஸ் அநேகமாக காலியாக வந்தது. அதில் ஏறி க்வீன் மேரீஸில் இறங்கிக் கொண்டு, நாற்பத்தைந்தாம் நம்பர் பஸ் மாறி, ஐஸ் ஹவுஸ் போய் சில நிமிஷங்களில் வீடு போய்ச் சேர்ந்தாள்.

**ம**ணி ஐந்தாகப் பத்து நிமிஷம் இருந்தபோது அவர்கள் வந்தார்கள். கணேசன் என்ற அந்தப் பையனுக்கு முப்பது வயது இருக்கலாம். வேஷ்டிதான் கட்டியிருந்தான். நெற்றியில் சிறியதாக விபூதிக் கீற்று இருந்தது. அவனுடன் அவனுடைய அப்பாவும் அம்மாவும், கல்யாணமாகிவிட்ட அவனுடைய தங்கையும் அவளின் கணவரும் வந்திருந்தார்கள். தரையில் விரித்திருந்த புதிய ஜமக்காளத்தில் அவர்கள் உட்கார்ந்தார்கள்.

பரமேச்வரன் ஈஸிசேரில் உட்கார்ந்தபடியே அவர்களை வணங்கினார். ராஜலட்சுமி எல்லோரையும் வணங்கி உபசாரம் செய்தாள். ஒரு தட்டில் மைசூர் பாகு, இன்னொரு தட்டில் காரா பூந்தி கொண்டு வந்து வைத்தாள். பின் பக்கத்துக் குடித்தனக்காரர்களின் அறைக்குள் அலங்காரம் செய்து முடித்திருந்த ஆனந்தியை அழைத்து வந்து, வந்தவர்களுக்கு அறிமுகம் செய்தாள். கணேசன் என்ற

பையனின் தங்கைதான் அன்புடன் ஆனந்தியின் கையைப் பிடித்து உட்கார வைத்தாள். பார்த்த உடனே அவர்களுக்கெல்லாம் ஆனந்தியைப் பிடித்துவிட்டது!

பையனின் அம்மா மிகப் பெருமையாகச் சொன்னாள்: ''எங்க கணேசனுக்கு ஒங்க ஊறுகான்னா ரொம்ப இஷ்டம்! வெறும் ஊறுகாயாவே எடுத்து எடுத்துத் தின்னுடுவான்...''

''லேத் பட்டறையை அவர்தான் பாத்துக்கறாரா?'' - பரமேச்வரன் கேட்டார்.

''பூரா அவனேதான் கவனிச்சுக்கிறான். அவனுக்கே எல்லா வேலையும் தெரியும்'' என்றார் பையனின் அப்பா.

கணேசன் ஆனந்தியை ஏறிட்டுப் பார்த்தான். என்னவோ ஒரு சுய இரக்கம் ஆனந்தியின் நெஞ்சில் பெரிய அலை போல எழும்பியது. கண்களை மூடிக் கொண்டு எச்சிலை விழுங்கினாள்.

கணேசன் வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டான்.

''பொண்ணு பிடிச்சிருக்கு அவனுக்கு... வெக்கம் வந்திருச்சு, அதான்...'' - அவனுடைய தங்கை கேலி பண்ணினாள்.

பரமேச்வரன் சந்தோஷத்துடன் கேட்டார்: ''ஆம்பளைப் பிள்ளைக்கு என்ன வெக்கம்? சந்தோஷமா அவரோட சம்மதத்தை வாயைத்திறந்தே அவர் சொல்லலாமே...?''

- பரமேச்வரன் இப்படிச் சொன்னதும், பெண் பார்க்க வந்திருந்தவர்கள் விழித்தார்கள். சட்டென அவர்களிடையே ஒரு குரூரமான மௌனம் ஏற்பட்டு விட்டது. கணேசன் எல்லோரையும் பரக்கப் பரக்கப் பார்த்தான். அவனுடைய அப்பா சிறிது சுதாரித்துக் கொண்டு பேசினார்.

''அய்யா, உங்க பொண்ணு வாய் பேச முடியாத ஊமைதானுங்களே?''

''ஆமாங்க... புரோக்கர் உங்ககிட்டே அதைச் சொன்னாரில்லையா?''

''அவரு சொன்னாருங்க... அதே மாதிரி எங்க கணேசனும் பேச முடியாத புள்ளைன்னு உங்களுக்குச் சொல்லியிருப்பாரே அவரு?''

பளீரென்று இடி முழங்கியது போல் இருந்தது. சில கணங்கள் ஏமாற்றத்தில் நடுங்கிப் போன ஆனந்தி, எழுந்து ஓடிப்போய் விட்டாள். ராஜலட்சுமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பரமேச்வரன் மெதுவாக ஈஸிசேரிலிருந்து வேதனையுடன் எழுந்து நின்றார்.

''புரோக்கரு அந்த விஷயத்தை எங்ககிட்ட சொல்லவே



இல்லையே.''

மாப்பிள்ளைப் பையனின் அப்பாவிற்கு உடனே ஒரு முறுக்கு வந்துவிட்டது.

''அதான் இப்ப நாங்க சொல்லிட்டமே... அப்புறமென்ன?''

ராஜலட்சுமியும் பரமேச்வரனும் வேதனையுடன் ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

''ரெண்டும் வாய் இல்லாததுங்க... ஒன்னுக்கொன்னு ஆறுதலா இருக்கும்.'' - பையனின் அம்மா சொன்னாள்.

உள் அறையில் குபீரென்று ஆனந்தி அடக்க முடியாமல் விம்மி அழுதது எல்லோருக்குமே கேட்டது.

பரமேச்வரன் கைகூப்பிவிட்டார்: ''மன்னிக்கணும் ஐயா... உங்களோட பையனுக்கு எந்தப் பாடுபட்டாவது ஒரு பேசக்கூடிய பொண்ணா பாத்து கல்யாணம் செஞ்சு வையுங்க...''

பையனின் அப்பா கோபத்துடன் எழுந்து விட்டார்: ''அதாவது உங்க ஊமைப் பொண்ணை வந்து ஒரு ஊமைப் பயலுக்குக் கட்டித் தர உங்களுக்கு இஷ்டமில்லை. அதானே? எல்லாம் எந்திரிங்க, போலாம். அதுக்குத்தான் அப்பவே சொன்னேன் - புரோக்கரு பயலுங்க சகவாசமே வேணாம்னு. ஒரு முண்டமும் கேக்கலை... உம். நகருங்க...''

பெண் பார்க்க வந்தவர்கள் அவசரமாக வெளியேறி விட்டார்கள். ஒற்றையாக கூடத்தில் அலங்காரம் எதையும் கலைக்கக்கூடச் செய்யாமல் ஆனந்தி தரையில் குப்புறப்படுத்தபடி வெகு நேரத்திற்கு அழுது அழுதுப் பொருமிக் கொண்டிருந்தாள்.

ஆனந்தியின் வீட்டுக்குள்ளே நுழைந்ததுமே சூர்யாவிற்குப் பகீரென்று இருந்தது. கார் கதவு திறந்து மூடும் சப்தம் கேட்டதுமே, மறுபடியும் ஆனந்திக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. விஷயம் என்னவென்று தெரியாமலே சூர்யாவிற்கு நெஞ்சை அடைத்தது. தரையில் உட்கார்ந்து ஆனந்தியின் தலையைத் தன்னுடைய மடியில் புரட்டி வைத்துக் கொண்டு, வெகு நேரத்திற்கு அவளுடைய முதுகைத் தடவிக் கொடுத்தபடியே அமர்ந்திருந்தாள்.

அரை மணி நேரம் கழித்து ராஜலட்சுமி வேதனையுடன் விஷயத்தைச் சொன்னாள். சூர்யாவிற்கு மனம் வலித்தது. கஷ்டப்பட்டுத் தன்னுடைய உணர்வுகள் எதையும் காட்டிக் கொள்ளாமல் மறைத்துக் கொண்டாள்.

''ஆனந்தி டியர்! எழுந்துக்கம்மா. இதுக்கெல்லாம் போய் தைரியத்தை இழக்கலாமா? எழுந்துக்க... அழப்படாது. நான் இல்லே உனக்கு? என்ன நடந்தாலும் பயப்படப்படாது. ஃபர்ஸ்ட் க்ளாஸ் பையனா பாத்து உனக்கு நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். எழுந்துக்க டியர்... கண்ணம்மா இல்லை நீ... எழுந்து முகத்தையெல்லாம் அலம்பிட்டு வா...!''

எழுந்து உட்கார்ந்த ஆனந்தியின் கண்களை சூர்யா துடைத்து விட்டாள்.

சூர்யா, ராஜலட்சுமியிடம் சொன்னாள்: ''மாமி! ஒரு மாறுதலுக்காக ஆனந்தி ஒரு வாரத்துக்கு என் கூட வந்து ஹாஸ்டல்ல இருக்கட்டும். இப்பவே அவளைக் கார்ல என்னோட அழைச்சிட்டுப் போயிடறேன்...''

''அவ சம்மதிச்சா அழைச்சிட்டுப் போங்கோ... ஒருநாள்கூட என்னை விட்டுப் பிரிஞ்சு அவ எங்கேயும் தங்கினது கிடையாது...''

''அதெல்லாம் என்கூட வருவா! ஒன் வீக் என்கூட ரூம்ல வந்து இருக்கியா ஆனந்தி?''

ஆனந்தி சரியென்று தலை அசைத்தாள்.

சாயந்திரம் ஆறு மணிக்கு ஆபீஸிலிருந்து கும்மாளம் போடும் மனத்துடன் வைத்யநாதன் வேகமாக வந்தான். காலையில் தன்னுடைய பாட்டி எழுதிய கடிதத்தை சூர்யாவிற்குத் தான் படிக்கக் கொடுத்துவிட்ட இனிய செய்தியை பெஞ்சமினிடமும் மனோஹரிடமும் சொல்கிற பரபரப்பில் ஏறக்குறைய பறந்தே வந்தான்!

ஆனால், பெஞ்சமினும் மனோஹரும் வெடித்துப் போன பட்டாஸ் மாதிரி படுக்கைகளில் தளர்ந்து கிடந்தார்கள்.

''டேய், பயல்களா! என்ன ஆச்சு ரெண்டு பேருக்கும்? ஒரு அருமையான நியூஸ் சொல்லலாம்னு வந்தா, காத்துப் போன ட்யூப் மாதிரி கன்னாபின்னான்னு கெடக்றீங்க? 'தண்ணி'யா?''

பெஞ்சமின் எரிச்சலுடன் சொன்னான்: ''தண்ணியா? சார்மினார் வாங்கறதுக்கே காசில்லை...''

''சே! இந்த... மாசக் கடைசி வந்தாலே வாழ்க்கையே வெறுத்துப் போயிடுதுப்பா!''

''ப்பூ... இவ்வளவுதானா! நான் என்னவோ நெனைச்சிப் பயந்துட்டேன். நான் தரேண்டா வேணுங்கற பணம். எவ்வளவு வேணும்?'' என்றான் வைத்யநாதன்.

மறு நிமிஷம் பெஞ்சமின் காற்று நிரம்பிய ட்யூப் ஆகிவிட்டான்!



வைத்யநாதனை தொட்டுத் தொட்டுக் கும்பிட்டான். ''ஒனக்குக் கோயிலே கட்டிக் கும்பிடலாம்டா வைத்தி. ஒரு நூறே நூறு ரூபா குடு கண்ணா - முதல் தேதி டாண்ணு திருப்பித்தந்துடறேன்.''

''மனோஹர், உனக்கு...?''

''த ஸேம் ஹண்ட்ரட்...!''

வைத்யநாதன் இரண்டு பேருக்கும் ஆளுக்கொரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான். இருவரும் கண்ணில் ஒத்தி வாங்கிக் கொண்டார்கள்.

''டேய், மனோஹர்! பக்கத்து ரூம்ல ஹிண்டு இருந்தா வாங்கிட்டு வா...'' என்றான் பெஞ்சமின்.

மனோஹர் போய் பேப்பருடன் வந்தான்.

''இது முந்தாநாள் பேப்பர்டா. ரெண்டு நாளா வாங்கலையாம் அவன்!''

''அவனுக்கும் மாதக் கடைசியா? சரி சரி, கொண்டா. மௌண்ட் ரோட்ல என்னென்ன படம் ஓடுதுன்னு பாக்கலாம். நைட் புஹாரி போய் செமத்தியா சாப்பிட்டுட்டு, ஏதாவது பிக்சர் போலாம்.''

வைத்யநாதனுக்கு எரிச்சல் வந்தது: ''பணம் கைக்கு வந்ததும் புஹாரிதானா? ஏண்டா இந்த மாதிரி அக்ரமம் பண்றீங்க?''

''அதான் வைத்யநாதா லைஃப்! சும்மா உன்னை மாதிரி எங்களையும் பணத்தை உண்டியல்ல போட்டு வைக்கச் சொல்றியா?''

''இம்ப்பார்ட்டெண்ட் நியூஸ் சொல்லலாம்னு வந்தேன்...''

''ஒரே ஒரு நிமிஷம் இரு. ஜஸ்ட் ஒரு க்ளான்ஸ் விட்டுட்டு வரேன், ஊர் உலகத்ல என்ன நடக்குதுன்னு... அடடே! ரெண்டு நாள் முன்னாடி மெட்றாஸ்க்கு நம்ம ப்ரெஸிடெண்ட் வந்திட்டுப் போயிருக்கார்... அதுகூட நமக்குத் தெரியலை பார்...!''

''சரி சரி. என்ன படம் போலாம்னு பார்'' என்றான் மனோஹர்.

''பைலட் போலாமா - த ப்ளாக் ஹோல்!''

''சினிமாஸ்கோப்பா?''

''இல்லை, நம்ம வைத்தியோட சைஸ். செவன்ட்டி எம்.எம்!''

வைத்யநாதன் பெஞ்சமினை ஓங்கி ஓர் உதை விட்டான்.

''ரைட்... ரைட்... ரைட்... ஏதோ இம்ப்பார்ட்டெண்ட் நியூஸ் சொல்லணும்னு சொன்னியே... என்னது?''

''எங்க பாட்டி இன்னிக்கு எனக்கொரு லெட்டர் எழுதியிருந்தாங்க. அதை நான் சூர்யா ஏஞ்சல்கிட்ட படிக்கக் குடுத்தேன்.''

''வெரிகுட்!''

'' 'பாட்டியோட லெட்டர் மட்டும்தான் ஆபீஸ்க்கு வருது!' அப்படின்னு சொல்லி நிறுத்திட்டு ஒரு மாதிரி அர்த்தத்தோட என்னைப் பாத்தா!''

''அதாவது கேர்ள் ஃப்ரெண்டோட லெட்டரெல்லாம் லாட்ஜ் அட்ரஸ்க்குப் போகுதுன்னு அவ மீன் பண்றா...''

''யெஸ்...!''

''செத்தாடா ஸூப்பர் ஸ்டார்!''

''வைத்யநாதா! ஒரு சின்ன கேள்வி. உன்னோட பாட்டி எத்தினி நாளைக்கு ஒரு லெட்டர் எழுதுவாங்க?''

''அதெல்லாம் கணக்குக் கிடையாது. வாரம் ஒண்ணு எழுதினாலும் எழுதுவாங்க. திடீர்னு ரெண்டு மாதத்துக்கு எழுதாமலேயே இருந்தாலும் இருப்பாங்க...''

''அவங்க எழுதாட்டா நாமே எழுதிடறது - பாட்டி மாதிரி!''

''பாட்டி மாதிரி நாம எழுதறதா?''

பெஞ்சமின், சில நிமிடங்கள் யோசித்து விட்டுச் சொன்னான்: ''அந்த விஷயத்தை கொஞ்ச நேரத்திற்குத் தள்ளி வச்சிட்டு வேற சில மேட்டர்ஸை முதல்ல க்ளியர் பண்ணிப்போம்... வைத்யநாதா! ஒனக்கு சூர்யா மேல எக்கச்சக்க லவ். அது நிச்சயம்தானே?''

''நிச்சயமா...''

''தைரியமா அதை அவகிட்டே சொல்லமுடியுமா உன்னால?''

வைத்யநாதன் கொஞ்சம் யோசித்துவிட்டுச் சொன்னான்: ''இல்லை, முடியாது.''

''ஏன் சொல்ல முடியாது?''

''என்னவோ ஒரு பயம்!''

''என்னிக்காவது அந்தப் பயம் போறதுக்கு சான்ஸ் இருக்கா?''

''தெரியலை...''

''சரி. வேற ஏதாவது ஒரு வழியில உன்னோட காதலை எக்ஸ்பிரஸ் பண்ண முடியுமா அவகிட்டே?''

''முடியாதுன்னு தோணுது! சூர்யாவைப் பாத்தாலே சர்வமும் எனக்குள்ளே ஒடுங்கிப் போயிடுது! ரொம்ப ஸ்டிஃப்பா ஆயிடறேன்! அவளைப் பாத்தா ஏதோவொரு வேற உலகத்து தேவதையைப் பாக்கற மாதிரி இருக்கு!''

''ஆல்ரைட். அப்ப வேற வழியில்லை. ரொம்ப லாங் ஷாட்ல தான் அப்ரோச் பண்ணணும்! அதுக்கு முன்னாடி ஒரு ட்ரெய்லர்! ட்ரெய்லருக்கு அப்புறம் படத்தை ரிலீஸ் பண்ணிடலாம்.''



''கொன்னுடலாம் கொன்னு!''

''வைத்தி! உன்னோட பாட்டியோட லெட்டர்ஸை யார் எழுதறது? அவங்களே எழுதறாங்களா? இல்லை, அவங்க சொல்லி வேற யாராவது எழுதறாங்களா?''

''எங்க பாட்டிக்கு எழுதப் படிக்கல்லாம் தெரியாது. அவங்க சொல்லச் சொல்ல பக்கத்து வீட்ல ஒரு டீச்சரம்மா இருக்காங்க - அந்த டீச்சரம்மாதான் எழுதுவாங்க...''

''அந்த டீச்சரம்மா மட்டும்தான் எழுதித் தருமா?''

''அநேகமா அவங்கதான். சில சமயத்ல வேற யாராவது லேடீஸ் எழுதித் தருவாங்க...''

''அது போதும் நமக்கு! இனி வாரம் ரெண்டுதரம் பாட்டியோட லெட்டர் கேரண்டியா வந்துடும் உனக்கு! பாட்டி சொல்ற மாதிரி நான் சொல்லச் சொல்ல மனோஹர் எழுதப் போறான்! பார், அசல் பாட்டியோட லெட்டர் தோத்துடும்! ஒரு லெட்டர் விடாம சூர்யா கிட்டே படிக்கக் குடுத்துட்டே இரு. ஒரு மாசத்துக்கு முதல்ல இந்த ட்ரெய்லர்! சூர்யாவை ட்ரெய்லர்லேயே தூக்கிச் சாப்பிட்டுடலாம். அப்புறம் இருக்கவே இருக்கு தீபாவளி கிராண்ட் ரிலீஸ்!''

நிஜமாகவே வைத்யநாதனுக்குப் புல்லரித்தது! 'ட்ரெய்லரை' மனத்தில் ஓட்டிப் பார்த்தான்! சூர்யா அக்கடிதங்களைப் படிக்கிறாள். மிக அக்கறையோடு படிக்கிறாள். மிக சந்தோஷத்துடன் படிக்கிறாள். அந்தக் கோலாகலக் காட்சியை வைத்யநாதன் சலிக்காமல் கண்டு களிக்கிறான்...

- இரவு பூராவும் அந்த ட்ரெய்லர் வைத்யநாதனுக்குள் தொடர்ந்த காட்சியாக ஓடிக்கொண்டே இருந்தது - வண்ணப்படமாக!




## 1983. செப்டம்பர் 25. ஞாயிற்றுக்கிழமை.

''ஆரம்பிக்கலாமா பாட்டியோட லெட்டரை?'' - பெஞ்சமின் கேட்டான்.

''நான் ரெடி!'' என்றான் மனோஹர்.

''உம்... எழுதிக்கடா! 'அருமைப் பேரன் சிரஞ்சீவி வைத்யநாதனுக்கு பாட்டி ஞானாம்பாள் அநேக ஆசீர்வாதத்துடன் எழுதுகிற கடிதம்'' - பென்சிலால் எழுதுகிற பழக்கமே இல்லாததால் எழுதுவதற்கு மனோஹர் கொஞ்சம் சிரமப்பட்டான். ''அநேக ஆசீர்வாதத்துடன் எழுதுகிற கடிதம் - அடுத்து?''

வைத்யநாதன். எழுந்து விட்டான். ''நான் கொஞ்ச நேரம் அப்படியே பீச் ரோட்ல ஒரு வாக் போயிட்டு வரேன்.''

''பார்டா இவனை... நாம இவனுக்காகக் கஷ்டப்பட்டு பாட்டி வேஷம் போட்டுக்கிட்டு இருக்கோம். வெளியில போறேன்னு சொல்றான்...''

''போனா போறான் போ. பாவம், அவனுக்குக் கொஞ்சம் டென்ஷனா இருந்தாலும் இருக்கும். நீ வேணா ஒரு ரவுண்ட் போய் வா வைத்தி. கீழ ரெண்டு டீக்கு மட்டும் ஆர்டர் குடுத்துட்டுப் போ... அதுக்குள்ள லெட்டரை ஒரு வழியா முடிச்சிடுறோம்...''

உடை மாற்றிக் கொண்டு வைத்யநாதன் கீழே இறங்கினான். அவனுடைய மனநிலையில் ஏனோ ஒரு படபடப்பு ஏற்பட்டிருந்தது. ஒரு பெண்ணுடன் ஓர் இலகுவான உறவை சில கணங்களுக்கு ஏற்படுத்திக் கொள்ளக்கூட தனக்குப் பொய்யான கடிதங்கள் தேவையாயிருப்பதை நினைக்க அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. பாட்டி எழுதியது போல தனக்குப் பொய்யாக ஆபீஸ் முகவரிக்குக் கடிதங்கள் எழுதிக் கொள்வது எத்தனை பெரிய மோசடி என்ற வெறுப்பு வந்தது. அநாகரீகமான செயல் என்ற துக்கம் வந்தது.

மனம் தளர்ந்து சற்றுத் தூரம் போய் ஒரு சிறிய மரத்தின் கீழ் உட்கார்ந்தான்.

தனக்கு இசைந்த வழியில் சூர்யாவை அணுகுவதில் தவறில்லையென்ற மனத்தெளிவு சிறிது நேரத்தில் வந்தது. இது சதி இல்லை. ஒரு சாம்ராஜ்யத்தை வெற்றி காண்பதற்கான ராஜதந்திரம் என்ற வன்மம் கொண்டான். இது ஒரு சாம்ராஜ்யம்! காதல் சாம்ராஜ்யம்! அந்தக் காதல் சாம்ராஜ்யத்தின் எழில் அரசி சூர்யா! சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றி அரசியின் கழுத்தில் மாலை சூட்டவே - பாட்டியின் கடிதங்கள் என்ற இந்தப் படையெடுப்பு! படையெடுக்கும் ராஜாதான் இந்த வைத்யநாதன்! பெஞ்சமின் தலைமை அமைச்சன். மனோஹர் சேனாதிபதி... வைத்யநாதன் புத்துணர்ச்சியுடன் மரத்தடியிலிருந்து எழுந்து விட்டான். தனக்கு இதனால் பைத்தியம் பிடிக்காமல் இருந்தால் சரியென்ற புதிய தன்னம்பிக்கையுடன் தனது லாட்ஜை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

**அ**றைக்கு வைத்யநாதன் திரும்பியபோது, பெஞ்சமினும் மனோஹரும் போர்க்களத்தில் மாண்டு கிடந்தவர்கள் போல படுக்கைகளில் அலங்கோலமாகக் கிடந்தார்கள். இருவருமே வாயை



அகலத் திறந்தபடி தூங்கிக் கொண்டிருந்தார்கள். லெட்டரை எழுதி முடித்தார்களா இல்லையா என்ற சந்தேகத்தில் வைத்யநாதன் அங்கும் இங்கும் பார்த்தான். மேஜை டிராயரைத் திறந்து பார்த்தான். பென்சிலால் எழுதப்பட்ட அக்கடிதம், டிராயரில் பத்திரமாக இருந்தது. ஆர்வத்துடன் எடுத்துப் படித்தான். பாட்டியின் குரல் கொஞ்சம்கூடப் பிசகாமல் ஒலித்திருந்தது. சில வரிகள் பாட்டியின் குரலையும்விட அபாரமாக ஒலித்திருந்தன. குறிப்பாக ஒரு வரி வைத்யநாதனுக்கு மிக வசீகரமாக இருந்தது. '...ஒரு வாட்டி அந்த ஆபீசரு பொண்ணை இலஞ்சிக்குக் கூட்டிட்டு வாடா பேராண்டி; அந்தப் பொண்ணை எனக்குப் பாக்கணும் போல இருக்கு...'

இந்த வரியை வைத்யநாதன் மூன்று தடவை திரும்பத் திரும்ப வாசித்தான். சூர்யாவின் பெண் மனத்தை இந்த வரி சர்த்து ஊடுருவும் என நினைத்தான். பாட்டியின் அதே அறியாமை, அதே கிராமியம், அதே சொந்தம் - அத்தனையும் இந்த ஒரு வரியிலேயே அருமையாகப் படிந்திருப்பது தெரிந்தது. வைத்யநாதன் தூங்கிக் கொண்டிருக்கும் பெஞ்சமினை நன்றியுடன் திரும்பிப் பார்த்தான். இத்தனை நேரம் தூங்குவது போலக் கிடந்த பெஞ்சமின், வைத்யநாதனைப் பார்த்து ஸ்டைலாகக் கண்ணடித்தான்!

பலமாகச் சிரித்துக் கொண்டே பெஞ்சமின் எழுந்து உட்காரவும், மனோஹரும் எழுந்து உட்கார்ந்தான்.

''எப்படி நம்ம நடிப்பு?''

''டாப்!''

''எப்படி நம்ம பாட்டி லெட்டர்?''

''அதைவிட டாப்...!''

வைத்யநாதன் இருவருடனும் கை குலுக்கினான். பெஞ்சமின் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு சொன்னான்: ''பார் வைத்யநாதா! தீபாவளி ரிலீஸே தேவையில்லாம போகப் போகுது. ட்ரெய்லர்லேயே ஸூப்பர் ஸ்டார் தொபா தொபான்னு விழப் போறா...!''

''நாளைக்குக் காலைல மௌண்ட் ரோட் போஸ்ட் ஆபீஸ்ல போஸ்ட் பண்ணிடு. ட்யூஸ்டே மார்னிங் டெலிவரியாயிடும்...''

''அப்ப நான் கிளம்பறேண்டா வைத்தி. நம்ம டைப்பிஸ்ட் ராயப்பேட்டா ஆஸ்பிட்டலுக்கு எதிர் பஸ் ஸ்டாப்ல எனக்காக வெயிட் பண்ணிட்டு இருப்பா...''

''அப்ப ஓடு. நானும் மனோஹரும் போய் சாப்பிட்டு வந்து பேசாம படுத்துத் தூங்கறோம்...''

## 1983. செப்டம்பர் 26. திங்கட்கிழமை.

**ச**னிக்கிழமை இரவிலிருந்தே சூர்யாவிற்கு லேசாக உடம்பு சரி இல்லாமல் இருந்தது. சிறிது காய்ச்சலும் அடித்தது. நேற்று காலையே ஹாஸ்டலுக்கு வருகிற டாக்டரிடம் உடம்பைப் பரிசோதித்துக் கொண்டாள். இஞ்செக்ஷன் போட்டு, மாத்திரைகள் கொடுத்தார் டாக்டர். காய்ச்சல் விட்டுவிட்டாலும் உடல் பூராவும் மிகவும் வலியாகவும் அசதியாகவும் இருந்ததால் இன்று ஒரு நாள் ஆபீஸ் போகாமல் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்பினாள். சில தினங்களாகவே சூர்யாவுடன் தங்கியிருந்த ஆனந்தி, அதனால் ஆபீஸ"க்குத் தனியாகப் புறப்பட்டாள்.

பைகிராப்ட்ஸ் சாலையில் சிறிது தூரம் நடந்த பின்தான் தனக்குச் சிறிது தூரம் முன்னால் வைத்யநாதன் போய்க் கொண்டிருந்ததை ஆனந்தி கவனித்தாள். ஆனந்தி மெதுவாக வைத்யநாதனுக்குப் பின் தங்கியே சென்று கொண்டிருந்தாள்.

நடந்து போய்க் கொண்டிருந்த வைத்யநாதன், தனக்கு முன்னால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சாலையில் சூர்யா போய்க் கொண்டிருக்கவில்லை என்பதைக் கண்டான். பின்னால் வருகிறாளாவென்று திரும்பிப் பார்க்கலாமா, வேண்டாமா என நினைத்தபடியே சென்றவன், ஆர்வத்தை அடக்க முடியாமல் சட்டெனத் திரும்பிப் பார்த்தான். அவன் எதிர்பார்க்கவே இல்லை. ஆனந்தி வந்து கொண்டிருந்தாள்! வைத்யநாதன் திரும்பிப் பார்த்ததை ஆனந்தியும் பார்த்து விட்டாள். சலனமற்ற ஒரு நீர்த்தேக்கத்தில் பொட்டென்று ஒரு பூ விழுந்து அலைகள் பரவியது போலிருந்தது. சாலைகளில் ஓர் ஆடவனைப் பார்த்துச் சிறிய புன்னகையை மலர்த்துகிற சுபாவம் அவளில் இல்லாததில் தலை குனிந்தபடி நடந்தாள்.

இருவரும் சற்றுத் தள்ளித் தள்ளி சுரங்கப் பாதையின் படிகளில் இறங்கி பஸ் ஸ்டாப்பை அடைந்தனர்.

இத்தனை அழகுள்ள இந்தப் பெண் வாய் பேச முடியாமல் போனதை நினைத்து வருத்தப்பட்டான் வைத்யநாதன். மெலிதாகப் புன்முறுவல் செய்தான். பதிலுக்கு இணக்கமான பாவத்தைப் பார்வையில் மட்டும் காட்டிவிட்டு ஆனந்தி அமைதியாக நின்றாள்.

சில நிமிஷங்களில் பஸ் வந்தது. ஆனந்தி வேகமாகப் போய்



பஸ்ஸில் ஏறிக் கொண்டதும் பஸ் புறப்பட்டது. வைத்யநாதன் பஸ்ஸில் ஏறிக் கொள்ளாதது ஆனந்திக்கு வியப்பாக இருந்தது. அவளுடைய தயக்கமான சுபாவத்திற்குச் சிறிதுகூட சங்கடம் தர விரும்பாமல் அந்த பஸ்ஸில் ஏறிக்கொள்வதையே தவிர்த்துக் கொண்டு, அடுத்த பஸ்ஸிற்காகக் காத்திருந்த வைத்யநாதன், பளீரென ஆனந்தியின் அபிப்பிராயத்தில் வானளாவ வளர்ந்து விட்டான்! ஆனந்தியின் பெண்மைமிகு பரிமாணம் இனிமையாகத் தொடப்பட்டு விட்டது.

வைத்யநாதன் பத்து நிமிடங்கள் கழித்து அவனுடைய ஸீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டபோது ஆனந்தியின் கண்கள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லையே ஒழிய, அவளுடைய மனம் அவனை ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டே இருந்தது!

சூர்யா இல்லாத ஆபீஸ் ஆபீஸா என்று எரிச்சல்பட்டான் வைத்யநாதன். தானும் எழுந்து லீவ் போட்டு விட்டுப் போய் விடலாம் போலிருந்தது. சூர்யா எத்தனை நாளைக்கு வர மாட்டாளோ என்ற பயம் வந்தது. 'பெஞ்சமின் இன்றைக்கு அந்த பாட்டி லெட்டரை போஸ்ட் பண்ணிவிடுவான். லெட்டர் நாளைக்கு இங்கே டெலிவரியாகிவிடும். என் ராணியைக் காணோம்' என்று கிலேசமுற்றான். நாளைக்கும் அவள் வராவிட்டால் என்ன செய்வது? ஆரம்பமே சரியில்லையென்று தோன்றியது. நேற்றைக்கு இதெல்லாம் காதல் படையெடுப்பென்று தான் இறுமாப்புக் கொண்டிருந்ததெல்லாம் சிறுபிள்ளைத் தனமாகத் தோன்றியது.

டெலிபோன் மணி ஒலித்தது!

மேரி ரிஸீவரை எடுத்துப் பேசினாள்.

''ஹலோ...''

''......''

''குட்மார்னிங் மேடம்... யெஸ் மேடம். ஓகே மேடம். ஓகே...''

மேரி ரிஸீவரை வைத்தாள். கிருஷ்ணாராவ் அவசரமாகக் கேட்டார்: ''யார் மேரி, நம்ம அம்மாவா?''

''ஆமா ராவ். மேடம் நாளைக்கு வந்திடுவாங்களாம்...''

வைத்யநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தான். 'அப்பாடா! நாளைக்கு வந்து விடுவாள்! லெட்டரும் நாளை வந்து விடும்... ராணி சூர்யா நமதே...!'

தெம்புடன் வைத்யநாதன் வேலையில் கவனமாகி விட்டான்.

## 1983. செப்டம்பர் 27. செவ்வாய்க்கிழமை.

தப்பித் தவறிக்கூட வழியில் சூர்யாவைப் பார்த்து விடக்கூடாது என்ற திடீர் முன்ஜாக்கிரதையோடு வைத்யநாதன் ஒன்பதரை மணிக்கே ஆபீஸ் வந்து விட்டான். சூர்யா இன்று வந்து விடுவாள்; லெட்டரும் வந்துவிடும்...

வைத்யநாதன் பெஞ்சமின் எழுதிய அந்த ஒற்றை வரியை நினைத்துப் பார்த்தான். '...ஒரு வாட்டி அந்த ஆபீசரு பொண்ணை இலஞ்சிக்குக் கூட்டிட்டு வாடா பேராண்டி; அந்தப் பொண்ணை எனக்குப் பாக்கணும் போல இருக்கு...'

நினைக்கும்போதே அருவியின் சாரல் முகத்தில் படுவதுபோல உடல் சிலிர்த்தது! காது மடல்கள்கூட குறுகுறுத்தன. மூலஸ்தானம் திறப்பதற்குக் காத்திருக்கும் பக்தன் போல சூர்யா வரக் காத்திருந்தான்.

சரியாகப் பத்து மணிக்கு சூர்யா ஆனந்தியுடன் நுழைந்தாள். நுழையும் போதே வைத்யநாதனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். வைத்யநாதன் குளிர்ந்து போனான். அந்தச் சிரிப்பு, நெஞ்சில் பால் விடுவது போலிருந்தது. எல்லோருமே வெறுமே உட்கார்ந்த படியே குட்மார்னிங் சொல்ல, அவன் மட்டும் அதிகாலைச் சூரியன் போல ஜொலிக்கும் சூர்யாவைக் கண்டு எழுந்து நின்று வணங்கினான். 'இது என்னுடைய சூரிய நமஸ்காரம்' என மனத்திற்குள் காதலுடன் போற்றிக் கொண்டான். தன்னுடைய இந்தப் பணிவெல்லாம்கூட சூர்யாவில் தன்னுடைய இமேஜை உயர்த்தும் என அவன் எதிர்பார்த்தான். ஆனால், வைத்யநாதன் எதிர்பாராமல் ஆனந்திக்குள் அவனின் இந்தப் பணிவு அவனைப் பற்றிய இமேஜை உயர்த்திக் கொண்டிருந்தது!

'சூர்யா வந்தாயிற்று... இனி லெட்டர் வர வேண்டும். 'ஜஸ்ட் ஹாவ் எ லுக் மேடம்' என லெட்டரை அடக்கத்துடன் சூர்யாவிடம் கொடுக்க வேண்டும். அந்த வரியை சூர்யா படிக்கும்போது அவள் மனத்தை அது ஈர்க்க வேண்டும். இப்போதே எனக்கு உங்க பாட்டியைப் பார்க்க வேண்டுமென சூர்யா சொல்ல வேண்டும்...'

காதர், லெட்டர்களை எடுத்து வந்து சூர்யாவின் மேஜையில் வைத்து விட்டு வைத்யநாதனைப் பார்த்தபடியே சென்றான். 'என்ன, பயல் ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டே போகிறான்' என வைத்யநாதன் நினைக்கவும், சூர்யா இரண்டு கவர்களை வைத்யநாதனிடம் நீட்டவும் சரியாக இருந்தது.

''ஒண்ணு, பாட்டியோட லெட்டர் மாதிரி தெரியுது!'' என்றபடி சூர்யா வைத்யநாதனிடம் அவன் பெயருக்கு வந்திருந்த இரண்டு கடிதங்களைக் கொடுத்தாள்.



ஒன்று, பாட்டியின் ஒரிஜினல் லெட்டர். இன்னொன்று போலி லெட்டர்! கொஞ்சம் அதிர்ச்சி. கொஞ்சம் உற்சாகம்.

ஒரிஜினல் லெட்டரை உண்மையாகவே படித்தான். போலி லெட்டரைப் படிப்பது போல பாவனை செய்தான்.

''ரெண்டுமே பாட்டிதான் எழுதியிருக்காங்க மேடம்! பாருங்க...''

சூர்யா விகற்பமில்லாமல் வாங்கிப் பார்த்தாள்.

''ஒண்ணு, டீச்சரம்மா எழுதியிருக்காங்க. இன்னொண்ணு அவங்களோட பொண்ணு...''

''தமாஷ்தான்... அது சரி; எதுக்கு ஒரே சமயத்ல டூ லெட்டர்ஸ்?''

''வேற வேற டேட்ல எழுதியிருப்பாங்க! என்னமோ ஒரே டேட்ல டெலிவரியாயிருக்கு...!''

''பாவம், பாட்டிக்குப் பொழுதே போகலை போல...''

சூர்யா வேகமாக இரண்டு கடிதங்களையும் படித்தாள். 'ஒரு வாட்டி அந்த ஆபீசரு பொண்ணை இலஞ்சிக்குக் கூட்டிட்டு வாடா பேராண்டி' என்ற வரி அவளைப் பலமாகத் தாக்கிவிட்டது! நெகிழ்ந்து போன தன் முகபாவத்தைச் சட்டென மாற்றிக் கொண்டாள். எதுவும் பதில் சொல்லாமல் கடிதங்களை மடித்து வைத்யநாதனிடம் கொடுத்து விட்டு, மௌனமாக வேலையில் ஆழ்ந்து விட்டாள். அன்று பூராவுமே சூர்யா வைத்யநாதனை லட்சியம் செய்யாத மாதிரியே நடந்து கொண்டாள்.

வைத்யநாதனுக்கு சூர்யாவின் இந்தத் திடீர் பாராமுகம் விளங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது. அவளுடைய தோற்றத்தில் இதுவரை பார்த்திராத இறுக்கம் தெரிந்தது. அந்த ஒற்றை வரி சூர்யாவிற்கு அத்து மீறியதாகத் தோன்றியிருக்குமோவென்று சஞ்சலப் பட்டான். அவனால் எதையும் நிச்சயமாகத் தீர்மானிக்க முடியவில்லை. ஒரு வேளை ஒரே சமயத்தில் இரண்டு கடிதங்கள் வந்ததால் மனத்தில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டு விட்டதோ என்றெல்லாம் நினைத்துக் குழம்பினான்.

இரவில் அறையில் பெஞ்சமின் எத்தனையோ பார்வைகளில் வியூகங்களை மாற்றி மாற்றி விளக்கி வைத்யநாதனைத் திடப்படுத்தினான். ஆனால், வைத்யநாதனின் மனசுதான் திரவம் போல் ஆடி அலைக்கழிந்து கொண்டிருந்தது. பற்றிக் கொள்ளவே முடியாமல் நீர்த்துப் போயிருந்தது. வைத்யநாதன் ஏதும் சொல்லாமல் முகத்தைத் துண்டால் மூடியபடி படுத்திருந்தான்.

''இப்படியே மரக்கட்டை மாதிரி கெடக்கத்தாண்டா லாயக்கு நீ!

ஒரு பொம்பளை அப்படித்தான்டா நனைஞ்ச பஞ்சு மாதிரி ஒட்டி ஒடுங்கிப் போயிடுவா! அதான் பொம்பளையோட டெண்டர் கேரக்டர்! உடனே ஆஹா ஊஹு ன்னு சந்தோஷத்தை வெளியில கொட்டிடமாட்டா எவளும்! 'வைத்தி, உடனே என் கழுத்தில தாலியைக் கட்டி உங்க ஊருக்கு அழைச்சிட்டுப் போயிடுங்க; பாட்டியைப் பாக்க எனக்கு ஆசையா இருக்கு'ன்னு சொல்லி தொப்னு உன்மேல விழுந்துடமாட்டா! பைசா நகரத்து கோபுரம் மாதிரி கொஞ்சம் கொஞ்சமாத்தான்டா விழுவா எவளும்... அதுவும் இவ பெரிய பூனம் தில்லான்! ப்யூட்டி க்வீன்! ஸுப்பர் ஸ்டார்! உன்னோட ஆபீஸர் வேற. அவ்வளவு ஈஸியா விழுந்துடுவாளோ? ஆனா, நிச்சயம் விழ ஆரம்பிச்சிட்டா! அது மட்டும் நிச்சயம். விழ ஆரம்பிச்சிட்ட ரியாக்ஷன்தான் சட்டுனு அவ விறைப்பா ஆயிட்டதோட ரீஸன்! புரியுதா? எந்த ஆம்பளையைப் பாத்ததும் ஒருத்தி விறைப்பா போனாளோ அவன்கிட்ட கொஞ்ச நாள்ல அவ உடைஞ்சி விழப்போறா! அதான் மீனிங். அதான் உண்மை... இதுக்கு மேல எவனாலேயும் உனக்குச் சொல்ல முடியாது போ...''

பெஞ்சமின் அயர்வுடன் கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டான். மனோஹரைப் பார்த்து எரிச்சலுடன் சொன்னான்: ''மனோஹர்! அவன் மூஞ்சியில இருக்கற அந்த டவலை எடு. அவனுக்கு உயிர் இருக்கா போயிடுத்தான்னு பாக்கலாம்!''

மனோஹர் மெதுவாக டவலை விலக்கினான். அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. வைத்யநாதன் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்!

பெஞ்சமின் தலையில் அடித்துக் கொண்டான்: ''சரியான தத்திடா இவன். எக்கச்சக்கமா பணம் இருக்கு - அந்த பர்சனாலிட்டி ஜம்னு பாடி பூரா இருக்கு. வேற ஒரு இழவும் கிடையாது. பார், ரயில்வே ப்ளாட்பாரத்ல தூங்கற மாதிரி தூங்கறான்... இவன்கிட்ட போய் அந்த மஹாராணி விழப் போறா. என்ன அநியாயம் பார்! இவன் ஏதாவது அவளை அருமையான இங்லீஷ் படத்துக்கு அழைச்சிட்டுப் போவானா? இல்லே, தாஜ்கோரமண்டலுக்குத்தான் அவளைக் கூட்டிட்டுப் போயிடப் போறானா? சும்மா அவளைக் குத்தாலத்து மலையில கொண்டு போய் விட்டுடுவான்! வேற எதுவும் தெரியாது இந்தப் பயலுக்கு... அவ சும்மா ஃபைவ் ஸ்டார் வுமன் மாதிரி இருக்கா! அவளைப் பாத்தாலே தெரியுது - அவ பாம்பே அல்வா! அங்கே வேற எவனாவது கரக்பூர்ல எம்டெக் அது இதுன்னு படிச்சிட்டு ஸ்டேட்ஸ்ல க்ரீன்கார்ட் ஹோல்டரா இருப்பான். திடும்னு ஒருநாள் வந்து குதிச்சு ஓவர் நைட்ல சூர்யாவைத்



தூக்கிட்டுப் பறந்திடுவான். இவன் பாட்டிகிட்ட போய் விரலைச்சப்பிண்டு அழுதுண்டு நிப்பான்...!''

மனோஹருக்கு பெஞ்சமின் இப்படியெல்லாம் பேசுவது பாவமாக இருந்தது.

''பாவம், அவன் தூங்கறப்ப ஏன்டா இப்படியெல்லாம் பேசற?''

''பின்ன என்ன மனோஹரா... நான் எவ்வளவு சீரியஸா பாய்ண்ட் பாய்ண்ட்டா சொல்லிட்டு இருக்கேன்... படுபாவி, மூஞ்சியில துணியைப் போட்டுட்டுத் தூங்கறானே...''

''சரி விடு. ஏதோ நம்மால முடிஞ்ச ஹெல்ப்பைப் பண்ணுவோம். அப்புறம் அவன் பாடு; நமக்கென்ன..?''

''எனக்குப் புதுசா ஒரு ஐடியா வந்திருக்குடா!''

''என்ன ஐடியா?''

''கதை ஒண்ணு எழுதி பாக்யராஜ் கிட்டே குடுக்கப் போறேன்!''

''என்னடாது திடீர்னு?''

''சீரியஸாத்தான் சொல்றேன்.''

''கொஞ்சம் சொல்லேன், கேக்கலாம்.''

''நம்ம வைத்தி கதைதான்! வேறென்ன கதை...?''

''அதைத்தான் சொல்லேன்...''

''அதான் - நம்ம வைத்தி நாட்டுப் புறத்துப் பெரிய நிலச்சுவான்தார் வீட்ல பிறந்து வளர்ந்து நல்லா படிச்சு, வேலை கிடைச்சு மெட்ராஸ் வர்றான்! ஒரு பிரமாதமான ப்யூட்டி க்வீன் அவனோட ஆபீஸரா வரா. ரொம்ப டக்கரா இருக்கா. நம்ம வைத்தி அவளைப் பாத்ததுமே ஆடிப் போயிடறான்! 'ஐ லவ் யு ஸோ மச்'னு சொல்லத் துடிக்கிறான். ஆனா, சொல்ல முடியலை. தவக்களை மாதிரி ரெண்டு பசங்க அவனுக்குக் கிடைக்கறானுங்க... அவனுங்க சில ஐடியால்லாம் தமாஷா சொல்லித் தரானுங்க...''

''இன் பாக்யராஜ் ஸ்டைல்?''

''இப்போதைக்குக் கதை இங்கே நிக்குது!''

''மீதிக் கதை என்ன ஆகும்னு நெனைக்கிறே?''

''இப்பத்தானே பாட்டிகிட்டேயிருந்து லெட்டர் வர மாதிரி ஆரம்பிச்சிருக்கேன். அது இன்னும் ஒரு ரீல் அல்லது ரெண்டு ரீல் ஓடும்... அதுக்கு அப்புறம்தான் இருக்கு பெரிய பெரிய ரீல்!''

''கொஞ்சம் சொல்லேன் பாக்கலாம்...''

''ஊஹூம்... இவ்வளவுதான் ரஷ்! போட்டுப் பாத்தாச்சு அதை... அடுத்த ஷெட்யுல் முடிஞ்சப்புறம்தான் இனிமே ரஷ்! அதுவரைக்கும்

தூங்கு பேசாமே...''

''தூங்கறேண்டா. இப்ப என்ன அவசரம் தூக்கத்துக்கு? ஒரு கற்பனை பண்ணித்தான் சொல்லேன், வைத்தியோட இந்த அப்நார்மல் லவ் ஸ்டோரி எப்படி முடியும்னு?''

''முடிவு என்னடா பெரிய முடிவு? ரெண்ட்ல ஒண்ணுதான். ஒண்ணு, சூர்யாவுக்கும் இவனுக்கும் கல்யாணம் நடக்கும். இல்லேன்னா சூர்யாவுக்கும் ஒரு எம்டெக் க்ரீன்கார்ட் ஹோல்டருக்கும் கல்யாணம் நடக்கும்! இந்த ரெண்ட்ல ஒண்ணுதான் நடக்கப் போவுது... ஆனா, அதுக்குள்ள என்னென்னமோ டக்கரா நடக்கப்போகுது!''




## 1983. செப்டம்பர் 29. வியாழக்கிழமை.

**எ**ல்லோரும் சிறிதும் கவனம் பிசகாமல் அவரவர் வேலைகளில் மூழ்கிப்போய் இருந்தார்கள். ஆனந்தி மட்டும் அடிக்கடி வேலையில் ஆழ்ந்திருந்த வைத்யநாதனை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தாள். அவனுடைய செழிப்பான, உரமான உடல் திடீரென அவளுக்கு மிகவும் வசீகரமாக இருந்தது. இத்தனை விரிந்த மார்புகள் பரவிய ஒரு புருஷனிடம் தன்னை ஈந்து விடுகிற பெண்மை அவளுக்குள் சோகம் கொண்டிருந்தது.

மணி பன்னிரண்டு அடித்தது. ஆபீஸின் சூழல் சிறிது இலகுவாகியது.

சூர்யா களைப்புடன் சற்றுத் தளர்ந்து உட்கார்ந்தாள். அசந்தர்ப்பமாக வைத்யநாதன் சூர்யாவை நிமிர்ந்து பார்த்துவிட்டுக் குனிந்து கொண்டான்.

அப்போது அவளுடைய மேஜைமேல் இருந்த டெலிபோன் ஒலித்தது.

சூர்யா ரிஸீவரை எடுத்து, ''ஹலோ!'' என்றாள்.

''.....''

''யா... மிஸ்டர் வைத்யநான் இஸ் ஹியர்!''

''.....''

''ட்ரங்க்கால் ஃப்ரம் குற்றாலம்...? ஜஸ்ட் ஏ மினிட்... ஜஸ்ட் ஏ மினிட்...''

விருட்டென ரிஸீவரை வைத்யநாதனிடம் கொடுத்தாள்.



ட்ரங்க்கால் என்றதும் பயந்து போய் கைகள் நடுங்க, வைத்யநாதன் ரிஸீவரை வாங்கினான்.

''ஹலோ...!'' - உரக்கப் பேசினான்.

''ஹலோ, வைத்தியா?'' - மறுமுனையில் செல்வரத்னம் பேசினார்.

''ஆமாப்பா... வைத்திதான் பேசறேன்...''

''வைத்தி! நம்ம பாட்டி இன்னிக்கி காலையில செத்துப் போயிட்டாங்கய்யா...''

குப்பென்று வைத்யநாதனுக்கு வியர்த்து விட்டது. பேச்சு இலகுவாக வரவில்லை.

''எப்படிப்பா... என்னப்பா ஆச்சு... பாட்டி எப்படி இறந்தாங்க?'' - அழுகை தளும்பும் குரலுடன் வைத்யநாதன் கேட்டதும், எல்லோருமே இயக்கமற்று அவனையே பார்த்தார்கள். ஆனந்தியும் சூர்யாவும் தயக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''காலையில கிணத்தடியில வழுக்கி விழுந்தாங்க. பக்கத்ல இருக்கே சிமிண்ட்டுத் தொட்டி... அதுல குப்புறச்சாஞ்சிருக்காங்க. தொட்டியோட முனை பலமா தலைல இடிச்சி - அந்த நிமிஷத்லேயே உசிர் போயிடுச்சி...''

செல்வரத்னம் சொல்லச் சொல்ல, வைத்யநாதனின் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது. கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே இருந்தான்.

''நீ வரவேணாம்ய்யா... எதுக்கு வீணா... தம்பிங்க தின்னவேலியில இருந்து வந்தாச்சி. முக்கூடல்ல இருந்தும் எல்லாரும் வந்துட்டாக. களக்காட்ல இருந்து அன்னபூரணியும், அவ மாப்பிள்ளையும்தான் வரணும். அவுகளுக்கும் போன் போட்டு சொல்லியாச்சி. சாயந்தரம் நாலு மணிக்கு அடக்கம் பண்ணிடறோம். நீ தைரியமா இரு ராஜா. உம்... ஏதோ சீக்கு சீக்குன்னு இந்த வயசில கஷ்டப்படாமே போய்ச் சேந்தாங்களே... அதுவே பெரிய விஷயம். அப்ப வச்சிரட்டுமாய்யா?''

''நீங்களும் உங்க உடம்பைப் பாத்துக்குங்கப்பா...''

''அதெல்லாம் நான் பாத்துக்கறேன், நீ கவலைப்படாம இரு... ரெண்டு நாள் கழிச்சி விவரமா தபால் போடறேன். வச்சிரட்டுமா?''

''சரிப்பா...!''

ரிஸீவரை சூர்யாவிடம் தந்துவிட்டு வைத்யநாதன் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டான். எல்லோரும் அவனையே பார்த்துக்

கொண்டிருந்தார்கள்.

''என்ன வைத்தி ஸார்... பாட்டியா இறந்துட்டாங்க?'' - கிருஷ்ணாராவ் கேட்டபடி வைத்யநாதனை நோக்கி எழுந்து வந்தார்.

''மிஸ்டர் ராவ், ப்ளீஸ் கோ டு யுவர் ஸீட்! யாரும் அவரை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் இப்ப...'' - சூர்யா கட்டளையிட்டாள்.

வைத்யநாதன் தலையில் கை வைத்தபடி, கண்களை மூடியபடி உட்கார்ந்திருந்தான். சில நிமிஷங்கள் கழித்து சூர்யா மெதுவாகக் கூப்பிட்டாள்.

''வைத்யநாதன், நீங்க ஊருக்கு இம்மீடியட்டா கிளம்பறதுக்கு டிக்கெட் எதுவும் ஏற்பாடு பண்ணட்டுமா?''

''தாங்க்யூ மேடம்! ஊருக்கு நான் போகலை.''

''பாட்டி இறந்ததுக்குப் போக வேணாமா?''

''அப்பா வர-வேணாம்னு சொல்லிட்டாங்க...''

''போகணும்னு உங்களுக்குத் தோணலியா?''

வைத்யநாதன் பதில் சொல்லவில்லை. ஒரு குற்ற உணர்வுடன் அவனுடைய மனம் கலங்கியது. ஏதோ பாட்டியைத் தான்தான் கொன்றுவிட்டாற் போலிருந்தது அவனுக்கு. ஆனந்தி, சூர்யாவையும் வைத்யநாதனையும் மாறி மாறிப் பார்த்தாள். சூர்யா மறுபடியும் சொன்னாள்: ''பரவாயில்லை. இப்ப நீங்க கிளம்பி உங்களோட ரூமுக்குப் போயிடலாம். போய் நாளைக்கு மார்னிங் வாங்க... இதோ... லஞ்ச் அவர்தான் வரப் போகுதே...''

வைத்யநாதன் பேனாவை மூடினான். கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டான். பாட்டியைப் போல பொய்யான லெட்டர் எழுதியதை நினைக்க நினைக்கத்தான் அவனுக்குக் கண் கலங்கியது.

சிரமப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டு எழுந்து நின்றான். ''நாளைக்கு வந்துடறேன் மேடம்...'' என்றான்.

''காதர்! ஒரு ஆட்டோ பாத்து வைத்யநாதன் சாரை அனுப்பிட்டு வா.''

''சரிங்கம்மா... வாங்க சார்!''

காதர் அழைத்து வந்த ஆட்டோவில் வைத்யநாதன் ஏறிக்கொள்ள அது திருவல்லிக்கேணி நோக்கி வேகமாக ஓடத் துவங்கியது...

### 1983. அக்டோபர் 2. ஞாயிற்றுக்கிழமை.

பாட்டி இறந்துவிட்ட அதிர்ச்சியிலிருந்தும் வருத்தத்திலிருந்தும் வைத்யநாதன் முழுமையாக மீளாமல் இருந்தான். வைத்யநாதனின்



துக்கத்தில் பங்கு கொண்டதற்கு அடையாளமாக பெஞ்சமினும் மனோஹரும் அன்று ஒரு நாள் கறுப்புச் சட்டை அணிவதாக முடிவு செய்து, கறுப்புச் சட்டைகளை அணிந்து கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து வைத்யநாதன் எரிந்து விழுந்தான்: ''ஏண்டா, எங்க பாட்டி செத்தது உங்க ரெண்டு பேருக்கும் கிண்டலா இருக்கா?''

''ச்சீ...! ஏண்டா அந்த மாதிரியெல்லாம் தப்பா அர்த்தம் பண்ணிக்கறே...? நெஜமாவே நானும் இவனும் ஃபீல் பண்ணித்தான் பிளாக் ஷர்ட் போட்டுக் கிட்டோம்... தப்புன்னா சொல்லு; கழட்டி எறிஞ்சிடுறோம்...''

வைத்தியநாதன் பேசாமல் இருந்தான்.

''பெஞ்சமின், பேசாம கழட்டிடு. வேணாம். நாம நல்ல மனசோ தான் போடறோம். அவன் தப்பா நினைக்கிறான்.''

இருவரும் கறுப்புச் சட்டைகளைக் கழட்டிப் போட்டு விட்டார்கள்.

''சே! இது கொஞ்சம்கூட எதிர் பாராத விஷயம். ஊர்ல இருந்து புறப்பட்டு வர்றப்பதான் பாட்டிகிட்டே நான் சொல்லிட்டு வந்தேன், நீங்க நூறு வருஷம் இருப்பீங்கன்னு... இந்த மாதிரி ஆயிடுச்சி... அதை நெனைச்சாத்தான் பெஞ்சமின் ரொம்ப சங்கடமா இருக்கு. திடீர்னு மனசுல பெரிய எம்ப்ட்டினெஸ் வந்திருச்சி. வீட்டுக்குப் போனா பாட்டின்னு ஒருத்தங்க இருந்தாங்க, இப்ப-அவங்களும் இல்லை... அம்மா இல்லை. சிஸ்டர்ஸ் இல்லை. நான் இப்போ ரொம்ப தனிமைலே விடப்பட்டுட்டதா உணர்றேன்... உடனடியா எனக்கு சூர்யா கெடைச்சாத்தான்... இல்லேன்னா தொலைஞ்சேன் நான். ஒடைஞ்சி சுக்கல் சுக்கலாயிடுவேன்...''

வைத்யநாதனின் முகபாவமே புதிதாக இருந்தது. ''ஐ நீட் சூர்யா. எல்லா உறவுமே எனக்கு அவகிட்டேதான் கிடைக்கணும். ஒரு பொம்பளைன்னு நெனைச்சி எல்லாப் பொம்பளையும் என்னால மனசாலகூட டச் பண்ண முடியாது. உண்மைலே சூர்யாவைத் தவிர மத்த எல்லா பொம்பளைங்களையும் நான் வெறுக்கறேன்...''

- வைத்யநாதன் கண்களில் காதலும் பெருமிதமும் மின்னின. ஒரு குரூர சக்தி அவனுடைய உடல் முழுவதும் வியாபித்து வியர்க்கச் செய்தது. பெஞ்சமினும் மனோஹரும் ஒருவித பயத்துடன் வைத்யநாதனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''பெஞ்சமின், நான் எதுவும் ரொம்ப அப்நார்மலா பேசிட்டேனா? சமயத்ல எனக்கே பயமாயிருக்கு - நான் மட்டும் என்னவோ போல இருக்கேனோன்னு... அப்படியெல்லாம் இல்லையே?'' - பயந்து

பயந்து கேட்டான்.

''ஸாரி வைத்தி! கொஞ்சம் அப்நார்மலாத்தான் நீ இருக்கே... உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா ஏதாவது நல்ல ஸைக்கியாட்ரிஸ்ட்ட போலாம்... ஜஸ்ட் ஃபார் கன்ஸல்ட்டேஷன்...!''

வைத்யநாதன் சிறிது நேரம் கழித்துச் சொன்னான்: ''உன்கிட்ட இதுவரைக்கும் நான் சொன்னதில்லை. மதுரையில நாம படிச்சிட்டு இருந்தப்பவே ஒரு ஸைக்கியாட்ரிஸ்ட்டை நான் கன்ஸல்ட் பண்ணியிருக்கேன். பட், அந்த ஸைக்கியாட்ரிஸ்ட் என்னென்னவோ உளர்றான்டா! கிறுக்குப் பிடிச்சா எனக்கு அவனாலதான் கிறுக்குப் பிடிக்கணும்... எழுந்து ஓடியே வந்துட்டேன்... என்னவோ எனக்கு அவனுங்கல்லாம் சரியில்லைன்னு படுது! நாம என்ன சொன்னாலும் ஆயிரத்தெட்டு அர்த்தம் சொல்றான் ஒவ்வொண்ணுக்கும். வைத்யநாதன்ங்கற தனிப்பட்ட மனிதனைப் பாக்கவேமாட்டேங்கறான்...''

''அப்ப விடு. ஆனா, ஒனக்கே தெரியுது இல்லியா - நீ கொஞ்சம் அப்நார்மலா அப்பப்போ இருக்கேன்னு?''

''க்ளியரா தெரியுது!''

''கவலையை விடு. ஒண்ணும் ஆகாது. அது ஒனக்குத் தெரியாம இருந்தாத்தான் டேஞ்சர்... ஆனாலும் சூர்யா விஷயத்ல இவ்வளவு ஹிஸ்ட்டீரிக்கலா நீ இருப்பேன்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை... அதான் யோசிக்கிறேன்.''

''அதுக்கு நான் என்னடா பண்ணுவேன் பெஞ்சமின்! ஒரு சமயம் பாத்தா கோழிக்குஞ்சு மாதிரி ஓடி அவளோட இறக்கைக்குள்ள பதுங்கிக்கணும் போல இருக்கு. இன்னொரு சமயம் பாத்தா சேவல் மாதிரி அவளை ஓட ஓடத் துரத்தணும் போலவும் இருக்கு! பயங்கரமா இப்படி ஸ்பிலிட் ஆயிடறேன்... என்ன செய்றது சொல்லு?''

பெஞ்சமின் வைத்யநாதனை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தான். ''பயப்படாதே வைத்தி. ஸ்பிலிட் பர்சனாலிட்டி எல்லாருக்குள்ளேயும் உண்டு. அதனால பயத்தெல்லாம் தூக்கிப் போடு. ராஸ்கல்... என்ன ஆயிடுதுன்னு பாக்கலாம். மிஞ்சி மிஞ்சி என்ன நடந்துடப் போகுது ஹ்யூமன் லைஃப்ல? பாத்திடலாமே அதையும்... அடுத்து, சூர்யா விஷயத்ல நீ என்ன பண்ணப் போறே? எப்படி அவளை அப்ரோச் பண்ணப் போறே...? அதைச் சொல்லு...''

''எனக்கொரு அருமையான கேர்ள் ஃப்ரெண்ட் இருக்ற மாதிரி ஆக்ட் பண்ணப் போறேன்...!''



''புரிஞ்சி போச்சுடா வைத்தி... என்னோட மைண்ட்லேயும் அப்படித்தான் ஐடியா பண்ணி ஒரு ட்ராமா செட் பண்ணி வச்சிருந்தேன். சரி... இப்ப நீ சொல்லு...''

''லலிதான்னு எனக்கொரு ஃப்ரெண்ட் இருக்கான்னு வச்சிப்போம்.''

''அழகா இருப்பாளா?''

''சுமாரா இருப்பா!''

''கற்பனை பண்றதுதான் பண்றே, பெரிய அழகியா கற்பனை பண்ணேன்'' என்றான் மனோஹர்.

''பெரிய அழகியாத்தான் நெஜமாவே சூப்பர் டார்லிங் சூர்யா இருக்காளே!''

''ரைட் ரைட். நீ மேல போ!''

''அந்த லலிதா வந்து பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணு...''

''நான் நெனைச்சேன்!''

''என்மேல ரொம்ப உயிர் லலிதாவுக்கு!''

''இருக்காதா பின்னே?''

''ஒரு நாள்கூட என்னைப் பாக்காம இருக்கமாட்டா!''

''சே!''

''காலைல எழுந்ததும் என்னைத்தான் நினைப்பா!''

''ஐயோ...! யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்யம்!''

''நைட்ல படுக்கும் போதும் என்னைதான் கடைசியா நினைப்பா...''

''அவளுக்கு வீடு எங்கே வைத்யநாதா?''

''அசோக்நகர்ல வச்சுக்கலாமா?''

''பெசண்ட்நகர்ல வச்சுக்கலாம்...''

''ரைட். லலிதாவுக்கு வீடு பெசண்ட் நகர்ல!''

''அவ வீட்ல விடியோ இருக்கா?''

''ரெண்டு இருக்கு!''

''அது போதும். மேல?''

''டெய்லி எனக்கு லெட்டர் எழுதறா.''

''ஆபீஸ் அட்ரஸ்க்கு?''

''ஆமா! என்னை லவ் பண்றதா ஆசை ஆசையா எழுதறா!''

''ஆனா, நீ அவளை லவ் பண்ணமாட்டேங்கறே...!''

''ஆமா! ஆனா, அவ விடமாட்டேங்கறா!''

''பாவம்டா!''

''அழுது அழுது லெட்டர் எழுதறா!''

''பரிதாபம்டா...!''

''அடம் பிடிக்கிறா, வைத்யநாதனைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு! ஆனா, அவன் மாட்டேங்கறான்...''

''ஏண்டா அந்தப் பய மாட்டேங்கறான்?''

''அவன்தான் ஒரு ஸூப்பர் ஸ்டார்கிட்ட மனசைப் பறி குடுத்துட்டானே!''

பெஞ்சமின் ஆனந்தத்தில் தாவி எழுந்து வைத்யநாதனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''வைத்தி, நெஜமாவே சொல்றேன் - இது ரொம்ப லாங் ஷாட்தான்! பட், வெரி பவர்ஃபுல் ஷாட்!''

''ஏன் அவளைக் . கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்றான்ங்கற காரணத்தை லலிதாகிட்ட ஒரு நாள் சொல்றான் அவன்...''

''மனசே உடைஞ்சி போயிடுமே அவளுக்கு?''

''சுக்கல் சுக்கலா உடைஞ்சு போயிடுது மனசு அவளுக்கு. 'உன்னோட மனசுல இருக்ற அவ யார்?'னு கேக்கறா...''

''ஓஹோ... அப்படிக் கேக்கறாளா?''

''ஆமா! ஆனா, அவன் வாயைத் திறந்து சொல்லவே மாட்டேங்கறான். யார்னு பேரைக்கூடச் சொல்ல மாட்டேங்கிறான்...''

''கல் நெஞ்சக்காரன்டா அவன்...''

''அதையேதான் அவளும் சொல்றா!''

''அப்பறம் என்ன பண்றா?''

''அவன் இல்லாமே தனக்கு வாழ்க்கையே வேணாம்னு முடிவு பண்ணிடறா...''

''முடிவு பண்ணி தற்கொலை பண்ணிடறளா?''

''-'இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்போது எலியட்ஸ் கடற்கரையின் ஓரத்தில் அலைகள் என்னுடைய சடலத்தை முத்தமிட்டுக் கொண்டிருக்கும். உனக்கும், உன் மனம் கவர்ந்த ராணிக்கும் என்னுடைய மனம் கனிந்த வாழ்த்துக்கள்' - அப்படின்னு ஜோரா கோடு போட்டு எழுதி போஸ்ட் பண்ணிட்டு கடல்ல விழுந்து செத்துடறா...''

''உடனே அவன் என்ன பண்றான்?''



''லெட்டரைத் தூக்கிட்டு எலியட்ஸ் பீச் வரைக்கும் ஒரு ஓட்டம் ஓடிட்டு திரும்பி வரான்...!''

''திரும்பி வந்து...?''

''உக்காந்திருக்கான் கம்னு. சூர்யாதான் எல்லா லெட்டரையும் படிச்சிருக்காளே, திட்றா அவனை! 'அப்படி யாரு உன்னோட மனசில இருக்ற அந்த ராணி?'ன்னு கோவமாவே கேக்கறா!''

''சொல்லிடறானா?''

''செவன்ட்டி எம்.எம். திரை அளவுக்கு உடனே மனசைத் திறந்து காட்டிடுறானா?''

''யெஸ்!''

''உடனே சூர்யா அவனை ஏத்துப்பாளாக்கும்?''

''ஏத்துக்காட்டி வைத்யநாதன் அவ காலைப் பிடிச்சாவது அழுவான்!''

''ரைட்! அப்ப அந்த லலிதாவின் ஆத்மா சாந்தி அடையட்டும்...!''

''வைத்தி, சூர்யாவைக் கூட்டிட்டு குற்றாலத்துக்குப் போயிடட்டும்...''

''இதாண்டா ப்ளான்!''

''கேக்கறதுக்குக் கதை மாதிரி நல்லாத் தாண்டா இருக்கு. காரியத்ல நடக்கணுமே! இப்படித்தான் ஆரம்பிச்சோம் பாட்டி கதையை. ஒரே அத்தியாயத்துலே கதை க்ளோஸ்! இப்ப புதுக்கதை ஆரம்பிக்கப் போறோம்... இது எத்தனை சேப்டர் வருமோ?''

திருநீர்மலைக் கோயிலில் ஸ்ரீனிவாசப் பெருமாளைச் சேவித்துவிட்டு, மனத்திருப்தியுடன் வைத்யநாதன் முன்னால் இருந்த மண்டபத்தில் நின்றபடி வெகு தூரம் வரைக்கும் தெரிந்த பசுமையான வயல்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை கோயில் அவனுடைய ஞாபகத்தில் எழும்பியது. கண்களை மூடியபடி அந்தப் பெருமாளைப் பிரார்த்தித்தான். சிறு வயதில் அம்மாவுடன் திருவேங்கடநாதபுரம் கோயிலுக்குப் போய் ஆற்றில் குளித்து, திருவேங்கடநாதரைத் தரிசித்த பின் ஓர் ஆலமர நிழலில் புளியோதரையும் தயிர் சோறும் அம்மா உருட்டி உருட்டிக் கையில் போட்ட சம்பவங்கள் மனத்தின் விளிம்பிலிருந்து ஒவ்வொன்றாகச் சொட்டத்துவங்கின. அம்மா இருந்த உலகத்தையும் அம்மா இல்லாத உலகத்தையும் துயரத்துடன் மனத்தில் ஒப்பிட்டான். அம்மா

இல்லாத உலகத்தை நிரப்ப வேண்டியவள் சூர்யாதான் என நம்பிக் கண்களைத் திறந்தபோது, தன்னுடைய அம்மாவோடு படிகளில் ஏறி வந்து கொண்டிருந்த ஆனந்தியைப் பார்த்தான். பணிவுடன் அவளைக் கண்டு தயங்கி நின்றான். ஆனந்தியின் தாயை மரியாதையுடன் வணங்கினான்.

''நான் உங்க டாட்டரோட ஆபீஸில் வேலை பாக்கறேன்!'' என அறிமுகம் செய்து கொண்டான்.

''ஆனந்தி சொல்லியிருக்கா. உங்க பாட்டிகூடக் கொஞ்ச நாள் முன்னாடி இறந்துட்டாளாமே?'' - ஆனந்தியின் அம்மா கேட்டாள்.

''ஆமாங்க...''

வைத்யநாதன் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு கீழே இறங்கினான். சில படிகளில் இறங்கித் திரும்பிப் பார்த்தான். எதிர்பாராமல் ஆனந்தியும் திரும்பிப் பார்த்தாள்! அவளுடைய அழகிய முகத்தில் வெட்கமும் மகிழ்ச்சியும் பரவின. அன்புடன் ஆனந்தியைப் பார்த்துச் சிரித்துவிட்டு, வைத்யநாதன் வேகமாகப் படிகளில் இறங்க ஆரம்பித்தான். வாய் பேச முடியாத ஓர் இளம் பெண்ணே தைரியமாக வாழ்க்கையை எதிர்நோக்கும் சுபாவம் கொண்டிருக்கும் போது, தான் மட்டும் ஏன் மிக மோசமாக இடையிடையே மனக் கலவரம் அடைய வேண்டும் என்ற வெட்க உணர்வு கொண்டான் வைத்யநாதன்.




**1983. அக்டோபர் 10. திங்கட்கிழமை.**

**'அன்பே உருவான நண்பர் வைத்யநாதன் அவர்களுக்கு, தோழி லலிதா வரையும் மடல். தங்கள் பாட்டி காலமான செய்தி கேட்டுத் துயருற்றேன். பாட்டியின் மரணம் தங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று கருதுகிறேன். பாட்டியை இழந்து வருந்தும் உங்களுக்கு என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**என்றும் உங்கள் தோழி,**

**லலிதா.'**

''போதுமாடா?''

''இது போதும்.''

''போகப் போகப் பார். வேலையைக் காட்றேன். அப்படியே கன்ல ஒத்திக்கலாம் போல இருக்கும் - ஒவ்வோர் லெட்டரும்...!''



''சரி... லெட்டரை எங்கேருந்து போஸ்ட் பண்ண? இதுக்காக பெசன்ட் நகருக்கா போய் போஸ்ட் பண்ண முடியும் ஒவ்வொரு தடவையும்?''

''ஐயையோ... அது யாரால முடியும்? டேய் மனோஹர்... கதை போஸ்ட் பண்ண வேண்டியது உன்னோட வேலையா வச்சிக்க. நீதான் ஆபீஸ் வேலையா டெய்லி மெட்ராஸ் பூரா சுத்திவர்றவன். ஏதாவது ஒரு ஏரியாவில இருந்து போஸ்ட் பண்ணிடு, சரியா?''

''ஓயெஸ்!''

''போதுமா வைத்யநாதா?''

மனோஹர் ஒருமுறை தலையை பலமாகச் சிலிர்த்துக் கொண்டான். ''ஒரே த்ரில்லிங்கா இருக்கு பெஞ்சமின்! இன்னும் பத்து நாள்ல வெஸ்ட் இண்டீஸோட முதல் டெஸ்ட் கான்பூர்ல ஆரம்பிக்கப் போறான்! இங்கே என்னடான்னா லலிதாவோட லெட்டர்ஸ் பெசன்ட் நகர்ல ஆரம்பிக்கப் போகுது... பார்; கொல்லப் போறான் லாயிட்!''

''இங்க கொல்லப் போறா சூர்யா!''

''பாத்துரலாம்... யாரை யார் கொல்லப் போறதுன்னு!'' - ஆவேசத்துடன் வைத்யநாதன் சவால் விட்டான்.

''இப்படி சவால் விடறவன் தைரிய மிருந்தா நேருக்கு நேரா மோதணும்!''

- சொல்லிக் கொண்டே ஓடிப் போய் விளக்கை அணைத்தான் பெஞ்சமின். விளக்குடன் அக்டோபர் பத்தாம் தேதியும் அணைந்தது.

**1983. அக்டோபர் 12. புதன்கிழமை.**

ஒவ்வொன்றாகப் புரட்டிய கடிதங்களில் வைத்யநாதன் பெயருக்கு முகவரியிடப்பட்ட கவரில் சட்டென சூர்யாவின் பார்வை இடறியது. கவரின் இடது கீழ் மூலையில் 'லலிதா, பெசன்ட் நகர்' என்ற மிகச் சிறிய எழுத்துக்களைக் கண்டு ஒரு விநாடி திகைத்துப் போனாள்! வேலையில் ஆழ்ந்திருக்கும் வைத்யநாதனை ஒரு விநாடி சலனமற்றுப் பார்த்தாள்.

''மிஸ்டர் வைத்யநாதன்!''

வைத்யநாதன் நிமிர்ந்து பார்த்தான். தீயின் சுடர் போல அந்த லெட்டர்! லெட்டரை வாங்கிக் கொண்டபோது அவனின் கைகள் நடுங்கின. உடல் பூராவும் வியர்த்து வழிந்தது. உடனே கவரைப் பிரிக்காமல் டிராயரில் போட்டு விட்டு, குனிந்தபடி வேலைகளில்

ஆழ்ந்திருப்பதாக பாவனை செய்து கொண்டிருந்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து சூர்யா மெல்லிய குரலில் கேட்டாள்:

''லலிதாவா பெயர்?''

வைத்யநாதன் ஒருமுறை அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டுக் குனிந்து கொண்டான் பதில் சொல்லாமல். சூர்யாவை நேராகப் பார்க்கக்கூட அவனுக்குத் தைரியம் வரவில்லை.

சில நிமிஷங்களுக்குப் பின் சூர்யா தணிந்த குரலில் கேட்டாள்:

''வாட் இஸ் ஷி?''

''ஷி இஸ் ஏ ஃப்ரீலேன்ஸ் ரைட்டர். கிராஜுவேட் இன் ஜர்னலிஸம்!''

- இதைச் சொல்வதற்குள் வைத்யநாதனுக்கு நாடித்துடிப்பு எகிறிப்போயிற்று.

''அச்சா!''

அதற்கு மேல் சூர்யா எதுவும் இப்போதைக்குக் கேட்க வேண்டாமே என்று இருந்தது வைத்யநாதனுக்கு. அதனால் சும்மா எழுந்து போய் தண்ணீர் குடித்துவிட்டு வந்தான். நாற்காலியில் அமர்ந்து பொய்யாக ஏப்பம் விட்டான். மூக்குக்கண்ணாடியைக் கழற்றிவிட்டு முகத்தைக் கைக்குட்டையால் துடைத்தான். அவசரம் இல்லாமல் பிரித்துக் கடிதத்தைப் படித்தான். அவன் கடிதத்தைப் படிப்பதைத் தன் உணர்வுகளால் சூர்யா அவதானித்துக் கொண்டிருந்தாள். கடிதத்தைப் படிக்கத் தருவானா என யோசித்தாள். வைத்யநாதன் படித்துவிட்டு பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்!

அப்போது சூர்யாவின் மேஜையில் இருந்த இன்டர்காம் ஒலிக்கவும், அவள் எடுத்து ஒரு விநாடி செவிமடுத்துவிட்டு ஸீட்டிலிருந்து வேகமாக எழுந்து பர்சனல் மானேஜர் ரூமுக்குப் போனாள்.

வைத்யநாதனுக்குக் கொஞ்சம் அப்பாடா என்றிருந்தது. சிறிது உடலைத் தளர்த்திக் கொண்டு, தற்செயலாக ஆனந்தியைப் பார்த்தான். அதுவரை அவனை நோக்கிக் கொண்டிருந்த அவளுடைய பார்வை சட்டெனத் தாழ்ந்து கொண்டது. பத்து நாட்களுக்கு முன்பு எதிர்பாராமல் திருநீர்மலையில் அவளைப் பார்க்க நேரிட்ட பின் ஆனந்தியின் கண்களில் ஓர் அந்நியோந்நிய பாவம் ஏற்பட்டதை வைத்யநாதன் உணர்ந்திருந்தான். அவளுக்கு எதிர்காலம் சந்தோஷமாக இருக்க வேண்டுமென மனத்திற்குள் திடீரென வாழ்த்திக் கொண்டான்.



**வை**த்யநாதனுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. வெறுமே காபியை மட்டும் குடித்தான். லலிதா என்று கவரின் வெளிப்புறத்தில் எழுதப்பட்டு முதல் கடிதம் வந்துவிட்டது. பெயரையும் சூர்யா பார்த்து விட்டாள். இதைப் போய் இனிமேல் நாமாக எப்படிக் காட்டுவது சூர்யாவிடம்? வைத்யநாதன் மறுபடியும் ஒரு காபி குடித்தான். கொடுத்துத்தான் பார்க்கலாமே என்ற தைரியம் வந்தது. உடனே வேகமாகத் தன் ஸீட்டிற்குத் திரும்பினான். பளீரென ஒரு வானவில் எதிரில் தோன்றியது போலிருந்தது. செக்ஷன் காலியாக இருக்க, சூர்யா மட்டும் இருந்தாள். பணிவுடன் போய் ஸீட்டில் உட்கார்ந்தான். கவரில் இருந்த கடிதத்தை எடுத்து பயபக்தியுடன் சூர்யாவிடம் நீட்டினான். என்னவோ ஓர் அகங்காரம் சட்டென சூர்யாவில் இளகியது போலிருந்தது. இந்தத் தருணத்தை வைத்யநாதன் கவனமின்றி இழந்து விட்டான்!

''நோ வைத்யநாதன்... பாட்டியோட லெட்டர் பரவாயில்லை... ஆனா, இது வந்து...''

''இல்லை மேடம்... என்னைப் பொறுத்த வரைக்கும் உங்ககிட்ட எனக்கு மறைக்க நெஜமாவே எதுவும் கெடையாது. இதை நான் என் மனசு விட்டுச் சொல்றேன்... என்னோட ஃப்ரெண்ட் லலிதாதான் எழுதியிருக்கா. பரவாயில்லை... படிச்சுப் பாருங்க'' என்றான். அவனுக்கு மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது.

சூர்யா மிக ஒய்யாரமாக, சன்னமான கர்வத்துடன் அதைப் படித்துவிட்டு வைத்யநாதனிடம் திருப்பிக் கொடுத்து விட்டாள். சில விநாடிகளுக்கு அவர்களிடையே இம்சைமிக்க நிசப்தம் நிலவியது.

''வீடு எங்கே அவளுக்கு?'' - சூர்யா கேட்டாள்.

''பெசன்ட் நகர்ல மேடம்!''

அப்பொழுது டெலிபோன் ஒலித்தது. சூர்யா ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...! யா. சூர்யா ஸ்பீக்கிங்... ஓ, கால் ஃப்ரம் பாம்பே...? யெஸ்... சூர்யாதான்... எப்படி இருக்கீங்க வினோத்? ஃபைன்? ஓ... மெட்ராஸ் வாங்களேன். நானா? பாம்பேயா? நோ... இப்போதைக்கு முடியாது... இல்லை; டைரக்டர் ஜப்பான் போயிருக்கார். யெஸ்... தென்? வீட்ல எல்லாரும் சௌக்யமா? யாருமே லெட்டர் போடலையே எனக்கு... ஆமா. ஆமா... வாட்டர் ப்ராப்ளம் அநேகமா சரியாயிடுச்சுன்னு சொல்லலாம்... இல்லை இல்லை. அந்த பேப்பர்ஸ் இன்னும் ஹெட் ஆபீஸிலிருந்து வரலை... ஆமா... ஆமா. ஓயெஸ்... ஓகே ஓகே.''

- ட்ரங்க்கால் பேசி அவள் ரிஸீவரை வைத்து விடுவதற்குள்,

சாப்பிடப் போயிருந்தவர்கள் ஒவ்வொருவராகத் திரும்பி விட்டனர். சூர்யா ட்ரங்க்கால் பேசுகிறாள் என்பதை உணர்ந்து கொண்ட ஆனந்தி, அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பாம்பேயிலிருந்து விநோத் பேசினார் ஆனந்தி... ஈவினிங் நாம சேர்ந்து போயிடலாம். உங்க வீட்டுக்கு வரேன் நான்...'' என்றாள் சூர்யா.

சூர்யா பேசிக்கொண்டிருந்த ஒவ்வொரு வார்த்தையையும் வைத்யநாதன் துல்லியமாய் கிரகித்தபடி உட்கார்ந்திருந்தான். அவள் உச்சரிக்கும் ஒவ்வொரு சொல்லும் மந்திரம் போல் ஒலித்தது அவனுக்கு. லலிதாவின் கடிதம் கச்சிதமாக அவளுக்கு அறிமுகம் செய்யப்பட்டு விட்டது பெரும் உவகையைத் தந்தது அவனுக்கு. சூர்யாவைத் தான் ஈர்க்கத் துவங்கி விட்டதாக நம்பினான். லலிதா கடிதம் ஒவ்வொன்றும் வசீகரமாக எழுதப்பட வேண்டும் என தீர்மானம் செய்தான். கடிதங்களில் காதல் சொட்ட வேண்டும். ஒரு பெண்ணின் பிடிவாதமான பிரேமை வரிகளில் தோய்க்கப்பட வேண்டும். அந்தக் காதலையும் பிரேமையையும் சற்றும் பொருட்படுத்தாத அளவிற்கு வேறோர் உன்னதமான பெண்ணிடம் அவன் காதல் வயப்பட்டிருக்கிறான் என்பது கோபத்துடன் காட்டப்பட வேண்டும்...

வைத்யநாதன் பூர்ண திருப்தியுடன் மாலை ஆபீஸிலிருந்து கிளம்பினான். எங்கோ தொலைவில் ஓடிக் கொண்டிருந்த அழகான நதி தன்னை நோக்கித் திரும்பத் துவங்கியிருப்பது போலிருந்தது அவனுக்கு. மானசீகமாக சூர்யாவை ஒரு விஷ் பண்ணிவிட்டு ரஸ்தாவின் குறுக்கே பிரக்ஞை இல்லாமல் கடந்தவனை, ஒரு கார் உறுதியாக பிரேக் போடப்பட்டு நின்றும், சிறிது மோதித் தெருவில் உருட்டித் தள்ளிவிட்டது.

காருக்குள் இருந்த ஆனந்தி 'வீல்' என்று அலறி விட்டாள். ஒரு விநாடியில் காரின் கதவைத் திறந்து சூர்யா, வைத்யநாதனை நோக்கி ஓடி வந்தாள். அவர்களின் கம்பெனி கார்தான் அது! பிப்பாய் போல உருண்டுவிட்ட வைத்யநாதனின் கண்ணாடி எங்கேயோ மூலையில் போய் விழுந்தது! லலிதாவின் கடிதம் காற்றில் அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தது. அதற்குள் வேகமாக அருகே வந்த சூர்யா வைத்யநாதனை மெதுவாகத் தூக்கி உட்கார வைத்தாள். தார்ச்சாலை கைகளையும் முகத்தையும் சிராய்த்திருக்க, சிராய்த்த இடங்களில் எல்லாம் ரத்தம் ஊறத் துவங்கியது.

வைத்யநாதன் எழுந்துகொள்ளக் கைகொடுத்து உதவினாள் சூர்யா. எழுந்து நின்ற வைத்யநாதன் அதிர்ச்சியால்தான் சிறிது



தள்ளாடினான். டிரைவர் ஓடிப் போய் அவனுடைய மூக்குக்கண்ணாடியை எடுத்து வந்தார். அதை வாங்கி அணிந்து கொண்டதும்தான் அவனுக்கு உணர்வுகள் சிறிது பதட்டம் தணிந்தன. முழங்கால் விண்ணென்று வலித்தது. கைகளும் முகமும் தீயாய் எரிந்தன.

''எங்காவது எலும்பில் அடிபட்டிருக்கா? பாருங்க மிஸ்டர் வைத்யநாதன்...''

''அதெல்லாம் இல்லை...'' என்றான் வைத்யநாதன்.

''வைத்யநாதன், கார்ல மெதுவா ஏறி உக்காருங்க. நர்ஸிங் ஹோம் போய் ஃப்ராக்ச்சர் எதுவும் இருக்கானு பாத்திடலாம். டிரைவர், காரைத் திருப்பி நம்ம டாக்டர் ராமராவ் நர்ஸிங் ஹோம் போங்க... இம்மீடியட்டா பார்த்துடலாம்...'' என்று உத்தர விட்டபடி காரின் பின்ஸீட்டில் ஏறி, ஆனந்தியின் அருகில் உட்கார்ந்து கொண்டாள் சூர்யா. வைத்யநாதன் காயங்களின் எரிச்சல் தாங்காமல் வேதனையுடன் கண்களை மூடிக்கொள்ள கார், திரும்பி வந்த பாதையில் வேகமாக விரைந்தது.

**பொ**ழுது இருட்டி விட்டது. வைத்யநாதன் அறைக்குத் திரும்பி வரவில்லை. பெஞ்சமினும் மனோஹரும் சிறிது நேரம் ஸ்டீரியோவில் இசைத்தட்டுகளைச் சுழல விட்டு ஆடிக் கொண்டிருந்து அலுத்துப் போனார்கள்.

''எங்கடா இவனைக் காணோம்? மணி ஏழாகப் போகுது...'' - பெஞ்சமின் கவலையுடன் கேட்டான். ''ட்ரெய்ன் ஏறி ஊருக்கு ஓடிட்டானா?''

அப்போது அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த வைத்யநாதனைப் பார்த்து இருவரும் அதிர்ந்து விட்டார்கள். நெற்றியில் பேண்டேஜ். கன்னங்களில் ப்ளாஸ்திரி. இரண்டு முழங்கைகளில் பேண்டேஜ். இடது முழங்காலில் பெரியதாக பேண்டேஜ்... பேண்ட் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது.

''என்னடா பாவி ஆச்சு! எங்கே போய் விழுந்தே? இல்லே, எவனாவது உதைச்சானா போட்டு?''

வைத்யநாதன் அசதியுடன் கட்டிலில் உட்கார்ந்தான். உடம்பெல்லாம் வலித்தது. லேசாக ஜுரம் அடிக்க ஆரம்பித்திருந்தது... மெதுவாகக் கட்டிலில் நிமிர்ந்து படுத்தான்.

''என்ன ஆச்சு வைத்யநாதா?'' - அருகில் உட்கார்ந்து பெஞ்சமின் கேட்டான்.

''கார் வந்து மோதிடுச்சி...''

''கார் மோதுச்சா? சட்னியாயிருக்குமே அந்த கார்?''

''ஒனக்கு எல்லாம் விளையாட்டுத்தாண்டா. உடம்பெல்லாம் பார்ட்பார்ட்டா வலிக்குது...''

''எப்படியாச்சு இந்த மாதிரி... எந்த இடத்ல?''

''எல்லாம் சாந்தோம்லேயேதான். கவனிக்காம ரோடை க்ராஸ் பண்ணினேன். எங்களோட ஆபீஸ்காரே வந்து மோதிடுச்சி...''

''ஆபீஸ் காரா இருந்தா என்னடா... க்ளெய்ம் பண்ண வேண்டியதுதான்! எத்தனை ப்ளாஸ்திரி? எத்தனை பேண்டேஜ்? பேண்ட் வேற கட்பீஸ் மாதிரி டாராயிடுச்சி...! கார்ல இருந்தது யாரு மானேஜரா, எம்.டி-யா?''

''யார்னு சொல்லு பார்க்கலாம்?'' - வைத்யநாதன் முகம் மலரக் கேட்டான்.

''என்னடாது... ஒரு மாதிரி சொக்கிப் போய்க் கேக்கறே?''

''சொல்லேன்.''

''சூர்யாவா?''

''யா!''

''கொன்னுட்டடா வைத்தி! எவனுக்கும் கிடைக்காது இந்த சான்ஸ்... கண்டிப்பா கிடைக்கவே கிடைக்காது. பாக்யராஜா! பாரதிராஜாவோட சிஷ்யா! வரேன் ஒரு நாள் உன்னைப் பாக்க! பாத்து இந்தக் கதையை ஷாட் பை ஷாட்டா சொல்றேன் பார்... ம்... நீ சொல்றா வைத்தி... டீடெய்லா சொல்லு, என்ன நடந்ததுன்னு...?''

வைத்யநாதன் படுத்துக் கொண்டே ஷாட் பை ஷாட்டாகச் சொன்னான்.

''சூர்யாதான் உன்னைக் கார்ல கொண்டு வந்து ட்ராப் பண்ணிட்டுப் போறாளா? கொடுத்து வைச்சவன்டா நீ...!''

''டேய் பெஞ்சமின்! உண்மையாவே சூர்யா ரொம்ப பெரிய மனுஷிடா... கொஞ்சம்கூடத் தயங்காம அவதாண்டா முதல்ல என்னைத் தொட்டுத் தூக்கினா... நிஜமா சொல்றேன் - என்னோட சின்ன வயசில எங்கம்மா என்கிட்ட எவ்வளவு அன்பா நடந்துப்பாங்களோ அதே அளவு அன்பா இவ என்கிட்டே நடந்துக்கறா...''

''அவளைத்தான் போய் ஏமாத்திட்டு இருக்கே... பார், நீ பேண்டேஜ்ல வந்ததும் அதெல்லாம் மறந்தே போச்சு... பெசன்ட் நகர் லெட்டர் டெலிவரி ஆயிடுச்சா? படிச்சாங்களா அம்மா?''

''படிச்சிட்டு, 'லலிதா என்ன பண்றாள்?'னு கேட்டா சூர்யா...''



''என்ன சொன்னே நீ?''

''பத்திரிகைலே கதையெல்லாம் எழுதறான்னு சொன்னேன்.''

''கதை வுடு! உனக்குக் கதைன்னா என்னன்னு தெரியாது... பத்திரிகைன்னா என்னன்னு தெரியாது! ஜாக்கிரதையா கதை வுடு. கன்னாபின்னான்னு கதைவுட்டுட்டு மாட்டிக்காத... ஸோ... லெட்டரை அம்மா படிச்சாச்சு?''

''ஆமா!''

''லலிதான்னு ஒரு பொண்ணு உனக்கு ஃப்ரெண்டா இருக்குன்னு அம்மாவை நம்ப வச்சாச்சு?''

''ஆமா!''

''பேசாமே ரெண்டு நாள் நல்ல ரெஸ்ட் எடு. அப்பறமா டிஸ்கஸ் பண்ணி அடுத்த லெட்டரை ஆரம்பிக்கலாம். சரியா?''

''ஓயெஸ்.''

''படுத்துக் கொஞ்சம் ரெஸ்ட் எடு. நாங்க அப்படியே ஒரு ரவுண்ட் போயிட்டு ஆராதனாவில் டிபன் சாப்பிட்டுட்டு உனக்கும் வாங்கிட்டு மெதுவா வரோம்... தூங்கிடாத...''

''இல்ல... இல்ல...''

''அவன் இன்னி பூரா தூங்கமாட்டாண்டா. ஸூப்பர் ஸ்டார் வந்து அவனைத் தொட்டுத் தூக்கியிருக்கா... தூங்கிடுவானா லேசில...''

''மனோஹர், ஞாபகம் வச்சுக்க - இந்த இடத்ல ஒரு ட்ரீம் ஸீன்!''

''அதெல்லாம் ஜமாய்ச்சுடலாம், வா!''

இருவரும் சாப்பிடுவதற்காகக் கீழே போனார்கள். வைத்யநாதன் மெதுவாக எழுந்து கண்ணாடியில் தன்னுடைய முகத்தைப் பார்த்தான். காதல் படையெடுப்பின் ஆரம்ப கட்டமே தன்னைத்தான் படுகாயப்படுத்தியிருப்பதாக நினைத்தான். உடைகளைக் களைந்துவிட்டு லுங்கியைக் கட்டிக் கொண்டான். அப்பொழுதுதான் லலிதாவின் லெட்டர் ஞாபகம் வந்தது. ஷர்ட்டைப் பார்த்தான். பேண்ட்டைப் பார்த்தான். லெட்டர் இல்லை. வைத்யநாதனுக்குள் சிறிய கவலை வந்தது. 'இதெல்லாம் அபசகுனமா?' பார்த்தசாரதி கோயிலை நோக்கி ஒரு நிமிஷம் தியானம்'இருந்தான்.

களைப்புடன் ஈஸிசேரில் சாய்ந்தான். சூர்யாவின் பண்பை நினைத்தான். தோளில் அவளுடைய பிரியமான கைபட்ட இடத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். அந்த இடத்தில் முத்தமிட்டான்! இந்த விபத்து நிகழ்ந்ததால்தானே ஒரு புதிய பரிவர்த்தனை அவளோடு ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்தான். சூர்யா என்னும் அழகான நதி தன்னை நோக்கி ஓடி வருவதாகக்

கற்பனை செய்து களிப்படைந்தான். தன்னை ஒரு கடலாக எண்ணினான்.

கடலோடு ஒரு நதி கலந்தே ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

வைத்யநாதனின் இந்த நினைவுத் தொடரில் சட்டென ஆனந்தியின் அகன்ற கண்கள் தெரிந்தன. ஆனந்தியை நினைத்ததும் அவனுடைய மனத்தில் ஏதோ வாசனைப் புகை மெலிதாக வியாபிப்பது போலிருந்தது. ஓர் ஆச்சரியம் பரவியது நெஞ்சில். ஆனந்தியின் மனநிலையில் ஏதோ ஒன்று புதிதாகத் துளிர்த்திருக்கும் இனிமை அவளுடைய கண்களில் படியத் துவங்கியிருந்தது. வைத்யநாதனை ஆனந்தியின் கண்கள் அடிக்கடி வியப்புடன் கவனிக்க ஆரம்பித்திருந்தன. இந்த விஷயத்தை பெஞ்சமினிடம் சொல்ல வேண்டும் போல இருந்தது வைத்யநாதனுக்கு. ஆனால், மௌனமாக இருந்து விட்டான். பெஞ்சமின் ஆபாசமாகப் பேசினாலும் பேசி விடுவான். அவனுக்கு எதிலும் தீவிரம் கிடையாது. எல்லாம் வேடிக்கை; விளையாட்டு.

## 1983. அக்டோபர் 13. வியாழக்கிழமை.




மணி பகல் பன்னிரண்டு ஆகியிருந்தது. பெஞ்சமினுக்கு இது ஒரு சிறிய இடைவேளை நேரம். தன்னுடைய ஆபீஸ் இருந்த 'தன் பில்டிங்'கிலிருந்து வெளியில் வந்து ஒரு சிகரெட் பற்ற வைத்தான். எந்த உணர்வும் இன்றி புகைபிடித்துக் கொண்டிருந்த பெஞ்சமின் மனத்தில் பளீரென ஒரு ஐடியா, விசித்திர வாகனம் போல விரைந்து வந்தது! உற்சாகத்துடன் சிகரெட்டை ஓங்கித் தரையில் வீசினான். கைகளை உரசியபடி வேகமாக அண்ணாசாலை போஸ்ட் ஆபீஸிற்குள் நுழைந்தான். காலியாக இருந்த டெலிபோன் கூண்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். மனத்தில் ஒரு முறை வைத்யநாதன் ஆபீஸில் சூர்யாவின் போன் நம்பரை ஞாபகம் செய்து கொண்டு, டயல் செய்தான். நம்பர் கிடைத்தது! விருட்டென்று காசு போட்டுவிட்டு, குரலை மிகக் கச்சிதமாகப் பெண்ணின் குரல் போல சாதகமாக்கிக் கொண்டான்.

குரலில் இனிமை சொட்ட மெதுவாகக் கேட்டான்: ''ஹலோ... மிஸ்டர் வைத்யநாதன் ப்ளீஸ்!''

''............''



''நான் அவரோட ஃப்ரெண்ட்!''

''............''

''ஆமா. லலிதாதான் என் பெயர்... அப்போ நீங்கதான் வைத்யநாதனோட அந்த ஆபீஸர் சூர்யாங்கறதா?''

''............''

''வணக்கம் அக்கா. வைத்தி உங்களைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கார்!''

''............''

''கண்டிப்பா வரேன்க்கா! வைத்தியோட வரேன்... கொஞ்சம் அவர் கிட்ட போனைக் குடுங்கக்கா. அவரோட ஃப்ரெண்ட் பெஞ்சமின் இப்பத்தான் போன்ல சொன்னார். ஏதோ சின்ன ஆக்ஸிடெண்ட்டாமே...'அதுக்குத்தான் போன் பண்ணினேன், கேக்கலாம்னு...''

''............''

''ஆபீஸ்க்கு வரலையா? போயிட்டதா பெஞ்சமின் சொன்னாரே!''

''............''

''பயப்படும்படியா ஒண்ணும் இல்லையே?''

''............''

''நான் பயந்தே போயிட்டேன்க்கா - பெஞ்சமின் சொன்னதும். நீங்கதான் ரொம்ப ஹெல்ப் பண்ணினீங்களாம்.... பெஞ்சமின் போன்ல சொன்னார்!''

''............''

''ரொம்ப தேங்க்ஸ். வைத்திக்கு ஒண்ணுமே தெரியாது. சின்னக் குழந்தை மாதிரி அவர்... அப்போ வச்சிடட்டுமா அக்கா....?''

''............''

''நான் ஈவினிங் ரூம்ல போய் அவரைப் பாக்கறேன்... ஓயெஸ்... தேங்க்யூ...''

ரிஸீவரை வைத்துவிட்டு போஸ்ட் ஆபீஸைவிட்டு வெளியில் வந்த பெஞ்சமின் களிப்பில் காற்றாகப் பறந்தான். சந்தோஷம் அவனுள் கொக்கரித்தது!

'ஸூப்பர் ஸ்டார் சூர்யா! உன்னை ஸ்வீப் பண்றோம் பார்' என உணர்வுகள் குதூகலித்தன.

வைத்யநாதன் ஆபீஸ் போகவில்லை. உடம்பு வலி இன்றுதான் அதிகமாக இருந்தது. ஆனால், காய்ச்சல் இல்லை. நெற்றிக் காயத்தால் தலையெல்லாம் விண்விண்ணென்று தெறித்தது. இடது

காலை மடக்கக்கூட முடியவில்லை. அதனால் மனம் சிறிது சோர்ந்து போயிருந்தது. கட்டிலில் படுத்தே கிடந்தான். வயிறு பசித்தது.

எழுந்து படிக்கட்டு அருகில் நின்று நாயக்கரைக் கூப்பிட்டான். பத்து நிமிஷம் கழித்து நாயக்கர் வந்தார்.

''நாயக்கர், ஆராதனா ஹோட்டல்ல ரெண்டு பிஸிபேளாபாத், ஒரு தயிர் சாதம், ஒரு மசால் வடை வாங்கிட்டு வரீங்களா?''

''ஆராதனா இன்னிக்கு லீவ் ஸார்!''

''போச்சா... சரி, வேற ஏதாவது நல்ல ஹோட்டல்ல வாங்கிட்டு வாங்க...'' -வைத்யநாதன் பத்து ரூபாய் நோட்டை எடுத்து நாயக்கரிடம் தந்தான்.

''நீங்க ரெண்டு இட்லி, ஒரு தோசை வேணா சாப்பட்டுக்குங்க... இந்தாங்க இந்த கப்ல சாம்பார் கொஞ்சம் வாங்கிட்டு வந்திடுங்க...''

நாயக்கர் சிறிதுகூட சுவாரஸ்யமே இல்லாமல் கீழே இறங்கிப் போனார். 'என்ன பிறவியோ... என்ன சொன்னாலும் ரியாக்ஷனே கிடையாது மூஞ்சியில்' என்று சலித்துக் கொண்டே வைத்யநாதன் மறுபடியும் கட்டிலில் படுத்துக் கொண்டான்...

அறைக்கதவு திறந்த சப்தம் கேட்டு வைத்தியநாதன் திரும்பிப் பார்த்தான். பார்சல்களுடன் பெஞ்சமின்! வைத்யநாதனின் மனம் கனிந்து விட்டது.

''நீ ஏன் வாங்கிட்டு வரே இதெல்லாம்...? நாயக்கர் எங்கே?''

''நாயக்கர்தான் வாங்கிட்டு வந்தார். வழியில் பாத்தேன். மடக்கி நானே அவ்வளவையும் வாங்கிட்டு வந்துட்டேன். இந்தா, ஜல்தியா சாப்பிடு...''

வைத்யநாதன் கட்டிலில் கால்களைத் தொங்கவிட்டபடி உட்கார்ந்தான். பெஞ்சமின் நாற்காலியை இழுத்து வைத்யநாதனுக்கு எதிரில் போட்டு பார்சல்களைப் பிரித்துப் பரப்பி வைத்தான்.

''என்னடாது... பிஸிபேளாபாத் வாங்கச் சொன்னா, தேங்கா சாதம் வாங்கிட்டு வந்திருக்கார் நாயக்கர்?''

''நீ கூப்ட்டுக் கேளு, தேங்கா சாதம் தான் வாங்கியாரச் சொன்னதா சத்தியம் பண்ணுவார்...!''

''என்ன செய்யறது... நேரம் சரியில்லை நமக்கும். தேங்கா சாதம் புடிக்கவே புடிக்காது எனக்கு.''

''பரவால்ல... கொஞ்சம் சாப்பிடு. அதான் தயிர் சாதம் இருக்கே-மசால் வடையைக் கடிச்சிட்டே சாப்பிட்டு முடி. உனக்கு ஒரு க்ரேட் நியூஸ் சொல்றேன்.''



''நியூஸைச் சொல்லு. கேட்டுக்கிட்டே சாப்படறேன்... என்ன நியூஸ்?''

''சொல்லட்டுமா..? இன்னிக்கு மத்யானம் பன்னிரண்டு பத்துக்கு அய்யா ஸூப்பர் ஸ்டார்கூட போன்ல பத்து நிமிஷம் பேசினார். போதுமா?''

''அடப்பாவி! அவகூட என்னடா போன்ல பேசினே? அதுவும் நான் ஆபீஸ் போகலைன்னு தெரிஞ்சும்...''

''நான் சூர்யாகிட்ட என்ன பேசினேன்னு நாளைக்கு அவ வாயாலேயே கேட்டுத் தெரிஞ்சுக்க...''

''உஸ்... இதானே வேண்டாம்ங்கறது! சஸ்பென்ஸெல்லாம் வேண்டாம். நீயே சொல்லிடு...''

''நீ போய் நாளைக்கு அம்மாவைக் கேளுடா - 'போன்ல லலிதா என்ன பேசினா'ன்னு..!''

''எந்த லலிதா, என்ன பேசினா?''

''வேற எந்த லலிதாடா? பெசண்ட் நகர் லலிதாதான்!''

''அயோக்யா! என்னவோ நீ உல்டா வேலை பண்ணியிருக்கே... காரியத்தைக் கெடுத்துடாதேலே...!''

''மடையா, நான் ஏண்டா காரியத்தைக் கெடுக்கறேன்... உன்னோட லலிதா இஷ்யுவை நல்லா ஸ்ட்ராங்கா எஸ்டாப்ளிஷ் பண்ணியிருக்கேன் தெரியுமா? க்ளியரா பொம்பளைக் குரலா மாத்திட்டு மௌண்ட் ரோட் போஸ்ட் ஆபீஸிலிருந்து உனக்காக கன ஜோரா அந்த சூப்பர் ஸ்டார்கிட்ட டயலாக் பேசியிருக்கேன் - போன்ல - லலிதாங்கற பேர்ல...!''

வைத்யநாதன் பிரமித்துப் போனான்.

''நெஜமாவா பொம்பளைக் குரல்ல பேசினே?''

''நாளைக்கு நீ போனதும் அவ கேப்பா பார்- 'சலிலிங் லலிதா உங்க ரூமுக்குப் போறதா போன்ல சொன்னா, வந்தாளா'ன்னு முதல் காரியமா கேப்பா பார்!''

வைத்யநாதன் எழுந்து நன்றியுடன் பெஞ்சமின் கன்னத்தில் முத்தமிட்டான்!

''பாத்தியா, பெஞ்சமின் சேவை நாட்டுக்கு எவ்வளவு தேவைன்னு?''

''உடம்பு வலியெல்லாம் பறந்து போயிடுச்சுடா பெஞ்சமின். இன்னிக்கித் தேதி அக்டோபர் பதிமூணு. டிசம்பர் பதிமூணுக்கெல்லாம் கதையை முடிச்சிடணும். சரியா?''

''கதையை அவ்வளவு நாள் ஓட்டணுமா என்ன?''

''அதாவது அதிகபட்சம் டிசம்பர் பதிமூணு! அதுக்கு முன்னாடியே முடியறதா இருந்தா முடியட்டும். நோ அப்ஜெக்ஷன்!''

''நான் ஒரு டேட் சொல்றேன் கேளு. டிசம்பர் ரெண்டாம் தேதிக்குள்ள ஷெட்யூலை நாம முடிச்சே ஆகணும்... படம் கண்டிப்பா தைப் பொங்கல் ரிலீஸ்!''

''அட்டகாசம் பண்ணிடலாம்!''

''அப்ப இன்னிக்கு ஒரு சின்ன காக்டெய்ல் பார்ட்டி வச்சுக்கலாமா?''

''அதுக்கு மட்டும் என்னைக் கூப்பிடாதே! ஸாரி... முழு பாட்டில் வேணும்னாலும் நீ சாப்பிடு. வேண்டாம்னு சொல்லலை. என்னைக் கூப்பிடாதே...

''என்ன சோப் போட்டாலும் முடியாதுடா உன்னை வெளுக்கறதுக்கு!''

ஆனந்தியின் வீட்டு மொட்டை மாடியில் எதிர் எதிராக ஆனந்தியும் சூர்யாவும் உட்கார்ந்திருந்தார்கள். ஆனந்தியின் மடியில் சிறு சிறு பேப்பர்களும், கையில் ஒரு பால்பாயிண்ட் பேனாவும் இருந்தன. பல நிமிஷங்களாக அவள் சூர்யாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சொல்றதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம்னு தெரியலை...?'' - சூர்யா சலித்துக் கொண்டாள்.

ஆனந்தி பால்பாயிண்ட் பேனாவால் நெற்றியைத் தடவிக்கொண்டே இருந்த பின் காகிதத்தில் மெதுவாக எழுதினாள்: 'வைத்யநாதன் மாதிரி ஒரு நல்லவர்தான் எனக்குக் கணவனா வரணும்..'

அதைப் படித்த சூர்யாவுக்கு திக்கென்றிருந்தது. சலனப்படாமல் ஸ்தம்பித்திருந்த ஆனந்தியின் கண்களையே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனந்தியின் கண்களில் இதுவரை கண்டிராத பாவம் தீவிரமாகப் பறந்து கொண்டிருந்தது. சூர்யா தன்னுடைய விரல் ஒன்றால் ஆனந்தியின் முகத்தை தன்னை நோக்கித் திருப்பினாள். சூர்யாவின் கண்களில் வாஞ்சை பிரவகித்து வழிந்தது.

''ஆனந்தி! நீ பதில் சொல்ற மாதிரி கேள்வியை நான் சரியா கேக்கட்டுமா?''



ஆனந்தி தலையை ஆட்டினாள்.

''உனக்கு வைத்யநாதன் மாதிரி கணவன் வேணுமா? இல்லே, வைத்யநாதனே உனக்கு கணவனா வரணுமா?''

படிகமாக இறுகிப் போனது போலிருந்த ஆனந்தியின் விசாலமான கண்களிலிருந்து மெல்லிய கோடாக நீர் இறங்கியது. சூர்யா பரிவுடன் ஆனந்தியின் தலையை வருடி விட்டாள்.

''வைத்தியநாதன்தானே வேணும்?'' -மெல்லிய குரலில் கேட்டாள்.

'ஆம்' என்று ஆனந்தி கண்ணீருடன் தலையை ஆட்டினாள். சூர்யா சங்கடத்துடன் கண்களை மூடிக் கொண்டிருந்தாள். அவள் இது கொஞ்சம்கூட எதிர்பார்த்திராத காதல்! காதல்தானா இது? ஆனந்தியிடம் ''டு யு லவ் ஹிம்?'' - ஆற்றாமையுடன் கேட்டாள்.

ஆனந்தி சிலை போல் இருந்தாள். ஒரு ஆடவனைக் காதலிக்கிறேன் என்ற உணர்வை அவளால் சுயேச்சையாக வெளிப்படுத்த முடியவில்லை. தனக்கு அதற்கான தகுதி இல்லையென்ற உணர்வு அவளை இறுக்கி வைத்திருந்தது. விம்மிப் பொங்கப் பார்த்த மார்பை வலிந்து கட்டுப்படுத்திக் கொண்டாள். மிகவும் வெறுமையாக சூர்யாவைப் பார்த்தாள்.

''வைத்யநாதன் உன்னைக் கல்யாணம் செய்துகொள்வார்னு எதிர்பார்க்கிறியா நீ?''

இதற்கும் ஆனந்தி சும்மாவே இருந்தாள்.

''நீ பேச முடியாத பெண் என்கிறதால இந்தக் கேள்வியைக் கேக்கலை நான்...'' என்றாள் சூர்யா. ''இப்போதைக்கு அது இரண்டாம் பட்சக்கேள்வி. ஏன்னு சொல்லட்டுமா?''

ஆனந்தி துக்கத்துடன் பார்த்தாள்.

''அவருக்கு லலிதான்னு ஒரு ரைட்டர் ரொம்ப ஃப்ரெண்டா இருக்கா! அந்த லலிதா, வைத்யநாதனைக் காதலிக்கறான்னு நினைக்கறேன்... அதனாலேதான் இது நடக்குமான்னு கேட்டேன்...''

சூர்யா முழுவதுமாகக் கேட்பதற்குள் ஆனந்தி உடைந்துவிட்டாள். முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். சூர்யா வானத்தை நிமிர்ந்து பார்த்தபடி பெருமூச்சு விட்டாள். சாயங்கால ஆகாயம் ஒளி இழந்திருந்தது. ஒற்றை ஒற்றையாக கொக்குகள் பறந்து கொண்டிருந்தன.

''மத்யானம்கூட அந்த லலிதா போன் பண்ணி, 'அவருக்கு எப்படி

இருக்கு'ன்னு கேட்டா...! அவளோட பேச்சிலேயே தெரியுது வைத்யநாதன்மேல் இருக்கற இம்மென்ஸ்லவ்...! வைத்ய நாதனைச் சம்மதிக்க வைக்க நான் முயற்சி செய்து பார்க்கலாம். ஆனா, வேற ஒரு பெண்ணை அதற்காகத் தியாகம் பண்ணச் சொல்லி நான் வற்புறுத்த முடியுமா? நீயே சொல்...''

ஆனந்தி இன்னும் அழுது கொண்டே இருந்தாள். சூழ்நிலையே ஸ்தம்பித்தது போலிருந்தது. பெசண்ட் ரோடில் வாகனங்களின் இரைச்சல்கூட நிசப்தமடைந்திருந்தது.

பல நிமிஷங்கள் கழித்து ஆனந்தி முகத்தை நிமிர்த்தி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஆனந்தி பேப்பரில் வேகமாக எழுதிக் காட்டினாள். 'நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை...'

''உனக்கு ஒரு துணை வேண்டாமா?...'' -சூர்யா கேட்டாள்.

'வேண்டாம்' என ஆனந்தி தலைய அசைத்தாள்.

''முட்டாள் மாதிரி நடந்துக்காதே... எது எப்போ நடக்கணுமோ அப்போத் தான் நடக்கும். சும்மா கவலைப்படக் கூடாது. எதையும் எதிர்பாராமே நிம்மதியா இரு. இனிமே யாரும் உனக்குப் பிறந்து வரப்போறதில்லை... ஆனா, அது யார்னுதான் நமக்கு தெரியலை, இல்லையா?''

'எனக்காக யாருமே பிறக்காமல் போயிருந்தால்...?'

ஆனந்தியின் இந்தக் கேள்விக்கு சூர்யா பதில் சொல்லவில்லை. அப்படிக்கூட இருக்கலாம். எத்தனையோ பெண்களுக்கும் ஆண்களுக்கும் திருமணம் நடக்காமலேயே போய் விடுவது இல்லையா? சூர்யா பல விநாடிகள் யோசித்த பின் கேட்டாள்:

''மிஸ்டர் வைத்யநாதனை நான் ஜாடையா கேட்டுப் பார்க்கட்டுமா?'' ஆனந்தி, 'வேண்டாம்' என்று தலையசைத்தாள். மறுபடியும் அவளுடைய கண்களில் நீர் மண்டியது.

''அழறதில் பிரயோஜனமே கிடையாது. நீ சின்னக் குழந்தையா? அழக்கூடாது... நாம நினைச்சபடியெல்லாம் அமைஞ்சிடாது லைஃப். எந்த ரூபத்துல அது வருதோ அதை நாம ஃபேஸ் பண்ணியே ஆகணும். நிஜமா வேற வழியே கிடையாது. அதை நாம் மாற்றவும் முடியாது. அதனாலதான் நம்முடைய வாழ்க்கையே கவலை நிரம்பயதா, ஆசை மண்டியதா ஆயிடுத்து... அதனால், ப்ளீஸ்... தைரியமா இரு நீ... வாழ்க்கையோடு முரண்படவே படாதே.''

வானத்தில் இருள் முழுக்க வியாபித்து விட்டது. படியேறி வந்த ராஜலக்ஷ்மி, சூர்யாவையும் ஆனந்தியையும் சாப்பிட அழைத்தாள். மௌனமாக அவர்கள் கீழே இறங்கிப் போனார்கள்.



**1983. அக்டோபர் 14. வெள்ளிக்கிழமை.**

**ச**லவையிலிருந்து வந்திருந்த உடைகளில் தனக்கு மிகவும் பிடித்ததாகத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டான் வைத்யநாதன். பெஞ்சமின் நேற்று பெண் குரலில் லலிதாவாக சூர்யாவுடன் பேசி, நிலைமையைச் சிறிது முன்னேற்றமடையச் செய்துவிட்டான். நினைக்கவே வைத்யநாதனுக்கு சந்தோஷமாக இருந்தது! நாடகம் அரங்கேற்றமாகிவிட்டது. தொடர்ந்து இனி காட்சிகள் சிறிது சிறிதாகத் தீவிரமாக வேண்டும. கடைசியாக க்ளைமாக்ஸ்!

'கடவுளே! ஆன்ட்டி க்ளைமாக்ஸ் ஆகிவிடக் கூடாது' என்று மனத்தில் வேண்டிக் கொண்டு ஆபீஸ் புறப்பட்டான். மணியைப் பார்த்தான் - இன்னும் பத்து ஆகவில்லை. ஆட்டோவில் போய்விடலாம் என்ற நினைப்பில் ரோட்டைக் கடக்க இரண்டு பக்கமும் பார்த்தபடி நின்றபோது, அவனுடைய கம்பெனி கார் இடது ஓரம் சட்டென நின்றதை வைத்யநாதன் பார்த்தான். காருக்குள் சூர்யா! தன்னைக் கண்டுதான் கார் நிற்கிறது என்று கண்டு கொண்ட வைத்யநாதன் வேகமாகக் காரைநோக்கி நடந்து, ''குட் மார்னிங்'' என்றான். அவனுக்கு சூர்யாவிடம் இருந்த தயக்கம் முற்றிலுமாக நீங்கியிருந்தது.

''ப்ளீஸ்... கெட் இன் வைத்யநாதன்! கார்லேயே போயிடலாம்...'' என்றாள் சூர்யா.

காரைச் சுற்றி வந்து முன்புறம் ஏறிக் கொண்டான். கார் கிளம்பியது!

''வலி குறைஞ்சிடுத்தா? இன்னும் கூடஒரு நாள் நீங்க'ரெஸ்ட் எடுத்துக்கலாமே?''

''நோ ப்ராப்ளம் மேடம். நௌ ஐ'யாம் ஆல் ரைட்... வலிகூட ரொம்ப மைல்டாத்தான் இருக்கு...!''

''இப்படியா கேர்லெஸ்ஸா ரோட்டை க்ராஸ் பண்றது? ஏதோ கார் மெதுவாவே வந்து கொண்டிருந்தது. இல்லேன்னா என்ன ஆயிருக்கும்.... அதுவும் நமது கம்பெனி கார்! உங்க ஃபாதருக்கு யார் பதில் சொல்றது? லலிதாவுக்கு யார் பதில் சொல்றது?''

வைத்யநாதன் உடனே சூர்யாவைத் திரும்பிப் பார்த்தான். அவளுடைய முகம் என்றும் இல்லாத வசீகரம் கொண்டிருந்தது! இளம் வாழையிலை வர்ணத்தில் அவள் அணிந்திருந்த மென்மையான புடவை-கரையில் விரிந்த கடல் அலை போல் அவனுக்குத் தெரிந்தது. திருப்தியுடன் மறுபடியும் முன்னால்

திரும்பிக் கொண்டான்.

''நேற்று ஈவினிங் லலிதா வந்திருந்தாளா மிஸ்டர் வைத்யநாதன்?'' - சூர்யா கேட்டாள்.

''வந்திருந்தா மேடம். பத்து நிமிஷத்ல போயிட்டா...''

''அவளுடைய வீடு எங்கே சொன்னீங்க?''

''பெசன்ட் நகர் மேடம்!''

''யெஸ்... யெஸ்... நான் மறந்துட்டேன்!''

கார் நீண்ட காமராஜர் சாலையில் விரைந்து கொண்டிருந்தது. பரந்த மணல் வெளிக்கு அப்பால் கடல் ஓசையற்றுத் தெரிந்தது. சூர்யாவுடன் தன்னுடைய வாழ்க்கைப் பயணமே துவங்கி விட்டாற்போன்ற உல்லாச உணர்வில் வைத்யநாதன் காரின் முன் ஸீட்டில் சொக்கிப் போய்ச் சாய்ந்திருந்தான்!




### 1983. அக்டோபர் 16. ஞாயிற்றுக்கிழமை.

மெரீனா ரெஸ்ட்டாரெண்டில் டீ சாப்பிட்டுவிட்டு பெஞ்சமின், மனோஹர், வைத்யநாதன் மூவரும் பின்புற வழியாக மணல் வெளியில் இறங்கி நடந்தார்கள்.

''யப்பா வைத்யநாதா! இங்கேயே உக்காந்துக்கலாம் வா. தள்ளிப்போய் உக்காந்தா காத்து அதிகமா இருக்கும். எழுத முடியாது!'' பெஞ்சமினும், மனோஹரும் உட்கார்ந்தார்கள். மனோஹரின் மடியில் பேப்பர்கள் நிறைந்த ஒரு ஃபைல் இருந்தது!

வைத்யநாதனும் உட்கார்ந்தான்.

''வைத்தி, க்ளைமேட் ஜோரா இருக்கு. லலிதாவோட ரெண்டாவது லெட்டரை எழுத ஆரம்பிக்கலாமா?''

''ஓயெஸ்...!''

''பேப்பர் குடுடா மனோஹர்...''

''இந்தா. வேணுங்கறதை எடுத்துக்க!''

''லெட்டர் கொஞ்சம் சீரியஸா இருக்கட்டும் பெஞ்சமின்.''

''சீரியஸா, அதே நேரத்ல ரொமான்ட்டிக்காவும் இருக்கணும்!''

''ஆமா... ஆமா...''

அண்ணா சதுக்கம் இருந்த திசையில் பார்த்துக் கொண்டிருந்த மனோஹரின் முகம் திடீரென மாறியது.



''வைத்யநாதா... வைத்யநாதா...! பின்னாடி தூரத்ல வர்றது யா/ பார்... சூர்யாவா? அன்னிக்கு நைட் பாத்தது... ஃபேஸ் மறந்து போச்சா! அவதானா பார்...''

திரும்பிப் பார்த்தான் வைத்யநாதன். தூரத்தில் சூர்யா ஆனந்தியுடன் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

''ஆமாண்டா... சூர்யாதான்!''

வைத்யநாதன் அவசரமாக சிகரெட்டை மணலில் புதைத்தான்.

''மனோஹர், ப்ளீஸ்... சிகரெட்டை அணைச்சுடு!''

மனோஹர் அவசரமாக இரண்டு தம் இழுத்துவிட்டு சிகரெட்டை அணைத்தான்.

ரொம்பவும் தயக்கத்துடன் வைத்யநாதன் திரும்பிப் பார்த்தான். சூர்யா அவனைப் பார்த்துச் சற்று தூரத்திலிருந்தே 'குட் ஈவினிங்' சொன்னாள். வைத்யநாதன் எழுந்து நின்றான். சூர்யாவையும் ஆனந்தியையும் பார்த்தபடி 'குட்ஈவினிங்' சொன்னான்.

''ஃப்ரெண்ட்ஸோட பீச்சுக்கு வந்தீங்களா?'' - சூர்யா கேட்டாள்.

''ஆமா மேடம்... இவங்க என்னோட ரூம் மேட்ஸ்...''

உடனே இருவரும் எழுந்து நின்றுசூர்யாவை வணங்கினார்கள்.

''திஸ் இஸ் பெஞ்சமின்!''

''ஹலோ...!''

''ஹலோ...!''

''ஹி இஸ் மனோஹர்.''

''ஹலோ...!''

''ஹலோ...!''

''போரடிக்கறதுன்னு சொல்லிவிட்டு ஆனந்தி ஹாஸ்டலுக்கு வந்தா. அப்படியே கொஞ்ச தூரம் வாக் போயிட்டு வரோம்! நீங்க பிக்ச்சர் எதுவும் போகலையா?''

''இல்லை மேடம். நான் சினிமால்லாம் போறதே இல்லை'' என்றான் வைத்யநாதன்.

''ஓகே... வரட்டுமா?''

''ஓகே மேடம்...''

''மிஸ்டர் பெஞ்சமின்! பை...''

''சரி மேடம்!''

''மிஸ்டம் மனோஹர்...!''

''சரிங்க மேடம்...''

ஆனந்தி, வைத்யநாதனைப் பார்த்துத் தலையசைத்தாள், சூர்யாவும் ஆனந்தியும் மெதுவாக மறுபடியும் நடக்கத் துவங்கினார்கள். அவர்கள் வெகுதூரம் வரை போவதைப் பார்த்தபடி நின்றார்கள் மூவரும்...

''மனோஹர், சூர்யா கூட வந்த பெண்ணை நாம இதுக்கு முன்னாடி பாத்திருக்கோம்! ஞாபகம் இருக்கா உனக்கு?'' என்றான் பெஞ்சமின்.

''நல்லா ஞாபகம் இருக்கு...''

''யார் வைத்யநாதா அது?''

''டைப்பிஸ்ட்...''

''டாப்பா இருக்காளே!''

''சீ, வாயை மூடுடா! பாவம். ஊமைப் பொண்ணுடா அது!''

பெஞ்சமின் தலையில் அடித்துக் கொண்டான். ''சே! என்ன அழகா, கிளி மாதிரி இருக்கா பொண்ணு... படுபாவிக் கடவுள் - இப்படி ஊமையா படைச்சிருக்கான் பார்...''

''நல்லவேளை... நாம லெட்டரை எழுதிட்டு இருக்கற நேரம் பாத்து க்ராஸ் பண்ணாமே இருந்தாளே...!''

''க்ராஸ் பண்ணியிருந்தா அவ்வளவு தான்! பாட்டி கதையைவிட மோசமாப் போயிருக்கும். வைத்யநாதா தப்பிச்சே. புயல் தாண்டிடுச்சு! இல்லே, க்ளோஸ்! இன்னிக்கு ராத்திரியே நீ ட்ரெய்ன் ஏறியிருக்கணும்... உக்கார். உக்கார்... அதான் கண்ணுக்கு எட்டாத தூரம் போயிட்டாளே! இன்னும் ஏன் வாயைத் திறந்திட்டு நிக்கறே...?''

''நாங்க போய் அந்த மாமிகிட்டே 'பஜ்ஜி வாங்கிக்கிட்டு வர்றோம்... நீ நல்லா திங்க் பண்ணி எழுது...''

மனோஹரும் வைத்யநாதனும் அங்கிருந்து நகர்ந்தார்கள்.

''யார் ஸார் இந்தப் பத்து ரூபா நோட்டு தந்தது?''

''நான் தான்!'' - வைத்யநாதன் அவசரமாகச் சொன்னான்.

''உங்களுக்கு ஆறு மிளகா, ஆறு வெங்காயம்தானே?''

''ஆமாங்க...''

''இந்தாங்க... ஒரு கையில பஜ்ஜியைப் பிடிங்க. ஒரு கையில பாக்கி சில்லறையைப் பிடிங்க...''

அப்படியே வைத்யநாதன் பிடித்துக் கொண்டான்! வேகமாக அவனும் மனோஹரும் பெஞ்சமினை நோக்கி நடந்தார்கள்.

''இவ்வளவு நேரமாடா, பஜ்ஜி வாங்கிட்டு வரதுக்கு?''



''பயங்கரக் கூட்டம்டா! வியாபாரம் ஆறதைப் பார்த்தா, மாமிக்கு இன்கம் டாக்ஸ் வாய்தா போட்டு நோட்டீஸ் அனுப்பலாம் போல இருக்கு! எழுதிட்டியா நீ?''

''எழுதி முடிச்சு ஃபேர் காப்பி எடுத்திட்டேன், வந்து பாரு...''

''இரு... பஜ்ஜியைத் தின்னுட்டு படிச்சுப் பாக்கலாம்.''

''முதல்ல படிடா...! பஜ்ஜியைத் தின்னுட்டுப் படிக்கிறானாம். அப்பறம் லெட்டர் பூரா எண்ணெயா தெரியும்...! சூர்யா கேப்பா - லலிதா என்ன பஜ்ஜி சுட்டுக்கிட்டே லெட்டர் எழுதினாளான்னு!''

''திட்டாத திட்டாத... இதோ படிச்சுடறேன். கொண்டா.''

''வைத்தி! லெட்டரைச் சத்தமாக படி... நானும் கேட்டுக்கறேன்'' என்றான் மனோஹர்.

''சரி... படிக்கட்டுமா...?''

வைத்யநாதன் லெட்டரை பலமாகப் படித்தான்.

**''...என் அன்பும் பண்பும் ஒருங்கே வாய்ந்த அருமை நண்பர் வைத்தி அவர்களுக்கு தோழி லலிதா எழுதும் இனிய மடல். நலந்தானா? தங்களுடைய காயங்கள் ஆறி விட்டனவா? உங்கள் உடம்பில் இருந்த காயங்களைப் பார்த்ததும் என் மனம் மிகுதியாகக் காயப்பட்டு விட்டது நண்பரே...!''**

''லலிதா தான் ஒரு ரைட்டர்ங்கறதை என்ன ஜோரா காட்றா பார்!''

**''...அன்று உங்கள் அறைக்கு வந்த என்னை உடனே வீட்டுக்குப் போகச் சொல்லி, என்னை வெளியில் அனுப்பிவிட்ட உங்கள் நேர்மை வேறு யாருக்கு வரும்? ஒரு அறையில் தனியாக இருக்கும் ஆடவனை ஒரு கன்னிப் பெண் தனியாகப் பார்க்க வரக்கூடாதுதான்! என்ன செய்வது நண்பரே - காதல் அப்படி என்னை ஆட்டி வைக்கிறது... அதற்காக நான் வெட்கப்படவில்லை, பெருமைப் படுகிறேன்...''**

''அடடா! என்ன பெருமை பார்...''

''தாய்க் குலத்துக்கே பெருமைடா!''

**''...என் பரிசுத்தமான காதலை இன்னும் நீங்கள் ஏற்றுக் கொண்டதாக ஒரு தடவைகூட வாய்திறந்து சொல்லாமல் இருப்பது என்னை மிகவும் கவலையடையச் செய்கிறது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பார்க்கில், மாலை ஆறு மணிக்கு உங்களுக்காகக் காத்திருப்பேன். அன்று என்னை ஏமாற்றாமல் என் காதலை நீங்கள் ஏற்றுக் கொண்டதாகச் சொல்லித்தான் ஆகவேண்டும்...!''**

''க்ளியரா விஷயத்தை கம்ப்போஸ் பண்றடா பெஞ்சமின்.''

**''...உங்கள் ஆபீஸர் சூர்யா அவர்களை நான் மிகவும் கேட்டதாகச் சொல்லுங்கள். விரைவில் அந்த இனிய என் சகோதரியை நான் சந்திப்பேனென்றும் கூறுங்கள்...''**

''பயங்கர ஐஸ்டா! செமத்தியான தூண்டில்...''

**''...நான் புதிதாக எழுதப்போகும் கதை ஒன்றின் கதாநாயகிக்கு சூர்யாவின் பெயரைப் பயன்படுத்தப் போகிறேன்...''**

''போதும்டா படிச்சது. இவ்வளவு போதும். இதுக்கு மேல் படிச்சா போரடிக்கும்! வேணும்னா நீ மனசுக்குள்ளேயே படிச்சுப் பாத்துக்க...'' என்றான் மனோஹர்.

சில நிமிடங்கள் கடிதத்தை வைத்யநாதன் மனத்திற்குள் படித்து முடித்தான்.

''நல்லா வந்திருக்கா?''

''ஏ க்ளாஸா வந்திருக்கு!''

''போஸ்ட் பண்ணிட வேண்டியது தானே?''

''ஓயெஸ்...''

''இனி பஜ்ஜி சாப்பிடலாம்! ஆளுக்கு நாலு தானே?''

''ஆமா... ரெண்டு வெங்காயம்... ரெண்டு மிளகா.''

''போதும் போதும்...''

''அது சரி வைத்யநாதா, சூர்யா வந்ததும் ஏன்டா அப்படிப் பயந்து தொடை நடுங்கறே...?''

''அதை பயம்னு சொல்ல முடியாது...''

''பயம் இல்லாட்டி மரியாதையா?''

''வெறும் மரியாதை இல்லை அது!''

''இப்படியே சொல்லிகிட்டு இரு. சட்டுனு எவனாவது க்ரீன்கார்ட் ஹோல்டர் பூந்து தூக்கிகிட்டுப் போயிடப்போறான்.''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்காது. எந்த க்ரீன்கார்ட் ஹோல்டரும் அவளை செட்டப் பண்ண முடியாது. எழுதி வச்சிக்க... சூர்யா எனக்குத்தான்!''

''பரவால்ல... கொஞ்சம் தைரியம் வந்திருக்காப்பல இருக்கு.''

''பெஞ்சமின், பெஞ்சமின்! அங்கே பார். உங்க ஆபீஸ் டைப்பிஸ்ட் மாதிரி இல்லே?'' - மனோஹர் கூவினான்.

பெஞ்சமின் அதிர்ச்சியுடன் பார்த்தான். ''அடப்பாவி! அவளேதாண்டா... வேற எவன் கூடயோ போறா!''

''போச்சுபோ... உன் கண்ல மண்ணைத் தூவிட்டா...''

''இரு இரு... அவசரப்படாதே. அவன் அவளோட கஸினா



இருந்தாலும் இருக்கலாம்!''

''கதையா? எங்கேயாவது கஸின் இப்படி இடிச்சுக்கிட்டே போவானா?''

''அதானே?''

''புத்தியைக் காட்டிட்டாடா! இனிமே அவளுக்கு ஒரு பைசா தரப் போறதில்லை... பாத்துடறேன்...''

## 1983. அக்டோபர் 17. திங்கட்கிழமை.

ஆபீசுக்குப் போன வைத்யநாதனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது! பழைய ரிக்கார்டுகள் அடுக்கப்பட்டிருந்த சிறிய அறை, சூர்யாவிற் காகவும் அவனுக்காகவும் உரிய அறையாக மாற்றப்பட்டிருந்தது. அறையில் திறந்த கதவுகளுக்கு எதிரில் அவளுடைய மேஜையும், அதற்கு இரண்டடி இடைவெளி விட்டு இடது பக்கம் அவனுடைய மேஜையும் போடப் பட்டிருந்தன. அறைக் கதவையொட்டி வெளியில் மேரிக்கு மேஜை போட்டிருந்தது. முன்பு சூர்யா அமர்ந்திருந்த இடத்தில் இப்போது ஆனந்தி...

இந்த மாற்றம் வைத்யநாதனுக்கு போனஸ் மாதிரி சந்தோஷத்தைத் தந்தது! புதிய அறை, புதிய அத்தியாயத்தைத் துவக்கப் போகிறது என்பது அவனுக்குக் கண்கூடாகத் தெரிந்தது. மெதுவாகச் சுழன்று கொண்டிருந்த மின்விசிறியின்கீழ் சூர்யாவின் வருகைக்காக வைத்யநாதன் காத்துக் கொண்டிருந்தான், நாளை லலிதாவின் இரண்டாவது கடிதம் வந்து சேர்ந்து விடும் என்ற கனிதக் கற்பனையோடு.

## 1983. அக்டோபர் 18. செவ்வாய்க்கிழமை.

லலிதாவின் கடிதத்தை சூர்யா அரைநிமிடத்தில் படித்துவிட்டுத் திருப்பித் தந்தாள். கடிதத்தை அவள் முழுவதும் படித்தாளா என்ற சந்தேகம் வந்தது வைத்யநாதனுக்கு. திடீரென இன்னொரு பெண் ஒருவருக்கு எழுதும் கடிதத்தைப் படிப்பதில் அவளுக்கு விருப்பம் இல்லையோ என்று நினைத்தான். சூர்யா ஒரு லெட்டர் விடாமல் படித்து விடுவாள் என்ற நம்பிக்கையில்தானே இந்தநாடகம் போடப்படுகிறது? நாடகமே அவளுக்காகத்தானே என்றெல்லாம் வைத்யநாதன் எண்ணிக் குழம்பினான். அவனுடைய நாடக மேடை லேசாக ஆட்டம் கண்டிருந்தது!

மதியம் உணவு வேளையின்போதாவது லலிதாவின் கடிதம் குறித்து சூர்யா ஏதாவது பேசுவானா என்று வைத்யநாதன் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான். வேறு பல விஷயங்கள் பற்றியெல்லாம் சூர்யா எப்போதும் போல சகஜமாகப் பேசினான். ஆனால், லலிதாவைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை. வைத்யநாதனுக்கு உணர்ச்சிகள் படபடக்க ஆரம்பத்துவிட்டன.

இது பற்றி பெஞ்சமினுடன் பேச வேண்டும் என்ற துடிப்பில், மாலை மிகமிக வேகமாக வைத்யநாதன் அறைக்குத் திரும்பினான். ஆனால், அவனுடைய கவலையை எதிர்நோக்குகிற நிலையில் பெஞ்சமின் இல்லை. அவனுடைய கவலை அவனுக்கு!

பெஞ்சமின் சலிப்புடன் சொன்னான்: ''அட.... போடா! நீ வேற... சும்மா தொணதொணன்னு எதையாவது கற்பனை பண்ணிக்கிட்டு என் உசிரை வாங்காத... இந்த லெட்டரைக் கையில வாங்கினாளா, இல்லையா?''

''படிச்சாளா இல்லையான்னு தெரியலையே! ஒரு செகண்ட்ல திருப்பித் தந்துட்டா!''

''அதெல்லாம் படிச்சிருப்பா. பெரிய ஆள் அவ!''

''படிச்சிட்டு ஒரு வார்த்தைகூட அதைப் பத்திப் பேசலைடா அவ!''

''அதாண்டா சூர்யா!''

''என்னமோ எனக்குத் திடீர்னு ஒரு மாதிரி பயமா இருக்கு!''

''பயமா இருந்தா பால் குடிச்சிட்டுப் படு! என்னைப் போட்டு அறுக்காதே! நானே ரொம்ப வெக்ஸ் ஆகிப் போய் கிடக்கேன்...! இவன்வேற...''

**1983. அக்டோபர் 20. வியாழக்கிழமை.**

பெஞ்சமின் காலையில் வெகு சீக்கிரமாகவே எழுந்து, குளித்து ஆபீஸ் போய் விட்டான்.

வைத்யநாதன் மனோஹரைக் கேட்டான்: ''எங்கடா அவன் - ரொம்ப அவசரமா போறான்?''

''தெரியலையே! ஆபீசுக்குத்தான் போறதா சொல்லிவிட்டுப் போனான். எங்கே போறானோ?''

''சரி... இந்த திருமுல்லைவாயில் கோவில் எங்கே இருக்கு?''

''என்ன திடீர்னு?''



''அன்னிக்கே போகணும்னு நினைச்சேன். மறந்துபோச்சு. இந்த ஸண்டே போயிட்டு வந்துரலாம்னு பார்க்கறேன்.''

''எங்கேயோ அம்பத்தூர் தாண்டி இருக்கு. ஈஸியா விசாரிச்சுப் போயிடலாம். வரட்டுமா.. ஈவினிங் பார்ப்போம்...''

''நேத்திக்கு மூணாவது லெட்டரை போஸ்ட் பண்ணியாச்சா?''

''முதல் வேலையே அதான். இன்னிக்கி டெலிவரியாயிடும். போய்ப்பார்!''

''என்னவோ... ஆபீஸ் போறதுக்கே என்னமோ போல் இருக்கு எனக்கு... ஒரு மாதிரி ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கு.''

''எனக்கும் அப்படித்தான் இருக்கு! நாளைக்கு கான்பூர் டெஸ்ட் ஆரம்பிக்கிறான். எவனோ மார்ஷல்னு ஒருத்தன் இருக்கானாம். நம்ம பசங்களை உதைச்சுத் தின்னப்போறதா பேசிக்கிறானுங்க! ஒரே பயம்மா இருக்கு. வரட்டுமா?''

''ஓயெஸ்...!''

ஒன்பது ஐம்பதுக்கே ஆபீஸ் போய்ச் சேர்ந்தபோது, சூர்யா ஸீட்டில் இருந்தான்! வகுப்பிற்குத் தாமதமாகப் போக நேர்ந்த பள்ளி மாணவன் போல வைத்யநாதன் பயந்து போனான்.

'குட் மார்னிங்' சொல்லிவிட்டு அடக்கத்துடன் தன்னுடைய ஸீட்டில் உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு வேலையே ஓடவில்லை. வேலையில் ஒரு கண்ணும், சூர்யாவில் ஒரு கண்ணுமாக இருந்தான். யாராவது உள்ளே வந்தாலும் லெட்டர் வருகிறதா என்று திரும்பிப் பார்த்தான்.

அன்று பூராவும் லெட்டர் வரவில்லை. வைத்யநாதனுக்கு எரிச்சலான எரிச்சல். பயங்கர டென்ஷன். மிகுந்த ஏமாற்ற உணர்வோடு மாலை ஆபீஸைவிட்டுக் கிளம்ப எழுந்தபோது சூர்யா கேட்டான்: ''என்ன... லலிதாவைப் பார்க்கறதுக்கா?''

என்ன பதில் சொல்கிறோம் என்ற பிரக்ஞையே இல்லாமல் வைத்யநாதன் சொன்னான்: ''ஆமாம் மேடம்!''

''லலிதா அப்புறமா டெலிபோன் பண்ணக் காணோம்?''

''நான் தான் போன் பண்ணக்கூடாதுன்னு சொல்லிட்டேன் மேடம்!''

''ஸோ வாட்? அப்படியெல்லாம் சொல்லாதீங்க வைத்யநாதன். போன் பண்றதில் என்ன தப்பு..? ஓகே. கோ அன் ஹாவ் யுவர் ஃபன்!...'' என்றாள்.

''தாங்க்யூ மேடம்!''

இருண்டிருந்த வானம் பளீரெனப் பிரகாசமாகி விட்டாற்போலிருந்தது வைத்யநாதனுக்கு! படிகளில் வேகமாக இறங்கி ஓடினான்.

### 1983. அக்டோபர் 21. வெள்ளிக்கிழமை.

முற்பகல் பதினொன்று. லலிதா லெட்டர் காலை டெலிவரியில் வரவில்லை. கண்டிப்பாகப் பகல் டெலிவரியில் வரப்போகிறது என்று வைத்யநாதன் காத்திருந்தான். அப்போது அந்தக் கட்டடத்தின் கீழ்தளத்திற்கு ஏதோ ஒரு வேலையாகப் போயிருந்த காதர், தலையைச் சொறிந்தபடியே வந்தான்.

''வைத்யநாதன் ஸார்! உங்களைப் பாக்கறதுக்கு யாரோ வந்திருக்காங்க... க்ரவுண்ட் ஃப்ளோர்ல உங்களுக்காக வெய்ட் பண்றாங்க'' என்றான்.

வைத்யநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனைத்தேடி யார் வந்திருக்கப் போகிறார்கள்?

சூர்யாவிடம் சொல்லிவிட்டு வேகமாகக் கீழே போனான். யாரையும் காணோம். அங்கே இருந்தவர்களிடம் கேட்டான். யாரும் தன்னைத் தேடிக் கொண்டு வரவில்லை என்றார்கள். வைத்யநாதனுக்கு வியப்பாக இருந்தது. பின் எப்படி காதர் வந்து தன்னிடம் சொன்னான்? வேறு யாரிடமோ சொல்ல வேண்டியதைத் தவறாகத் தன்னிடம் சொல்லிவிட்டானா? அப்படித்தான் இருக்கும். முட்டாள்! பளிச்சென்று அவனுடைய மனத்தில் ஒரு வால் நட்சத்திரம் மின்னியது! தன்னுடை ஸீட்டிற்குச் சிறிது சாவகாசமாய்ப் போகலாம் என்று நினைத்தான். நேராகக் கேன்ட்டீன் போனான். ஒரு காபி சாப்பிட்டான். நிதானமாக டாய்லெட் போய்விட்டுப் படிகளில் ஏறினான்.

மூக்குக்கண்ணாடியைக் கழற்றி முகத்தைத் துடைத்துக் கொண்டு ஸீட்டில் போய் உட்கார்ந்தான். நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடியபடி முற்றிலும் புதிய சொருபத்துடன் சூர்யா, வைத்யநாதனின் வருகைக்காகக் காத்திருந்தவள் போல் இருந்தாள்.

வைத்யநாதன் ஸீட்டில் வந்து உட்காரும் சப்தம் கேட்டது. கண்களைத் திறக்காமலேயே அவனைக் கேட்டாள்: ''வந்தது யார் மிஸ்டர் வைத்யநாதன்?''

''லலிதாதான் மேடம்! ஒரு முக்கியமான விஷயமா வந்திருந்தா. உடனே போயிட்டா!''



சதுரங்கத்தில் வலிமைமிக்க ஒரு காய் எதிர்த் தரப்புக் காயை மிகச் சூட்சுமமாகத் தாக்கி விழ்த்தி விட்டது!

-இது தெரியாமல் வைத்யநாதன், கிடைத்த ஓர் அருமையான சந்தர்ப்பத்தைத் தான் திறமையுடன் உபயோகித்து விட்டதாக எண்ணி மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தான்! இனி கடிதமும் வந்துவிடும் என்ற ஆனந்தத்தில் மிதந்தான்!



சூர்யா பல நிமிஷங்களுக்கு மௌனமாக இருந்தாள். பாம்பின் சீற்றம் போல பெருமூச்சு அவளிடமிருந்து நெருப்புப் போல தெறித்தது. கண்களை மூடிக் கொண்டே வைத்யநாதனைக் கூப்பிட்டாள்.

''யெஸ் மேடம்'' என்றான் பணிவாக.

'' ஐ'ம் நாட் ஃபீலிங் வெல்... அதனால் நான் ஹாஸ்டலுக்குப் போறேன். எனக்கு நீங்க ஒரு உதவி செய்ய முடியுமா?''

''சொல்லுங்க மேடம்!''

''ஈவினிங் அஞ்சரை மணிக்கு என்னை நீங்க சந்திக்க முடியுமா?''

வைத்யநாதனுக்கு நம்பவே முடியவில்லை. சூர்யாவா அவனை சந்திக்கக் கூப்படுகிறாள்? அவனுக்குள் உணர்ச்சிகள் சிலிர்த்துக் கொண்டன. தலைக்குள் பிரமாண்ட பாராசூட் விரிவது போலிருந்தது.

''கண்டிப்பா சந்திக்கிறேன் மேடம்!''

''நான் அஞ்சு நாற்பதுக்குத்தான் வருவேன். ஆனால், நீங்க பத்து நிமிஷம் முன்னாடியே இருக்கணும்!''

''எங்கே வந்து மீட் பண்ணணும் மேடம்?''

''யுனிவர்ஸிட்டி எக்ஸாமினேஷன் ஹாலுக்கு எதிர்லே...''

''திருவள்ளுவர் சிலைக்குப் பின்னாடி?''

''யா!''

''வெய்ட் பண்றேன் மேடம்!''

சூர்யா இன்ட்டர்காமில் பேசினாள். சிறிது உடம்பு சரியாக இல்லாததால் தான் போவதாகச் சொன்னாள். காலையில் வந்து விடுவேன் என்றாள்.

''காதர்!'' - சூர்யா கூப்பிட்டாள்.

''அம்மா...'' -காதர் ஓடி வந்தான்.

''கீழே கார் வந்து நின்னதும் என்னைக் கூப்பிடு.''

''இதோ மேடம்.''

காதர் வேகமாக ஓடினான். சூர்யா மிகுந்த விசனத்துடன் காத்திருந்தாள். அவள் முகம் அபாயகரமாகச் சிவந்திருந்தது. சினம் மூண்ட அவளின் கண்கள் நிலைகுலைந்திருந்தன.

''அம்மா! கார் ரெடி.''

சூர்யா விருட்டென்று எழுந்துபோய்விட்டாள். வைத்யநாதனுக்கு வேலையே ஓடவில்லை. சூர்யா எதற்காகத் தன்னைச் சந்திக்கப் போகிறாள் என்பதை அவனால் தெரிந்து கொள்ளவே முடியவில்லை. 'சூர்யா என்னை விரும்புகிறாளா?' என்ற கேள்விதான் திரும்பத் திரும்ப அவனுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தது. 'மாலை ஐந்தரை மணிக்குள் தெரிந்துவிடும்!' என்று மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

பகல் டெலிவரியில் லலிதா கடிதம் வந்தது! வைத்யநாதன் பிரிக்காமல் கடிதத்தை பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். இனி இந்த மாதிரி கடிதங்கள்கூடத் தேவையில்லாமல் போகலாம் என நினைத்தான்!

**மா**லை மணி ஐந்தாகியது. வைத்யநாதன் ஓடிப்போய் டாய்லெட்டில் முகம் கழுவிக் கொண்டான். கண்ணாடி பார்த்துத் தலை வாரினான். அவசரப்படாமல் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான். மணி 5.10 ஆகியிருந்தது. இரண்டு பஸ்களை போகவிட்டு நின்றான். கல்ச்சுரல் அகடமியிலிருந்து வினோத சிறுமிகள் வெளியேறிக் கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்தான். மணி 5.15. சில நிமிடங்களில் வந்த பஸ்ஸில் ஏறி நின்றான்.

திருவள்ளுவர் சிலைக்கு எதிரில் அவன் இறங்கியபோது மணி 5.20. சாலையைக் கடந்து போனான். இளம் மரங்கள் முற்றிலும் சோபிதம் அடைந்திருந்தன. பல்கலைத் தேர்வு மண்டபத்தைத் திரும்பிப் பார்த்தான். அதன் நெடிய தூண்களில் பண்டைய ஆங்கிலேய நாகரிகம் அப்படியே பொருந்தி இருந்தது. தூரக்கடலில் வரைந்த சித்திரமாகக் கப்பல் வரிசை தெரிந்தது. சூர்யாவுடன் ஒரு நீண்ட கப்பல் பயணம் போக வேண்டுமென்று நினைத்தான்! தன்னுடைய குற்றால அருவிகளை நினைத்தான். மலைமேல் ஓங்கி வளர்ந்திருக்கும் மங்குஸ்தான் மரங்களை எண்ணினான். செண்பக அருவிக்கரையில் மணக்கும் நன்னாரி வேர்களை எண்ணினான். தேனருவியின் திண்மையை நினைத்தான். மணி 5.40...



**ஆ**ட்டோவில் வந்து இறங்கிய அந்தப் பெண்ணைப் பார்த்து வைத்யநாதன் பிரமித்து விட்டான்! 'ஷீ இஸ் சூர்யா! ஒ விட்டின் கேர்ள்!' வைத்யநாதனுக்கு அவளை நோக்கி ஓட வேண்டும் போலிருந்தது. முற்றிலும் மாறுபட்ட தோற்றத்தில் சூர்யா வந்தாள். பூனையின் மென்மையான - சன்னமான வால்கள் போன்ற இரட்டைப் பின்னல், ரிப்பன்களால் மடித்துக் கட்டப்பட்டிருந்தது. கடல் நீலத்தில் உறுதியான தையல்களில் ஜீன்ஸ், கைத்தறித் துணியில் நூதனமான வடிவத்தில் பழுப்பு வர்ண ஷர்ட்-நிறைய பொத்தான்களுடன். செவிகள், தோடுகள் இல்லாமல் நேர்த்தியான இளம் பனை ஓலையில் கத்தரித்துப் பொருத்தப்பட்ட பரிசுத்தத்தில்... நெற்றியில் சாந்து இல்லை... பார்க்கப் பார்க்க வைத்யநாதனின் உணர்வுகள் அந்திமந்தாரையாக மலர்ந்தன...

''குட் ஈவினிங் மிஸ்டர் வைத்யநாதன்!''

''குட் ஈவினிங்...''

''அந்த மரத்தின் கீழ் உட்கார்ந்து கொள்ளலாமா?''

''ஒயெஸ்...''

இருவரும் தள்ளித் தள்ளி உட்கார்ந்து கொண்டார்கள். வைத்யநாதன் மிகவும் கூர்மையாக இருந்தான்.

''இப்ப உடம்பு பரவாயில்லையா?'' -மெதுவாகக் கேட்டான்.

''யா!''

சட்டென வைத்யநாதனுக்கு - சூர்யா போன அப்புறம் வந்த லலிதா கடிதம் ஞாபகம் வந்தது.

''இன்னிக்கு மத்தியானம் லலிதாகிட்டேயிருந்து லெட்டர் வந்தது மேடம்...'' என்றான்.

மிக ஒய்யாரமாக அதைச் செவிமடுத்த சூர்யா, மிக அழகான பாவனையில் பேசினாள்: ''மிஸ்டர் வைத்யநாதன்! இதைப் பற்றித்தான் நான் பேச வந்திருக்கிறேன். அதற்கு முன்னால் ஒரு விஷயம்...''-சிறிது நிதானித்து விட்டுச் சொன்னாள்: ''இன்று காலை-கீழே உங்களைத் தேடி யாரோ வந்திருப்பதாக காதர் வந்து உங்களிடம் சொன்னான் இல்லையா?''

''யெஸ்!''

''அப்படி அவனை உங்களிடம் பொய் சொல்லச் சொன்னது நான்தான்!''

வைத்யநாதன் திருதிருவென விழித்தான்.

''அந்த வாய்ப்பை நீங்கள் எப்படி பயன்படுத்தப் போகிறீர்கள்

என்பதைக் கணக்கிடுவதற்காகவே அந்தப் பொய்யை நான் சிருஷ்டித்தேன்!''

வைத்யநாதன் கூண்டில் மாட்டியவன் போல திகைத்தான்.

''ஏன் தெரியுமா வைத்யநாதன்? இரண்டாவதாக ஒரு லெட்டர் லலிதாவிடம் இருந்து வந்ததாக என்னிடம் காட்டினீர்களே, அந்தக் கடிதத்தின் சில அதீதமான வரிகள் என்னைச் சந்தேகமடையச் செய்துவிட்டன!''

வைத்யநாதன் அவமானத்தால் நடுங்கினான்.

''பெசன்ட் நகரில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜர்னலிஸம் படித்த ஒரு பட்டணத்துப் பெண் எழுதும் கடிதம் அல்ல அது! வெறும் குப்பை அது! எனவே, அந்தக் கடிதத்தின் உண்மை குறித்து நான் சந்தேகப்பட்டேன்! நிஜமாகவே லலிதா என்றொரு சிநேகிதி உங்களுக்கு இருக்கிறாளா என்பதைத் தெரிந்து கொள்ள சில கணிதங்களை என் மனத்தில் தயாரித்தேன் மிஸ்டர் வைத்யநாதன். என்னுடைய முதல் கணிதத்திலேயே நீங்கள் கலைந்து விட்டீர்கள்! கீழே போய்வந்து, லலிதாதான் உங்களைப் பார்ப்பதற்கு வந்திருப்பதாக உங்கள் கணிதத்தை நடத்திக் காட்டி என்னுடைய கணிதத்தில் சிக்கிக் கொண்டீர்கள். நாட் ஒன்லி தட்...! நீங்கள் எழுந்து கீழே போனதும் உங்களுக்கு ஒரு போன் வந்தது... போனில் அப்போது உங்களை அழைத்தது யார் தெரியுமா?''

வைத்யநாதன் அவமானத்தைத் தாங்க முடியாமல் தலை குனிந்திருந்தான்.

''உங்களுடைய கற்பனை சிநேகிதி...!''

வைத்யநாதனின் கண்கள் கலங்கிச் சிவந்தன.

''இன்று மாலை மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பார்க்கில் சந்திப்பதாகச் சொல்லியிருந்த அந்தப் பட்டதாரி ஜர்னலிஸ்ட்...!''

வைத்யநாதனின் கண்களிலிருந்து நீர் தெறித்தது.

''வெரி க்ரேட் லலிதா! யெஸ்... ஷி இஸ் வெரி க்ரேட்! இல்லாவிட்டால் கீழ் தளத்தில் வைத்யநாதனோடு பேசிக் கொண்டே டெலிபோனிலும் 'வைத்யநாதன் இருக்கிறாரா?' என்று கேட்க முடியுமா...?''

வைத்யநாதன் விம்மி விம்மி அழுதான். சூர்யா அவன் அழுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். காமராஜர் சாலையில் வாகனங்கள் பறந்து கொண்டிருந்தன. சில நிமிஷங்களுக்கு மௌனமாக இருந்துவிட்டு சூர்யா கேட்டாள்: ''சொல்லுங்கள். யார் அந்த லலிதா? டெலிபோனில் என்னுடன் பேசிய அந்த லலிதா யார்?



உண்மையில் அது பெண்ணின் குரல்தானா; இல்லை, குரலை மாற்றிக் கொண்டு உங்களுடைய நண்பர்களே யாராவது பேசினார்களா? அதேபோல் இந்தக் கடிதங்களை லலிதா என்ற பெயரில் எழுதுவது யார்? பெண்தானா? இல்லை. அதுவும் உங்கள் நண்பர் ஒருவரின் கைவரிசையா? சொல்லுங்கள் வைத்யநாதன்! கீழே போய் வந்து லலிதாவுடன் பேசிக் கொண்டிருந்ததாக ஏன் என்னிடம் பொய் சொன்னீர்கள்? எதற்காக இந்த நாடகம்? உண்மையில் உங்களுக்கு லலிதா என்ற பெயரில் ஒரு சிநேகிதி இருக்கிறாளா, இல்லையா?''

முற்றிலும் சூர்யாவிடம் அடிபணிந்து விட்ட தன்மையில், 'இல்லை'யென்று தலையை அசைத்தான் வைத்யநாதன்!

அந்த சோகமான உண்மையை சூர்யா துக்கத்துடன் பெற்றுக் கொண்டாள். ''ஸோ, எல்லாம் பொய்! கற்பனை! நாடகம்! மோசடி! அப்படித்தானே மிஸ்டர் வைத்யநாதன்?''

அவன் முகத்தை முழங்கால்களில் புதைத்துக் கொண்டிருந்தான். லேசாக உடல் குலுங்கியவாறு இருந்தது.

சூர்யா இன்னும் தணியவில்லை. ''எப்படி, அவளுடைய பரிசுத்தமான காதலை இன்னும் நீங்கள் ஏற்றுக் கொண்டதாக ஒரு தடவைகூட வாய் திறந்து சொல்லாமலிருப்பது அவளை மிகவும் கவலை அடையச் செய்கிறதோ?''

வைத்யநாதன் நிமிரவே இல்லை.

''உங்களுடைய அறைக்கு வந்த அவளை உடனே வீட்டுக்குப் போகச் சொல்லி, அவளை வெளியில் அனுப்பி விட்ட உங்கள் நேர்மை வேறு யாருக்கும் வராதாமோ?! - மிகவும் சோகமான நாடகம் வைத்யநாதன். சொல்லுங்கள். என்னிடம் எதற்காக இந்த நாடகம் ஆடினீர்கள்? என்னை ஏன் இப்படியெல்லாம் ஏமாற்றினீர்கள்? உறுதியாக - இந்த நாடகத்திற்கு ஒரு பெரிய காரணம் இருந்தே ஆகணும்! என்ன அந்தக் காரணம்? என்னிடம் உங்களைப் பற்றி பெரிய இமேஜை வளர்க்கிற மாதிரி ஃபோர்ஜரி லெட்டர்ஸ் எழுதியது ஏன்? இதற்கெல்லாம் காரணமான உண்மைகளை இன்று தெரிந்து கொள்ளாமல் உங்களை விடவே மாட்டேன்...! ப்ளீஸ், கமான்...''

வைத்யநாதனில் விம்மல் அடங்கியிருந்தது. மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, கண்களையும் கண்ணாடியையும் துடைத்தான். தாட்சண்யம் இல்லாமல் சூர்யா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். காற்று மெலிதாக வீசியது. வைத்யநாதனுக்குள் முடங்கிப் போயிருந்த ஓர் இறுகலான படிமம் நெகிழத் துவங்கியது. உலகக் கறையற்ற மகத்தான நிராதரவான வீரியம் சற்றே வியாபிக்க

ஆரம்பித்தது!

''சொல்லுங்கள்... லலிதா என்ற பெயரில் கடிதங்கள் எழுதிய நபர் யார்?''

''என்னுடைய ஃப்ரெண்ட் பெஞ்சமின்!''

''லலிதா என்று அறிமுகம் செய்து கொண்டு என்னுடன் டெலிபோனில் பேசிய அந்த நபர் யார்?''

''என்னுடைய ஃப்ரெண்ட் பெஞ்சமின்!''

''இவ்வளவு பெரிய பொய்களை என்னிடம் சொன்னதற்கு உறுதியாகக் காரணங்கள் இருக்க வேண்டும்!''

வைத்யநாதன் பெருமூச்சுடன் பதில் சொன்னான்: ''ஆம். காரணம் இருக்கிறது. அந்தக் காரணம் - நீங்கள் தான்!''

''நானா..?''

''யெஸ்...!''

''எந்த வழியில் காரணமானேன் என்று சொல்லுங்கள்!''

''எனக்கு யாராவது' சிநேகிதிகள் இருக்கிறார்களா என்று நீங்கள்தான் என்னைக் கேட்டுக் கொண்டே இருந்தீர்கள்!''

''ஸோ வாட் ஸார்? ஸோ வாட்?''

''பல தடவை அந்த மாதிரி நீங்கள் என்னிடம் கேட்டது தப்பு!''

''நான் கேட்டது தப்பில்லை வைத்யநாதன். ஆனால், அது தப்பாகிவிட்டது! எதற்காக அந்த மாதிரி நான் உங்களிடம் கேட்டேன் தெரியுமா?''

''சொல்லுங்கள்...''

''என் அருகாமையில் உங்களுக்கு ஒரு சிலிர்ப்பு இருந்தது!''

''ஒப்புக் கொள்கிறேன்.''

''எப்போதுமே நான் உங்களுக்கு ஒரு நவீனப் பெண்ணாகவே இருந்தேன்!''

''அப்படித்தான்!''

''நிர்வாக விஷயங்களுக்குக்கூட என்னை இலகுவாக அணுக உங்களால் முடியவில்லை...!''

''அதற்கு நான் பிறந்து வளர்ந்த சூழ்நிலையே காரணம்.''

''உங்கள் மனத்தில் கவிந்திருக்கும் அந்தச் சூழ்நிலையை சுத்தமாகக் கலைக்க நினைத்தேன்!''

''அப்படி நீங்கள் நினைத்தது தப்பில்லை!''

''என் உருவில் பெண் என்பவளுடனேயே உங்கள் மனத்தில்



இருக்கும் இடைவெளியை அகற்ற விரும்பினேன்!''

''அதுவும் தப்பில்லை!''

''அந்த இடைவெளியை அகற்ற எனக்குப் பரிச்சயமான ஸ்டைலில் உங்களை அணுகினேன்! என்னுடன் உங்களுக்கு ஒரு நெருக்கம் வர வேண்டும் என்ற நோக்கத்தில், பெண் சிநேகிதி யாரும் இருக்கிறார்களா என்ற கேள்விப் பதங்களை வேறு வழியில்லாமல் நான் உபயோகிக்க வேண்டியதாகிவிட்டது மிஸ்டர் வைத்யநாதன்!''

''அந்தக் கேள்விப் பதங்கள்தான் என்னை வேறொரு தடத்தில் செலுத்தி விட்டது.''

''அது என்னுடைய தப்பு இல்லை...!''

''என்னுடைய தப்பும் இல்லை...!''

''ப்ளீஸ், அந்த மாதிரிப் பேசாதீர்கள். நான் கேட்டதற்காக, ஏன் பொய்யான பதில்களைச் சொல்ல வேண்டும்?''

''கேள்விகள் பொய்யாக இருந்ததால்தான் பதில்களும் பொய்யாகிவிட்டன! ஆனால் என்னை நீங்கள் அப்படிப் பொய்யாகக் கேள்விகள் கேட்டதற்கான சில உண்மைகளைச் சொன்னீர்கள் இல்லையா? அதேபோல், நான் பொய்யாகச் சில பதில்களை ஒரு நாடகம் போல் உங்களிடம் நடத்தியதற்கும் ஒரு பெரிய உண்மை இருக்கிறது...!''

''அதுதான் என்னவென்று நான் கேட்கிறேன்.''

பளீரென வைத்யநாதனின் உலகம் பிரமாண்டமாக விரிந்தது! சுற்றிலும் குற்றாலமலை வரிசை பசுமையாகத் தெரிந்தது. நீலக்கடல் காலடியைச் சூழ்ந்தது. ஏதோ ஓர் ஆயிரங்கால் காதல் மண்டபத்தில் நிற்பது போலிருந்தது!

''தெரியவில்லையா சூர்யா அந்த உண்மை?''

சூர்யா கண்களை மூடிக் கொண்டிருந்தாள்.

''புரியவில்லையா சூர்யா என் மனம்?''

சூர்யா இறுகப் பற்களைக் கடித்துக் கொண்டிருந்தாள். வைத்யநாதனின் நரம்புகள் குழைந்து தணிந்தன. உணர்வுப் பெருக்கு உயர்ந்து குரலை அடைத்தது. கண்கள் பரவசமாகக் கலங்கிச் சிவந்தன. ஒரு புஷ்பத்தை எடுத்துக் கொள்கிற நேசத் தன்மையில் சூர்யாவின் மென்மையான கரத்தைப் பற்றிக் கொண்டு வைத்யநாதன் மெல்லிய குரலில் சொன்னான்:

''ஐ லவ் யு சூர்யா! ஐ லவ் யு!''

இதைக் கேட்டு சூர்யா அடிமன வேதனையுடன் கண்களைத் திறந்தாள். அவளின் கண்கள் பரிசுத்தமான படிகம் போல் இறுக்கத்தோடு ஒளிர்ந்தன.




சில நிமிஷங்களுக்கு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள் சூர்யாவும் வைத்யநாதனும். சூர்யாவின் விழிகூட அசையவில்லை. அவளுடைய மனத்தில் பற்பல உணர்வுகள் பொங்கி நுரைத்தாலும், கண்களில் அவை கடுகளவும் பிரதிபலிக்கவில்லை. நிசப்தமாக இருந்தாள். வைத்யநாதன் கைகட்டி இறுக்கமாக உட்கார்ந்திருந்தான். லேசாக இருள் கவிந்திருந்தது. சாலையில் வாகனங்களின் நெரிசல் குறைந்திருந்தது.

சூர்யாவின் விழிகள் சலனமடைந்தன. ஒரு துக்கம் அவளுடைய இளமையான முகத்தில் மெலிதாகப் படிந்தது. இரக்கம் சொட்டும் தொனியில் மெதுவாகச் சொன்னாள்: ''ஸாரி மிஸ்டர் வைத்யநாதன்.. உங்களை நினைச்சு நான் பரிதாபப்படுகிறேன்... உங்களுக்காக ஆண்டவனை வேண்டிக்கிறேன்.. ஏன் தெரியுமா...? உங்கள் காதலை நான் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. காரணம் நான் திருமணமானவள்! என் திருமணம் கடந்த வருடம் டிசம்பர் ஐந்தாம் தேதி பம்பாயில் நடந்தது. இப்போ என் கணவர் பம்பாயில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். வரும் ஏப்ரலில் அவர் வேலை முடிஞ்சுடும். அதுக்கப்புறம் நாங்கள் சேர்ந்துகொள்வோம்! அதனாலே தயவுசெய்து என்னை மன்னிச்சுடுங்க... உங்க காதலை நான்..''

சூர்யா சொல்ல வந்ததை முழுவதுமாக சொல்லி முடிக்கவில்லை. விருட்டென்று வைத்யநாதன் எழுந்துவிட்டான்! சகலமும் பறிபோய் விட்டாற் போன்ற அவமானத்தில் ஒரு கணம் சூர்யாவைப் பார்த்தான். வேகமாக மணலில் இறங்கி கடலை நோக்கி நடந்தான். சூர்யா எழுந்து நின்று அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். தூரத்தில் கரையில் நின்றான் வைத்யநாதன். கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட - தொலை கடலையே பார்த்து நின்றான். அவமானத்தால் அவனின் உடலில் ஒவ்வொரு பகுதியும் துடித்தன. நெஞ்செல்லாம் வலித்தது. தலை பூராவும் நெருப்பு பற்றிக் கொண்டது போலிருந்தது. வேதனையுடன் திரும்பிப் பார்த்தான். வெகு தூரத்தில் சிறு மரத்தின் கீழ் சூர்யா தனியாகத் தெரிந்தாள். ஏக்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். கடலுக்குள் பாய்ந்து விடலாம் போலிருந்தது. மொத்த உலகமும் தன்னை நிராதரவாக நிறுத்தி விட்டாற்போன்ற கலவரம் உணர்வுகளைக் குலுக்கி அசைத்தது. ஏமாற்றத்தை அவனால் தாங்க முடியவில்லை.



எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் இறந்துவிட்ட அம்மாவை நினைத்தான். உடனே அவனின் உணர்வுகள் வெடித்துக் கொண்டன கடற்கரை மணலில் இருளில் விழுந்து கதறி அழுதான்.

வைத்யநாதனின் அறை ஜெனரல் ஆஸ்பிடலின் ஜெனரல் வார்ட் போலிருந்தது! தரையில் தலையணைகூட இல்லாமல் மனோஹர் சிலுவை போல் கிடந்தான். ஆபீஸ் போகாமல் டி.வி-யில் டெஸ்ட் மேட்ச் பார்த்துவிட்டுப் பேயறைந்தாற்போல் ஆகியிருந்தான். கிரீனிட்ஜ் அபாரமாக ரன் எடுத்திருந்த கான்பூர் டெஸ்ட் முதல் நாளே அவனைக் கதிகலங்க வைத்திருந்தது.

பெஞ்சமின் கட்டிலில் தலைகீழாகக் கிடந்தான். அவனுடைய கன்னத்தில் கொடுத்திருந்த வீரியமிக்க அறை இன்னும் அப்படியே கன்னத்தில் தேங்கியிருந்தது!

நினைக்க நினைக்க வைத்யநாதனுக்குக் கொதிப்புத் தணியவே இல்லை. சோர்ந்து படுத்திருந்தவன் மறுபடியும் வெறியுடன் எழுந்து கத்தினான்:

''அறிவுகெட்ட மடையா...! உன்னை எவண்டா போன் பண்ணச் சொன்னது? பெரிசா பேசறானாம் பொம்பளைக் குரல்ல! பேசி என் கழுத்தை அறுத்திட்டியேடா பாவி...!''

பெஞ்சமினும் கோபத்துடன் படுத்த படியே கத்தினான்: ''உன்னை எவண்டா கிழ போயிட்டு வந்து கப்ஸா அடிக்கச் சொன்னது? கொஞ்சமாவது மண்டையில மசால் இருந்தா அந்த மாதிரி அநியாயமா பொய் சொல்லியிருப்பியா நீ? மாட்டிக்கிட்ட... பாத்தியா அவளோட மூளையை... எப்படி உன்னை கபால்னு பிடிச்சாள்னு! போடா... போய் கழுத்ல மாட்டிக்கிட்டுத் தொங்குடா! லவ் பண்றானாம்... மானங் கெட்டவன். ஒருத்திக்குக் கல்யாணம் ஆயிடுச்சா இல்லையான்னுகூடத் தெரிஞ்சுக்காம குருட்டுப் பயலாட்டம் போய் விழுந்திருக்கான்... இந்த லட்சணத்ல இவருக்கு லவிதான்னு பெரிய ஃபெரண்ட் இருக்காளாம் - இவரைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு ஒத்தக் கால்ல நிக்கறாளாம்! போடா டேய்... ஃப்ராட் பயலே! ஒடுடா-உங்க ஊரைப் பாத்து!''

வைத்யநாதன் மேலும் உக்கிரமடைந்து படுத்திருந்த பெஞ்சமினை காலால் எட்டி எட்டி உதைத்தான். மனோஹர் சிலுவையிலிருந்து மீண்டு ஓடி வந்து வைத்யநாதனைப் பிடித்து இழுத்தான்.

''அட, ஏண்டா நீங்க ரெண்டு பேரும் அடிச்சுக்கிறீங்க...? சே! இன்னிக்கு விடிஞ்சதில் இருந்தே ஒண்ணும் சரியில்லை!''

''நான் ஏன்டா ஊரைப் பாத்து ஓடுறேன்? நீ ஓடு ஊரைப் பாத்து!''

''நீயா ஊருக்கு ஓடலைன்னா, அவ ஓட்டுவா உன்னை-ஊரை நோக்கி!''

''பாத்துரலாம் அதைத்தான்! அவ ஒண்ணும் எனக்கு முதலாளி இல்லை!''

''அதைத்தான் பாரேன்... பத்தே நாள்ல உன்னை ஊர்ல போய் மாடு மேய்க்கறதுக்கு விரட்டியடிக்கிறாளா இல்லையான்னு பாரேன்டா!''

''பாக்கலாமா?''

''பெட் கட்றீயா?'' - படாரென்று பெஞ்சமின் எழுந்து நின்றான்.

மனோஹருக்குப் பயங்கரமான எரிச்சல் வந்தது. ''ஏன்டா உசிரை வாங்குறீங்க... மணி பன்னிரண்டாகப் போகுது... பேசாமப் படுப்பானுங்களா... அர்த்த ராத்திரியிலே பெட் கட்றானுங்க!''

''அவன்தான்டா திருப்பித் திருப்பிச் சண்டைக்கு வரான்!'' - பெஞ்சமின் கத்தினான்.

''என்னைக் கேக்காம ஏன்டா போன் செஞ்சே?''-வைத்யநாதன் திருப்பிக் கத்தினான்.

''உன்னை எவன்டா கல்யாணம் ஆனவளை லவ் பண்ணச் சொன்னது?''

''நீ யார்டா அதைக் கேக்கறதுக்கு? எவளை வேண்டுமானாலும் நான் லவ் பண்ணுவேன்.''

''ஆமா, இவரு பெரிய ட்யூக் ஆஃப் விண்ட்ஸர்! எவளை வேணுமானாலும் லவ் பண்ணுவார்!''

''எல்லாப் பயல்களுமா சேந்து என் வாழ்க்கையைப் பாழாக்கிட்டீங்கடா...'' என்று சொல்லியபடி அழத் தொடங்கினான்.

''எல்லாம் தலையெழுத்து... இப்படி ஆகும்னு நெனைச்சிப் பாத்தோமா? என்னைக் கேட்டாக்க ஆரம்பமே சரியில்லைன்னுதான் சொல்வேன். பாட்டி செத்தப்பவே விஷயத்தை விட்டிருக்கணும்! ஆபீஸ்ல நீ அக்கம்பக்கத்ல சூர்யாவைப் பத்தி நல்லா கேட்டிருக்கணும்! அவளுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா இல்லையான்னு ஜாடையா விசாரிச்சிருக்கணும்! நீ ஒரு பயல் கூடப் பேசமாட்டே! ஊமைப் பயலே! விறைப்பா போறே, வரே... போ போ... போய் எண்ணெய் தேச்சு நல்லா தலை முழுகிட்டு ஆக வேண்டியதைப் பார்... மானங்கெட்டுப் போய் அழுதிட்டு இருக்கான்...''



பெஞ்சமின் போய் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். வைத்யநாதன் கதவைத் திறந்து வெளியில் போய் முகம் கழுவிவிட்டு உள்ளே வந்தான். துண்டை எடுத்து முகத்தைத் துடைத்தான். மனோஹரும் பெஞ்சமினும் மௌனமாக சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார்கள். வைத்யநாதன் ஷர்ட்டை எடுத்து மாட்டினான்.

''மனோஹரா, வர்றீயா... போய் பால் சாப்ட்டுட்டு வரலாம்.''

''ஓயெஸ்...!''

''என்னைக் கூப்பிட மாட்டீயா?''

-பெஞ்சமின் வருத்தத்துடன் கேட்டான்.

''இஷ்டமிருந்தா வா...''

பெஞ்சமினும் கிளம்ப, மூவரும் வெளியில் வந்தார்கள். காற்று ஜில்லென்று வீசியது. சிறிதுதூரத்திற்கு மூவரும் பேசாமல் நடந்தார்கள்.

''எனக்கு மட்டும் முதல்லேயே சந்தேகம்தான்டா... அவ கொண்டை போட்டிருந்ததைப் பார்த்ததும்!''

''எல்லாம் இப்பச் சொல்லு!''

-வைத்யநாதன் எரிச்சலோடு சொன்னான்.

''வைத்தி! நீ மட்டும் கீழே போயிட்டு வந்து, லலிதா கூடப் பேசிட்டு இருந்ததா கொஞ்சம் ரீல் விடாம இருந்திருந்தா கதையைக் கன்னாபின்னான்னு மாத்தி எப்படியாவது சமாளிச்சிருக்கலாம்..''

''சமாளிச்சு என்னடா பண்ண? கடைசியில பார்த்தா அவதான் கல்யாணமானவளா இருக்காளே...?''

''அதான் தீர்ந்து போன கேஸ் ஆச்சே... அதைச் சொல்லலை நான். அட்லீஸ்ட் - இப்ப பட்ட மாதிரி அவமானப்படாமே தப்பிச்சிருக்கலாமே...?''

''அது வாஸ்தவம்...''

''அவ வீட்டுக்காரன் என் பண்றானாம்?''

''ஏதோ ரிஸர்ச் பண்றானாம் பம்பாய்ல...!''

''சரி, அவன் என்னமும் பண்ணிட்டுப் போறான். நீ என்ன பண்ணப் போறே இனிமே?''

''தெரியலை....''

''பேசாம ராஜினாமா எழுதிக் குடுத்துடு. இத்தனை அவமானப்பட்ட அப்புறமும் எப்படி அவ முன்னாடி போய் தினமும் நிக்கறது?''

''ஆனா பெஞ்சமின்... இவ்வளவு மோசமா பொய் சொல்லி

அவளை நான் ஏமாத்தியிருந்தாலும், அதுக்காக சூர்யா என்னை ஒரு வார்த்தைகூட வித்தியாசமா பேசி என்னை இன்ஸல்ட் பண்ணலை... கொஞ்சம்கூட என்னை அவ ஹர்ட் பண்ணவே இல்லை தெரியுமா...? அந்த மென்மை கடுகளவுகூடக் குறையலை. அதை நெனைச்சாத்தான் என்னால தாங்கவே முடியலை. என்னவொரு இரக்கம்... என்னவொரு பணிவு... சே! நீ என்ன வேணாலும் சொல்லு. இன்னமும் நான் அவளை மதிக்கிறேன்... என்ன ஆனாலும் அவளை மட்டும் என்னால மறக்கவே முடியாது பெஞ்சமின். தட்ஸ் ஷ்யூர்!''

''என்னமோ அதெல்லாம் நடைமுறைக்கு வராது.''

பால் கடை வந்துவிட்டது.

''நாயர், மூணு கப் பால்!'' - மனோஹர் ஆர்டர் கொடுத்தான்.

''நாயர், எனக்குப் பால்ல ஒரு முட்டை அடிச்சிரு'' என்றான் பெஞ்சமின்.

''அப்ப எனக்கும் ஒரு முட்டை அடிச்சிடு நாயர். வைத்தி, உனக்கு முட்டை?''

''வேண்டாம்!''

''ரெண்டு முட்டை, ஒரு ப்ளெயினா ஸார்?''

''ஆமா...''

பால் குடித்துக் கொண்டே மனோஹர் சொன்னான்: ''பெஞ்சமின், நெஜமாவே நம்ம வைத்தியோட வாழ்க்கையை சினிமாவா எடுக்கலாம்டா. சூப்பரா வரும் படம்!''

''அதான் அன்னிக்கே சொல்லியிருக்கேனே! கொஞ்ச நாள் கழிச்சி பாக்யராஜைப் பாக்கப் போறதா... அதுவரைக்கும் பொறுமையா இரு. இப்ப நடந்த வரைக்கும் வச்சி முக்கால்வாசி கதை பண்ணிடலாம். அப்பறமா பாம்க்ரோவ்ல ரூம் போட்டு ஒரு மாசம் டிஸ்கஷன்! முழு ஸ்கிரிப்ட் ரெடி! உடனே ஸாங் கம்போஸிங்...!''

''ம்யூஸிக் இளையராஜாவா?''

''அவரு எதுக்கு? அதான் நான் இருக்கேனே! ஒஸிபிஸா, போனி எம், நம்ம அபா-இவனுங்களை ஒரு உல்டாப் பண்ணி, கொஞ்சம் வேலை தெரிஞ்சவனைக் கூப்ட்டு துட்டைக் குடுத்து கண்டக்ட் பண்ணச் சொல்லிட்டு, 'இசை: பெஞ்சமின்'னு டைட்டில் கார்ட் போட்டுட்டா தீர்ந்தது. என்ன பெரிய ம்யூஸிக்...''

''ஸாங் போட்டுடுவே உல்டா பண்ணி. பேக்ரவுண்ட் ம்யூஸிக்?''

''அது ரொம்ப ஈஸிரா! அங்கங்க பித்தோவன், மொஸார்ட். நம்ம வாத்யார் ஆனந்தஷங்கர் - அதையெல்லாம் ஸ்ப்ரே பண்ணிட்டா அவ்வளவுதான் க்ரவுண்ட் ம்யூசிக். பேத்தாஸ்ல லேசா ஷெனாய்!



க்ளோஸ்...''

''அட, ஏண்டா சும்மா மனக்கோட்டை கட்டித் தொலையறீங்க?''

''விட்ரா மனோஹர். இதெல்லாம் நாம ரெண்டு பேரும் தனியா இருக்கறப்ப பேசிப்போம். ஒத்துக்காது இவனுக்கு!''

அறைக்கு வந்து சேரும் வரை யாரும் பேசிக் கொள்ளவில்லை. வைத்யநாதன் படுக்கையை உதறி விரித்தான்.

''வைத்தி, அப்ப நீ வேலையை ராஜினாமா பண்றதா இல்லை?''

''இல்லை...''

''இவ்வளவு நடந்த அப்பறமும் சூர்யாவை நீ ஃபேஸ் பண்ணத்தான் போறே?''

''நிச்சயமா...''

''தொடர்ந்து அவளை லவ் பண்ணத்தான் போறே?''

''உறுதியா...''

''நீ இன்னும் சரியா உலகத்தைப் பத்தி தெரிஞ்சுக்கலை. அவ்வளவுதான் சொல்வேன். அப்புறம் உன் இஷ்டம்...''

''என்ன, தெரியாமப் போயிடுச்சு? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சொன்னியே-ட்யூக் ஆஃப் விண்ட்ஸர்னு, அந்த ட்யூக் ஆஃப் விண்ட்ஸர் செஞ்ச காரியத்தை நானும் செஞ்சிக் காட்றேண்டா!''

பெஞ்சமின் அதிர்ந்து விட்டான். ''படுபாவி... ஏதோ நான் ஒரு வயித்தெரிச்சல்ல சொன்னேண்டா அதை...''

''ஐ டேக் இட் சீரியஸ்லி!''

''வைத்யநாதா! கண்டிப்பா சொல்றேன், நீ போக நினைக்கிற வழி சரியானது இல்லை!''

''அந்த ட்யூக் ஆஃப் விண்ட்ஸர் போனால் மட்டும் அந்த வழி சரியாயிடுமோ?''

''வைத்யநாதா! இனிமே உன்னைக் கடவுளால்கூடக் காப்பாத்த முடியாது. தயவுசெஞ்சு நீ கோயிலுக்கெல்லாம் போகாத - இந்த மாதிரி அநியாயமால்லாம் பேசிட்டு...''

''சரி, போகலை. போதுமா?''

சட்டென அவர்களுக்குள் பேச்சு நின்று போயிற்று. அவரவர் படுக்கையில் மௌனமாகக் கிடந்தார்கள். விளக்கு ஒருவராலும் அணைக்கப்படாமல் விடியும் வரை எரிந்து கொண்டிருந்தது.

**1983. அக்டோபர் 22. சனிக்கிழமை.**

**வை**த்யநாதன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து

சோம்பல் முறித்தான். நேற்று நடந்ததெல்லாம் ஞாபகத்தில் வந்தது. எல்லாம் கனவாக இருந்தால் எப்படியிருக்கும் என நினைத்துப் பார்த்தான். தன் எதிர்காலம் என்ன ஆகுமென்ற கவலை ஏற்பட்டது. ஒரு வலிமைமிக்க, நிகரற்ற பெண்ணால் தான் போஷிக்கப்படக்கூடிய சாத்தியம் இல்லவே இல்லையா என்ற பயம் மனத்தை அழுத்தியது. சட்டென அவனுக்கு எல்லோர் மீதும் நம்பிக்கையின்மை வந்தது.

மெதுவாக காமராஜர் சாலை பஸ் ஸ்டாப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தான் வைத்யநாதன். சூர்யா வந்தாலும் வருவாளோ என்ற சந்தேகம் வந்தது. 'அவள்தான் இப்போதெல்லாம் நினைத்தால் காரில் பறந்து விடுகிறாளே' என்ற நினைப்பு வந்தது. 'அவளுக்கென்ன ஆபீஸர். பெரிய ரிஸர்ச் ஸ்காலர் மனைவி' என கோபத்துடன் நினைத்தான். தானும் ஏதாவது துறையில் ஆராய்ச்சி செய்யலாமா என்று யோசித்தான்! அப்பாவிடம் தனக்கு ஒரு சிறு பழைய கார் வாங்கித் தரச் சொல்லலாமா என்று எண்ணினான்! நினைத்தால் தான் சொந்தக் காரிலேயே செல்ல முடியும் என்ற செருக்கு வந்தது வைத்யநாதனுக்கு. ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

சுரங்கப் பாதையிலிருந்து வெளிப்பட்டு நடந்தபோது, மஞ்சள் வர்ணப் புடவை, கறுப்பு வர்ண ஜாக்கெட்டில் சூர்யா பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். ஒரு நிமிஷம் சிகரெட்டை கீழே எறிந்து விட கை நீண்டு விட்டது. சட்டென மனத்தை மாற்றிக் கொண்டான். 'சிகரெட் குடித்தால் கிழித்து விடுவாளோ?' என்ற அகங்காரம் வந்தது. மிக செயற்கையாக சிகரெட் புகையை ஆகாயத்தில் ஊதியபடி மெதுவாக அவளை நோக்கி நடந்தான்.

நேற்றைய நிகழ்ச்சிகளின் சாயல் துளியும் முகபாவனையில் இல்லாதவளாக சூர்யா மலர்ந்த முகத்துடன் சிரித்தாள். ''குட்மார்னிங்'' என்றாள். வைத்யநாதன் சிரிக்காமல் வெறுமனே, 'குட்மார்னிங்' சொன்னான்.

''பஸ் இஸ் கமிங்'' என்றாள் சூர்யா.

''யு கேன் கோ. நான் இதை முடிக்கணும்...'' என்று சொல்லி வைத்யநாதன் மிக அக்கறையாக சிகரெட் புகையை இழுத்து உறிந்து கொண்டிருந்தான்!

வந்து நின்ற பஸ்ஸில் சூர்யா ஏறிக் கொள்ள, பஸ் புறப்பட்டு சென்றது.



ஒரு குரூரமான சந்தோஷத்தில் புகைபிடித்தபடி வைத்யநாதன் அடுத்த பஸ் வரும்வரை காத்துக் கொண்டிருந்தான்.




'இன்னும் பார்... உன் மனத்தை எப்படியெல்லாம் நார் நாராகக் கிழிக்கிறேன்' என்ற கர்வத்துடன் வைத்யநாதன் ஆபீஸ் படிக்கட்டுகளில் நிதானமாக ஏறிக் கொண்டிருந்தான். படிக்கட்டுகளில் ஏறுவது சூர்யாவையே மிதித்துக் கொண்டு போவது போலிருந்தது அவனுக்கு!

வைத்யநாதன் அவனுடைய ஸீட்டில் போய் உட்கார்ந்தபோது டெலிபோன் மணி ஒலித்தது. சூர்யா ரிஸீவரை எடுத்தாள். பம்பாயிலிருந்து அவளுக்கு ட்ரங்க்கால். வைத்யநாதனுக்குக் கடுங்கோபம் வந்தது! 'ஹலோ வினோத்' என அவள் ஊர் பூராவும் கேட்பது போல டெலிபோனில் சிரித்துச் சிரித்துப் பேசியது தன்னைக் கிண்டல் செய்வது போலிருந்தது. சே! தான் இன்னும் ஐந்து நிமிடம் கழித்து வந்திருக்கக் கூடாதா என்று வைத்யநாதன் மனம் புழுங்கினான்.

''ஓ... மெட்றாஸ் வர்றீங்களா? எப்போ...? நவம்பர் ஆறாம் தேதியா? வெரிகுட்... ஒயெஸ்... ஒயெஸ்... அது நான் பாத்துக்கறேன். மூணு, நாலு நாளுக்கு லீவ் அப்ளை பண்ணிக்கறேன். ஒயெஸ்... மழையா? மழை பரவாயில்லை... ஆனந்தி மேரேஜ் ஒண்ணும் தெரியலை... ஆமா... ஆமா... ஒயெஸ்... வச்சிடுங்க...''

வைத்யநாதன் தீவிரமாக வேலையில் கவனத்தை செலுத்தினான். சூர்யா கூப்பிட்டாள்: ''வைத்யநாதன்!''

நிமிர்ந்து பார்த்தான்.

''போன வாரம் பாம்பேயில் டைரக்டர்ஸ் மீட்டிங்ல ஃபைனான்ஷியல் அட்வைஸர் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருந்தார். அந்த ரிப்போர்ட்டைப் பற்றி உங்ககிட்ட சில விஷயங்கள் சொல்லணும்னு நேத்திக்கு பி.எம். சொன்னார்... ப்ளீஸ் கோ அண்ட் மீட் ஹிம்...''

''யெஸ்...''

வைத்யநாதன் பேனாவை எடுத்துக் கொண்டான். ஆபீஸர் என்ற முறையில் அவள் தன்னை, 'அங்கே போ, இதைப் பார்' என வேலை வாங்க முடிகிற உண்மை சட்டென அவனுக்கு மனத்தை லேசாகக் குத்தியது. தன்னால் அவளுக்குக் கீழ் இனி இயல்புடன் வேலை செய்வது இயலாதோ என்ற எண்ணத்துடன் எழுந்து போனான்.

போகும் போதே பம்பாயிலிருந்து வரப்போகிற அந்த வினோத் யார் என்ற கேள்வி அவனுக்குள் எழுந்தது. 'அவன்தான் சூர்யாவின் கணவனா?' - நினைக்கும் போதே வைத்யநாதனுக்கு அவமானமாக இருந்தது.

சாப்பாட்டு நேரத்தில் ஆனந்தி தன்னுடைய டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு சூர்யாவின் டேபிளுக்கு வந்தாள். சூர்யாவுக்கும் சாப்பாடு கேரியரில் வந்திருந்தது. வைத்யநாதன் கேன்டீனுக்குப் போய் விட்டான்.

''சாப்பிடலாமா ஆனந்தி?'' - சூர்யா கேட்டாள்.

ஆனந்தி எதிரில் அமர்ந்து பாக்ஸைப் பிரித்தாள். சூர்யாவும் கேரியரைப் பிரித்துத் தனக்குத்தானே இலையில் பரிமாறிக் கொண்டாள். இருவரும் மௌனமாகச் சாப்பிட்டார்கள்.

''ஆனந்தி! ஒரு விஷயம் உன்கிட்ட சொல்லணும்னு நெனைச்சேன்.. அதாவது, அன்னிக்கு ஒருநாள் நீ வைத்யநாதன் மீது உன் மனத்தில் ஏற்பட்டிருக்கும் ஆர்வம் பற்றி என்னிடம் சொன்னாய், இல்லையா...? அப்போது அவருக்கு லலிதா என்று ஒரு சிநேகிதி இருப்பதாக நான் சொன்னேன். அநேகமாக வைத்யநாதன் அந்தப் பெண்ணைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வார் என்றும் சொன்னேன்... இல்லையா?''

'ஆம்' என்பது போல ஆனந்தி தலையை ஆட்டினாள்.

''உண்மையில் வைத்யநாதனுக்கு அப்படியொரு சிநேகிதி யாருமே இல்லை!''

ஆனந்தி ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''அத்தனையும் பொய். கற்பனை!''

'ஏன் பொய் அதெல்லாம்?' என்ற பாவனையில் ஆனந்தியின் கண்கள் சூர்யாவைப் பார்த்தன.

''ஜஸ்ட் ஃபார் ஃபன்... ஒரு வேடிக்கைக்காக அப்படி என்னிடம் பொய் பேசியிருக்கிறார்...''

ஆனந்திக்கு இதை நம்ப முடியாமல் இருந்தது.

''நான் ஒரு தமாஷுக்காக அவருக்கு ஏதாவது கேர்ள் ஃப்ரெண்ட் இருக்கிறாளா என்று கேட்டதற்காக, அவரும் தமாஷாக அப்படி ஒருத்தி தனக்கு இருப்பதாக என்னிடம் விளையாடினாராம்! நேற்றுத்தான் சொன்னார்...!''

சட்டென ஆனந்தியின் முகத்தில் வித்தியாசமான உணர்வு படிந்தது...! அர்த்தத்துடன் சூர்யாவைப் பார்த்தாள்.

''ஸோ.. ஒருநாள் வைத்யநாதனைக் கேட்கட்டுமா, உன்னை



அவரால் திருமணம் புரிந்து கொள்ள முடியுமா என்று?''

ஒரு புத்துணர்ச்சியுடன் ஆனந்தி தலையை அசைத்தாள்.

''ஐ வில் ட்ரை மை பெஸ்ட். அதற்கு மேல் என்ன நடக்கிறதோ நடக்கட்டும். சரியா?''

ஆனந்தி 'சரி' என்றாள்.

''எனக்குத் தெரிந்த வரை வைத்யநாதன் நல்லவர்தான்... என்ன சொல்றார்னு கேட்டுப் பாக்கலாம். ஆனா, ஒரே ஒரு கண்டிஷன்... நீ இந்த விஷயத்தில் உணர்ச்சிவசப்படக் கூடாது...! முடிவு எப்படி இருந்தாலும் நீ வருத்தப்படக் கூடாது.''

ஆனந்தி சம்மதித்தாள்.

மாலை ஆபீஸ் முடிவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் சூர்யா மெல்லிய குரலில் வைத்யநாதனிடம் கேட்டாள்:

''நேற்றைக்கு நான் நடந்து கொண்ட விதத்தில் நீங்கள் ஒன்றும் மனம் புண்பட்டு விடவில்லையே, மிஸ்டர் வைத்யநாதன்?''

''புண்பட்டிருந்தால்கூட அத்தனை வேதனை ஏற்பட்டிருக்காது!'' என்றான் வைத்யநாதன். அவனது முகத்தில் கோபத்தின் சாயல் படிந்திருந்தது.

''என்னுடைய தப்பு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். திருமணம் ஆகிவிட்டதா, இல்லையா என்ற கவனம்கூட இல்லாமல் மனத்தைச் சிதறவிட்டது உங்களுடைய தப்புத்தானே?''

''இல்லை... என் தப்பில்லை...'' என்றான் பிடிவாதமாக.

''ஸாரி... கோபமாக இருக்கிறீர்கள்... சில தினங்கள் போகட்டும். நிறைய விஷயங்கள் பற்றிப் பேசுகிறேன். ஆனால், நேற்றுக் காலை காதரைக் கீழே அனுப்பி உங்களை யாரோ தேடி வந்திருப்பதாகப் பொய் சொல்லச் சொன்னதற்காக என்னை மன்னித்து விடுங்கள்...''

''ஸாரி, உங்களை நான் மன்னிப்பதற்கில்லை. மறப்பதற்கும் இல்லை...!''

''மிகவும் சந்தோஷம்!''

சூர்யா எழுந்து கொண்டாள். ''திங்கட்கிழமை காலைலே பார்ப்போம்... பை...''

வைத்யநாதன் பத்து நிமிடங்கள் கழித்துத்தான் எழுந்தான். சிகரெட் புகைத்தவாறு பஸ் ஸ்டாப்பில் நின்றவன், சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த ஆனந்தியைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ஆனால், ஆனந்தியின் கண்களில் தெரிந்த புதிய அந்யோன்ய பாவம் அவனைக் கொஞ்சம் ஆச்சரியப்படுத்தியது. அந்த ஆச்சரிய பாவத்தைச் சிறிது யோசித்துப் பார்த்தான். சட்டென

மனத்திற்குள் ஒரு பயம் ஏற்பட்டது. தான் சூர்யாவை ஏமாற்றிய நாடகங்களை மட்டும் சூர்யா ஆனந்தியிடம் சொல்லி இருப்பாளோ என்ற சந்தேகம் வந்தது. உடனே பஸ்ஸுக்காக காத்திருப்பது சங்கடமாக இருந்தது அவனுக்கு. வேகமாக நடக்க ஆரம்பித்து விட்டான்.

### 1983. அக்டோபர் 23. ஞாயிற்றுக்கிழமை.

பெரம்பூர் போயிருந்த பெஞ்சமின் காலையில் பத்து மணிக்கெல்லாம் வந்து விட்டான். நிறைய ரிக்கார்டுகள் கொண்டு வந்திருந்தான். மனோஹரும் வைத்யநாதனும் அப்போதுதான் நாயக்கரை டிபன் வாங்கி வரச் சொல்லி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''வைத்தி, எப்படி இருக்கே? ஆபீஸ் போனியா? சூப்பர் ஸ்டாரைப் பாத்தியா?''

அப்போது அறைக் கதவை யாரோ தட்டிக் கூப்பிட்டார்கள்; ''ஸார், ஸார்... வைத்யநாதன்னு சொல்லிட்டு இங்க யாரும் இருக்காங்களா?''

''யார்ப்பா அது?'' - பெஞ்சமின் போய்க் கதவைத் திறந்தான்.

வயதான கிழவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். ''வைத்யநாதன்னு யாரோ ஒருத்தர் இங்க இருக்காருங்களாமே...?'' என்றான்.

''ஆமா...''

''நீங்கதானா...?''

''இல்ல இல்ல... இதோ சாப்பிட்டுட்டு இருக்கார். என்ன விஷயம்?''

''லேடீஸ் ஹாஸ்டல்ல இருந்து வரேனுங்க. சூர்யாம்மா அனுப்பிச்சாங்க. இந்த லெட்டரை வைத்யநாதன்கிறவர்கிட்ட குடுக்கச் சொன்னாங்க....''

வைத்யநாதன் கையை அப்படியே உதறிவிட்டு எழுந்து வந்து லெட்டரை வாங்கிக் கொண்டான்.

''வரட்டுங்களா?''

''வேற எதுவும் சொன்னாங்களா?''

-வைத்யநாதன் கேட்டான்.

'' 'லெட்டரைக் குடுத்துட்டுவா'ன்னு சொல்லி



அனுப்பிச்சாங்க...''

''இந்தாங்க... டீ வாங்கிச் சாப்பிட்டுக்குங்க...''

வைத்யநாதன் இடது கையால் துழாவி ஐம்பது பைசாவை எடுத்துக் கொடுத்தான். கிழவன் காசை வாங்கியதும் வைத்யநாதனுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கீழே இறங்கிப் போனான். கிழவன் போனதும் மூவரும் பரபரத்தார்கள்.

''என்னடா... கதையில மறுபடியும் ஏதாவது திருப்பு முனையா?''

வைத்யநாதன் அவசரமாகப் பிரித்துப் படித்தான்.

**டியர் மிஸ்டர் வைத்யநாதன். உங்களைச் சந்தித்துச் சில விஷயங்கள் பேச விரும்புகிறேன். உடனே என்னுடைய ஹாஸ்டல் அறைக்கு வருகிறீர்களா? வருவதாக இருந்தால் தயவு செய்து டெலிபோன் செய்துவிட்டு வாருங்கள்...! - சூர்யா.**

வைத்யநாதன் திரும்பத் திரும்ப பத்துத் தடவை அந்தக் கடிதத்தைப் படித்தான்.

''என்னடாது கூப்ட்றா!''

''என்னவோ பேசணும்னு வேற சொல்றா...''

''நேத்துக் காலைகூட சொன்னா. சில நாள் கழிச்சி நிறைய விஷயங்கள் பத்தி என்னோட பேசணும்னு. விஷயம் என்னன்னு தெரியமாட்டேங்குது...''

''போகப் போறீயா?''

''போகமா இருந்துடட்டுமா...? போய் என்ன ஆகப்போகுது? திரும்பத் திரும்ப ஏதாவது அவமானப்படற மாதிரிதான் இருக்கும் விஷயம். பெரிசா அட்வைஸ் பண்ணுவா! நேத்திக்கே பெரிய இவ மாதிரிதான் பேசினா... சரியான ஸாடிஸ்ட்ரா அவ! என்னோட அவமானத்தை மனசுக்குள்ள என்ஜாய் பண்றா... என்னை மீட் பண்ணிப் பேசணுமாம். லெட்டர் குடுத்துவிடறா! உடனே நான் விழுந்தடிச்சு அவளைப் பாக்கறதுக்கு ஓடி வந்துடுவேன்னு செனைச்சா போல இருக்கு...''

வைத்யநாதன் சூர்யாவின் லெட்டரைத் தரையில் வீசி எறிந்தான்!

''பாத்தியா... பொம்பளைங்க எப்படின்னு! அவளுங்களைப் பாம்புன்னு தாண்டவும் முடியாது. கயிறுன்னு மிதிக்கவும் முடியாது. நீ போகாதடா வைத்தி...'' என்றான் பெஞ்சமின்.

''போய் சொல்லிடட்டுமா போன்ல, 'வர முடியாது, ஸாரி'ன்னு...?''

''அது எதுக்கு...? வேணாம். பேசாம கம்னு இரு... வர்றதா

இருந்தாத்தானே போன் பண்ணச் சொல்லியிருக்கா...!''

''அதுக்கு இல்லை. போன்ல கூப்ட்டு, வர முடியாதுன்னு சொன்னா அவளோட மனசை ஒரு குத்துக் குத்தின மாதிரி இருக்கும்!''

''அதுவும் நல்ல யோசனைதான்! பழிக்குப் பழி!''

''பதினைஞ்சு நிமிஷம் போகட்டும்... போன் பண்ணிச் சொல்லிடலாம்...''

''நேத்திக்கு சூப்பர் ஸ்டாரை ஆபீஸ்ல எப்படி ஃபேஸ் பண்ணின?''

-பெஞ்சமின் கேட்டான்.

''அதெல்லாம் ரொம்ப ஈஸியா ஃபேஸ் பண்ணிட்டேன். ஏதாவது என் மனசப் புண்படும்படி பேசியிருந்தா மன்னிச்சுக்கச் சொன்னா! நான் அதெல்லாம் மன்னிக்க முடியாதுன்னு சொல்லிட்டேன் - மூஞ்சியில அடிச்சாப்ல...!''

''படுபாவி! நீ மன்னிப்பு கேக்கணும் அவகிட்ட. பார், அவ கேட்டிருக்கா!''

''யேய்! நான் அவகிட்ட மன்னிப்பு கேக்கத் தயார்தான். தாராளமா மன்னிப்பு கேக்கறேன். ஆனா, அவ என்னத்துக்கு என்கிட்ட மன்னிப்பு கேக்கறதா பாவ்லால்லாம் பண்ணிக்கிறா! அதான் பிடிக்கலை எனக்கு...''

''சரி வா. போன் போடலாம், அவளுக்கு.''

''இரு போகலாம். என்ன அவசரம்? காத்திட்டு இருக்கட்டுமே!''

''உனக்கு ரொம்பத்தான் திமிர் வைத்யநாதா! 'ஏதோ பேசணும், முடிஞ்சா வா'ன்னு எழுதியிருக்கா. போய் என்னன்னு கேட்டுட்டு வருவியா? என்னமோ முறுக்கறயே! உன் விஷயமே இதான்... மிஞ்சினா கெஞ்சுவே, கெஞ்சினா மிஞ்சுவே!'' என்றான் மனோஹர்.

''அந்த மாதிரியெல்லாம் சொல்லாத மனோஹர். சூர்யாவுக்காக நான் என்ன வேணுமானாலும் செய்யறதுக்குத் தயார்தான். அதுக்காக அவ கூப்ட்டு அனுப்பிச்சதும் எந்திருச்சி ஓடிர மாட்டேன்!''

''அப்ப கொஞ்சம் மெதுவா போ; ஸண்டேதானே இன்னிக்கி...!''

''அப்ப என்னை அவ ஹாஸ்டலுக்குப் போய்ப் பாத்துட்டு வரச் சொல்றியா?''

''போய்ப் பாத்துட்டு வரதால தப்பு ஒண்ணும் கிடையாது!''

வைத்யநாதன் சில நிமிஷங்களுக்கு மௌனமாக இருந்தான்.

''சரி, நீ சொல்றதுக்காக போறேன்...!'' என்றான்.



''பார்ரா மனோஹர், பத்து நிமிஷத்ல எத்தினி ப்ளேட் மாத்தறான்னு. இவனை நம்பி எதையும் பேச முடியாதுடா...''

''எல்லாம் சிவன் போக்குடா பெஞ்சமின்! கண்டுக்கப்படாது இதையெல்லாம்.''

''என்ன வேணாலும் பேசுங்கப்பா... இதெல்லாம் அவரவருக்கு வந்தாத்தான் தெரியும். நான் போய் ராணியம்மாவைப் பாத்துட்டு வரேன் - என்ன சொல்றாங்கன்னு...''

''நாங்களும் கூட வரட்டுமா?''

-பெஞ்சமின் கேட்டான் கண்களைச் சிமிட்டியவாறு.

''வாசல் வரைக்கும் வாங்க. நோ அப்ஜெக்ஷன்!''

''அயோக்யா! நாங்க என்ன உனக்கு செக்யூரிட்டி ஆபீஸர்னு நெனைச்சியா, வாசல்வரை வர்றதுக்கு...?''

வைத்யநாதன் அருமையாக உடையணிந்து கொண்டான். ஹாஸ்டல் இருக்கும் அக்பர் சாஹிப் தெருவைப் பற்றிக் கேட்டுக் கொண்டான்.

''பக்கத்துக் கடையில இருந்து போன் பண்ணிட்டுப் போ...'' என்றான் பெஞ்சமின்.

''ஓயெஸ். வரேன்...''

வைத்யநாதன் உற்சாகமாகப் படிகளில் இறங்கினான்.




எந்தப் பெண்ணுக்குமே தனி அறை அளிக்காத அந்தப் பெண்களுக்கான ஹாஸ்டலில் விசேஷச் சலுகையாக சூர்யாவுக்குத் தனி அறை ஒன்றை அளித்திருந்தார்கள். அதனால் சூர்யா, அறையின் உட்புறச் சுவர்களில் அவளுக்கு விருப்பமான வர்ணம் அடித்திருந்தாள். அதே ஆலிவ் க்ரீன் வர்ணத்தில் தரையில் ஒரு விரிப்பு, அறை முழுக்க விரிக்கப்பட்டிருந்தது. உபரியாக ஒரு பெடஸ்டல் ஃபேன். படுக்கைக்கு மேல் சுவரில் பெரிய நவீன ஓவியம். அகன்ற கட்டிலில் கலையாத, சுத்தமான படுக்கை. நிறைய புத்தகங்கள், சஞ்சிகைகள்.

அந்த அறை ஓர் அரசியின் எழில் சேர்ந்த அந்தப்புரம் போல் தோன்றியது வைத்யநாதனுக்கு!

''ஸோ... இப்ப எப்படி இருக்கீங்க...?'' -சூர்யா கேட்டாள்.

வைத்யநாதன் பேசாமல் இருந்தான்.

''உங்கள் பூர்வீகமே அந்த இலஞ்சி தானா?'' - சூர்யா கேட்டாள்.

''இல்லை. பூர்வீகம் முக்கூடல்...''

''அது எங்கே இருக்கிறது?''
''அது திருநெல்வேலி ஜில்லாதான். என் அம்மாவுக்கு இலஞ்சி...
என் அம்மாதான் தாத்தாவுக்கு ஒரே வாரிசு. அதனால் கல்யாணத்துக்கு
அப்புறம் அப்பா இலஞ்சியில் குடியேறிவிட்டார்...''
''உங்களுக்கு சகோதரிகள் இல்லையென்று சொன்னீர்கள்.
சகோதரர்கள்...?''
''இரண்டு தம்பிகள். திருநெல்வேலியில் படித்துக்
கொண்டிருக்கிறார்கள்.''
''உங்கள் ஊரிலிருந்து குற்றாலம் எவ்வளவு தூரம்?''
''இங்கேயிருந்து பீச் போகிற தூரம் தான்!'' - சொல்லிவிட்டுச்
சிரித்தான்.
''குற்றால மலையெல்லாம் வெஸ்ட்டர்ன் காட்ஸ்தானே
வைத்யநாதன்..?''
''யெஸ். திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பெரிய பகுதிவரை அந்த
மலைத் தொடர் செல்கிறது...''
''அந்த மலைத் தொடர் முழுவதும் பார்த்திருக்கிறீர்களா?''
''படுத்து உருண்டிருக்கிறேன். பாபநாசம், மணிமுத்தாறு,
மாஞ்சோலை டீ எஸ்டேட், களக்காடு - எல்லா ஏரியாவிலும் ஓர்
இடம் பாக்கியில்லாமல் அலைந்திருக்கிறேன்...''
சூர்யாவின் மஸ்காரா தோய்ந்த கண்களில் ஓர் அபூர்வமான
பாவனை துளியளவு மின்னியது. அந்த மின்னலை வைத்யநாதன்
யதேச்சையாக கண்டுவிட்டான்!
''ஒரு தட்வை உங்களோடு வந்து பார்க்க வேண்டும்!'' என்றாள்.
வைத்யநாதன் மௌனமாக இருந்தான். ஏதோ பேச
வேண்டுமென்று வரச்சொல்லி அழைத்துவிட்டு, எதையோ பேசிக்
கொண்டிருக்கிறாள் என்ற கோபம் மனத்தில் மூண்டு
கொண்டிருந்தது. சூர்யாவும் சில விநாடிகளுக்குக் கண்களை
மூடியபடி நிசப்தமாக இருந்தாள்.
''நான் போகலாமா?''
வைத்யநாதன் இப்படிக் கேட்டதும் திடுக்கிட்டுக் கண்களைத்
திறந்தாள்.
''ஏன், வேறு எங்கேயும் போகிறீர்களா?''
''எங்கேயும் போக வேண்டியதில்லை. ஆனால், உங்களுடன்
பேசிக் கொண்டிருப்பது எனக்கு வியர்த்தமாகப்படுகிறது'' என்றான்
சூர்யாவின் மனம் லேசாகக் காயப்பட்டு விட்டது!



''என் மீது இன்னும் கோபமாக இருக்கிறீர்கள்...''

''மன்னிக்க வேண்டும். உங்கள் மீது எனக்குக் கோபமில்லை. கோபம் என் மீது... என்னுடைய முட்டாள் தனத்தின் மீது. என்னுடைய கவனமின்மை மீது. ஆனால், எனக்கு ஒரு விஷயம் தெரிந்து விட்டது. எனக்கும் பெண்களுக்கும் எப்போதுமே உறவு சரியாக இருந்ததில்லை! எந்தப் பெண்ணையுமே எனக்கு அணுகத் தெரியவும் இல்லை. அந்தக் கோபம்தான் எனக்கு!''.

''மறுபடியும் இந்த விபத்து நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம் நீங்கள்!''

''அதற்கு இனி அவசியமில்லை. எனக்குள் ஒரு பெண் இருந்தாள். அவளைப் பார்க்கத்தான் சென்னை வந்தேன். பார்த்துவிட்டேன். ஆனால், எதிர்பாராமல் அவளை இழந்து விட்டேன். எனக்குள் ஒரு பெண் இருந்ததாகச் சொன்னேனே - இப்போது அவள் இல்லை. ஆனால், இழந்து விட்டதாகச் சொன்னேனே - அவள்தான் இப்போது எனக்குள் இருக்கிறாள்! அவளை நான் இழக்கமாட்டேன்!''

-வைத்யநாதனுக்குக் குரல் அடைத்துப் போயிற்று. கண்களில் நீர் கட்டியது.

சூர்யா உணர்வு வயப்படாமல் இறுகிப்போய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மிஸ்டர் வைத்யநாதன், உங்களுடன் என்ன விஷயம் பேசுவதற்காக உங்களைச் சந்திக்க விரும்பினேன் தெரியுமா?''

''இதுவரை சொல்லவில்லை நீங்கள்.''

''அதை உங்களிடம் பேசவா, வேண்டாமா என்று தெரியவில்லை இப்போது...''

''அது உங்கள் இஷ்டம்...''

''இல்லை, ஒருத்திக்கு மணமாகி விட்டது என்பது தெரிந்த பிறகும் அவளை மனத்தில் நினைத்துக் கொண்டிருப்பது உண்மையில் அவளை அவமரியாதை செய்வதாகும் என்பது கூடத் தெரியாத ஒருவரிடம் என்ன பேசுவதென்று நான் யோசிக்கிறேன்.''

''மன்னிக்கவும், நான் யாரையும் அவமரியாதை செய்யவில்லை. ஆனால், ஒரு பூவிலிருந்து கமழ்ந்து வரும் நறுமணத்தை யாரும் தடை செய்துவிட முடியாது. அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். வேண்டுமானால் ஒன்று செய்யலாம்... அந்தப் பூவையே காலில் போட்டு மிதித்து நசுக்கி விடலாம்...''

''எதையும் யாரையும் அழிப்பது, நசுக்குவது என் சுபாவமல்ல வைத்யநாதன். உங்களை வாழத்தான் சொல்கிறேன். ஒரு ஏழை

ஊமைப் பெண்ணை வாழ வையுங்கள் என்றுதான் சொல்கிறேன்...''
- சூர்யாவுக்கு ஒரு விம்மல் வெடித்தது.
வைத்யநாதன் ஆச்சரியத்துடன் பார்த்தான். சூழலில் இதுவரை
மறைந்திருந்த ஏதோ ஒன்று வெளிப்படுவது போலிருந்தது.

''உங்களுக்கு ஒரு பெண் மீது காதல் ஏற்பட்டது போல், உங்கள்
மீது ஒரு பெண்ணுக்குக் காதல் ஏற்பட்டிருக்கிறது இப்போது. அதை
நீங்கள் எப்படி எதிர்நோக்கப் போகிறீர்கள் வைத்யநாதன்...?''

''என்னுடைய காதலை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள மறுத்தது
போல, நீங்கள் சொல்கிற பெண்ணின் காதலை நானும் ஏற்றுக்
கொள்ள மறுக்கலாம்.''

''ஆனால், நீங்கள் அப்பெண்ணின் காதலை மறுப்பது மணமான
ஆண் என்ற அடிப்படையில் அமைய வழியில்லை!''

''ஏற்கெனவே 'ட்யூக் ஆஃப் வின்ட்ஸர்' எந்தப் பெண்ணையும்
மணந்திருக்கவும் இல்லை!''

''ஆர் யு எ ட்யூக் ஆஃப் வின்ட்ஸர்?''

''யா!''

''நான் உங்களுக்காகப் பரிதாப்படறேன் வைத்யநாதன். நீங்கள்
போகாத ஊருக்கு வழி தேடுகிறீர்கள்!''

''இதே பதில்தான் நீங்கள் ஒரு பெண் என்னை காதலிப்பதாகச்
சொன்னதுக்கும்...!''

''இல்லை. நான் சொன்ன பெண்ணுக்கு நீங்கள் மனது வைத்தால்
வழி காட்ட முடியும்...''

''எனக்குத் தெரியும் என்னைப் பற்றி. என்னால் வழி காட்ட
முடியாது!''

''ஏன் வழி காட்ட முடியாது?''

''என்னைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்... எனக்குப் பெண்
ஒரு ஆசிரியை போல் இருக்க வேண்டும். ஒரு கல்லூரி புரபஸ
போல் இருக்க வேண்டும்! ஒரு டாக்டர் போல் இருக்க வேண்டும்
ஒரு சந்தோஷமான ஏர்ஹோஸ்டல் போல இருக்க வேண்டும்
இன்னும் சொன்னால் எனக்கு என் அம்மா போல் இருக்
வேண்டும்... அப்படிப்பட்ட பெண்தான் எனக்கு அப்பீல் ஆ
முடியும் சூர்யா...''

''அதாவது, சக்தி வாய்ந்த ஒரு பெண்... அப்படித்தானே...?''

''ஆமாம்! அப்படிப்பட்ட பெண்ணிடம்தான் என்னை என்னா
ஒப்படைக்க முடியும்! நீங்கள் சொல்லும் ஊமைப் பெண், என்னிட



தன்னை ஒப்படைக்க வருகிறாள்! சொல்லுங்கள்... காப்பாற்றப்பட
வேண்டிய நிலையில் இருக்கும் நான் ஒரு சிறு பெண்ணைக்
காப்பாற்றுவது என்பது முடிகிற காரியமா?''

வைத்யநாதனின் கண்கள் பளபளத்தன. அந்த அறை முழுவதும்
துக்கம் கவிந்து கொண்டிருந்தது.

''ஆனால், எனக்கு இப்படித் தோன்றுகிறது வைத்யநாதன்...''

''சொல்லுங்கள்...''

''அந்த ஆனந்தியை,நீங்கள் காப்பாற்றுவதன் மூலம் உங்களையும்
நீங்கள் காப்பாற்றிக் கொள்ளலாம்...''

''நிஜமாகவே அப்படி நம்புகிறீர்களா...?''

''நிஜமாகவே நம்புகிறேன். இதற்கு நீங்கள் உடனே பதில் சொல்ல
வேண்டியதில்லை. ஒரு மாதம் யோசித்தபின்கூடச்
சொல்லுங்கள்...''

வைத்யநாதன் எழுந்து விட்டான்.

''என் அறை நண்பர்கள் காத்திருப்பார்கள்...''

''யார், பெஞ்சமினும் மனோஹரும் தானே?''

''ஆம்...''

''அவர்கள் எங்கே வேலை பார்க்கிறார்கள்?''

சொன்னான்.

''ஆனந்தி விஷயத்தை முற்றிலும் நிராகரித்து விடாதீர்கள். மனதில்
வைத்திருங்கள். அவ உங்களைக் காதலிக்கறா... உங்களைக்
கல்யாணம் செய்துக்க விரும்பறா, அவ்வளவுதான்.''

''வணக்கம்...!''

வைத்யநாதன் வேகமாக அந்த ஹாஸ்டலை விட்டு
வெளியேறினான். பைகிராஃப்ட்ஸ் சாலைக்கு வந்தபோது,
பெஞ்சமின் கூப்பிடும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.
வைத்யநாதன் சிறிது இலகுவானான். சூர்யாவின் முன்னிலையில்
இருந்த செயற்கைத்தனம் தளர்வடைந்து இளகிப் போனது.

''என்ன வைத்யநாதா, இவ்வளவு நேரம்...?'' - பெஞ்சமின்
ஆர்வமாகக் கேட்டான்.

''ஒண்ணுமில்ல. சும்மா அறுத்து எடுத்திட்டா!''

''இவ்வளவு நேரமா என்ன அறுத்தா...? அதைச் சொல்லு!''

''சாப்ட்டாச்சா?''

''உன்னை விட்டுட்டா...?''

''எந்த மெஸ் போலாம்...?''

''ஏதாவது...''
''உட்லண்ட்ஸ் போலாமா?''
''அதுக்குப் பேசாமே பாம்க்ரோவ் போலாம்'' என்றான்
மனோஹர்.
''நல்ல ஐடியாதான். மெதுவா ஆற அமர உக்காந்து சாப்பிட்டுட்டு அப்படியே ரூம்ல எல்லாம் எப்படி இருக்குன்னு ஒரு பார்வை பாத்துட்டு வரலாம்...''
மூன்று பேரும் டாக்ஸியில் ஏறிக் கொண்டார்கள். டாக்ஸி கிளம்பி ஜாம்பஜார் தாண்டுவதற்குள் மழை பெய்ய ஆரம்பித்தது.
''சூர்யா என்ன சொன்னா...? அதைச் சொல்லமாட்டேங்கிறியே...!''
''எங்க ஆபீஸ்ல ஆனந்தின்னு ஒரு பொண்ணு இல்லே...?''
''அந்த டைப்பிஸ்ட்! பேச முடியாத பொண்ணுன்னு கூடச் சொன்னியே...?''
''ஆமா... அந்த ஆனந்தி என்னை ரொம்ப லவ் பண்றாளாம். என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறாளாம்...!''
''இன்ட்ரஸ்டிங்! மனோஹர், கேட்டியா... இதையே நம்ம படத்ல சைடு ட்ராக்கா போட்டுடலாம்.. ஒரு ஊமைப் பெண்ணின் காதல்! கொஞ்சம் சென்ட்டிமென்ட்டாவும் இருக்கும்! என்ன சொல்றே...?''
''செமை ஐடியாடா பெஞ்சமின்!''
''அந்த ஆனந்தியை நீ கல்யாணம் பண்ணிக்கணுமாம்மா?''
''யோசிச்சுச் சொல்லச் சொல்லியிருக்கா. ஒரு மாசம் டைம் குடுத்திருக்கா...''
''நல்ல கதையா இருக்கே!''
''அதான...? நானும் இவனும் எதுக்குக் கூப்பிட்டு அனுப்பியிருப்பாள்னு என்னென்னமோ கற்பனையெல்லாம் பண்ணிட்டிருந்தோம்... இதைச் சொல்றதுக்குப் போய்க் கூப்பிட்டு அனுப்பியிருக்கா...''
''ஆனா பெஞ்சமின், ஒண்ணு மட்டும் நான் சொல்றேன். சூர்யா கூட பேசப்பேச, அவளை பாக்கப் பாக்க, அவ மேல எனக்கு இருக்கிற ஆசை ஜாஸ்தியாகுதே தவிர, குறையமாட்டேங்குது... என்ன ப்ரமாதமா இருக்கு தெரியுமா அவ ரூம்...! ஒரு சின்ன பென்ஸில்கூட எங்கே இருக்கணுமோ அங்கே இருக்கு. சே! நாமும் ரூமை வச்சிருக்கோம் பார்...மூர்மார்க்கெட்ல இருக்ற பழைய சாமான் விக்கறவன் கடை மாதிரி...''



''இதுவும் பேகவே, நீ இன்னமும் பேகவேடா பையா! இதோ பாம்க்ரோவ் வந்தாச்சு... கொஞ்சம் ஜென்ட்டில்மேன் மாதிரி இறங்கு! நம்ம சினி பீப்பிள் நிறைய வந்து போற இடம் இது! சொல்ல முடியாது, பாக்யராஜே எதிரே வந்தாலும் வருவார்...!''
டாக்ஸியிலிருந்து மூவரும் இறங்கினார்கள். பெஞ்சமின் பத்து ரூபாய் நோட்டை அலட்சியமாக டிரைவரிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தான்.
''என்னடா, பணம் ஜாஸ்தியா புரளுதா?'' - மனோஹர் கேட்டான்.
''எல்லாம் நம்ம டைப்பிஸ்ட் தந்த பணம்டா!''
''என்ன ஆச்சு...? ராசி ஆயிட்டாளா?''
''ஊஹூம், க்ளியரா ஜனகணமன பாடியாச்சு!''
''அப்பறம் ஏது அவ பணம்...?''
''எல்லாம் என் பணம்! என்கிட்ட அவ நோட் நோட்டா வாங்கியிருந்த பணம்! இனிமே எனக்கென்ன! லேசா நேத்திக்கி, 'பேலன்ஸ் ஒரு எண்ணூறு ரூபா நீ தரணுமே, ஞாபகமிருக்கா'ன்னு ஒரு மாதிரி கேட்டேன்! உடனே ஒரு மாதிரி ஆயிட்டா! ஆட்டோ பிடிச்சு லஞ்ச் அவர்ல எங்கேயோ போனா. திரும்பி வந்து எண்ணூறு ரூபாயை 'இந்தா பிடி'ன்னு தூக்கி எறிஞ்சு, 'வட்டி வேணுமா'ன்னு திமிரா கேட்டா. 'குடுத்தா வாங்கிக்கறேன்'னு நானும் ரொம்ப திமிரா சொன்னேன்...''
''குடுத்தாளா...?''
''குடுப்பா குடுப்பா! உடனே பொசுக்குனு மூஞ்சியை மூடி அழுதிட்டே டாய்லெட்டுக்குள்ள ஓடிட்டா...''
''பாவம்டா...!''
''பாவமா...? எல்லாம் பாசாங்கு... நீலித்தனம். ஏமாந்தா நல்லா தலையில மொளகா அரைப்பாளுங்க...!''
''இநத டேபிள்ல உக்காந்துக்கலாமா?'' -வைத்யநாதன் கேட்டான்.
''ம்...''
''மூணு மெட்ராஸ் மீல்ஸ்...'' - பெஞ்சமின் ஆர்டர் கொடுத்து விட்டுக் கேட்டான்: ''அப்ப, நீ அந்தப் பொண்ணு ஆனந்தியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியாக்கும்...?''
''யார் சொன்னது...?''
''அதான் சூப்பர் ஸ்டார் சொல்லிட்டானே! அப்புறம் அப்பீல் ஏது?''

''நீ சொல்றது பழைய வைத்யநாதன். அந்த வைத்யநாதன் இப்ப
இல்லை. அவன் காலி. செத்துட்டான். இந்த வைத்யநாதன் என்ன
சொல்லிட்டு வந்திருக்கான்னு தெரியுமா? தன்னை ஒரு 'ட்யூக் ஆஃப்
விண்ட்ஸர்'னு பயப்படாமே சொல்லிவிட்டு வந்திருக்கான்...''
''நீ அப்படிச் சொல்லிவிட்டு வந்ததனாலேதான் மழை இப்படிக்
கொட்டுது...!''
-பெஞ்சமின் சொன்னது போல் வெளியில் கொட்டிக்
கொண்டிருந்த மழை தொடர்ந்து நான்கு நாட்கள் சென்னையில்
வெளுத்துக் கட்டியது.




## 1983. அக்டோபர் 31. திங்கட்கிழமை.

மணி பிற்பகல் மூன்று முப்பது ஆகியிருந்தது.
வைத்யநாதனும் சூர்யாவும் அவர்களின் ஸ்தாபன
வைத்யநாதனும் சூர்யாவும் அவர்களின் ஸ்தாபன பற்றிப் பேசிக்
தயாரிப்புகளின் சில விநியோக அறிக்கைகள் பற்றிப் பேசிக்
கொண்டிருந்தார்கள். கடந்த ஒரு வாரமாகவே வைத்யநாதனின் சில
தன்மைகள் ஆக்ரோஷமடைந்திருந்தன. ஆனந்தியை அவன்
திருமணம் செய்து கொள்ள முடியுமா என்று சென்ற வாரம் சூர்யா
அவனைக் கேட்டது அவனுக்கு ஒரு திருப்தியான துருப்புச் சீட்டு
போன்றிருந்தது! அவனுடைய காதலை ஏற்றுக் கொள்ள முடியாத
சூர்யா, வேறொரு பெண்ணின் காதலை ஏற்றுக் கொள்ள இயலுமா
என்று அவனை அணுகியது-அவனுக்கு ஏதோ ஒரு சக்தியைத்
தந்திருந்தது. அந்தக் கோணத்தில் சூர்யாவின் ஒரு மன ஆதங்கத்தை
வைத்யநாதன் பூர்த்தி செய்ய விரும்பவில்லை. அந்த வழியிலாவது
சூர்யாவைப் பழி வாங்க வேண்டுமென்று அவன் காத்துக்
கொண்டிருந்தான்!
ஒருமுறை நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது; பயங்கர
வாதம் ஒன்றைத் தூக்கிப் போட்டான் வைத்யநாதன்.

''சூர்யா என் மகத்தான காதலை ஏற்றுக் கொண்டால்-அந்த ரிஸர்ச்
ஸ்காலரை மணமுறிவு செய்து என்னை மணந்துகொள்ள
முன்வந்தால் நானும் ஆனந்தியை மணக்கச் சம்மதிப்பேன்.
சூர்யாவையும், சூர்யாவுக்காக ஆனந்தியையும் எந்தத் தயக்கமும்
இல்லாமல் நான் திருமணம் புரிந்துகொள்ளத் தயார்! உலகத்தைப்
பற்றி எனக்குக் கவலையே இல்லை! சூர்யா என்னைக்
காப்பாற்றட்டும்; நான் ஆனந்தியைக் காப்பாற்றுகிறேன்.''

அதிர்ந்து போனான் பெஞ்சமின்.



''ஒரு மனசாட்சி வேணும்டா வாழ்க்கையில... ஒருத்தி தன்
புருஷனை டைவர்ஸ் பண்ணிட்டு இவரை வந்து கல்யாணம்
பண்ணிக்கணுமாம். அப்படிப் பண்ணிட்டா இவரு அவளுக்காக
அவ சொல்ற இன்னொரு பெண்ணைக் கல்யாணம்
பண்ணிப்பாராம்... போய் வாயைக் கழுவுடா... என்ன கிரிமினல்
மைண்ட் டெவலப் ஆயிருக்கு பார் உனக்குள்ளே...!''

சூர்யாவுடன் பேசிக் கொண்டே அன்று பெஞ்சமின் சொன்ன
வார்த்தைகளை மனத்துக்குள் ஒருமுறை நினைத்துப் பார்த்தான்.
கிரிமினல் மைண்ட்தான் என்ற திமிர் ரத்தத்தில் பரவியது.
தன்னுடைய ஆசை நிராசையாகப் போயிருக்கும் போது,
இன்னொருவரின் ஆசை நிராசையாகப் போவதில் என்ன தப்பு என்ற
சினம் மூண்டது மனத்தில்.

அப்போது காதர் வந்து கூப்பிட்டான்: ''வைத்யநாதன் ஸார்!
உங்களைப் பாக்கறதுக்கு யாரோ வந்திருக்காங்க. கீழே வெயிட்
பண்றாங்க...''

சட்டென வைத்யநாதன் சூர்யாவைப் பார்த்தான். பிறகு திரும்பி
வெறுப்புடன் காதரைப் பார்த்துக் கேட்டான்: ''நெஜமாவே யாராவது
வந்திருக்காங்களா, இல்லை யாராவது அந்த மாதிரி சொல்லச்
சொன்னாங்களா காதர்?''

காதர் அரண்டு போனான்.

''சரி... சரி... வரேன் போ...''

மனோஹரும் நகம் கடித்தபடி ரிஸப்ஷனில் உட்கார்ந்திருந்தான்.
''மனோஹர், என்னடா இது திடீர்னு! ஏதாவது வேலையா
வந்தியா இந்தப் பக்கம்?''
''உன்னைப் பாக்கறதுக்காகத்தான் வந்தேன். நான் என்னோட
வேலையை ராஜினாமா பண்ணிட்டேண்டா...''
வைத்யநாதனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மனோஹர்
சொன்னான்: ''மணிதான் நாலு ஆயிடுச்சே... போய் சொல்லி
பர்மிஷன் கேட்டுட்டு வா... போலாம். வெளியில போய் விவரமா
சொல்றேன்...''
''ஒரு நிமிஷம் இரு. போய் சொல்லிட்டு வரேன்.''

வைத்யநாதன் வேகமாகப் படியேறி வந்தான். சூர்யா பலத்த
குரலில் போனில் பேசிக் கொண்டிருந்தான். வைத்யநாதனுக்கு
உடனே புரிந்துவிட்டது. பம்பாய் கால்! சதக்கென்று அவனுடைய
அகங்காரத்தில் கூரிய கத்தி குத்தியது போலிருந்தது.

சூர்யா பேசி முடித்து ரிஸீவரை வைத்தான்.

''என் ரூம்மேட் வந்திருக்கான் மேடம். அவசரமா என்னவோ பேசணும்னு சொல்றான். ஒருமணிநேரம் பர்மிஷன் வேணும்'' என்றான்.

''யார், மிஸ்டர் பெஞ்சமினா?'' - சூர்யா கேட்டாள்.

''இல்லை, மனோஹர் மேடம்.''

'போகலாம்' என சூர்யா ஒலியாகத் தலையை அசைத்தாள். நன்றி சொல்லிவிட்டு வைத்யநாதன் வேகமாகக் கீழிறங்கிப் போனான்.

''பெஞ்சமினுக்கு சொல்லிட்டியா?''

''மெளண்ட்ரோட்ல இறங்கி சொல்லிட்டுத்தான் வரேன். கரெக்ட்டா அஞ்சு மணிக்கு ரூமுக்கு வந்துடறேன்னு சொன்னான். ஊர்ல இருந்து சித்தப்பா என்னைக் கையோட அழைச்சிட்டுப் போறதுக்கு வந்திருக்கார்...''

''ஏன், என்ன ஆச்சு திடீர்னு?''

''வர ரெண்டாம் தேதி எனக்குக் கல்யாணம்டா வைத்தி!''

''என்னடாது... திடீர் திடீர்னு குண்டா தூக்கிப் போடறே! நாளை மறுநாளேவா கல்யாணம்...?''

வைத்யநாதனுக்குப் பெரும் படபடப்பாக இருந்தது.

''ஆமா...அதாவது, எனக்கும் ஊர்ல என்னோட மாமா பொண்ணுக்கும் கல்யாணம் பண்றதா சின்ன வயசிலே இருந்தே எங்க குடும்பத்துலே பேசி வச்சிட்ட விஷயம்தான். திடீர்னு எங்க அப்பாவுக்கு உடம்புக்கு ரொம்ப முடியாம இருக்காம்... அதனால உடனே என்னோட கல்யாணத்தை வச்சிடணும்னு சொல்லிட்டாராம். சித்தப்பா புறப்பட்டு ஓடி வந்திருக்கார்-என்னைக் கூட்டிட்டுப் போறதுக்கு... ராத்திரி கிடைக்கிற பஸ்ல புறப்பட்டுப் போறோம்...''

வைத்யநாதனுக்கு எல்லாம் வியப்பாக இருந்தது. ஒரு கல்யாணம் மிக இலகுவாக நடக்கப் போகிறது!

''சரி, அதுக்காக வேலையை ஏன் ராஜினாமா பண்றே?''

''இந்த வேலை இனிமே எதுக்கு வைத்யநாதா? என் மாமாவோட பனியன் ஃபேக்டரியைப் பாத்துக்கிட்டு ஊரோட இருந்துப்பேன்...''

''அவ்வளவுதானா மெட்றாஸ்?''

''அவ்வளவுதான். கல்யாணம் பண்ணியாச்சுன்னா இந்த ஊர் நமக்குத் தாங்காது... சொந்த ஊர்தான் சரி.''

இவர்கள் அறையைப் போய்ச் சேரும்முன் பெஞ்சமின் வந்திருந்து காத்திருந்தான்.



''பெஞ்சமின்! கேட்டியா விஷயத்தை?''

''கேட்டேன் கேட்டேன். திடீர்னு நம்மையெல்லாம் விட்டுட்டுப் போறான். சரி, போகட்டும். அவனுக்கு நேரம் வந்தாச்சு, கிளம்பிட்டான். எனக்கும் நேரம் வந்திடுமோ என்னமோ? நெனைச்சா பகீர்னு இருக்கு!'' - பெஞ்சமின் வருத்தத்துடன் சொன்னது வைத்யநாதனுக்குப் பெருத்த அதிர்ச்சியாக இருந்தது.

''என்னடா பாவி உனக்கும் கல்யாணமா?'' - வைத்யநாதன் பயந்து கொண்டே கேட்டான்.

''சீச்சி...! என்னை எவடா கல்யாணம் பண்ணிப்பா? என்னை எங்கேயாவது ட்ரான்ஸ்பர்னு தூக்கி விட்டுருவானோன்னு பயமா இருக்கு...''

''ஏன்... அப்படி ஒரு வதந்தி இருக்கா ஆபீஸ்ல?''

''வதந்தியா? ஆபீஸ் பூரா இதே பேச்சு! எல்லாம் இந்த டைப்பிஸ்ட் பொம்பளையால வந்த வினைடா. எனக்கும் அவளுக்கும் கொஞ்ச நாளா ஒரு கசமுசா இருக்கு இல்லியா... அதைப் போய் மானேஜர்கிட்ட என்னென்னவோ இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி அழுதிருக்கா...!''

''சே! பொம்பளைன்னா அத்தனை பயல்களும் வாயைத் திறக்கறாண்டா...''

''அதானே...!''

''இவனுக்கென்ன... ஊர்ல ஜோரா பொண்ணு காத்திருக்கு. தாலியைக் கட்டிட்டு பனியன் ஃபேக்டரிக்கு முதலாளி ஆயிடுவான். என்னால் முடியுமா? கம்பெனிக்காரன் போகச் சொல்ற ஊருக்குப் போய்த்தான் ஆகணும். சரி, என்னதான் ஆகுதுன்னு பாத்துடலாம். நீ போய் வாடா மனோஹர்... ஜாம் ஜாம்னு போய் வா... அட்டகாசமா தாலியைக் கட்டிட்டு முதல் இரவுலே பூந்து விளையாடு...! வேற நான் என்ன சொல்றது? என் நிலைமை ஆபீஸ்ல சரியில்லாமே இருக்கு... அதனால இந்த நேரத்தில நான் கிளம்பி உன் கல்யாணத்துக்கு வர முடியாது... மன்னிச்சுக்க என்னை. இவனை வேணா கூட்டிட்டுப் போ...''

''நீ வாயேன் வைத்யநாதன் என்னோட கல்யாணத்துக்கு.'' - மனோஹர் கேட்டான்.

''ஸாரி மனோஹர்... என்னை மன்னிச்சுடு. என்னாலேயும் வர முடியாது. அதுவும் இப்படித் திடீர்னு...''

''டேய் மனோஹர், அவன் வரமாட்டான், எனக்குத் தெரியும். சூர்யாவைப் பாக்காம ஒரு நாள் அவனை ஏன் கூப்பிடறே?

இருப்பானாடா அவன்...? சொரணை கெட்டவன். என்ன சொன்னாலும் அவனுக்கு மண்டையில ஏறமாட்டேங்குது. என்னிக்காவது பாம்பாயில இருந்து அவ புருஷன் வந்து கை வேற, கால் வேற வாங்கினான்னா தெரியும். அதுவரைக்கும் தெரியாது இந்த ட்யூக் ஆஃப் குற்றாலத்துக்கு...!''

வைத்யநாதனின் முகம் குப்பென்று சிவந்தது.

''பெஞ்சமின்! அநாவசியமா நீ இந்த மாதிரியெல்லாம் பேசாதே. ஜாக்கிரதையாப் பேசு... உனக்கென்னடா வந்தது ஆத்திரம்? அவ என்ன உனக்குத் தங்கச்சியா, இல்லை அக்காவா? உன் ஜோலியை நீ பாத்துட்டுப் போ. எனக்குத் தெரியும் எவளைப் பாக்கறது, எவளைப் பார்க்கக் கூடாதுன்னு! உன் அட்வைஸ் ஒண்ணும் தேவையில்லை எனக்கு. நீ தெருவில போற வர பொண்ணுங்களை யெல்லாம் கன்னாபின்னான்னு கேவலமா கமெண்ட் அடிக்கற... என்னமோ எனக்கு வந்து புத்தி சொல்றியே பெரிய இவன் மாதிரி...!''

''பெஞ்சமின்! உனக்கும் புத்தியே இல்லைடா... எத்தினி தடவை சொன்னாலும்!''

பெஞ்சமின் வைத்யநாதனிடம் மன்னிப்பு கேட்டான். வைத்யநாதன் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''அப்ப நான் கிளம்பட்டுமா? சித்தப்பா சீக்கிரமா வரச் சொன்னார். எந்த பஸ்ல டிக்கெட் வாங்கியிருக்காரோ.. அதுவும் தெரியலை...''

''அவ்வளவுதானாடா... மனோஹர்?'' -பெஞ்சமின் கேட்டான்.

''அவ்வளவுதான்-முடிஞ்சுது பேச்சலர் லைஃப் அண்ட் மெட்றாஸ் லைஃப்!''

''சரி, போயிட்டு வா. நல்லா இரு... முடிஞ்சா அப்பப்ப லெட்டர் போடு.''

''வைத்தி, நான் வரட்டுமா? என்னை மறந்துடாதே...''

''மறக்க முடியுமாடா மனோஹர்? நீயும் என்னை மறந்துடாதே...''

''யாரை மறந்தாலும் உன்னை மறக்க முடியுமா வைத்யநாதா! என்னால மறக்க முடியாத ஆள் நீ. நீயும் சீக்கிரமா கல்யாணத்தைப் பண்ணிட்டு நல்லா இரு...''

எழும்பூர் போகிற பஸ்ஸில் மனோஹர் விடைபெற்று ஏறிக் கொண்டான். பஸ் போனதும் வைத்யநாதன் பிரமை பிடித்தாற் போல் நின்றான். சட்டென்று அவனுடைய உலகத்தின் ஒரு பகுதி காணாமல் போனது போலிருந்தது.

''சே! திடீர்னு போயிட்டான் பார்... இனிமே நாம ரெண்டு பேர் மட்டும் என்னடா பண்றது?'' - வைத்யநாதன் வருத்தத்துடன்



கேட்டான்.

''சட்டியும் பானையும் பண்ண வேண்டியதுதான்...! இன்னிக்குப் பாத்து மழை வேற எப்படிப் பெஞ்சது பார்... சரி சரி, வா.. ரூமுக்குப் போகலாம்...''

''ரூமுக்குப் போறதுக்கே பிடிக்கலை.... மணி என்ன?''

''ஆறு பத்து....''

''சூர்யாவைப் போய்ப் பார்த்துட்டு வரட்டுமா?'' - வைத்யநாதன் மனம் கலங்கிப் போய்க் கேட்டான்.

''ஏன், வரச் சொல்லியிருக்காளா?''

''எப்போ வேணுமானாலும் நான் அவளைப் பாக்கறதுக்கு ஹாஸ்டலுக்கு வரலாம்னு சொல்லியிருக்கா. நான் போய் வந்திரட்டுமா? போய் பத்தே பத்து நிமிஷம்... பார்த்ததும் வந்துர்றேன்.. என்னமோ அவளை நோக்கி ஓடணும் போல இருக்கு...!''

''சபரியில டீ குடிச்சுட்டு வெயிட் பண்றேன்... போய் வந்திரு.''

''ஓயெஸ்....''

''என்னடா... போனதும் வந்துட்டே?'' - பெஞ்சமின் கேட்டான்.

''கண்ணம்மாவைக் காணோம்டா...!''

வைத்யநாதன் கண்ணம்மா என்ற சொல்லை உபயோகித்த விதத்தில் பெஞ்சமின் கரைந்து போனான். சூர்யாவின் மேல் அவன் கொண்டிருக்கும் அன்பின் பிரமாண்டத்தை ஒரு தரிசனமாகவே அவனால் காண முடிந்தது. வைத்யநாதனின் ஏக்கம், தவிமை, சோகம், இழப்பு, ஆற்றாமை - எல்லாமே அவ் வரியில் ஜொலித்தன.

''சரி சரி, வா. மழை பெரிசா வருது. ரூமுக்கு ஓடிடலாம்...''

இருவரும் வேகமாகப் போனார்கள். நல்லதம்பி முதலித் தெரு திருப்பத்தில் மாட்டுச் சாணம் விருட்டென வைத்யநாதனை வழுக்கி விட, நிலைதடுமாறி வைத்யநாதன் விழுந்து விட்டான்!

''அடடா! காலை பாத்து வைக்கப்படாதா? எந்திரி எந்திரி...''

''சாணிடா...''

''தெரியுது... எங்கேயாவது அடி கிடி பட்டிருக்கா பார்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை... பேண்ட் பூராசாணி. கையில வேற..''

''வா, மெதுவா போலாம்.''

வைத்யநாதனுக்குத் தெருவில் நடக்கவே வெட்கமாக இருந்தது. அவனுடைய பேண்ட் பூராவும் மாட்டுச் சாணம்.

அறைக்குள் போனதுமே பேண்ட்டைக் கழற்றிச் சுருட்டி மூலையில் எறிந்தான். லுங்கியை எடுத்துக் கட்டி கொண்டான்.

''எனக்கு நேரமே சரியில்லைடா பெஞ்சமின்! சூர்யா விஷயம் அவுட். மனோஹர் பயல் போயிட்டான். அன்னிக்கி கார் வந்து இடிச்சுது. இன்னிக்கு தெரு முனையில சாணி வழுக்கி விழறேன். ஒரு பத்து நிமிஷம் ராணியம்மாவைப் பாத்துத் தரிசனம் பண்ணிட்டு வரலாம்னு பாத்தா... அம்மா எங்கேயோ போயாச்சு.''

''என்னடாது... நீயே இப்படி அலுத்துக்கிட்டா நானெல்லாம் என்ன பண்றது? உனக்கு ஊர்ல ஏக்கர் ஏக்கரா தோட்டம் இருக்கு, பணம் இருக்கு...''

''எனக்கு அதெல்லாம் ரெண்டாம் பட்சம்தான். வாழ்க்கைல முதல் முதலா ஒரு பொண்ணு மேல ஆசைப்பட்டேன். நான் ஆசைப்பட்டது கிடைக்கலை. அப்புறம் எவ்வளவுதான் பணம் இருந்து என்ன பிரயோஜனம்?''

''எனக்குக்கூடத்தான் ஹிந்தி ஃபிலிம் ஸ்டார் பூனம் தில்லானைக் கட்டிக்கணும்னு ஆசை இருக்கு. முடியலையே...!''

''சும்மா வாதம் பண்ற நீ... ரெண்டும் ஒண்ணு இல்லே.''

''பேஸிக்கா ரெண்டும் ஒண்ணு தாண்டா பையா!''

சில நிமிடங்களுக்கு வைத்யநாதன் மௌனமாக இருந்தான். ''கார்ல நான் அடிபட்ட அன்னிக்கு சூர்யா என்னை இந்த இடத்ல தொட்டுத் தூக்கினாடா! சொல்லு, உன்னை அந்த ஃபிலிம் ஸ்டார் தொட்டுத் தூக்கியிருக்காளா?''

''ஆயிரம் தடவை தூக்கியிருக்கா - கனவுல!''

''அப்ப கனவுலேயே அவளைக் கல்யாணம் பண்ணிட்டு கம்னு இரேன்.''

பெஞ்சமின் சிரித்து விட்டான். ''பரவால்ல... பேசக் கத்துக்கிட்ட நல்லா.''

''நான் எவ்வளவு சீரியஸா பேசறேன். பாவி, கொஞ்சம்கூட விவஸ்தையே இல்லாமே ஜோக் அடிக்கிறியே நீ!''



''ஸாரி வைத்யநாதா...''

''உள்ளுக்குள்ளே தீ மாதிரி எரியறேண்டா. உனக்கென்ன தெரியும்? அவளைப் பாத்தாலே எனக்குள்ள என்னவோ ஒண்ணு அப்படியே பொங்கிப் பொங்கி வெடிக்குது. உருகறேன் அவளுக்காக. துடிக்கிறேன் அவளுக்காக... இதுல பெரிய மோசமான சாபம் என்னன்னு கேட்டா... நான் எவளை நெனைச்சி உயிரை விட்டுட்டு இருக்கேனோ, அவளே வேற ஒரு பெண்ணைக் காட்டி அவளைக் கல்யாணம் பண்ணிக்கோயேன்னு சொல்றா! என்னை எப்படிப் பந்தாடறா பார்! ஏதோவொரு சென்ஸ்ல என்னை அவ சுத்தி வளைச்சுப் பழி வாங்கறா. எனக்குத் தேவை பொம்பளை இல்லை! என்னோட டார்லிங் சூர்யா தான் எனக்குத் தேவை!''

பெஞ்சமின் வைத்யநாதனைக் கையெடுத்துக் கும்பிட்டான்: ''ஸாரி...! இனிமே இந்த சூர்யா விஷயமாக உன்கிட்ட நான் பேசறதா இல்லை!''

''தேங்க்ஸ்...''

''சரி வா. மழை லேசா விட்டிருக்கு. போய் சாப்ட்டு வந்துரலாம்.

''இல்லை, நீ போ. இன்னிக்கு நைட் நான் சாப்பிடறதா இல்லை...''

பெஞ்சமின் அரை மணியில திரும்பி வந்தான்.

''உனக்கு லக் இல்லடா வைத்யநாதா!'' என்றான்.

''அதான் தெரிஞ்ச கதையாச்சே! நீ வேற சொல்லணுமா அதை.''

''சாப்பிடப் போகும்போது சூப்பர் ஸ்டாரைப் பார்த்தேன்!''

''எனக்கு நேரம் சரியில்லேன்னுதான் சொல்லிட்டேனே... வேறென்ன... நானும் உன்கூட இப்ப சாப்பிட வந்திருந்தேன்னு வச்சுக்க... அந்த அம்மா வந்திருக்கமாட்டா! அதான் கடவுளே என்னை இப்படிக் கிண்டல் பண்றாரு! யார்கிட்டே போய்ச் சொல்ல முடியும் இதை...? நவம்பர் ஆறாம் தேதியோ என்னவோ பம்பாயில இருந்து விநோத்னு ஒருத்தன் - ஒருவேளை அவன் தான் அவளோட வீட்டுக்காரனோ என்னமோ - வரானாம். அவ போன்லே பேசும்போது கேட்டேன். நான் மட்டும் ஒண்டியா தேவாங்கு மாதிரி உக்காந்து முழிச்சிட்டு இருக்க வேண்டியதுதான்!'' மனக் களைப்பில்

வைத்யநாதன் கட்டிலில் படுத்துக் கொண்டான். உடனே தூங்கிப் போனான்.




## 1983. நவம்பர் 8. செவ்வாய்க் கிழமை.

''ஹலோ! மிஸ்டர் வைத்யநாதன் ப்ளீஸ்!''

''ஹலோ பெஞ்சமின்! வைத்யநாதன் பேசறேன்...''

''ஒரு லேட் நியூட் வைத்யநாதா! என்னை மெட்றாஸ்ல இருந்து தூக்கிட்டான்.''

வைத்யநாதனுக்குத் திக்கென்றிருந்தது. நெஞ்சை எதுவோ கனமாக அடைத்தது.

''தூக்கிடுவான்னு சொல்லிட்டே இருந்தே...''

''நெஜமாவே தூக்கிட்டான்...''

''இப்ப நீ எங்கே இருந்து பேசறே?''

''மௌண்ட்ரோட் ஆபீஸ்ல இருந்து.''

''எந்த ஊருக்கு பெஞ்சமின்?''

''க்ரேட்டர் பாம்பே! சூப்பர் ஸ்டாரோட ஊர்தான்!''

''பாம்பேயில என்னிக்கு ஜாய்ன் பண்ணணும்?''

''போன உடனே... இப்பத்தான் என்னை இங்க ரிலீவ் பண்ணினான்...''

''எப்படி போகப் போறே...?''

''பிளேன்ல போறேண்டா. டிக்கெட்டெல்லாம் கம்பெனி செலவு. அதுவும் நாளைக்கு எங்க ஜென்ரல் மானேஜரும் அதே பிளேன்ல பாம்பே வரார். அவரோடதான் போறேன்.''

''ஒரு மாசம் டைம் கேக்க முடியாதா?''

''முடியாது. 'வீட்டுக்குப் போ'னு சொல்லிடுவான்.''

''என்னடா இது அநியாயமா இருக்கு! திடீர்னு பாம்பே போன்னு சொன்னா அங்க போய் எங்க தங்கறது?''

''அதெல்லாம் கவலையே இல்லே... ரூம் கிடைக்கிற வரைக்கும் கம்பெனி கெஸ்ட் ஹவுஸ்ல தங்கிக்கலாம்னு எம்.டி. பர்மிஷன் கொடுத்துட்டாராம்...''

''அப்ப இந்த ரூம்...?''

''இன்னியோட காலி பண்றேன்.''

''திங்ஸ் எல்லாம்...?''



''இப்போதைக்கு டிரஸ் மட்டும் எடுத்திட்டுப் போறேன். மத்ததெல்லாம் பெரம்பூர்ல கொண்டுபோய் போட்டுடப் போறேன்.''

''இன்னிக்கு ஈவினிங் ரூமுக்கு வருவே இல்லையா?''

''வருவேன் வருவேன். நைட் ரூம்லதான் இருப்பேன். காலைலே எழுந்ததும் ஆழ்வார்பெட் ஜென்ரல் மானேஜர் வீட்டுக்குப் போயிடறேன். அங்கிருந்து அவரோட கார்லேயே ஏர்போர்ட். அவ்வளவுதான். மத்தியான சாப்பாடு க்ரேட்டர் பாம்பேயில்...''

''அப்ப நானும் பேசாம வேலையை விட்டுட்டு ஊர் போய்ச் சேர வேண்டியது தான்!''

சட்டென ஆனந்தி தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''இப்ப நான் என் ட்ரஸ் தவிர மத்த திங்ஸ் எல்லாம் எடுத்திட்டு பெரம்பூர் போறேன். ஈவினிங் வழக்கம் போல ரூமுக்கு வந்திடுவேன்.''

''அப்ப நீ ஒரு காரியம் செய். லாட்ஜ் மானேஜர்கிட்ட சொல்லி, இப்ப நாம இருக்கற ரூமை கம்ப்ளீட்டா நானே எடுத்துட்டு பே பண்ணிடறேன்னு சொல்லிடு. வேற யாரையாவது போட்றப் போறாரு...''

''நீயும் ஊருக்குப் போயிடப் போறதா சொன்னே?''

''போறவரை தனியா இருந்துக்கலாமே...''

''சரி சொல்லிடறேன்... வச்சிரட்டுமா? ஈவினிங் பார்ப்போம்.''

''ஓயெஸ்...!''

வைத்யநாதன் பெருமூச்சுடன் ரிஸீவரை வைத்தான். எழுந்து தண்ணீர் குடிப்பதற்காக வெளியில் போனான். ஆனந்தியின் தலைகுனிந்த தோற்றம் அவனை வருத்தப்படுத்தியது. அவன் சூர்யாவை விரும்புகிறான். அவனை ஆனந்தி விரும்புகிறாள். வாழ்க்கையின் கோணல்கள் இப்படியெல்லாம் விசித்திரமாக - நிமிரச் செய்ய முடியாதவையாக இருப்பது துக்கத்தை ஏற்படுத்தியது.

தண்ணீர் குடித்துவிட்டு வந்தவனிடம் கிருஷ்ணாராவ் கேட்டார்:
''என்ன வைத்தி ஸார்... போன்ல யார்கிட்டேயோ ஊர்ப் போய்ச் சேரவேண்டியதுதான்னு சொல்லிட்டுருந்தீரே, என்ன சமாசாரம்? வேலையை ரிஸைன் பண்ணிடப் போறீரா?''

''நிச்சயம் பண்ணலை மிஸ்டர் ராவ். சூர்யா மேடம் லீவ் முடிஞ்சு வந்ததும் அவங்களை கன்ஸல்ட் பண்ணிப் பேசிட்டு முடிவு

எடுக்கனும்...''

''ஏன், என்ன விஷயம்? இந்த வேலை பிடிக்கலையா?''

''இந்த ஊரே பிடிக்கலை. சொந்த ஊருக்குத் திரும்பிப் போயிடலாம்னு நினைக்கறேன்... ஆமாம்... மேடம் நாளைக்கு வந்திடுவாங்களா?''

''வியாழக்கிழமைதான் வருவாங்கன்னு நெனைக்கிறேன்.''

கலங்கிய கண்களை ஆனந்தி பெரும் சிரமத்துடன் மறைத்துக் கொண்டாள். வைத்யநாதன் அயர்வுடன் அவனுடைய ஸீட்டில் போய் விழுந்தான். தான் சென்னை வந்ததே தப்பு என்று தோன்றியது. எல்லாமே தேவையில்லாமல் நிகழ்ந்துவிட்ட அதீதங்களாகத் தெரிந்தது. நகர வாழ்க்கையின் எச்சம் இந்த அயர்வுதான் என்பது தெளிவாகப் புரிந்தது. அவனுடைய மனக்கண்களில் குற்றாலமும் ஐந்தருவியும் மேன்மை பெற்றதாகத் தெரிந்தன. அங்கே சந்தடி இல்லை. வேகம் இல்லை. தூசு இல்லை. அழுக்கு இல்லை. ஆபாசம் இல்லை. சூது இல்லை. வெறும் வாழ்க்கை. வெறும் இயற்கை. வெறும் மலைகள். வெறும் கோயில்கள். வைத்யநாதன் நிச்சயம் செய்துவிட்டான். அவனுடைய களம் குற்றாலம்தான். அவனுடைய நீர்த்துறை அருவிக் கரைகள்தான். அவனுடைய வேலை தாவரங்களோடு தாவரமாக, ஓயாமல் மழையில் நனைந்து திளைப்பதுதான். 'சென்னை நகரமே! உன்னிடம் நான் விரைவில் விடை பெறுவேன். உனக்கு என் அன்பு கலந்து நன்றி-சூர்யா என்ற ஓர் அற்புத ஸ்திரீயை எனக்குக் காட்டியதற்காக...'

**1983. நவம்பர் 10. வியாழக்கிழமை.**

பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டது. வைத்யநாதன் படுக்கையில் இருந்து எழுந்திருக்கவில்லை. அவனது மொத்த உணர்ச்சிகளும் சோர்ந்து ஓய்ந்திருந்தன - எழுந்து கொள்ளவே முடியாதபடி வீழ்ந்து கிடப்பது போல் இருந்தது. பெண் குறித்த தன்னுடைய தாகங்களுக்கு வடிகாலே அமையவில்லை என்ற சுய இரக்கம் சுரந்து மனத்தில் வழிந்தது. ஊரில் மனோஹர் திருமணம் முடிந்து உல்லாசமாக இருப்பான். பெஞ்சமின், பம்பாய் நகரில் ஏதேனும் பெண்ணைக் கிண்டல் செய்து கொண்டிருப்பான். எல்லாமே கனவு போல் சடாரென்று கலைந்து போனது. பெரும் நாடகம் நடந்து முடிந்த மேடை போல் அறை வெறிச்சோடிப்



போயிருந்தது.

நேற்று வரை சூர்யா ஆபீஸ் வரவில்லை. இன்றிலிருந்து தானும் ஆபீஸ் போகப் போவதில்லையென்று வைத்யநாதன் திடுமென முடிவு செய்தான். குற்றாலம் கிளம்பும்வரை இந்த ஊரில் இனி வேலையுமில்லை என்று வைத்யநாதன் தீர்மானித்தான்.

வைத்யநாதன் திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். குளித்துவிட்டு ரத்னா கேஃப் போய் ஆற அமர உட்கார்ந்து வயிறு நிறைய டிபன் சாப்பிட்டான். பதினோரு மணிக்கு பர்ஸனல் மானேஜருக்கு போன் செய்து இன்றிலிருந்து தான் வேலையிலிருந்து விலகிக் கொள்வதாகத் தெரிவித்தான். ராஜினாமாவைக் கடிதம் மூலம் சமர்ப்பிக்கச் சொன்னார். நன்றி சொல்லி விட்டுச் சிறிது நேரம் ரிஸீவரைக் கையில் வைத்தபடி யோசித்தான். தயங்கிக் கொண்டே சூர்யாவின் நம்பருக்கு டயல் செய்தான். எங்கேஜ்ட் சப்தம் வந்தது. 'சூர்யா வந்து விட்டாள்' என நினைத்தபடி சில நிமிஷங்கள் காத்திருந்தான்.

வைத்யநாதன் மறுபடியும் டயல் செய்தான். தொடர்பு உடனே கிடைத்தது.

''ஹலோ...!''

சூர்யாவின் பதமான குரலைக் கேட்டதும் வைத்யநாதன் உணர்ச்சிவசப் பட்டான். சட்டென்று அவனால் பதில் குரல் கொடுக்க முடியவில்லை.

''ஹலோ... ஹலோ...!''

''ஹலோ...! ஐ'ம் வைத்யநாதன்.

''மிஸ்டர் வைத்யநாதன்...! ஆர் யூ நாட் வெல்?''

''நோ சூர்யா...''

''அப்போ ஏன் ஆபீஸ் வரவில்லை?''

''இனிமேல் நான் ஆபீஸ் வரமாட்டேன். வேலையை ராஜினாமா செய்துட்டேன்...''

ஒரு நிமிஷம் சூர்யா அதிர்ச்சியில் மௌனமாக இருந்தாள்.

''இப்பத்தான் பர்சனல் மானேஜருக்கு போன் பண்ணி சொன்னேன். லெட்டர் கேட்டார்... எழுதி அனுப்பறேன்னு சொன்னேன்... மிஸ்டர் வினோத் பாம்பே போயாச்சா?''

''ஓ யெஸ்... போயாச்சு. சரி; நீங்க ஏன் வேலையை ராஜினாமா செய்யணும்? இப்ப என்ன ஆயிடுத்து?''

வைத்யநாதன் பேசாமல் இருந்தான்.

''நான் பி.எம்-கிட்ட சொல்றேன். ராஜினாமாவை வாபஸ் வாங்கிடுங்க.''

''இல்லை சூர்யா, இல்லை; தயவுசெஞ்சு மன்னிச்சிடுங்க... நான் முடிவு பண்ணிட்டேன். ஸாரி! அதை மாத்தறதா இல்லை...''

''ரிஸைன் பண்ணிட்டு என்ன பண்ணப் போறீங்க? உடனே ஊருக்குப் போயிடறதா உத்தேசமா?''

''டிசம்பர் முதல் தேதி ஊருக்குக் கிளம்பறதா முடிவு பண்ணிருக்கேன்.''

''ஸோ... அதுவரைக்கும் மெட்றாஸில் இருப்பீர்கள் இல்லையா?''

''இருப்பேன் சூர்யா.''

''என்னை ஒருமுறை சந்திக்காமல் ஊருக்குப் போய் விடாதீர்கள்.''

''நோ நோ... உங்களைப் பார்க்காமல் போவேனா... இன்று மாலையே ஹாஸ்டலில் வந்து பார்க்கிறேன்...''

''நான் கொஞ்சம் சீக்கிரமே கிளம்பி ஆனந்தியின் வீட்டுக்குப் போய்விட்டு ஐந்தரைக்குள் ஹாஸ்டலுக்கு வந்து விடுகிறேன்... கண்டிப்பாக வருவீர்கள் இல்லையா?''

''நீங்கள் வரக்கூடாது என்று சொன்னாலும்கூட வருவேன்...!'' வைத்யநாதனுக்கு உணர்வுப்பெருக்கு குரலை உடைத்து விட்டது. ரிஸீவரை மனத்தில் வலியுடன் வைத்தான்.

**மா**லை ஐந்துமணிவரை வைத்யநாதன் கடற்கரையில் அலைகளை ஒட்டி நடந்து திரிந்துவிட்டு சூர்யாவின் ஹாஸ்டலை நோக்கி நடந்தான்.

ஒருமுறை கடவுளை மனத்தில் தியானித்துக் கொண்டே சூர்யாவின் அறையை அவன் நெருங்கியபோது உள்ளே வேறொரு பெண்மணியின் குரல் கேட்டதால் கொஞ்சம் தயங்கியபடி நின்றான். கதவின் அருகில் நிழல் படுவதைப் பார்த்துவிட்டாள் சூர்யா.

''யெஸ் கமின்...!''

வைத்யநாதன் உள்ளே போனான்.

''வாருங்கள் வைத்யநாதன். உட்காருங்கள்...'' என்றாள் சூர்யா.

வைத்யநாதன் நாற்காலியில் அமர்ந்தான். சிறிது தள்ளி உட்கார்ந்திருந்த - கொஞ்சம் வயதான பெண்மணி எங்கோ பார்த்த



முகமாகத் தெரிந்தது அவனுக்கு. அதற்குள் சூர்யாவே சொல்லிவிட்டாள்.

''ஆனந்தியோட அம்மா...''

வைத்யநாதன் எழுந்து வணங்கிவிட்டு அமர்ந்தான்.

''இவர் வைத்யநாதன்...''

''தெரியும் இவரை. பாத்திருக்கேன். அப்போ நான் புறப்படறேன்... கார்த்தாலே ஒரு ரிக்ஷா வச்சுண்டு ஆனந்தியை வீட்டுக்கு அழைச்சிட்டு வந்துடறேன்...''

''ரெண்டு நாள் அவ கொஞ்சம் வீட்லேயே ரெஸ்ட்டா இருக்கட்டும்.''

''ஏதோ ஸ்வாமி கிருபையில நான் பார்த்துட்டேன்... இல்லேன்னா என்ன ஆயிருக்கும்? பெருமாள்தான் காப்பாத்தினார்... நாளைக்கு நீங்க ஆபீஸ் முடிஞ்சு வீட்டுக்கு வரேளா?''

''நேரா வந்துடறேன்...''

''மறுபடியும் நீங்க டாக்டரை போன்ல ஒரு தடவை கேட்டுடுங்கோ.''

''அது நான் கேட்டுக்கறேன்.''

''வரட்டுமா அப்போ?''

''நாளைக்கு பார்ப்போம்.''

''வாங்கோ...''

ராஜலட்சுமி, வைத்யநாதனிடமும் சொல்லிக் கொண்டு வெளியேறினாள்.

''உங்களுக்குத் தெரியாதா?'' சூர்யா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''தெரியாதே.. என்ன அவளுக்கு?''

''தற்கொலை பண்ணிக் கொள்ள ஏதோ பாய்ஸன் வாங்கிச் சாப்பிடப் போன போது அவளுடைய அம்மா பார்த்துப் பாய்ந்து அவள் கையில் இருந்த விஷத்தைத் தட்டி விட்டார்கள். அதற்குள் கொஞ்சம் சாப்பிட்டு விட்டாள். உடனே அவளை நம் ராம்ராவ் நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்திருந்தோம்... கொஞ்சம்தான் சாப்பிட்டிருந்ததால் பயப்படத் தேவையே இல்லாமல் போய்விட்டது. நௌ ஷி இஸ் ஆல்ரைட்... உடனே அவளை வீட்டுக்கு அழைத்துப் போய் விடலாம் என்று டாக்டர் சொன்னார். நான்தான் 'இன்று ஒரு நாள் இருக்கட்டும்' என சொன்னேன். நாளைக்குக் காலையிலே 'டிஸ்சார்ஜ்' பண்ணுகிறார்கள்...''

வைத்யநாதன் குற்ற உணர்ச்சியுடன் கண்களை மூடிக் கொண்டிருந்தான். திருநீர்மலையில் ஆனந்தியைப் பார்த்த சம்பவம் அவனுடைய மனத்தில் ஆடியது.

''அப்ப... நீங்க ஊருக்குப் போறதா முடிவு பண்ணிட்டீங்க...?'' சூர்யா கேட்டாள்.

வைத்யநாதன் பதில் சொல்லாமல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சிறிது இளைத்திருப்பது சூர்யாவுக்குத் தெரிந்தது. அவனுடைய உடை கசங்கி அழுக்காகியிருந்தது - முகம் இருண்டு போயிருந்தது. இதெல்லாம் அவனுடைய அதீத காதலின் அசம்பாவிதமாக சூர்யாவுக்கு இலகுவாகப் புரிந்து போயிற்று.

''ஆனந்தி விஷயமா நான் உங்களிடம் சாதகமான பதில் எதையும் எதிர் பார்க்கலாமா வைத்யநாதன்?''

அந்த மன வேதனையிலும் வைத்யநாதனிடம் ஒரு விரக்தி கலந்த சிரிப்பு உதடுகளில் தோன்றி மறைந்தது.

''எனக்குக் காதலே தோன்றாத ஒரு பெண்ணை நான் மணந்து கொள்ள வேண்டும் என்பதில் நீங்கள் சாதகமான பதிலை என்னிடம் எதிர்பார்க்கிறீர்களே சூர்யா!''

''ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ள அவர்களிடையே காதல் தேவையில்லை வைத்யநாதன். தம்பதியாக சந்தோஷமாக வாழத் துவங்கிய பிறகு காதல் தானாகவே பிறந்துவிடும்.''

''நீங்கள் உங்களுடைய எண்ணத்தைச் சொல்கிறீர்கள் சூர்யா. நான் என்னுடைய எண்ணத்தை சொல்கிறேன்! என்னைப் பற்றிய உண்மையைச் சொல்கிறேன். ஐ லவ் சூர்யா; ஆனந்தியை அல்ல...'' அவனுடைய குரலில் கோபம் தெரிந்தது.

''ஆனா அந்த சூர்யா இந்த வைத்யநாதனை லவ் பண்ணலியே...! இந்த உண்மையை உங்களாலே புரிஞ்சுக்க முடியலியா...?''

''இதுதான் எனக்கு விதிக்கப்பட்ட சாபம்!'' - மனம் கசந்து சொன்னான்.

இருவரும் சில நிமிடங்களுக்கு மௌனமாக இருந்தார்கள்.

சூர்யாவுக்குச் சட்டென உடல் நடுங்கியது. தலை சுற்றி நெஞ்சைக் கரித்தது. நெற்றியெல்லாம் முத்து முத்தாய் வியர்த்தது...

''ஒரு நிமிஷம்!'' என்று சொல்லி விட்டு அவசரமாக மூலையில் இருந்த பேஸினை நோக்கி விரைந்தாள். அடுத்த கணம் பேஸினில்



நீரைத் திறந்து விட்டபடி சூர்யா வாந்தி எடுத்தாள்.

வைத்யநாதன் கண்களை மூடியபடி அவள் வருவதற்காகக் கைகளை மார்பில் கட்டியபடி காத்திருந்தான்.

சில நிமிஷங்கள் கழித்து சூர்யா திரும்பி வந்தாள்.

''உடம்பு சரியில்லையா சூர்யா?'' - மிக எதிர்பாராமல் அவன் சூர்யாவைக் கேட்ட இந்தக் கேள்விதான் - சதுரங்கத்தின் இறுதிக் காயாக உத்வேகம் கொண்டு தாக்கி அவனை ஒரு பரிமாணத்தில் உடைத்து நொறுக்கி வேறொரு பரிமாணத்தில் எழுச்சியடையச் செய்துவிட்டது!

''ஆம் வைத்யநாதன்; நேற்றிலிருந்து உடம்பு சிறிது சரியில்லை!''

''டாக்டரிடம் போனீர்களா?''

''நேற்றைக்குப் போயிருந்தேன்.''

''என்ன சொன்னார்?''

''திருமணமான ஒரு பெண் வாமிட் பண்ணுவதைப் பற்றி டாக்டர் என்ன சொல்வார்?''

பளீரென வைத்யநாதன் சூர்யாவை ஏறிட்டுப் பார்த்தான். கறை படாத புஷ்பமாக அவளின் முகம் மந்தஹாஸத்துடன் ஒளிர்ந்தது. அவளுடைய பார்வை சிறிதும் சலனப்படவே இல்லை. மேகமே அற்ற வானத்து நிலாவாக சூர்யாவின் கண்கள் வைத்யநாதனை வாஞ்சையுடன் கண்டு கொண்டேயிருந்தன. துளித் துளியாக வைத்யநாதனின் பார்வை தாழ்ந்து போனது. ஒரு புயல் வந்து சூர்யாவை வெகு தூரம் கொண்டு போய்விட்டது போலிருந்தது. வைத்யநாதனின் உடலே கூனிக் குறுகிப் போனது. போர்க்களத்தில் முற்றிலுமாக அவன் தோற்று நிராயுதபாணியாகி விட்டான்.




**வை**த்யநாதனுக்கு, சூர்யா யாருமில்லை. தெரிந்த அழகான வெறும் பெண்! பழகிய ஓர் அபூர்வமான ஆபீஸர். அதற்குமேல் அவளுடன் அவனுக்கு எந்த உறவின் முறைகளும் இல்லை. இதுவரை நடந்ததெல்லாம் அவனுடைய ஆசாபாசங்களே! உழன்று தவித்ததெல்லாம் அவனின் கிலேசங்களே! வெறும் நிராசையாக ஆடி அலைக்கழித்ததெல்லாம் அவனது ஆற்றாமைமிக்க அதீதக் காதலே!

பல வாரங்களுக்கு முன்பு சொன்னானே-வைத்யநாதன் என்ற மனிதனே இல்லாமல் போய் வெறும் சூர்யாவின் குழந்தையாகிவிட வேண்டுமென்று... நண்பர்களிடம் சொல்லித் தவித்தானே-அந்த அதிர்ஷ்ட அற்புதம்கூட அவனுக்குக் கிடையாது. வேறொரு மனித உயிருக்குத்தான் அந்த அதிர்ஷ்டமும் கிட்டியிருக்கிறது!

வைத்யநாதன் ஏறக்குறைய நாற்காலியில் நீட்டி நிமிர்ந்து படுத்து விட்டவன் போல் சரிந்து கிடந்தான்! அவனுடைய கண்களிலிருந்து சிறிது வழிந்துவிட்ட நீர் ஒரு கறை போல் தெரிந்தது. நிதானமாகக் கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்தான். வெறுமனே காற்றாடியின் தகடுகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். தான் ஒரு நிகரற்ற பெண்ணால்தான் போஷிக்கப்பட வேண்டுமென்ற அவனின் நூதனத் தன்மை அங்கீகரிக்கப்படாமல் நட்டாற்றில் விடப்பட்டுவிட்டது. இனி தன்னைக் காப்பாற்றுவது யார், தன்னை மீட்பது யார் என்ற பூதாகாரமான கேள்விகள் வைத்யநாதனின் அறிவில் அபாய விளக்குப் போல் அசைந்தன. அந்த அபாய விளக்கின் அசைவில் - இத்தனை காலமும் மனத்தின் பாதாளத்தில் நுண்ணுயிராக உறைந்து போயிருந்த அந்த வாலிபனின் ஆண்மை பளீரென்று ஒரு பிரும்மாண்ட சூரியன் போல் எழுச்சியுற்று ஒளிர்ந்தது.

தான் யாராலும் காப்பாற்றப்பட வேண்டிய அளவுக்கு ஆண்மை அழிந்தவன் அல்ல என்ற பௌருஷத்வம் வைத்யநாதனின் உணர்வுகளில் சிலிர்த்து மூண்டது.

ஒரு பெண் -அவள் எத்தனைதான் வலிமை மிக்கவளாக இருந்தாலும், ஆடவனைக் காப்பாற்றக்கூடியவள் இல்லை அவள். பெண்தான் ஒரு ஆடவனால் காப்பாற்றப்பட வேண்டியவள்! இதுவே ஆண் - பெண் இயற்கை. இதுவே இயல்பான மனோகரமான சுழற்சி. மற்ற அனைத்தும் அறிவு முரண்பாட்டின் வக்கிர விபரீதங்களே...

வைத்யநாதன் கம்பீரமாக எழுந்து நின்றான். சற்றே தொய்ந்து இறங்கி விட்டிருந்த பேண்ட்டை இடுப்புக்கு உயர்த்திவிட்டுக் கொண்டான்.

''ஓகே சூர்யா! உங்களை சந்திச்சதுவே ரொம்ப மகிழ்ச்சி... உண்மையிலேயே உங்களுடன் நான் பழகிய இந்த மிகச் சில நாட்கள் அபாரமானவை! மறக்க முடியாதவை! இருந்தாலும், உங்களையும்



உங்களைப் பார்த்துப் பழகிய இந்த தினங்களையும் நான் மறக்கவே விரும்புகிறேன்...!''

சூர்யா எழுந்து நின்றாள்.

''...ஏன் தெரியுமா? இதுவரை நான் பிறந்து வளர்ந்திருக்கும் இந்த இருபத்தைந்து வருட அனுபவத்தில் நான் என் காதலைத் தெரிவிக்கவும் அது நிராகரிக்கப்படவும் நேர்ந்த ஒரே பெண்மணி நீங்கள்தான் என்பதால் உங்களை நான் மறப்பதே என்னுடைய வாழ்க்கைக்கு நன்மையானது...!''

சூர்யா சலனமற்று நின்றாள்.

''....அந்த அளவுக்கு உங்கள் நினைப்பால் பல தினங்கள் நான் சித்தம் கலங்கியவன் போல் திரிந்திருக்கிறேன். பல இரவுகள் தூங்காமல் அழுது தவித்திருக்கிறேன். அந்த நாட்கள் முடிந்துவிட்டன. உங்களால்தான் நான் காப்பாற்றப்பட வேண்டும் என்றெல்லாம் மனத்தில் கலவரமே அடைந்திருந்தேன். என்னை நீங்கள் காப்பாற்ற முன்வரவில்லை. அதனாலேயே கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார்...!''

சூர்யா கண்களை மூடி நின்றாள்.

''....வைத்யநாதன் எழுந்து நின்று விட்டான்! அவன் எழுந்துநின்றது மட்டுமல்ல; நீங்கள் அவனுக்குக் காட்ட மறுத்த கருணையை அவன் அவனைக் காதலிக்கும் ஒரு ஏழை ஊமைப் பெண்ணுக்குக் காட்டப் போகிறான்...!''

சூர்யா பிரமித்தபடி பார்த்தாள். ''ஆனந்தியை வைத்யநாதன் கம்பீரமாகத் திருமணம் புரிந்து கொள்ளப் போகிறான். திருநீர்மலையில் அவளுக்குத் தாலி கட்டி மனைவியாக ஏற்றுக் கொண்டு அவளைக் காப்பாற்றப் போகிறான் - ஒரே ஒரு நிபந்தனையோடு...!''

சூர்யா உணர்வுப்பெருக்குடன் பார்த்தாள்.

''...வைத்யநாதன் ஆனந்தியை மணந்து அவனுடைய ஊருக்கு அழைத்துக் கொண்டு புறப்படுகிற வரைக்கும் எந்த வைபவத்துக்கும் சூர்யா வைத்யநாதனின் கண்களில்கூடப் படக்கூடாது! வைபவங்கள் நடக்கிற ஸ்தலத்துக்குக் கூட சூர்யா வருகை தரக்கூடாது...!''

சூர்யா அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

''...வைத்யநாதனும் மனிதன்தான். அதிகமான ஆயாசங்கள் கொண்ட ரொம்ப ரொம்ப சாதாரண மனிதன் அவன்! அமோகமாக அவன் காதலித்த ஒரு தன்னிகரில்லாத பெண்ணைப் பார்த்துக்

கொஸ்டே... அவளின் எதிரிலேயே இன்னொரு பெண்ணுக்குத் தாலி கட்டுகிற துர்ப்பாக்கியமான கட்டத்தை அவனால் எதிர்நோக்கவே முடியாது... அந்தக் கடைசி விநாடியில்கூட அவன் பின்வாங்கி விடலாம்...! அதனால் இந்த ஒரு உதவியை சூர்யா வைத்யநாதனுக்குச் செய்தே ஆகவேண்டும்...!''

சூர்யாவின் கண்களில் நீர் தளும்பிக் கொண்டிருந்தது. உள் மனம் விம்மி வெடித்தது.

''மே ஐ ஸே குட்-பை?'' - வைத்யநாதன் நட்புடன் தன் கரத்தை உறுதியாக நீட்டினான்.

அதே நட்புடன் ஆனால் மிகவும் பலவீனமாக சூர்யாவின் கரமும் நீண்டது. இறுக்கமாக சூர்யாவின் கையைக் குலுக்கிய வைத்யநாதன், பொலபொலவென்று அவளுடைய கண்களில் இருந்து வழிந்த நீரைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் சடாரென தன்னை விலக்கிக் கொண்டு அவளுடைய அறையிலிருந்து வெளியேறி மறைந்தான்.

**1983. நவம்பர் 22. செவ்வாய்க் கிழமை.**

சென்னை அண்ணா சாலையில் ஹிக்கின்பாதம்ஸ் புத்தக நிறுவனத்தின் பின்புறம் நீண்டு செல்கிற கூவம் நதியின் நேர் வடபுற புதுப்பேட்டையில் சித்ரா தியேட்டருக்கு அருகிலிருந்த ஒரு லாட்ஜின் இரண்டாவது மாடியிலிருந்து சரியாக மாலை நாலேகால் மணிக்கு பெஞ்சமினும் மனோஹரும் இறங்கி திருவல்லிக்கேணி செல்கிற பஸ் ஸ்டாப் நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

''என்னடா பெஞ்சமின்; இதோ இந்தப் பக்கத்து ஸ்டாப்ல நிக்கலாம். என்னத்துக்கு வேஸ்டா அந்தப் பக்கம் போறே? வாலாஜா ரோடுவரை நடக்கணும் அந்த ஸ்டாப்புக்கு...''

''சும்மா மெதுவா ஸைட் அடிச்சிட்டே போலாம்டா! சூர்யா அஞ்சு மணிக்குத்தானே வரச் சொல்லியிருக்காங்க. மணி நாலேகால்தான் ஆகுது.''

''அப்ப உன் ஆபீஸ் வழியா கட் பண்ணிப் போலாமா?''

''சும்னு இரு. மலேரியான்னு சொல்லி லீவ் போட்ருக்கேன்...''

''அந்தப் பக்கமா போனா உன் டைப்பிஸ்ட்டைப் பார்க்கலாமேன்னு நெனைச்சேன்!''

''கழுதைய விட்றா, ஜனவரி மாசம் கல்யாணமாம் அவளுக்கு...''

''ஐயையோ! எவண்டா மாட்னான்?''



''நான் இல்லப்பா, தப்பிச்சேன்!''

''இது கல்யாண ஸீஸன் போல... அடைஞ்சா மகாதேவி, இல்லாவிட்டால் மரணதேவின்னு சொல்லிட்டிருந்த நம்ம வைத்தியே கல்யாணம் பண்ணிட்டு ஊர் போய்ச் சேர்ந்துட்டான்...! ஏதோ ஒவ்வொருத்தனுக்கும் ஏதாவது ஒண்ணு மாட்டிடுது பார்...!''

''உனக்கும் எனக்கும்தான் எதுவுமே கிடைக்கமாட்டேங்குது.''

''பாவம்டா வைத்தி! நான் கல்யாணம் செய்துட்டு ஊர்ல ஜாலியா இருப்பேன்னு நெனைச்சிட்டிருப்பான்...''

''உன்னை அப்படி நினைப்பான். என்னை? அட்டகாசமா பாம்பேயில் ஏதாவது ஒரு பெண்ணைப் பிடிச்சி சுத்திட்டு இருக்கிறதா என்னைப் பத்தி நினைப்பான்.''

''நாம ரெண்டு பேரும் இப்படி புதுப்பேட்டையைச் சுத்திட்டு இருக்கோம்!''

''இன்னும் ஒரு வாரத்துக்குத்தாண்டா! ஒண்ணாம் தேதி பழையபடி நமக்கு அந்த ட்ரிப்ளிகேன்ல அதே லாட்ஜ்ல அதே ரூம்தான்... லாட்ஜ் மேனேஜரைக் காலையில பாத்து ஸம்திங் குடுத்துப் பேசி முடிச்சுட்டேன்...''

''போய்ப் பாக்கலாம், சூர்யாவை - என்னதான் சொல்றாங்கன்னு...''

''ஏதோ பயங்கரமான விஷயம் இருக்குடா மனோஹர்!''

''கண்டிப்பா இருக்கு!''

சூர்யாவின் அறை வாசலில் மனோஹரும் பெஞ்சமினும் கொஞ்சம் தயங்கி நின்று ஒரே குரலில், ''குட் ஈவ்னிங் மேடம்!'' என்றார்கள்.

சூர்யா சந்தோஷத்துடன் அவர்களை வரவேற்றாள். ''வாங்க வாங்க. கரெக்ட்டா வந்துவிட்டீர்கள்! பத்தொன்பதாம் தேதியிட்ட என் கடிதம் கிடைத்தது இல்லையா?''

''கிடைச்சது மேடம்.''

''பரவாயில்லை. ப்ளீஸ் கமின்... இவங்கதான் வைத்யநாதனோட மதர் - இன் - லா!''

பெஞ்சமினும் மனோஹரும் ராஜலட்சுமியைப் பார்த்து வணக்கம் செய்தனர்.

''நீங்க ஏதோ பேசிட்டு இருக்கீங்க. நாங்க வேணா போயிட்டு பத்து நிமிஷம் கழிச்சு வரோம் மேடம்...'' என்றான் பெஞ்சமின்.

''இல்லே இல்லே. இதோ, நான் கிளம்பிண்டே இருக்கேன்.
பக்கத்துல தெரிஞ்சவா வீட்டுக்கு வந்திருந்தேன். அப்படியே
இவாளையும் பார்த்து செத்தே பேசிண்டிருந்துட்டுப் போலாம்னு
நுழைஞ்சேன்... நீங்க இருங்கோ... நான் பொறப்புட்டாச்சு...''
ராஜலட்சுமி எழுந்து கொண்டாள். பெஞ்சமினும் மனோஹரும்
அடக்க ஒடுக்கமாக இரண்டு நாற்காலியில் உட்கார்ந்தார்கள்.
''எப்படியோ ஆனந்தியோட கல்யாணம் நல்லபடியா முடிஞ்சு
அவ விருப்பப்பட்ட பையனோடேயே அவா சொந்த ஊருக்கே
போய்ச் சேர்ந்தாச்சு... ஆனா நீங்க கல்யாணத்துக்கு வராம
இருந்துட்டதுதான் எங்க எல்லாரையுமே வதைக்கிறது. ஆனந்தி
அழுது தவிச்சுடுத்து - நீங்க கல்யாணத்துக்கு வராம போனதில்...''
பெஞ்சமின் ஆச்சரியத்துடன் கேட்டான், ''மேடம், வைத்தியோட
கல்யாணத்துக்குப் போகலையா நீங்க?''
''போகலை!'' - சூர்யா சிரித்துக் கொண்டே சொன்னாள்.
''ஏன் மேடம்?''
''உங்க ஃப்ரெண்ட்தான் அவரோட கல்யாணத்துக்குக் கண்டிப்பா
நான் வரவே கூடாதுன்னு தடை போட்டுட்டார்... அப்பத்தான் தாலி
கட்டுவேன்னு கண்டிஷன் போட்டுட்டார்... என்ன பண்றது?
கல்யாண மாப்பிள்ளையாச்சே!''
''சரியான கொரங்குப் பய...'' - பெஞ்சமின் திட்டினான்.
''ஹலோ! திட்டாதீங்க. மாமியார் கோவிச்சுக்கப் போறார்!''
''அப்போ நான் வரட்டுமா சூர்யா... நாளைக்கு
மாப்பிள்ளையோட லெட்டரும் ஆனந்தியோட லெட்டரும்
வரும்னு நெனைக்கிறேன்...''
''ஆனந்தியோட லெட்டர் எனக்கும் நாளைக்கு வரும்...''
''நீங்க பாம்பேயில இருந்து அவாள்லாம் மெட்றாஸ் வர
வரைக்கும் அடிக்கடி எங்க வீட்டுக்கு வந்து போயிண்டிருக்கணும்.''
''நீங்க அழைக்கவே வேண்டாம். நான் அடிக்கடி வருவேன்...''
''நீங்களும் தனியா வந்துண்டிருக்கக் கூடாது! சீக்கிரமா ஒரு
கல்யாணத்தைப் பண்ணிண்டு தம்பதி சமேதரா வரணும்!
வரட்டுமா?''
ராஜலட்சுமி விடைபெற்றுச் சென்ற பல நிமிஷங்களுக்கு,
பெஞ்சமினும் மனோஹரும் பேயறைந்தவர்கள் போல்



இருந்தார்கள். தர்மசங்கடமான நிலையில் சிக்கிக் கொண்ட சூர்யா,
வேடம் கலைந்துவிட்ட அதிர்வில் மௌனமாக இருந்தாள்.

பெஞ்சமின் குரல் நடுங்கக் கேட்டான்: ''மேடம்! வைத்யநாதனோட மதர் - இன் - லா என்னவோ சொல்லிட்டுப் போறாங்களே, அது நிஜம்தானா?''

''என்ன சொல்லிட்டுப் போனாங்க?'' - கழுத்தில் கிடந்த பொன் சங்கிலியைப் பற்களால் கடித்தவாறே சூர்யா செயற்கையாகக் கேட்டாள்.

''சீக்கிரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டு தம்பதி சமேதரா நீங்க வரணும்னு சொன்னாங்களே...?''

சூர்யா விசித்திரமான முகபாவத்தோடு பதில் சொல்லாமல் இருந்தாள். பெஞ்சமின் தொடர்ந்து கேட்டான்: ''அப்படின்னா மேடம்... உங்களுக்கு இன்னும் கல்யாணமாகலையா?''

''என்ன மேடம் இது... பெரிய அநியாயமா இருக்கு!'' என்றான் மனோஹர்.

''அப்ப, நீங்க உங்களுக்கு மேரேஜ் ஆயிட்டதா வைத்திகிட்ட சொன்னதெல்லாம் பொய்யாங்க மேடம்?''

''ஆம்; பொய்தான் அதெல்லாம்!'' - சூர்யா மெல்லிய குரலில் சொன்னாள்.

பெஞ்சமினும் மனோஹரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்னடாது! மேடம் கடைசியில எல்லாத்துக்குமே காதுல பூ வச்சிட்டாங்க!''

''அதான..?''

''நெஜமாத்தான் சொல்றீங்களா மேடம்...? உங்களுக்கு இன்னும் கல்யாணமே ஆகலையா?''

''இல்லை, ஆகலை!''

பெஞ்சமின் ஓங்கித் தன் நெற்றியில் அறைந்து கொண்டான்.

மனோஹர் கேட்டான்: ''நீங்க வைத்திகிட்ட உங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சுன்னு பொய் சொன்னது ஆனந்திக்கோ, ஆனந்தியைப் பெத்தவங்களுக்கோ தெரியுமா?''

''தெரியுமே!''

''ஏன் அப்படியொரு பொய் சொன்னதா அவங்கள்லாம் கேக்கலையா?''

''கேட்டாங்களே!''

''ஏன் அப்படிப் போய் சொன்னீங்கன்னு அவங்ககிட்டேல்லாம் சொல்லிட்டீங்களா?''

''சொல்லலே!''

''ஏன் சொல்லலை மேடம்?''

''சொல்மாட்டேன்னு சொல்லிட் டேன்!''

''அப்ப இதுவரைக்கும் நீங்க உங்களுக்குக் கல்யாணமாயிடுச் சுன்னு பொய் தான் சொன்னீங்கன்னு வைத்திக்குத் தெரியாது?''

''தெரியாது!''

''ஏன் அந்தப் பொய் சொன்னீங்கன்னு ஆனந்திக்குத் தெரியாது?''

''தெரியாது!''

''எங்களுக்குத் தெரிஞ்சாகணுமே மேடம்!'' - பெஞ்சமின் தாடியைத் தடவிக் கொண்டே கேட்டான்.

சூர்யா வரைந்த சித்திரம் போல் அசையாமல் இருந்தாள்.

''ஆனந்திக்குத் தெரியாவிட்டாலும் போகுது. நீங்க எங்களுக்குக் காரணத்தை சொல்லித்தான் ஆகணும் மேடம்!''

''ஸாரி! காரணத்தையெல்லாம் கேக்காதீங்க'' என்றாள் சூர்யா.

''எங்களுக்கு மட்டும் சொல்லுங்க!''

''ஸாரி மனோஹர்...!''

''நாங்க யார்கிட்டேயும் சொல்ல மாட்டோம். உங்க சொல்படி வைத்தியை தனியா விட்டுட்டு எவ்வளவு பெரிய நாடகம் ஆடியிருக்கோம்! அதுக்காகவாவது எங்ககிட்ட உண்மையைச் சொல்லுங்க.''

''ஸாரி மிஸ்டர் பெஞ்சமின்!''

சில விநாடிகளுக்கு மனோஹரும் பெஞ்சமினும் சூர்யாவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்...

பெஞ்சமின் மனோஹரிடம் சொன்னான்: ''மனோஹர், எந்திரிடா! நேரா மௌண்ட் ரோட் போய் வைத்திக்கு உடனே ஒரு தந்தி குடு. இங்க நடந்த நாடகத்தைச் சொல்லு. ஒரு வரியிலே சூர்யா மணமாகாதவள்னு எழுது. உடனடியா ஆனந்தியையும் அழைச்சுக்கிட்டு அவனை இங்கே புறப்பட்டு வரச் சொல்லு! பாத்துரலாம் ஒரு கை...''








மனோஹர் எழுந்து நின்றான். ''போய் வைத்ய நாதனைக் கிளம்பி வரச் சொல்லி தந்தி குடுத்துடட்டுமா மேடம்?''

சூர்யா பதறி எழுந்து விட்டாள். ''நோ நோ. ப்ளீஸ்! அந்த மாதிரி எதையும் செய்து விடாதீர்கள்...''

''அப்ப உண்மையைச் சொல்லுங்க! ஏன் அவ்வளவு பெரிய பொய் சொல்லி எங்க எல்லாரையும் ஏமாத்தினீங்க?''

சூர்யா தலையைக் குனிந்து கொண்டாள்.

''மனோஹர், உக்கார். மேடம் உண்மையைச் சொல்லிடுவாங்க!''

மனோஹர் உட்கார்ந்து கொண்டான். சூர்யா நின்று கொண்டே இருந்தாள்.

''சத்யமா நீங்க எங்ககிட்டே சொல்றதை நாங்க வேற யார்கிட்டேயும் சொல்லமாட்டோம்...''

''என் வாழ்க்கையில இதுவரைக்கும் யாருக்குமே குடுத்திராத மரியாதையை உங்களுக்கு நான் என் மனசில குடுத்திருக்கேன் மேடம்! அதனால உங்கமேல் ஆணையா சொல்றேன்-நீங்க சொல்றதை யார்கிட்டேயும் நான் சொல்ல மாட்டேன்'' என்றான் பெஞ்சமின்.

சூர்யா மௌனமாக உட்கார்ந்தாள். அவளுடைய கண்களில் இன்னும் தயக்கம் தெரிந்தது.

''சுருக்கமா சொன்னாக்கூடப் போதும்!''

சூர்யா இதற்கு லேசாகச் சிரித்துக் கொண்டாள்: ''யாருக்குமே என் மனம் தெரியாமல் மறைத்து விடலாமென்று நினைத்திருந்தேன். பட், காட் இஸ் க்ரேட்! உண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டியதாகி விட்டது... சொல்கிறேன். ஆனால், அதற்கு முன் ஒரு வார்த்தை-நான் சொல்லும் இந்த விஷயத்தை மட்டும் நீங்கள் யாரிடமும் ஒரு போதும் சொல்லிவிடக் கூடாது - சரியா?''

''ப்ராமிஸ் மேடம்!''

''சத்தியம் மேடம்!''

''ரைட். சத்யம் செய்திருக்கிறீர்கள். மறந்து விடாதீர்கள்.''

பல நிமிஷங்களுக்கு சூர்யா யோசித்துக் கொண்டிருந்தாள்.

''சுருக்கமாக இல்லை; முழுமையாகவே சொல்லி விடுகிறேன்



பெஞ்சமின். நான் யார்; உங்கள் நண்பர் வைத்யநாதன் யார்; என் மனத்தில் என்ன நடந்தது; அவருடைய மனத்தில் என்ன நடந்தது போன்ற எல்லாவற்றையுமே பரிபூரணமாகச் சொல்லி விடுகிறேன். உங்களுக்குத் தெரியும் - நான் பம்பாய் நகரில் பிறந்து வளர்ந்தவள். இதில் உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயம்- என் அப்பா மலையாளி. என் அம்மா தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். சுமார் முப்பது வருடங்களுக்கு முன் அவர்கள் காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டவர்கள். இந்த ஒரு விஷயமே ஆனந்தியின் குடும்பத்தோடு என்னைக் கொஞ்சம் அதிகமாகப் பிணைத்தது என்று சொல்லலாம். ஆனந்தியின் பெற்றோரும் காதலித்துக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள். இவ்விஷயம் தெரியும் அல்லவா உங்களுக்கு?''

''இப்ப நீங்க சொல்லித்தான் தெரியுது மேடம்...''

''ஆனால், ஆனந்தியின் பெற்றோர் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே வறுமையும் நோயும் துன்பமும் சூழ்ந்து கொண்டன. அதற்கு நேர்மாறாக என் பெற்றோரின் வாழ்க்கை அமைந்திருந்தது. மலபார் ஹில்ஸில் எங்கள் வீடு ஒரு அரண்மனை போலிருந்தது. என் அப்பா வெளிநாடுகளுக்குப் பதனிடப்பட்ட தோலை ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார். என் அம்மா லலித கலைகளில் அபூர்வமாக தேர்ச்சி பெற்றவர். மிகுந்த செல்வமும், உயர்ந்த கலா பிரக்ஞையும் பின்னிப் பிணைந்த அற்புதமான சூழலில் நான் பிறந்து வளர்ந்தேன். எனக்கு ஒரு மூத்த சகோதரன், ஒரு மூத்த சகோதரி. இருவருக்கும் திருமணமாகி விட்டது. அப்பா மலையாளியாக இருந்தாலும், அம்மாவின் தமிழ் கலாச்சாரம்; தமிழ் நாகரிகம்தான் அவரை மிகவும் கவர்ந்திருந்தது. அதனால் எங்கள் குடும்பத்தில் தமிழ் இழைதான் பிரதானமாக இருந்தது.

''என் அம்மா லலித கலையில் தேர்ச்சி பெற்றவர் என்றேன். அந்தத் தேர்ச்சி என்னையும் என் சகோதரியையும் தேர்ச்சி பெறச் செய்தது. நான் சிறு வயதிலிருந்தே நாட்டியம் கற்றேன். ஓவியம் கற்றேன்.

''என் உலகமே கலைமயமாக, இலக்கியச் சுவையாக வடிவமடைந்திருந்தது. என் உலகம் கலாபூர்வமானது. ஆனால், பெண் என்ற காம்ப்ளெக்ஸ் மட்டும் எனக்குள் எந்தக் காலத்திலும் அரும்பியதில்லை. ஆனால், வைத்யநாதனோ காம்ப்ளெக்ஸின் மொத்த உருவம்! காம்ப்ளெக்ஸே இல்லாத ஒரு பெண்ணும் காம்ப்ளெக்ஸ் தவிர வேறு எதுவுமே இல்லாத ஒரு ஆடவனும் சந்திக்க நேர்ந்தபோது சில விபத்துக்கள் நிகழ்ந்து விட்டன!

''தொழிலில் மிகப் பெரிய வீழ்ச்சி ஒன்றைச் சென்ற வருடம்
சந்தித்த என் அப்பாவின் வாழ்க்கையில் பெரும் தேக்கம் ஏற்பட்டது.
பம்பாய் நகரை விட்டு சென்னை வந்து, எஞ்சிய செல்வத்தில் தோல்
வியாபாரத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிசினெஸ்
அட்மினிஸ்ட்ரேஷன் படித்து விட்டுச் சும்மா இருந்த நான், என்
அப்பாவின் மிக நெருங்கிய நண்பரின் இந்த நிறுவனத்தின் சென்னை
கிளையில் ஒரு பொறுப்பான வேலையில் அமர்த்தப்பட்டேன்.

''நான் உத்யோகம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆனால்,
சென்னையில் வந்து குடியேறிவிட எங்கள் பெற்றோர் செய்திருந்த
தீர்மானத்துக்கு முன்னோடியாக முதலில் இந்த வேலையின்
நிமித்தம் நான் மட்டும் மெட்றாஸ் வந்து விடுவது என்று முடிவு
செய்து இங்கு வந்துவிட்டேன் - கொஞ்சமும் எதிர்பாராமல் என்
வாழ்க்கைக் களம் மாறிவிட்டது! என்னுடைய ஒரு உலகம் கலைந்து
போனது. ஆபீஸ் போவது எனக்கு வினோதமாக இருந்தது. அங்கு
பணி புரிபவர்களின் அன்றாட வாழ்க்கையின் ஆசைகளும்
வருத்தங்களும் எனக்கு வியப்பாக-புதுமையாகத் தெரிந்தன. ஒரு
வறுமை மிகுந்த - கலப்புத் திருமணத் தம்பதியின் பேசும் சக்தி
இல்லாத பெண் ஆனந்தியின் சோகம், மனித வாழ்க்கையின்
வேறொரு யதார்த்தத்தை எனக்குக் காட்டியது.

''அந்த தருணத்தில்தான் வைத்யநாதன் என்னுடைய சென்னை
உலகத்தில் பிரவேசித்தார்! என் உலகத்தில் அதுவரை நான்
கண்டிராத-சந்தித்திராத-தான் ஆண் என்ற அதீதப் பிரக்ஞையின்
அவலச் சிலிர்ப்புக் கொண்ட, வருத்தம் நிறைந்தவராக எனக்கு அவர்
அறிமுகம் ஆனார். அவருடைய தேக புஷ்டியில் நிச்சயமான
அறியாமை இருந்தது. என்னை ஒரு பெண்ணாகவே நினைவுபடுத்த
முடியாத நான், அவருக்கு ஒரு பெண்ணாக மட்டும் தெரிந்ததை
வைத்யநாதன் வந்து சேர்ந்து கொண்ட முதல் நாளே நான் கவனித்து
விட்டேன்! வைத்யநாதனின் இந்த கச்சா குணம் முற்றிலும் என்
உலகத்தில் காணாதது. அவரின் சிலிர்ப்பு எனக்குப் பரிச்சயமே
இல்லாதது. அந்தச் சிலிர்ப்பு என்னுள் கருணையை ஊற்றெடுக்கச்
செய்தது! அவருடைய அந்தக் குணம் என்னுள் ஒரு விசித்திர
காதலைப் பிரவகிக்க வைத்து விட்டது. அவரின் தனிமை
முதன்முதலாக என்னுள் பெண் என்ற தனிமத்தைத் தொட்டு ஒரு
ஆடவனை எண்ணிப் பார்க்கும் பெண் மனத்தை இயக்கிவிட்டது!

''நான் காதல் வயப்பட்டேன்! பெஞ்சமின், என்னுடைய இந்தக்



காதல் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அது மட்டுமில்லை; என்
காதலை வெளிப்படுத்த முடியாத புது 'காம்ப்ளெக்ஸ்'
வைத்யநாதனால் எனக்குள் ஏற்பட்டது அதை விடப் பெரிய
ஆச்சரியம் இல்லையா?''

சூர்யா சில நிமிஷங்கள் யோசித்தவாறு மௌனமாக இருந்தாள்.
பின் தொடர்ந்தாள்: ''அதனால், முற்றிலும் கிராமப்புற தன்மையின்
பசுமையைக் கொண்டிருந்த வைத்யநாதனை என்னிடம் மிக
இலகுவாக அணுக வைக்கிற முறையில் நான் நடந்து கொள்ளத்
தொடங்கினேன்! அவருக்கு சிநேகிதிகள் இருக்கிறார்களா என்று
அவரை நான் உரிமையுடன் கேலி செய்தேன்! ஆனால், நான்
கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை - வைத்யநாதனும் என்னை
அணுக அந்தச் சிநேகிதி என்ற துருப்பையே உபயோகித்து விட்டார்!

''....லலிதா என்ற பெயரில் அவருக்கு வந்த முதல் கடிதம் எனக்கு
முதல் அதிர்ச்சியாகத்தான் இருந்தது! ஆனால், நான் ஏமாற்ற உணர்வு
எதையும் அடையவில்லை. ஆச்சரியப்பட்டேன்; சந்தோஷப்
பட்டேன். இந்தச் சமயத்தில்தான் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

''எதிர்பாராமல் ஆனந்தியின் ஊமை மனத்தில் வைத்யநாதனின்
மேல் ஒரு ஈடுபாடு வந்தது. தனக்குத் திருமணம் ஆகுமா என்று மனம்
வெதும்பிப் போயிருந்த ஆனந்திக்கு நான் நிறைய ஆறுதல் சொல்லிக்
கொண்டிருந்த நேரம் அது! எப்படியாவது அவளுக்குத் திருமணம்
செய்து வைத்து அவளுக்கு ஒரு நல்ல ஸ்திரமான வாழ்க்கையை என்
முயற்சியால் அமைத்துத் தந்துவிட வேண்டுமென்று நான் ஓர் உறுதி
கொண்டிருந்த நேரம் அது...!''

பெஞ்சமின் எழுந்து நின்று விட்டான்: ''புரிந்துவிட்டது மேடம்.
புரிந்து விட்டது. இனிமேல் நீங்கள் சொல்லவே வேணாம்...
எல்லாமே எங்களுக்குப் புரிஞ்சு போச்சு...!''

''இருங்கள் பெஞ்சமின்! இன்னும் கொஞ்சம் சொல்லி
விடுகிறேன்.''

மறுபடியும் பெஞ்சமின் மெதுவாக நாற்காலியின் விளிம்பில்
அமர்ந்து கொண்டான்.

சூர்யா தொடர்ந்தாள்: ''அந்த நேரத்தில் ஆனந்தி, வைத்யநாதன்
மேல் ஓர் இரக்கப்படத்தக்க முறையில் காதல் வயப்பட்டு, அவனை
வைத்யநாதனுக்கு மணம் செய்து வைக்க முடியுமா என்று என்னைக்
கேட்டது எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. வைத்யநாதனுக்கு
ஏற்கெனவே லலிதா என்ற பெண்ணுடன் நட்பு இருக்கிறது என்றும்,

அந்த லலிதா, வைத்யநாதனையே மணக்க ஆர்வம்
கொண்டிருக்கிறாள் என்றும் உண்மையிலேயே நம்பியிருந்த நான்,
அதையே ஆனந்திக்கு எடுத்துச் சொல்லி, அவளுக்கு நான்
இவ்விஷயத்தில் உதவி செய்ய முடியாமல் இருந்ததற்கு
வருத்தப்பட்டேன்! வைத்யநாதனை மறந்து விடவும் சொன்னேன்.
நான் ஆசைப்பட்டதையும், லலிதாவின் கடிதம் கண்டு என்னைத்
தேற்றிக் கொண்டதையும் நான் அவளுக்குச் சொல்லவில்லை.
''பிறகு, வைத்யநாதனுக்கு லலிதா என்ற சிநேகிதியே
இல்லையென்பது தெரிந்து, அப்படி ஒரு நாடகத்தைப் புனைந்ததே
என்னை அவர்பால் வசீகரிக்க, அவர் மிகத் தொலைவான
எதிர்மறையில் என்னை அணுகிய காதல் அணுகல் என்று
தெரிந்தபோது, உண்மையில் நான் பிரமித்துப் போனேன். நாங்கள்
இருவருமே ஒருவரை ஒருவர் காதலுடன் அணுகியிருக்கிறோம்.
ஒரே பாணியில்...!
''....வைத்யநாதனின் காதலைப் பெற்றுக் கொண்டு என்னுயை
காதலைக் கைம்மாறாக வெளிப்படுத்தும் எண்ணம் ஒரு நிமிடம்
என்னுள்ளும் துளிர்த்ததென்னமோ உண்மை.
''ஆனால்... ஆனால்... என்னைப் பற்றி ஆனந்தி என்ன
நினைப்பாள்? லலிதா என்ற பெண்ணைக் கற்பனை செய்து அவளது
காதலை முறியடிக்க நான் ஆடிய நாடகமாக எண்ணி என்னை
வெறுப்பாள். ஸோ... அந்தக் கணமே நான் வைத்யநாதனை
மணப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தேன். உடனே
வைத்யநாதனின் ஆற்றாமைமிக்க காதலையும் என் காதல்
தாட்சண்யமின்றி நிராகரித்துவிட்டது. வைத்யநாதன் நான்
சொல்கிறேன் என்பதற்காக ஆனந்தியைக் கட்டாயம் ஏற்றுக்
கொள்வார் என்று நான் எதிர்பாக்கவில்லை. ஆனால் எந்தக்
காரணத்தாலும் என்னைத்தான் மணப்பேன் என்ற பிடிவாதத்தில்
அவர் ஆனந்தியை நிராகரிக்கிற நிலை ஏற்படக் கூடாது என்பது அந்த
விநாடியே என் அறிவுக்குப் புலப்பட்டு விட்டது! வைத்யநாதன்
ஆனந்தியை மனைவியாக ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ,
நான் அவருடைய மனைவியாகக் கூடாது! அந்த விபரீதத்திலிருந்து
என்னைக் காப்பாற்றிக் கொள்ள, எனக்கு ஏற்கெனவே திருமண
மாகிவிட்டது என்ற பெரிய பொய்யை மிகுந்த வேதனையோடுதான்
சிருஷ்டித்துக் கொண்டேன்.''
சிறிது நேரத்துக்கு அறையில் நிசப்தம் நிலவியது.



''ஒரு சந்தேகம் மேடம்!'' என்றான் பெஞ்சமின்.
''கேளுங்கள்.''
''என்னையும் இவனையும் ஏதாவது பொய்களைச் சொல்லி
எதற்காக வைத்யநாதனைத் தனியாக விட்டுவிட்டு எங்களை வேறு
இடத்தில் அவனுக்குத் தெரியாமல் போய் இருக்கச் சொன்னீர்கள்?''
''இட்ஸ் வெரி ஸிம்பிள் மனோஹர்! என் மீதிருந்த மோகத்தை
வெளிக்காட்ட அவர் மேற்கொண்ட உத்திகளில் உங்கள் இருவரின்
பங்கும் இருந்தது அல்லவா? அந்தப் பங்கு தொடரக் கூடாதென்று
கணக்கிட்டேன்! இறுதிவரை அவரின் அதீதக் காதல்
நிராகரிக்கப்படவே போகிற தருணத்தில், வைத்யநாதனின் மொத்த
உணர்வுகளும் ஏமாற்றத்தில் நிராதரவாகப் பொங்கிக் குமுறலாம்.
அப்போது தனிமையே அவரைச் சாந்தப்படுத்தும். நல்ல
முடிவுகளுக்கு வைத்யநாதனைத் தூண்டும் என்று நினைத்தேன்.
அந்தக் குமுறலைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் உடன் இருந்தால்,
உங்கள் ஆதரவு அவருக்கு ஒரு எதிர்மறை சக்தியைத் தந்து, அவரைத்
திசை திருப்பிவிட வாய்ப்பு உண்டு என எனக்குத் திடீரென்று
தோன்றியது. உங்கள் இருவரையும் அழைத்து
வைத்யநாதனிடமிருந்து கத்தரித்து விட்டேன்-தட்ஸ் ஆல்!''
''அப்படி கத்தரித்து விடுவதால் அவன் ஆனந்தியை மணக்கச்
சம்மதித்து விடுவானென்று எதிர்பார்த்தீர்களா?''
''நோ நோ. அதை எதிர்பார்த்து எதையுமே நான் செய்யவில்லை
பெஞ்சமின். ஆனந்தியின் திருமணம் அப்படி நிகழவும் இல்லை.
உங்களிடம் பகிர்ந்து கொள்ள இல்லாத தனிமையில் வேலையை
ராஜினாமா செய்யும் கோபம் அடைந்தார். சொந்த ஊருக்கே
திரும்பிப் போய்விட முடிவு செய்தார். அப்படி ஊருக்குப் புறப்படும்
முன் கடைசி முறையாக அவருடைய காதலை நான் அங்கீகரிக்க
அழுது கெஞ்சிப் பார்க்க வந்தார்! அந்தச் சமயத்தில் தற்செயலாக
உடல் அசௌகரியத்தால் எனக்கு ஏற்பட்டிருந்த அஜீரண வாந்தியை,
கருவுற்று இருப்பதற்கான அடையாளமாகச் சமயோசிதத்துடன்
கற்பிதம் செய்து விட்டேன்! தட்ஸ் ஆல்! எங்கோ அதலபாதாளத்
துக்குத் தூக்கி எறியப்பட்டு அத்தனை படிமங்களும் உடைந்து
நொறுங்கி உதிர்ந்துவிட, நான் சிறிதும் எதிர்பாராமல் ஆனந்தியின்
காதலை ஏற்று அவளை உடனே மணந்து கொள்வதாகச் சொல்லி,
வைத்யநாதன் அற்புதமான ஆண்மகனாக எழுச்சியடைந்து
விட்டார்...!''

பெஞ்சமின் உடலைச் சிலிர்த்துக் கொண்டான்.

''பதினெட்டாம் தேதி திருநீர்மலையில் அவர்களுடைய திருமணம் முடிந்தது. சனிக்கிழமை உங்களுக்கு நான் லெட்டர் எழுதிப் போஸ்ட் செய்தேன். இன்று ஆனந்தியை அழைத்துக் கொண்டு வைத்யநாதன் ஊருக்குப் போகிறார்.''

''என்னிக்காவது உங்களுக்குக் கல்யாணம் ஆயிட்டதா நீங்க பொய் சொன்னது வைத்திக்குத் தெரிஞ்சு போச்சுன்னா மேடம்?'' - பெஞ்சமின் குரல் கம்மக் கேட்டான்.

''உங்கள் இருவரில் யாராவது சொன்னால்தான்! வேறு எந்த வழியிலும் அவருக்குத் தெரிய இனி வழியில்லை...''

''நாங்க சொல்லமாட்டோம் மேடம். எங்க உயிரே போவதாக இருந்தாலும் இந்த விஷயத்தை யார்கிட்டேயும் மூச்சுக்கூட விடமாட்டோம்... இது உறுதி மேடம்...!''

''உங்கள் இருவருக்கும் என் நன்றி.'' - சூர்யா முகம் மலர வணங்கினாள். பெஞ்சமின் கண் கலங்கினான். மனோஹர் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''நாங்க் வர்றோம்... மேடம்!'' - இருவரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

''போய் வாருங்கள்.''

பெஞ்சமினும் மனோஹரும் ஹாஸ்டலை விட்டு வெளியே வந்தார்கள். எதுவும் பேசிக் கொள்ளாமல் வெகு தூரம்வரை இருவரும் நடந்தார்கள்.

''என்னடா பெஞ்சமின், கடைசில பார்த்தா கதை எப்படியோ முடியுது...''

பெஞ்சமின் பதில் சொல்லாமலேயே நடந்தான்.

''ஆனந்திக்காக தன்னோட காதலையே கபால்னு மூடி மறைச்சிட்டாங்க பார், மேடம். சே! எவடா பண்ணுவா இந்த மாதிரி - அதுவும் இந்தக் காலத்துல?''

பெஞ்சமின் மௌனமாகவே சென்றான்.

''ஒரு நல்ல நாள் பாத்து பாக்யராஜ்கிட்டே வைத்தியோட இந்தக் கதையை நடந்தது நடந்தபடி அப்படியே சொல்லுவோமா?'' - மனோஹர் கேட்டான்.

பெஞ்சமின் பெருமூச்சு விட்டான்: ''சொல்லி...?''

''அப்படியே படம் பண்ணிடச் சொல்லிடலாம்.''



''சரி, படம் பண்ணி?...''

''படம் பண்ணி, ரிலீஸ் பண்ண வேண்டியதுதான். அதானே நம்மோட லைஃப் ஆம்பிஷன்?''

''இல்லடா மனோஹர்! நம்மோட லட்சியத்தை நிறைவேத்தறதுக்கு வேற ஏதாவது கப்ஸா கதைதான் செட்டப் பண்ணணும் - வைத்தியோட இந்த உண்மைக் கதை வேணாம்...''

''என்னடாது... கபால்னு பல்டி அடிச்சிட்டே?''

''பல்டி அடிச்சித்தான்டா ஆகணும். வேற வழியில்லை. இந்தக் கதையைப் போய் நாம படம் எடுத்து, அது ரிலீஸாகி, படமும் ஓஹோன்னு ஓடி, நாம வொர்க் பண்ணின படமாச்சே, போய்ப் பார்க்கலாம்னு வைத்திக்கும் தோணி படத்தையும் பார்த்தான்னு வச்சுக்க.. சொல்ல முடியாது. சூர்யா அவன்கிட்ட சொன்னதெல்லாம் பொய்யோன்னு சந்தேகம் வந்திடும் அவனுக்கு! ஆனந்தியைத் தொலைச்சிருவான் தொலைச்சி...! அதனால, இந்தக் கதையைப் பொறுத்த வரைக்கும் கதையாக்கூட யார்க்கிட்டேயும் வாயைத் திறந்திடக் கூடாது! கப்சிப்னு இருக்கணும்... தெரியுதா?''


''நீ சொல்றதும் சரிதான். அதை நெனைச்சுப் பாக்கலை நான்...'' லேசாக மழை தூறத் துவங்கிய இருளில் இவர்கள் இருவரும் அதற்கு மேல் எதுவும் பேசத் தோன்றாமல் புதுப்பேட்டையை நோக்கி மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

**1983. நவம்பர் 23. புதன்கிழமை.**

**வ**லதுபுறம் பச்சைப் பசேலென்ற வயல் சதுரங்கள். இடதுபுறம் மலைச்சரிவில் பரந்த தேக்கு வனம். எங்கும் வெண்பனி கவிந்தது போல, மழை மிக அடர்த்தியாகச் சூழ்ந்திருந்தது. சதுப்பாகிப் போயிருந்த நீண்ட சாலையில் மணிகள் சப்தமிட இரட்டை மாட்டு வண்டி உற்சாகமாக ஓடிக் கொண்டிருக்க, வண்டிக்குள் ஆனந்தி இன்ப மெருகுடன் உட்கார்ந்திருந்தாள். ஷர்ட்டைக் கழற்றி வண்டியில் எறிந்துவிட்டு மழையில் நனைந்தபடி வைத்யநாதன் கொழுத்த பசுங்கன்று போல வண்டியின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தான்.

சற்று தூரத்தில் ஐந்தருவியின் ஆனந்த சப்தம் பிரும்மாண்டமாக ஒலித்தது.....

(முற்றும்)



# "நான் மரண விடுதலை பெறுகிறேன்..!"

**குமுதம் ரிப்போர்ட்டர்**
**9.3.2008**

**எ**ழுத்தாளர் சுஜாதா மறைந்த ரணமே இன்னும் ஆறாத நிலையில், எழுத்தாளர் ஸ்டெல்லா புருஸ் தற்கொலை மூலம் தனது வாழ்வை முடித்துக் கொண்டு எழுத்துலகத்துக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கிறார்.

**கா**தல் மனைவியின் மரணத்தால் எழுந்த கவலை, கூடவே எழுத்தாளர்களுக்கே உரித்தான வறுமை, இரண்டும் கூட்டு சேர்ந்துகொண்டு ஸ்டெல்லா புருஸின் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கின்றன. 'நான் ஹேமாவிடம் செல்கிறேன். மரண விடுதலை பெறுகிறேன்' என்ற ரீதியில் வருத்தம் தோய்ந்த வரிகளைப் பதிவு செய்துவிட்டு, கட்டியிருந்த வேஷ்டியின் மூலம், கடந்த முதல் தேதி மரணத்தைத் கட்டித் தழுவிக் கொண்டிருக்கிறார் ஸ்டெல்லா புருஸ்.

கோடம்பாக்கம் டேங்க் ரோட்டில் அவரது வீட்டு மேல்மாடியில் வசிக்கும் கவிதா என்பவரிடம் பேசினோம். ''அவரது சொந்தப் பெயர் ராம் மோகன். அவர் குடியிருந்த இந்த வீடு ஹேமாவின் அண்ணனுக்குச் சொந்தமான வீடு. அவர் துபாயில் இருப்பதால் ஸ்டெல்லா புருஸ் மனைவியுடன் இங்கே வாழ்ந்து வந்தார். ஸ்டெல்லாவுக்கும், ஹேமாவுக்கும் கிட்டத்தட்ட பதினாறு வருட வயது வித்தியாசம். குழந்தைகள் இல்லை. இருந்தாலும் இவ்வளவு அன்னியோன்னியமான தம்பதியை யாரும் பார்க்க முடியாது. ஹேமாவின் தங்கை பிரேமாவும் இவர்களோடுதான் இருந்தார். நான்கு வருடங்களுக்கு முன் பிரேமா இதய நோயால் இறந்து போனார்.

ஸ்டெல்லா தேவையில்லாமல் யாருடனும் பேச மாட்டார். ஆனால், ஹேமா நேர்மாறாக எல்லோருடனும் கலகலப்பாகப் பேசுவார். இ.பி.பில் கட்டுவது, இன்கம் டாக்ஸ் கட்டப் போவது என அனைத்து வேலைகளையும் ஹேமாதான் செய்வார். ஸ்டெல்லாவுக்கு எந்தச் சுமையும் தர மாட்டார். இந்த நிலையில்தான் கடந்த வருடம் ஜூலை மாதம் ஹேமாவுக்கு கிட்னி ஃபெயிலியரானது. துடித்துப் போன ஸ்டெல்லா, மனைவியின் சிகிச்சைக்காக கையில் இருந்த அவ்வளவு பணத்தையும் செலவழித்தார். அப்படியிருந்தும் ஹேமாவைக் காப்பாற்ற முடியவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஹேமா இறந்து போய் விட்டார்.

**ம**னைவி இறந்ததை ஸ்டெல்லாவால் நம்பவே முடியவில்லை. திக்பிரமை அடைந்தவர் போல ஆகிவிட்டார். தனக்குத்தானே சிறைவாசம் விதித்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே வாழ்ந்து வந்தார். அவருக்கான சமையல் மற்றும் துணி துவைக்கும் வேலைகளை ஒரு வேலைக்காரம்மாள் செய்து வந்தார்.

**தனக்குத்தானே சிறைவாசம் விதித்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே வாழ்ந்து வந்தார்.**



அதிகாலையில் ஆறு மணிக்கு எழுந்து நாங்கள் செல்வதற்கு வசதியாக கேட்டின் பூட்டைத் திறந்து வைப்பார். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவார். பிறகு அவரே டீ போட்டுக் குடித்து விட்டு, டேபிள் மேல் பேனா, பேப்பரோடு எழுதுவதற்கு உட்கார்ந்து விடுவார். மனைவியின் மரணம் அவரை ரொம்பவே பாதித்து விட்டது. 'நான் ரொம்ப நாளைக்கு உயிரோட இருக்க மாட்டேன். ஹேமாவோட இடத்துக்கு நானும் போயிடுவேன்' என்று, எங்களை எப்போதாவது பார்த்தால் சொல்வார். நாங்கள் அவரை சமாதானப்படுத்துவோம்.

கடந்த முதல் தேதி இரவு வீட்டின் வெளியே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்து விட்டு உள்ளேபோய் விட்டார். மறுநாள் காலையில் வேலைக்காரம்மாள் வந்த போது கதவு சாத்திக் கிடந்திருக்கிறது. வேலைக்காரம்மாள் குரல் கொடுத்தபோது பதிலே இல்லை. சந்தேகமடைந்த அவர் எங்களிடம் வந்து சொன்னதும் நாங்கள் உள்ளே போய்ப் பார்த்தோம். ஸ்டெல்லா தூக்கு மாட்டி இறந்து போயிருந்தார். உடனே மருத்துவமனைக்கு உடலை அனுப்பிவிட்டு உறவினர்களுக்குத் தகவல் கொடுத்தோம். வாழ்க்கையில் இவரைப் போல ஒரு மனிதரைப் பார்க்கவே முடியாது'' என ரொம்பவே சோகம் தாங்காமல் கூறினார் கவிதா.

நாம் ஸ்டெல்லா புரூஸின் வீட்டுக்குள் போனபோது, அவரது தங்கை தேவிகா ராணி சோகத்தோடு அமர்ந்திருந்தார். ''எங்கள் சொந்த ஊர் விருதுநகர். நாங்கள் பணக்காரக் குடும்பம். அண்ணன் ஆரம்பத்தில் இருந்தே திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு மேன்ஷனில்தான் தங்கியிருந்தார். தத்துவ மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தியின் வழியைப் பின்பற்றி எழுத்துலகில் கால் பதித்தார். எங்கள் அப்பா ரத்தினம் இறந்து விட்டார். அம்மா தமயந்தி சொந்த ஊரில் இருக்கிறார். நான்கு நாளைக்கு முன்புகூட, அண்ணன் அம்மாவிடம் போனில் பேசும்போது, ஹேமாவின் பிரிவைத் தாங்க முடியாமல் தவிப்பதாக வருத்தப்பட்டார். அம்மாவும், 'எங்களோடவே வந்து இருப்பா. மனசு வருத்தப் படாதே. நீ நல்லா இருந்தாத்தான் நான் இங்க நல்லா இருக்க முடியும்' என ஆறுதல் சொன்னார். அதற்குள் இப்படியொரு முடிவை எடுத்து விட்டார். மனதுக்கு மிகுந்த வேதனையாக இருக்கிறது'' என்றார் தேம்பியபடி

**ஸ்**டெல்லாவின் நண்பர்களோடு பேசினோம்.



'ஸ்டெல்லா இறுதிக் காலங்களில் மிகுந்த பணக் கஷ்டத்திற்கு ஆளாகியிருந்தார். யாரிடமும் எதையும் கேட்க மாட்டார். எழுத்தும், காதல் மனைவியும் தான் அவரது உலகம். கறுப்புக் கண்ணாடியுடன் கூடிய அவரது கம்பீரத் தோற்றத்தை இனி பார்க்க முடியாது. தகுதி, அந்தஸ்து, ஈகோ எதுவும் இல்லாமல் வாழ்ந்த மனிதர் அவர். புத்தகம் படிப்பது, இலக்கியம் பேசுவது, நேரம் கிடைக்கும் போதெல்லாம் புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமம் போவது என - பலரும் மனதில் கனவு காணும் வாழ்க்கையை அவர் நிஜத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அப்படிப்பட்ட வாழ்க்கை அவருக்கு சூனியமான போதுதான், இப்படியொரு மரணத்தைத் தேடிக் கொண்டார்'' என வேதனைப் பட்டார்கள் அவர்கள்.

ஸ்டெல்லா புரூஸ் கடைசியாக எழுதிய கடிதமொன்றை அவரது நண்பர் ஒருவர் நமக்குக் காட்டினார். அதில், 'எனக்கு வயது 67. இத்தனை வருடங்களில் எனக்கு வாழ்க்கையைப் பற்றிய வருத்தங்கள் எதுவும் இல்லை. எளிய, உண்மையான, அடக்கமான மனிதனாகவே

வாழ்ந்திருக்கிறேன். என்னை அலாதியான காதலோடு நேசித்து, பத்திரப்படுத்தி வந்த அபூர்வமான மனைவி ஹேமாவோடு வாழ்ந்ததை எத்தனை பிறவியானாலும் மறக்க மாட்டேன். பணக் கஷ்டமும், தனிமையும் மிகப் பெரிய வேதனை. வயதான காலத்திற்குத் தேவையான பணம், வங்கிடெபாசிட்டில் இல்லை. எனது நம்பிக்கையில் நான் உடைந்து போய் விட்டேன். நான் சீக்கிரம் விடுதலை பெறுவேன்!' என காற்றில் படபடத்தது அந்தக் கடிதம்.

'ஒருமுறைதான் பூக்கும்', 'அது ஒரு நிலாக்காலம்', 'மீண்டும் அந்த ஞாபகங்கள்', 'வெகுதூரத்தில் மனம்' - இவையெல்லாமே ஸ்டெல்லா புரூஸ் எழுதிய நாவலின் தலைப்புகள். அந்தத் தலைப்புகளே அவரைப்பற்றி ஏதோ சொல்வது போல இல்லை? ○

# எங்கே போனார்கள்?

## ஓவியர்அரஸ் -நேரடிகேள்வி

**தினமலர் - வாரமலர்**

**ஸ்**டெல்லா புரூஸின் மரணம் என்னை வெகுவாகப் பாதித்து விட்டது. இத்தனைக்கும் அவரை நான் நேரில் பாத்ததுகூட கிடையாது. ஒரு ஓவியன் என்ற முறையில் 25 ஆண்டுகளாக பல எழுத்தாளர்களின் கதைகளுக்குப் படம் வரைந்திருக்கிறேன். அதில் சிலரது கதைகளுக்கு ஓவியம் வரைவது என்பது எனக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்து விடும். இதில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான எழுத்தாளர் ஸ்டெல்லா புரூஸ்.

தனக்கென்று தனி அடையாளத்தோட வாழ்ந்தவர்; எழுதியவர்.

அவரது 'அது ஒரு நிலாக் காலம்' தொடருக்கு விகடனில் ஓவியம் வரைந்திருக்கிறேன். என்னை வாசகர்கள் மத்தியில் புகழ் பெறச் செய்தது அந்தத் தொடருக்கான ஓவியங்கள்.

அந்தத் தொடருக்கான கேரக்டர்கள் அமைப்பது குறித்து அவரிடம் நான் பலமுறை பேசியிருக்கிறேன். கம்பீரமான குரல். அந்தத் தொடரில் வரும் கதாநாயகன் உறுதியான ஆண்மை ததும்பும் ஒரு கேரக்டர். இந்தக் கதை மட்டுமல்ல... 'புதிய பார்வை'யில் ஒரு தொடருக்கும் படம் போட்டிருக்கிறேன். அதில் வரும் கேரக்டர்களும் இரும்பு இதயம் படைத்த ஆண்களாக வரும்படி இருக்கும்.

எனக்கு ஆச்சரியமாக இருந்திருக்கிறது. இப்படி இவர் எழுதும் கதைகளில் வரும் கதாபாத்திரங்களே இப்படி இருந்தால், இவர் மிகவும் தைரியமான ஒரு எழுத்தாளர்தான் என்று நினைத்திருந்தேன்.

அவரை நானும் என்னை அவரும் பார்க்க விரும்பி... தள்ளித்தள்ளிப் போய்...

**ஸ்**டெல்லாபுரூஸ் சடலமாய் படுத்திருந்தார்.

சமீப காலமாக இறந்தவர்களுக்கு இறுதி அஞ்சலி செய்யும் பண்பு குறைந்து வருகிறது! நேரப் பற்றாக்குறையோ அல்லது 'இனி அவரால் என்ன ஆகப் போகிறது?' - என்கிற நினைப்போ என்னவோ பிறந்த நாளுக்கு வரும் கூட்டம்கூட இறந்த நாளுக்கு வருவதில்லை.

குடும்பத்தினர் தவிர, விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் பொன்ஸி, தியாகு, கவிஞர் தாமரை, பதிப்பக நபர்கள் இரண்டு பேர் என்று மட்டுமே கண்ணில் தட்டுப்பட்டார்கள். அவர் கதையை பிரசுரித்தவர்களில் பலர் அங்கு இல்லை. எத்தனை பிரபலமான எழுத்தாளர்? எழுத்தை ரசித்த ரசிகர்களில் எவரும் தென்படவில்லை. ஏன்? ஓரிரு மாலைகள். மரியாதை செலுத்தும் போது கவிஞர் தாமரை கதறி அழுது விட்டார்! என்ன கொடுமை... அவ்வளவு சுலபமாய் அவரை இந்த எழுத்துலக சமுதாயம் மறந்து விட்டதா?

ஒரு பெண்ணுக்காக... அவர் காதலுக்காக அவரது குடும்பம் அவரை ஒதுக்கி வைத்து விட்டதாக சொன்னார்கள். ஆனால், அந்தப் பெண்ணைக் கடைசி வரை காப்பாற்றி அதற்காக தான் சம்பாதித்த சொத்துக்களை எல்லாம் அந்த பெண்ணுக்கு ஏற்பட்ட சிறுநீரக நோய்க்காக செலவு செய்தார். அவர் மறைவை ஏற்க முடியாமல்... தன் உயிரை மாய்த்துக் கொண்டு...

இருந்தவரை உயர்ந்த எண்ணங்களோடு வாழ்ந்திருக்கிறார் - தன்னைச் சுற்றிலும் ஒரு வேலியைப் போட்டுக் கொண்டு...

அவர் நினைத்திருந்தால் எழுதிக் குவித்திருக்கலாம். வெகுஜன மீடியாக்களுடனான தொடர்புகளை வளர்த்திருக்கலாம்.

அப்படிச் செய்திருந்தால் அவரது மரணத்தை மீடியாக்களும், போட்டி போட்டுக் கொண்டு இறப்பில் விளம்பரம் தேடும் ப்ளாஷ் செய்திகளில்...

கூட்டமும் கூடியிருக்கும். இரங்கல் கூட்டங்களும் நடத்தியிருப்பார்கள்.

இதுதானே உலகம்? மனசு கேட்கவில்லை. ○

# ''நான் ஹேமாவிடம் செல்கிறேன்''

## ஆனந்த விகடன் - 12.03.2008

**த**மிழ் வாசகர்களுக்கு இது துயரத்தின் பருவமோ!

எழுத்தாளர் சுஜாதா மரணத்தின் நிழல் கரைவதற்குள் ஸ்டெல்லா புரூஸின் தற்கொலை!

கோடம்பாக்கத்தில் உள்ள டாங்க் தெருவில் இருக்கிறது ஸ்டெல்லா புரூஸின் வீடு. வீட்டில் அவருடைய தங்கையைத் தவிர்த்து எவரும் இல்லை. ஒரு மரணம் நிகழ்ந்த வீடு போலவே இல்லை. மலர் மாலைகளோ, அழுகைக் குரல்களோ, ஆறுதல் அஞ்சலிகளோ... எதுவுமே இல்லை. வீட்டுக்கு வெளியில் நம்மைத் தவிர, வேறு ஆளில்லை. இது எதுவும் அறியாமல் ராயப்பேட்டை மருத்துவமனை மார்ச்சுவரியில் உறைந்து கிடந்தார் ஸ்டெல்லா புரூஸ் - சடலமாக!

பல்லாண்டுகளாக எழுத்தாளனாக மட்டுமே இயங்கிய ஒரு மனிதனின் மரணம் எவரையும், எதையும் சலனப்படுத்தவே இல்லையா என்ற நினைப்பே, அவரின் மரணத்தைக் காட்டிலும் துயரம் தருவதாக இருந்தது.

தன் மனைவியின் மறைவும், அந்தப் பிரிவின் துயரும் மட்டுமே தனது மரணத்துக்கான காரணம் என கடிதம் எழுதி வைத்துவிட்டு மின்விசிறியில் தூக்கிட்டுத் தொங்கிவிட்டார் ஸ்டெல்லா புரூஸ். வாழ்வதற்கு வேறு நோக்கங்களே இல்லாத துயரமான தனிமையே இந்த முடிவை நோக்கி அவரைச் செலுத்தியிருக்கிறது.

ராம்மோகன் என்கிற ஸ்டெல்லா புரூஸ், தன் எழுத்துலக வாழ்வை, சிற்றிதழ்களில் தொடங்கியவர். நவீன விருட்சம், மையம் போன்ற சிற்றிதழ்களில் 'காளிதாஸ்' என்ற பெயரில் கவிதைகள் எழுதியவர். பின் ஸ்டெல்லா புரூஸ் என்ற பெயரில் சிறுகதைகளும், நாவல்களும், தொடர்கதைகளும் எழுதினார். அவருடைய 'வசுமதியின் முதல் விமானப் பயணம்' போன்ற சிறுகதைகளும், 'ஒரு முறைதான் பூக்கும்', 'அது ஒரு நிலாக்காலம்', 'மாய நதிகள்' போன்ற தொடர் கதைகளும் வாசகர்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்ற படைப்புகள். அவருடைய புகழ் பெற்ற படைப்புகள் பல விகடனில் வெளிவந்தவை.

ஸ்டெல்லா புரூஸ், எழுத்தின் மீது மட்டுமே ஆர்வம் கொண்டவர். தன்னையோ, தன் படைப்புகளையோ முன்னிறுத்தாதவர். உலகச் சாதுர்யங்களை அறியாதவர். ஆதலால், பொருளாதார சரிவைச் சந்தித்தவர். இருப்பினும் கண்ணியமாகவும், நேர்மையாகவும் வாழ்வை எதிர் கொண்டவர்.

தடுமாற்றங்கள், தத்தளிப்புகள், நிராகரிப்புகளால் ஆனது அவருடைய வாழ்க்கை. இருப்பினும் ஆழ்ந்த பிரியத்தின் சுடரை இடைவிடாமல் தம் படைப்புகளில் எரியச் செய்தவர் அவர். அவருடைய படைப்புகளில் வன்முறையையோ, வாழ்வின் குரூரத்தையோ காண முடியாது. தத்துவ மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி மீதும் ஆழ்ந்த பற்று கொண்டவர்.

ஸ்டெல்லா புரூஸின் மனைவி ஹேமா, சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்து துன்பப்பட்ட போது, அவரை அந்த நோயிலிருந்து காப்பாற்றிவிட முடியும் என்று நம்பினார். மனைவி ஹேமா தன்னுடைய கடைசிக் காலத்தில், நோயின் பிடியில் துன்பப்பட்டதைப் பொறுக்க முடியாமல் நொறுங்கிப் போனார்.

ஸ்டெல்லா புரூஸின் 47-வது வயதில் அவரது கதைகளைப் படித்த வாசகியாக வந்து சேர்ந்தார் ஹேமா. எந்த வேலைக்கும் போகாமல் படித்துக் கொண்டும், எழுதிக்கொண்டும், பயணித்துக் கொண்டும் இருந்தவருக்கு அதே அலைவரிசையில் வந்து மனைவியானார் ஹேமா. மனைவி இறந்த பிறகு, மீண்டும் நேரில் தன்னிடம் தோன்றுவதாக, பேசுவதாக நம்ப ஆரம்பித்தார். அதையே தொடர்ந்து சொல்லிக் கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தார்.

ஸ்டெல்லா புரூஸின் மனைவி சிறுநீரகம் செயலிழந்து அவதிப் படுகிறார் என்ற செய்தி விகடனில் வெளியானபோது, வாசகர்கள் தங்களுக்குப் பிரியமான எழுத்தாளரின் குடும்ப நலனில் பரிவு காட்டினார்கள். அது ஸ்டெல்லா புரூஸை, வாழ்வின் மீது நம்பிக்கை கொள்ளவும் வைத்தது. திடீரென்று நிகழ்ந்த மனைவியின் மரணம், மீண்டும் அவரை முற்றிலுமாக மனச்சோர்வுக்குள் தள்ளியது.

**''கடந்த 67 வருட வாழ்க்கை பற்றி வருத்தங்கள் இல்லை. எளிய, உண்மையான, அடக்கமான மனிதனாக, ஆடம்பரச் சிந்தனை துளியும் இல்லாமல் வந்திருக்கிறேன். நானும், எனது அபூர்வ மனைவி ஹேமாவும் வாழ்ந்த வாழ்க்கை ஓர் அற்புதமான, ஆன்மிகத்தனமான, இலக்கியத்தன்மையான காவியம். ஹேமாவின் துணை இல்லாத வாழ்க்கை சூனியமாக இருக்கிறது. தனிமைச் சிறை கடும் தன்மையாக என்னை நெரிக்கிறது. எனவே, நான் ஹேமாவிடம் செல்கிறேன். மரணத்தின் கதவுகளைத் திறந்து, வாழ்க்கை தண்டனை ஆகிவிடும் போது, மரண விடுதலை பெறுகிறேன்'' என கடிதம் எழுதி வைத்துவிட்டு, தன் நண்பரும், கவிஞருமான ஆத்மநாமைப் போலவே அவரும் தற்கொலை செய்து கொண்டார்.**

ஸ்டெல்லா புரூஸின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட பத்து ஈர உள்ளங்களுக்கும் நன்றி! ○